# உடந்தை

2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வடந்தை 2022

14062 CC

290128



வெளியீடு :
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்.
2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

290128 CC



## வாழ்த்துச் செய்தி

**திரு. எஸ்.எம்.சமன் பந்துலசேன**
பிரதம செயலாளர்,
வடக்குமாகாணம்.

தமிழர் பண்பாட்டையும், கலாசாரத்தினையும், இனிய தமிழ்மொழியினையும் வளப்படுத்துவதில் வடக்குமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு அளப்பெரும் பங்களிப்பினை வழங்கி வருகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுந்த பெருவெழுச்சி தமிழுக்கு பல கொடைகளை வழங்கி இருக்கின்றது. இலக்கிய முயற்சி, அகராதி முயற்சி, தத்துவ முயற்சி, கலைப்பண்பாட்டு வெளிப்பாடுகள் என அனைத்து துறைகளிலும் உயர்நிலை கண்ட காலமாக நாம் பத்தொன்பதாம் நூற்றாண்டினை பார்க்கின்றோம். இவ் உயர்நிலைக்கு வடக்கு மாகாணத்தில் இருந்த துறைசார்ந்த புலவர்கள் கூடுதலான பங்களிப்பினை வழங்கியுள்ளனர்.


ஆழ்ந்த புலமைத்துவம் கலைத்துவம் நிறைந்த இந்த மாகாணத்தின் தரமான நூல்களை பதிப்பித்தல், ஆய்வுத் தொகுப்புக்களை வெளியிடுதல், வடக்குமாகாணத்தில் உள்ள அனைத்து பிரதேசங்களிலும் பிரதேசம் சார்ந்த கலைவரலாற்று, பண்பாட்டு வெளிப்பாடுகளை இனங்காட்டும் நூல்களை வெளியிடுதல் போன்ற கலை மற்றும் அறிவுப்புலம் சார்ந்த ஆக்கங்களை வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கனதியாகவே மேற்கொண்டு வருகின்றது.

இந்த வகையில், "வடந்தை" எனும் இதழானது, வடக்கு மாகாணத்தின் கலை, பண்பாட்டு, வரலாற்று விழுமியங்களை ஒன்றிணைத்தும், வாழ்வியலில் யோகக்கலையின் பிரத்தியேக நன்மைகள், பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கங்கள், கலைத்திறனோடு இணைந்த தனிநபர் மற்றும் சமூக வாழ்வு, நன்னெறி பாடவிதான கல்விநெறியும் பிரதேச ரீதியான இலக்கியம், கவிதை மற்றும் கட்டுரைத்தொகுப்புக்களை உள்ளடக்கியதுமான, ஒரு மலராக மலருவது ஒரு வரலாற்று சிறப்பம்சமாகும்.

இம் மலர் வெளியீட்டினை சிறப்புற மேற்கொண்ட வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், பண்பாட்டலுல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் மற்றும் மலரின் தொகுப்பாசிரியர்கள் யாவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதோடு, வடந்தை போல இன்னும் பல ஆய்வுமலர்கள் எமது மாகாணத்தில் மலர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு. இ.வரதீஸ்வரன்**
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு,
வடக்குமாகாணம்.

## வாழ்த்துச்செய்தி

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் செயற்றிறன் அடைவுகளின் குறிகாட்டியாக வருடாந்தம் வெளியிடப்படும் "வடந்தை – 2022" எனும் இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். வடக்கு மாகாணத்தின் கலை, கலாசாரம், பண்பாடு போன்ற பல்வேறு அம்சங்களை பறைசாற்றும் முகமாக வருடாந்தம் இத்தகைய மலர் வெளியீடு செய்யப்படுவது பாராட்டத்தக்கதாகும்.

இந்நூல் கலை, கலாசார, பண்பாட்டு விடயங்களை இன்றைய தலைமுறையினரும் இலகு நடையில் அறிந்து கொள்ளக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. பண்பாடானது இசை, இலக்கியம், வாழ்க்கை முறை, உணவு, ஓவியம், சிற்பம், நாடகம் போன்ற மனிதர்களுடைய கலைகளிலும் அவர்தம் செயற்பாடுகளிலும் வெளிப்படுத்தப்படுகின்றது. அந்த வகையில் சமயமும் பிற நம்பிக்கை முறைமைகளும் பண்பாட்டுடன் ஒன்றிணைந்தவையாக உள்ளன. ஆரம்ப காலங்களிலே பண்பாட்டம்சங்கள் கடுமையாக கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளதுடன் பண்பாட்டினை வெளிப்படுத்தும் நிகழ்வுகள், விழாக்கள், பண்டிகைகள் என்பன சிறப்பாக அரங்கேற்றப்பட்டு வந்தன.

இருப்பினும் காலப்போக்கில் பலதுறைகளிலும் ஏற்பட்ட வளர்ச்சியின் முகமாக பல்வேறு பண்பாடுகளை கொண்ட மக்களின் தொடர்புகள் அதிகரிக்கத் தொடங்கின இதன் விளைவாக மேலைநாட்டு நாகரிகங்கள் தமிழர் தம் பண்பாடுகளில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தின. இவ்வாறு மாற்றலாகி செல்கின்ற தமிழர் தம் பண்பாடுகளை இளைய தலைமுறையினரும் அறிந்து பண்பாட்டினை பேணிப்பாதுகாப்பதற்கு ஆழமாகவும், நுணுக்கமாகவும் பல செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம்.

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் செயற்பாடுகள் பரந்த விடயப் பரப்புக்களுடன் ஒன்றிணைந்திருப்பதுடன் ஏனைய துறைசார் விடயங்களுடன் தொடர்புகளையும் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டிய ஒன்றாக காணப்படுகின்றது. பண்பாட்டலுவல்கள் திணைக்களமானது பல்துறைசார்ந்த புத்திஜீவிகளுடன் இணைந்து "வடந்தை – 2022" எனும் மலரினை வெளியீடு செய்கின்றது.

இம் மலர் சிறப்புற மனதார வாழ்த்துவதுடன் மலருக்கான ஆக்கங்களை வழங்கியவர்களுக்கும், தொகுப்புப் பணியாற்றியவர்களுக்கும், மலர் சிறப்புப்பெற உதவிய அனைத்து நல்லுள்ளங்களிற்கும், பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் நன்றியை தெரிவிப்பதுடன், நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறவும் இறையாசியை வேண்டி பாராட்டி மனதார வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கெள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெளியீட்டுரை

**திருமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா**
பிரதிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் வெளியிடப்பட்டு வருகின்ற வடந்தை இதழின் 2022 ஆம் ஆண்டுக்கான இம் மலர் ஊடாக வாசகப் பெருமக்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்வடைகின்றேன்.

இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்வியலிலும், வரலாற்றிலும் வடக்கு மாகாணம் பெறுகின்ற முக்கியத்துவமும் தனித்துவமும் விதந்து குறிப்பிடத்தக்கதாகும். அந்தவகையில், வடக்கு மாகாணத்தின் பண்பாட்டை ஆய்வு ரீதியாக அடயாளப்படுத்துகின்ற பணியைச் செய்கின்ற இவ் வடந்தை இதழ் ஆற்றுகின்ற பணி பாராட்டுக்குரியது.

வடமாகாண பண்பாட்டுக் கூறுகள், வாழ்வியலின் சிறப்புகள், பாரம்பரிய அம்சங்கள், உணவுப் பழக்கவழக்கங்கள், கல்வி நிலை, கலை இலக்கியப் போக்குகள், கலைஞர்கள் எழுத்தாளர்களின் சாதனைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களையும் பற்றிய கட்டுரைகளை உள்ளடக்கியதாக வெளிவரும் இம் மலர், மாணவர்கள், ஆய்வாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

அதேநேரம், வேகமாக மாற்றமடைந்துவரும் பண்பாட்டுச் சூழலில் எமது வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆற்றிவரும் பணிகளைப் பதிவுசெய்து வெளிப்படுத்துகின்றதொரு வரலாற்றுப் பெட்டகமாகவும் இவ் வடந்தை இதழ் அமைகின்றது.

இவ் வடந்தை இதழ் வெளிவருவதற்குப் பல்வேறு வழிகளிலும் ஆலோசனைகள், வழிகாட்டல்களை வழங்கி உதவிய வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் அவர்களுக்கும், மதிப்பீட்டுக் குழுவினருக்கும், தொகுப்பாசிரியர் குழுவைச் சேர்ந்தோருக்கும், ஆக்கங்களை வழங்கிய ஆய்வாளர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கும், அச்சகத்தினர்க்கும் இச் சந்தர்ப்பத்தில் எனது பாராட்டுகளையும் நன்றியையும் பதிவுசெய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

01. நவாலியூர் சோமசுந்தரப் புலவர் மரபும் நவீனமும் -01

02. கலையோடு இயைந்த வாழ்வு -07

03. மறைந்த கலைஞரின் வாழ்வியல் பற்றிய அனுபவப் பகிர்வு - 11

04. பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கங்கள் - 16

05. நாகர் இன ஆட்சியும் (நாக) தீவகத்தில் அவர்களது பண்பாட்டுக்கூறுகளின் நீட்சியும் - 19

06. வரலாற்றில் தொல்புரம் முத்துமாரி அம்மன் கலைத்தேர் - 29

07. எங்கே செல்கின்றோம் .... (அனுபவங்களும் அவதானிப்புக்களும்) - 35

08. இலங்கையின் வடமாகாணத்தில் உள்ள சுற்றுலாத்தளங்களை மேம்படுத்தல் - 39

09. யாழ்ப்பாணம் பாசையூர் பிரதேசமும் அதனுடன் இணைந்த கலைகளும் கலைஞர்களும் - 44

10. மானிட வாழ்க்கையை அர்த்தமுடையதாக்கும் யோகக்கலை உணர்த்தி நிற்கும் வாழ்வியற் கூறுகள் - 49

11. இந்து நிர்வாகவியல் கட்டமைப்பு - 54

12. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டு கழித்திருக்காது சிந்தனை செய்வோம் - 62



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி.ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா,**
பிரதிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வட மாகாணம்

# வரலாற்று வழித்தடத்தில் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சுவடுகள்

இலங்கை மணித்திரு நாட்டின் சிகரமாகத் திகழ்கின்ற வடக்கு மாகாணத்தில் வாழ்கின்ற அனைத்து இனங்களினதும் பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாப்ப தற்கும், மேம்படுத்துவதற்கும், எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்புச் செய்வதற்கு மாக பல்வேறு தளங்களில் திட்டங்களைப் பண்பாட்டலுவல்கள் திணைக்களமானது முன்னெடுத்து வருகின்றது. இந்த வகையிலே யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் உள்ள பிரதேச செயலகங் களை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிக்காகக் கலாசார உத்தியோகத்தர்கள் நியமிக் கப்பட்டுள்ளனர். அவர்களை ஒருங்கிணைக்கும் வகையில் மாவட்டத்திற்கு ஒருவராக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு பல்பரிமாண நோக்கு நிலை களிலே வேலைத்திட்டங்கள் முன்நகர்த்தப்படுகின்றன. கலையாளர்கள், பண்பாட்டா ளர்கள் பற்றிப்படர்ந்து செழிப்படைய வைக்கும் கொழுகொம்பாக இத்திணைக் களமானது தனது பண்பாட்டு வேலைத் திட்டங்களைப் பின்வரும் திட்டங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

1. கலாசார செயற்றிட்டங்கள்
2. சமய விழாக்கள்
3. பண்பாட்டுடன் தொடர்பான விழாக்கள்
4. பயிலரங்குகள்
5. கலைமன்றங்களைப் பதிவு செய்தலும், மீள்பதிவு செய்தலும்
6. வறிய கலைஞர் நலத்திட்டம்
7 கலைக்குத் தொண்டாற்றிய மூத்த, இளம் கலைஞர்கள் கௌரவிப்பு
8. எழுத்தாளர்களது நூல்களில் சிறந்த நூல்களை கொள்வனவு (சிறிய தொகை) செய்தலும், பரிசில்கள் வழங்கி கௌரவித்தலும்
9. அரிய நூல்கள் மீள் வெளியீடு
10. மாகாணங்களுக்கிடையே கலைஞர்கள் சந்திப்பு.
11. ஆவணப்படுத்துதலும் மரபுரிமைச் சொத்துக்களின் முகாமைத்துவமும் இலத் திரனியல் பதிவுகளும் வெளியீடுகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1. கலாசாரசெயற்றிட்டங்கள்

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் வடமாகாணத்திலுள்ள மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் ஊடாகப் பாரம்பரிய பண்பாட்டைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்குமான வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. கலைஞர்களுக்கான ஒன்றுகூடல், கலைமன்ற அபிவிருத்தி, திருக்குறள்விழா, பண்பாட்டுவிழாக்கள், பண்பாட்டு மலர் வெளியீடு, வறிய எழுத்தாளர் ஊக்குவிப்பு போன்ற பண்பாட்டுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் ஊடாக பல்வேறு கலைஞர்கள், எழுத்தாளர்களது செயற்பாடுகள் உலகிற்குத் தெரியப்படுத்தப்படுவதுடன் அவர்களுக்கான ஊக்கமும் வழங்கப்படுகின்றது.

### 2. சமய விழாக்கள்

வடக்கு மாகாணத்தில் வாழ்கின்ற இந்து, இஸ்லாம், பௌத்தம். கிறிஸ்தவம் மக்களது சமயம் சார்ந்த விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றது. நான்கு சமயங்களினது சமய பண்டிகைகள் அம்மதத்தலைவர்கள், மற்றும் மக்களுடன் இணைந்து அவர்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசங்களில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

### 2.1 தைப்பொங்கல் விழா

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தைப் பொங்கல் விழா இவ்வருடம் கிளிநொச்சி, இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனத்தினுடைய 102ஆவது வருட பொங்கல் விழாவுடன் இணைந்து 2022.01.16 ஆம் திகதி இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலய முன்றலில் வெகுசிறப்பாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்ப்பாண இந்திய பதில் துணைத்தூதுவர் ஸ்ரீமான் ராம் மகேஷ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். மேலும் 102 பொங்கல் பானைகள் வைத்துப் பொங்கல் விழாவும் நடைபெற்றது.

### 2.2 சிவராத்திரி விழா

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் மற்றும் இந்து கலாசார திணைக்களம் ஆகியன இணைந்து ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய முகாமைத்துவ சபையுடன் இணைந்து 2022.03.01ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் மஹா சிவராத்திரி விழா பூஜை வழிபாடுகள், கலை நிகழ்வுகளுடன் பக்தி பூர்வமாக இரவு நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண கௌரவ ஆளுநர் உயர்திரு. ஜீவன் தியாகராசா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதுடன், சிறப்பு விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் திருவாளர். எஸ்.எம்.சமன்பந்துலசேன அவர்களும், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திருவாளர்.கே.விமலநாதன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2.3 நோன்பு திறக்கும் நிகழ்வு (இப்தார்)**

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மன்னார் மாவட்ட செயலகத்துடன் இணைந்து நோன்பு திறக்கும் நிகழ்வு (இப்தார்) 2022.04.27ஆம் திகதி மன்னார் மாவட்ட செயலக மண்டபத்தில் இனிதே இடம்பெற்றது. பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் திருவாளர். எஸ்.எம்.சமன்பந்துலசேன அவர்களும், மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி.அ.ஸ்ரான்லி டிமெல் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டதுடன், மன்னார் நகர பிரதேச செயலாளர் திரு.ம.பிரதீப், மடு பிரதேச செயலாளர் திரு.கி.பி.நிஜாகரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

**2.4 ஆடிப்பிறப்புக் கொண்டாட்டம்**

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆடிப் பிறப்புக் கொண்டாட்ட நிகழ்வுகள் ஆடிப்பிறப்பு தினமான 2022.07.17ஆம் திகதி வட மாகாண கல்வி அமைச்சின் சரஸ்வதி சிலை முன்றலில் சிறப்பாக நடைபெற்றது. பிரதம விருந்தினராக இந்திய துணைத்தூதுவர் ஸ்ரீமான். ராகேஷ் நடராஜ் அவர்கள் கலந்து சிறப்பித்தார். பாரம்பரிய ஆடிக்கூழ் காய்ச்சி அனைவரும் கூடிக்குடித்து மகிழ்ந்து கொண்டாடப்பட்டதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

**2.5 ஆடி அமாவாசை நிகழ்வு**

வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் ஆலோசனைக்கமைவாக வன்முறையால் இறந்த ஆத்மாக்களுக்கான பிரார்த்தனை நிகழ்வு ஆடி அமாவாசை தினமான 2022.07.28ஆம் திகதி கீரிமலை நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் பக்தி பூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ.நகுலேஸ்வரக் குருக்களின் வழிகாட்டலின் கீழ் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. வடக்கு மாகாணத்தின் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள பிதிர்க்கடன் சிறப்பாக நிறைவேற்றப்படுகின்ற ஆலயங்களில் எமது கலாசார உத்தியோகத்தர்கள் வன்செயலால் இறந்த ஆத்மாக்களுக்கான ஆத்ம சாந்தி வேண்டி பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

**2.6 நல்லூர் மகோற்சவகால விசேட கலை நிகழ்வு**

நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவ காலத்தை முன்னிட்டு வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கலை நிகழ்வுகள் 2022.08.20 ஆம் திகதி நல்லூர் மயிலூரான் அரங்கில் வெகு சிறப்பாக இடம்பெற்றது. கடந்த காலங்களில் தெய்வீக சுகானுபவம் என்ற பெயரில் இந்தியக் கலைஞர்களுடன் நமது நாட்டுக் கலைஞர்களும் இணைந்து நிகழ்வுகளை நடாத்தி வந்துள்ளனர். இந்த வருடம் முதன் முறையாக சிறப்பாக எமது பிரதேச கலைஞர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. உள்ளூர் கலைஞர்கள் இந் நிகழ்வு ஏற்பாட்டினால் பெருமை அடைந்தமை குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்திய துணைத்தூதுவர் ஸ்ரீமான். ராகேஷ் நடராஜ் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2.7 நவராத்திரி விழா**

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நலன்புரிச் சங்கங்கள் (கல்வி அமைச்சு, மாகாண கல்வித் திணைக்களம், யாழ் வலயக்கல்வி அலுவலகம்) இணைந்து 2022.10.05ஆம் திகதி வடக்கு மாகாண கல்வி அமைச்சின் சரஸ்வதி சிலை முன்றலில் பூஜை வழிபாடுகளுடன் சிறப்பு நிகழ்வாக பத்து நாள்களும் ஆன்மிகச் சொற்பொழிவாளர்களை அழைத்து நல்ல கருத்துக்களை அனைவருக்கும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. நிறைவு நாளன்று கலை நிகழ்வுகள் நடத்தப்பட்டதுடன் கடலை, அவல், குழைசாதம் முதலான பிரசாதங்களும் அனைவருக்கம் வழங்கப்பட்டன.

**3. பண்பாட்டுடன் தொடர்பான விழாக்கள்**

**3.1 பிரதேச, மாவட்ட பண்பாட்டு விழாக்கள்**

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் அந்தந்த பிரதேச மாவட்டப் பண்பாட்டு விழுமியங்களை முன்னிலைப்படுத்தி அப் பிரதேசங்களில் வாழ்கின்ற கலைஞர்களையும் ஒன்று திரட்டி நடத்தப்படுகின்ற விழாக்களாகும். இவ் விழாவில் பிரதேசம் சார்ந்த நூல் வெளியீடு, கலைஞர் கௌரவிப்பு, கலை நிகழ்வுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இவ் விழாக்கள் நடாத்தப்படுகின்றன.

**3.2 திருக்குறள் விழா**

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பிரதேச, மாவட்ட செயலகங்களில் திருக்குறள் போட்டிகள், ஆய்வரங்குகள், கலை நிகழ்வுகள் உள்ளடங்கலாகத் திருக்குறள் விழா நடத்தப்பட்டது. இதனால் மாணவர்களுக்கிடையே திருக்குறள் கருத்துக்கள் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தியதுடன் மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

**4. நாடகப் பயிற்சிப்பட்டறை**

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் செயற்திட்டங்களில் ஒன்றாக நாடகப்பயிற்சி பட்டறை தென்மராட்சி பிரதேசத்தில் நடைபெற்றது. வடமாகாணத்தின் பிரதேச செயலகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நாடக கலைஞர்களுக்கு ஒருநாள் பயிற்சியாக அமைந்தது. பயிற்சி நெறியின் நிறைவில் சான்றிதழ் வழங்கப்பட்டது.

**5. கலைமன்றங்களை பதிவு செய்தலும், மீள்பதிவு செய்தலும்**

வடக்கு மாகாணத்தில் இயங்குகின்ற கலைமன்றங்களை பதிவு செய்தலும், வடக்கு கிழக்கு மாகாணத்தின் பெயரில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட மன்றங்களை மீள வடமாகாணப் பதிவுக்குட்படுத்தலும், அதற்கான இயங்குநிலையை ஆராய்ந்து அதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்குமான செயற்பாடுகள் முன்னெடுக் கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. வறிய கலைஞர் நலத்திட்டம்**

வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியான கலைச் சேவையினை ஆற்றிய வயது முதிர்ந்த கலைஞர்களிடையே காணப்படுகின்ற வறுமை நிலையினைக் கருத்திற் கொண்டு அவர்கள் தாம் வாழ்ந்த காலத்தில் ஆற்றிய கலைச்சேவையினைக் கௌரவிக்கும் வகையிலும் வடமாகாண கௌரவ ஆளுநரால் அனுமதிக்கப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக ஆரம்பத்தில் 50 வறிய கலைஞர்கள் தெரிவுசெய்யப்பட்டு ரூபா 5000 மாதாந்த உதவு தொகையாக வழங்கப்பட்டது. தற்போது 192 கலைஞர்களுக்கு ரூபா 5000 மாதாந்த உதவு தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது. அடுத்த வருடத்திலிருந்து மேலும் 38 கலைஞர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**7. கலைக்குத் தொண்டாற்றிய மூத்த, இளம் கலைஞர்கள், எழுத்தாளர்கள் கௌரவிப்பு**

கலைத்துறைக்கு அர்ப்பணிப்பான தொண்டாற்றிய 60 வயதிற்கு மேற்பட்ட தகுதியான கலைஞர்களுக்கு அவர்களது சேவையை பாராட்டி மாகாண பண்பாட்டுப் பெருவிழாவில் ‘கலைக்குரிசில்’ விருதும் 40 வயதுக்குட்பட்ட இளம் கலைஞர்களுக்கு ‘இளங்கலைஞர்’ விருதும் நடுவர் குழுவின் பரிந்துரைக்கமைய வழங்கப்பட்டு வருகிறது.

**8. எழுத்தாளர்களது நூல்களில் சிறந்த நூல்களை கொள்வனவு (சிறிய தொகை) செய்தலும் பரிசில்கள் வழங்கி கௌரவித்தலும்**

கடந்த வருடம் எழுத்தாளர்களால் வெளியீடு செய்யப்பட்ட நூல்களைப் பிரதேச செயலகக் கலாசார உத்தியோகத்தர்கள் ஊடாக பெற்று அதில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த நூல்களுக்குச் “சிறந்த நூல் பரிசு” மாகாண பண்பாட்டு விழாவில் வழங்கப்படுகின்றது. மேலும் சிறந்த நூல்களைத் திணைக்களம் குறிப்பிட்ட தொகைக்கு கொள்வனவு செய்து எழுத்தாளர்களை ஊக்குவித்து வருகின்றது.

**9. அரிய நூல்களின் வெளியீடு**

வடக்கு மாகாணத்தில் வாழ்ந்து மறைந்த, மற்றும் வாழ்ந்து வரும் முது இலக்கியப் படைப்பாளிகளால் வெளியிடப்பட்ட நூல்களில் மிகவும் அருந்தலாகவும் அரிய தேவைப்பாடுடையதாகவும் காணப்படுகின்ற நூல்களைத் தேடித் தொகுத்து அதனைப் புதிய பதிப்பாகவோ அல்லது மீள் பதிப்பாகவோ வெளியிட்டு வருகின்ற எமது அரிய முயற்சியின் பயனாக பல நூல்கள் இலக்கிய உலகில் வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**10. வடக்கு மற்றும் வட மத்திய மாகாண தமிழ், சிங்கள கலைஞர்களின் கலாசார சங்கமம்**

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடக்கு மற்றும் வடமத்திய மாகாண தமிழ், சிங்கள கலைஞர்களை ஒன்றிணைத்துக் கலாசார சங்கமம் எனும் நிகழ்வானது 2022.03.18ஆம் திகதி மருதனார்மடம் வட இலங்கை சங்கீதசபை மண்டபத்தில் வெகுசிறப்பாக இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்கு மேலதிகமாக இவ் வருடம் ஒளி விழாவினையும் நடத்துவதற்கேற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG) நிதி மூலம் "தென் யாழ்ப்பாணம்", "சொற்பொருள் அகராதி", "ஈழத்தமிழர் பண்பாட்டு ஆய்வுகள்" ஆகிய மூன்று நூல்கள் வெளியிடப்பட வுள்ளது என்கின்ற செய்திகளையும் இத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

**11. அனைத்துமத ஆன்மீகத் தலைவர்களின் கலந்துரையாடல்**

வடக்கு மாகாண கௌரவ ஆளநர் அவர்களின் வேண்டுகோளுக்கமைய, அனைத்து மதங்களின் ஆன்மீகத் தலைவர்களின் கலந்துரையாடல் 12.09.2022 நல்லூர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலுக்கு இந்து சமயத் தலைவர் கலாநிதி. ஆறு திருமுருகன் அவர்களும், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் திரு.ச.லலீசன் அவர்களுடன் மௌலவி.S.A.C. மூபீன் போன்ற சமயப் பெரியார்கள் கலந்து சிறப்பித்தனர்.

**12. பயிற்சிப் பட்டறை**

"பண்பியல் கூறுகளும் அசைவுகளும்" தொடர்பான பயிற்சிப்பட்டறை 14.10.2022 அன்று நல்லூர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றது. "உடல் உள ஆரோக்கியம்" என்னும் தலைப்பில் யாழ் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடம் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.சி.ரமணராஜா அவர்களும், "நல்லதோர் வீணை செய்தே" என்னும் தலைப்பில் ஓய்வுநிலை நிர்வாக சேவை உத்தியோகத்தர் திரு.மரியாம்பிள்ளை, செல்வின் அவர்களும் வளவாளர்களாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

"பண்பாடு பேணுவோம் கருத்துரையும் செயல்முறையும்" என்னும் தலைப்பில் ஓய்வுநிலைப் பேராசிரியர் முனைவர் திருமதி.மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் கருத்துரை நிகழ்த்தினார்கள். கலாசார உத்தியோகத்தர்கள், திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

**13. வடமத்திய ஆளுநர் வருகை**

வடக்கு மாகாண ஆளுநரை வடமத்திய மாகாண ஆளுநர் அவர்கள் 16.03.2022ம் திகதி சந்திக்க வருகைதந்த போது, அவர்களை தமிழ்ப்பாரம்பரிய வாத்தியங்கள் இசைத்து முறைப்படி வரவேற்றதுடன் வரவேற்பு நடனமும் அளிக்கை செய்யப்பட்டது. தொடர்ந்து விருந்துபசாரமும் வழங்கப்பட்டதுடன், நல்லூர் ஆலயத்தில் வடமத்திய மாகாண ஆளுநரும் அவர் தம் பாரியாரும் வழிபாடு செய்வதற்கான ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்பட்டன.

**14. மும்மொழி அளிக்கைச் செயற்பாடு**

திகதி வடமத்திய ஆளுநர் - வடமத்திய பிரதம செயலாளர், ஏனைய சிரேஷ்ட உத்தியோகத்தர்களுடன், எமது ஆளுநர், அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள், செயலாளர்கள் ஆகியோருக்கிடையில் நட்புறவுக்கலந்துரையாடல் ஒன்று 17.03.2022ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்விலே பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பிரதிப்பணிப்பாளரினால் "இந்து சமயத்திற்கும், பௌத்த சமயத்திற்கும் இடையேயுள்ள ஒற்றுமைகள் தொடர்பாக விளக்க அளிக்கை (presentation) செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளிக்கையானது மும்மொழிகளிலும் பிரதிப்பணிப்பாளரால் வழங்கப்பட்டமை யானது அனைவரதும் பாராட்டினைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**15. அளிக்கைச் செயற்பாடு**

பளைப்பிரதேசத்தின் விடத்தற்பளைக் கிராமத்தில் இராணுவத்தின் 52வது படைப்பிரிவுத் தலைமையகத்தில் இராணுவத்தினருக்கான அபிவிருத்திப் பணிச்செயற்பாட்டின் (Army Training camp Indication Training for Army cadets) நிகழ்வுகள் 29.04.2022ஆம் திகதி அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பண்பாட்டலு வல்கள் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் அவர்களை 'யாழ்ப்பாணப் பண்பாடு' தொடர்பாக கருத்துரை வழங்குமாறு அழைத்ததற்கு அமைய, சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் சிங்கள மொழி மூலத்தில் சிறப்பான கருத்துரை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**16.திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு கும்பாபிஷேக நிதி சேகரித்து வழங்கியமை**

வரலாற்றுப்புகழ்மிக்க திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்விற் காக பிரதேச செயலகரீதியாக நிதிதிரட்டி வழங்குமாறு வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்கள் பணித்ததற்கு அமைய, கலாசார உத்தியோகத்தர்கள் மூலம் நிதி திரட்டி குறித்த ஆலயத்திற்கு வழங்கப்பட்டது.

**17. வறியவர்களுக்கு சமைத்த உணவு வழங்கல்**

வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் பணிப்பிற்கமைய, பிரதேச செயலக பிரிவில் வறிய மக்களின் கௌரவத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சமைத்த உணவு வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. ஆலயங்கள், பொது அமைப்புக்கள் முதலானவற்றின் மூலம் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**18. ஆன்மிக இசையினை ஒலிக்கச் செய்தமை**

வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் பணிப்பிற்கமைய, பிரதேச செயலகப் பிரிவுகள்தோறும் நான்கு மதங்களுக்கும் உரிய ஆன்மிக இசையினை மெல்லிய ஒலியில் ஒலிக்கச் செய்தல் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. இதற்கான இறு வெட்டுக்கள் பிரதேச ரீதியாக வழங்கப்பட்டு குறித்த செயற்றிட்டம் முன்னெடுக் கப்பட்டது.

**19. சமூகத்திற்கான விழிப்புணர்வுச் செயற்றிட்டம்.**

வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் பணிப்பிற்கமைய, தற்போது நாட்டில் நிலவுகின்ற போதைவஸ்துப் பாவனை, இளவயது திருமணம், குடும்ப வன்முறை முதலான சிக்கல்களுக்கு தீர்வுகாணும் முகமாக தெருவெளியாற்றுகைகள், விழிப்புணர்வு கருத்தரங்குச் செயற்பாடுகளை பிரதேச மட்டத்தில் நடாத்துவதற்குரிய அறிவுறுத் தல்கள் வழங்கப்பட்டு பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**20. இந்தியத் துணைத்தூதுவரின் திணைக்கள வருகை.**

இந்தியத் துணைத்தூதுவர் அவர்கள் எமது திணைக்களத்திற்கு வருகை தந்து திணைகளத்தின் செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடினார். அத்துடன் எமது நூலகத்தினையும் பார்வையிட்டு நூல்களையும் பெற்றுச்சென்றார்.

**21. நடமாடும் சேவை- வவுனியா**

24.02.22ஆம் நாள் வடக்கு மாகாணசபையும் வவுனியா மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்திய நடமாடும் சேவை எமது திணைக்களம் சார்பாக வவுனியா மாவட்டக் கலைஞர்களுக்கான ஊக்குவிப்பு நிதி வழங்கப்பட்டதுடன் நடமாடும் சேவைக்கான பிரதான வரவேற்பு ஒழுங்குகள், மற்றும் பூரண கும்பம் என்பன எமது திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. கலந்துகொண்ட கலைஞர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. மேலும் வவுனியா மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இரவு நடைபெற்ற கலைநிகழ்வுகளில் வவுனியா மாவட்டக் கலைஞர்களது கலைநிகழ்வுகளும் அளிக்கை செய்யப்பட்டன.

**22. திருவள்ளுவர் கோட்டம்**

வடமாகாணத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவின் தொடர் செயற்பாடாக கிளிநொச்சியில் திருவள்ளுவர் கோட்டம் அமைக்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது. திருக்குறளினை முதன்மைப்படுத்தி மேற்கொள்ளப்படும் திருவள்ளுவர் கோட்டத்தின் மூலம் ஆவணக் காப்பகம், திருக்குறள் நிகழ்வுகள், விழாக்கள், என்பன எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது. தற்பொழுது திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணியும் நிறைவடைந்துள்ளது. ஏதிர்வரும்காலங்களில் திருவள்ளுவர் கோட்டம் இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சி. குருபரநாத்
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

# நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

## மரபும் நவீனமும்



### 01. அறிமுகம்

தமிழ் நாட்டைப் போலவே ஈழமும் ஓர் இலக்கிய வரலாற்றுப் பாரம்பரியத்தினைக் கொண்டு விளங்குகின்றது. தமிழ் நாட்டின் இலக்கிய வரலாறு சங்க காலத்துடன் ஆரம்பிக்கின்றது. ஈழத்துத் தமிழிலக்கிய வரலாறு அவ்வாறு அமையாது போனாலும் ஈழத்துப் புலவர்கள் சிலர் சங்க காலம் முதல் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. ஈழத்தில் இருந்து தமிழ்நாட்டிற்குச் சென்று கவிகள் இயற்றிய ஈழத்துப்பூதந்தேவனார் முதலிய புலவர்கள் ஈழத்தினைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. இதனை ஈழத்துப் புலமை மரபின் தோற்றுவாய் என்றே கருதத் தோன்றுகிறது. ஈழத்துத் தமிழ்ப் புலமை மரபு போர்த்துக்கேயர் காலத்துடனேயே ஆரம்பமாகின்றது. அது கனகசபாபதி யோகி எனப்படும் கூழங்கைத்தம்பிரான் என்பவருடன் ஆரம்பமாகின்றது. இவரையே ஈழத்துத் தமிழ்ப் புலமை மரபின் ஊற்றுக்கால் என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இத்தகைய புலமை மரபு பற்றிப் பேசுபவர்கள் கூழங்கைத் தம்பிரானை விடுத்துப் பேச முடியாது. இவருடைய மாணவ பரம்பரையே ஈழத்துத் தமிழ்ப் புலமைப் பாரம்பரியத்தை வளர்த்தவர்கள் என்றும் வளர்த்து வருபவர்கள் என்றும் கூறலாம். இத்தகைய ஈழத்துத் தமிழ்ப்புலமை மரபினைப் பின்னணியாகக் கொண்டவரே ஈழத்துத் தமிழ் உலகம் “தங்கத்தாத்தா” எனப்போற்றும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர்.

ஈழத்துப் புலமை மரபு பற்றி விளங்கிக் கொள்ள வேண்டுமென்றால் பத்தொன்பதாம் நூற்றாண்டு அரசியல், பொருளாதார, சமுதாய, சமயச் சூழலை முதலில் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். ஈழத்துக் கென்ற தமிழ்ப் புலமை மரபு ஒன்று தோற்றம் பெறுவது இக்காலத்திலேதான். அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தினால் தான் பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சூழல் பற்றிய பின்புலங்களை அறிய வேண்டிய தேவை ஏற்படுகிறது.

ஈழத்தில் அதுவும் ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஒரு முக்கியமான காலப்பகுதியாக வரலாற்றாய்வாளர்களால் கொள்ளப்படுகிறது. அரசியல், பொருளாதாரம், சமயம், சமூகக் காரணிகளில் ஒரு நிலைமாறு காலமாக இக்காலம் விளங்குகின்றது. பேராசிரியர் க.கைலாசபதி முதலான அறிஞர்களும் பத்தொன்பதாம் நூற்றாண்டை கவிதைப் போக்கின் நிலைமாறு காலகட்டமாகவே இனங்காட்டுகின்றனர். இவ்வாறாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ்க் கவிதைச் செல்நெறி மற்றும் அதன் அசைவியக்கம், அதன் போக்கு முதலானவற்றைத் தீர்மானித்த காரணிகளாகப் பின்வருவனவற்றை செ. சுதர்சன் குறிப்பிடுகிறார்.

01. கிறிஸ்தவ மிசனரிகளால் வழங்கப்பட்ட கல்வியும் அக் கல்வி கற்ற சுதேசிகளும் மாறாத மரபுக்கல்வியும்.
02. யாழ்ப்பாணப் பூர்வீக மக்களுக்குக் கிடைத்த தொழில் வாய்ப்பும் சமூக அந்தஸ்தும்.
03. யாழ்ப்பாணப் பூர்வீக மக்களின் குடியகல்வும் குடியசைவும்
04. வணிக நடவடிக்கைகளின் விரிவாக்கமும் சமூகப் பொருளாதார மாற்றமும் நிலவுடைமை சார் பிரபுத்துவமும்.
05. பூர்வீக மக்களின் அரசியல் தொடர்பான விழிப்புணர்வும் செயற்பாடுகளும்.
06. அச்சுப்பண்பாடும் அதன் வழியான பத்திரிகைகளின் தோற்றம், பதிப்பு முயற்சி,பாடநூலாக்கம்,அகராதியாக்கம் முதலிய அறிவுப்பரம்பல்முயற்சிகளும்.

இவ்வாறான காரணங்களால் ஈழத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சூழலானது ஆங்கிலம் கற்ற ஓர் நவீன வர்க்கத்தினரையும் மரபுவழி வந்த வர்க்கத்தினரையும் கொண்டு காணப்பட்டது. இவர்களுள் மரபும் நவீனமும் கலந்த ஒரு புலமைப் பாரம்பரியம் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்துச் சூழலில் உருவாகியது. இத்தகைய மரபும், நவீனமும் இணைந்த புலமை மரபாக நாம் நவாலியூர் சோமசுந்தரப்புலவரைக் கொள்ளலாம்.

**01. புலவரின் வாழ்க்கை (1878 - 1953)**

நவாலியூர் சோமசுந்தரப் புலவர் 1878ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நவாலியில் இலக்குமியம்மையாருக்கும் கதிர்காமம் என்பார்க்கும் புதல்வராகத் தோன்றினார். நவாலியூர் அருணாசல உபாத்தியாயரிடம் தமிழ், இலக்கண இலக்கியங்களையும் தனது உறவினரான இராமலிங்க உபாத்தியாயரிடம் ஆங்கிலத்தையும் கற்றார். சிறுவயதிலேயே பேச்சாற்றலையும் விவாதத் திறமையினையும் பெற்றார். தனது இளமைப் பருவத்திலேயே அட்டகிரி முருகன் பதிகம், அட்டகிரி முருகன் திருவூஞ்சல், சாவித்திரிகதை, பசுவின் கதை போன்ற நூல்களை இயற்றினார். இவர் கவிதைகள் புனைவதில் மிகுந்த திறமை படைத்தவராக விளங்கியிருந்தார். சைவசித்தாந்தத்திலும், கந்தபுராணத்திலும் மிகுந்த பற்றுக்கொண்டவர். உயிரிளங்குமரன் எனும் நாடகத்தையும் பல்லாயிரக் கணக்கான தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார். பனையின் வரலாறும் பயனும் பற்றியதாய்த் "தால விலாசம்" என இவரால் எழுதப்பட்டிருக்கும் நூலானது பொருட்செறிவும் பொருணயமும் கொண்டதெனப் போற்றப்படுகிறது. சிறுவர்களுக்கென இவர் பாடிய "கத்தரி வெருளி", "ஆடிப்பிறப்பு", "ஆடு கதறியது" முதலான பாடல்கள் இன்றும் பாலர் முதல் பண்டிதர் வரை எல்லோரது உள்ளங்களையும் ஈர்த்துக் கவர்ந்தனவாய் அமைந்துள்ளன.

**03. புலவரின் படைப்புக்கள்:**
**பக்தி சார்ந்தவை**

- தலங்கள் குறித்த பிரபந்தங்கள்
- பிரார்த்தனைப் பாடல்கள்
- தத்துவச் செய்யுட்கள்
- சமயப் பெரியார் குறித்த பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. கந்தபுராணக் கதைகளும் அவை உணர்த்தும் உண்மை நூற்கருத்தும்
02. கந்தவனக்கடவை நான்மணிமாலை
03. கந்தபுராண நுண்பொருள் விளக்கம்
04. நல்லை முருகன் திருப்புகழ்
05. நல்லையந்தாதி
06. சூரிய வழிபாடு
07. மருதடி விநாயகர் பாமாலை
08. கந்தவனநாதர் திருப்பள்ளியெழுச்சி
09. அட்டகிரிப் பதிகம்
10. கல்லுண்டாய் வைரவர் பதிகம்
11. கதிரைமலை வேலவன் பதிகம்
12. நாமகள் பாமாலை
13. செந்தமிழ்ச்செல்வியாற்றுப்படை
14. அருணாசலத்துரை சரித்திரச் சுருக்கம் முதலானவை

**சமூக நன்மைசார் படைப்புகள்**

1. தாலவிலாசம்
2. பனைமரக்கும்மி
3. சுகாதாரக்கும்மி

**பாநாடகம்**

- தத்துவச்சார்பானவை
- சிறுவர்க்கானவை

01. உயிரிளங்குமரன்

**தேசம் குறித்த படைப்புகள்**

01. இலங்கை வளம்
02. மருதன் அஞ்சலோட்டம்

**தன்வாழ்வியல் படைப்புகள்**

1. தந்தையார் பதிற்றுப்பத்து
2. தாரமாய்த்தாயானாள் கை
3. தனிப்பாடல்கள்

**சிறுவர் பாடல்கள்**

03. சிறுவர் செந்தமிழ்
04. சாவித்திரிகதை
05. பசுவின் கதை

**05. புலவரின் மரபு சார்ந்த படைப்புக்கள்**

ஈழத்திலே பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சூழலிலே மரபுசார்ந்த கவிதைகளைப் படைத்த புலவர்களுள் சோமசுந்தரப் புலவரும் ஒருவர். சோமசுந்தரப்புலவர் மரபு சார்ந்த கவிதைக் கட்டமைப்பினைப் பின்பற்றியிருந்தபோதிலும் அவருடைய படைப்புக்களில் ஏனைய மரபார்ந்த புலவர்களின் கவிதைகளில் காணப்படும் இறுக்கமும் சொல்லாட்சியும் இல்லாமல் எளிமைத் தன்னையும், இலகு நடையும் காணப்படுவதனை நாம் அவதானிக்கலாம். அதுவே புலவரின் சிறப்பும் கூட. புலவரின் காலத்தில் இலங்கையில் தோற்றம்பெற்ற படைப்புகளுள் மிகப் பெரும்பான்மையானவையாக சமயப் பிரபந்தங்களே தோற்றம்பெற்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சூழலில் நிலவிய ஆலயம் சார்ந்த சுதேசியப் பண்பாட்டு பாதுகாப்பு, மீட்டெடுப்பு நடவடிக்கைகள் அதிகளவில் தலங்கள் சார்ந்த படைப்புக்கள் தோற்றம் பெறக் காரணமாக அமைந்தன.

சோமசுந்தரப்புலவரின் மரபு சார்ந்த படைப்புக்களுள் பெரும்பாலான ஆக்கங்கள் சமயச்சார்பானவை. ஈழத்து ஆலயங்கள் பலவற்றின்மீது பதிகம், நான்மணி மாலை, அந்தாதி ஊஞ்சல் கலம்பகம், அட்டகம், சிலேடைவெண்பா, திருப்பள்ளி யெழுச்சி, அம்மானை, புராணம், பள்ளு, தாலாட்டு முதலான பிரபந்தங்களைப் பாடியுள்ளார். சைவத்தலங்களை மைய மாகக் கொண்டு அட்டமுகிக் கலம்பகம், தில்லை அந்தாதி, கதிரைச்சிலேடை வெண்பா போன்ற பிரபந்தங்களையும் பாடியுள்ளார். குறிப்பாக முருகன் தலங்கள் மீது இவர் பாடியவை அனேகம். ஆட்ட கிரிப் பதிகம், நல்லைமுருகன் திருப்பதிகம், நல்லை அந்தாதி, நல்லூர்க்கந்தன் பதிகம், நல்லூர்கந்தசாமி அட்டகம், மாலைமுருகன் பதிகம், கதிரைச்சிலேடை வெண்பா, கந்த வனக்கடவை நான்மணிமாலை, கந்தவன நாதர் திருப்பள்ளியெழுச்சி, பொலிகண்டி கந்தவனநாதப் பதிகம், போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபந்தங்கள் இவற்றுள் சில, பிற ஆலயங் களையும் அங்கு உறைந்துள்ள கடவுளர் களையும் பாடியுள்ளார்.

ஆயினும் பிற பலரது கடின நடையி லான பிரபந்தங்களுக்கும் புலவரின் படைப் பிற்குமிடையே கணிக்கத்தக்கவொரு வேறுபாடு காணப்பட்டது. சோமசுந்தரப் புலவரின் செய்யுட்கள் எளியநடையின வாகவும், கவித்துவம் நிறைந்தனவாகவும் விளங்கியிருந்தன.

*"சந்தனச் சிலம்பினி லிசைக்குயில் கூவுந்*
*தருமருட் பாவினச் சங்கொலி மேவுந்*
*செந்தமிழ்த் திருப்புகழ்ச் சேவல்கள் யாவுந்*
*சிறைபுடை யடித்தெதிர் சிலப்பிடக் கூவும்*
*அந்தமில் கலைக்குரு கரற்றிய வொலியும்*
*அடியவர் சயசய வமலையு மலியும்*
*எந்தமை யாண்டருள் முத்தமிழ்க் கடலே*
*இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே*

(நாமகள் பாமாலை

புலவர் முருகன் மீது தீராத பற்றுக் கொண்டவராக விளங்கியிருந்தார். அவரது கடவுளர் மற்றும் தலங்கள் பற்றிய பக்தி சார்ந்த படைப்புக்களில் அனேகம் முருகன் மீது பாடப்பட்டவையாகவே விளங்குகின்றன.

*"அஞ்சு முகத்தவர் கொஞ்சி முகந்திடும்*
*ஆறுமுகப் பதுமம்*
*அத்திமுகத்தர் மனத்தில் இனித்திடும்*
*ஆறிரு கண்வேழம்*
*கொஞ்சு மொழிக்கொரு வஞ்சி*
*முலைக்கொரு*
*கொண்டுமு திடுகோடு*
*குஞ்சரி சஞ்சரி கம்தொடர் மஞ்சரி*
*கொண்டனை யண்டர் தரு ....."*

புலவர் பக்திசார்ந்த படைப்புக்களை மட்டுமல்லாமல் பிற சமூகநலன் சார்ந்த விடயங்களையும், பிற பொதுவான விடயங் களையும் மரபுக் கவிதை வடிவத்தினூடாக வெளிப்படுத்தியிருப்பதனை நாம் அவதா னிக்கலாம். மரபுக் கவிதை வடிவத்தினைப் புலவர் கையாண்டிருந்தாலும் அவற்றி னூடாக நவீன கருத்துக்களை வெளிப்படுத் தியமை மற்றும் புதிய நவீன இலக்கியப் பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டமை அவரது குறிப்பிடத்தக்க ஆளுமையினை வெளிப்படுத்தி நிற்கின்றது.

## 04. புலவரின் நவீனத்துவம் சார்ந்த படைப்புக்கள்

ஈழத்து நவீனத்துவ சிந்தனையின் வளர்ச்சிக்காலமாக நாம் பத்தொன்பதாம் நூற்றாண்டைக் கொள்ளலாம். இக்காலகட் டச் சூழலில் வாழ்ந்த புலவர் நவீனத்துவ சிந்தனைகளையும் உள்வாங்கிக் கவிதைக ளைப் படைத்திருந்தார். ஈழத்திலே நவீனத் துவ சிந்தனையினை உள்வாங்கி முதலில் கவிதை படைத்தவராக தி.த சரவணமுத் துப்பிள்ளை விளங்குகின்றார் (தத்தை விடு தூது). அவரைத் தொடர்ந்து பாவலர் துரையப்பாபிள்ளை, மஹாகவி முதலானோ ரின் கவிதைகளில் அவை முழுவீச்சுடன் வெளிப்பட்டிருந்தன. இவர்களுடன் ஒப்பிடுமளவிற்கு புலவரின் கவிதைகளில் நவீனத்துவ சிந்தனைகள் வெளிப்படா விட்டாலும் மரபுசார்ந்த கவிதைகளை அதிக மாகப் படைத்த ஒரு மரபுக் கவிஞரின் நவீனத்துவ சிந்தனை வெளிப்பாட்டு முயற்சி என்ற வகையில் அவருடைய நவீனத்துவம் சார்ந்த கவிதைகள் போற்றத் தக்கன.

மரபும் நவீனமும் மற்றும் செய்யுள் நடை யும் உரைநடையும் இணைந்த மரபினைப் புலவரின் கவிதைகளில் நாம் அவதானிக்க லாம். பாரதியின் சமகாலத்திலும் பாரதியின் மறைவிற்குப்பின்னான முதல் மூன்று தசாப்த காலத்திலும் வாழ்ந்தவர் சோமசுந்த ரப்புலவர். ஈழத்து மஹாகவியான உருத்திர மூர்த்தியும் இளமைத்துடிப்போடு கவிதை கள் படைத்தகாலமும் புலவர் வாழ்ந்த சமகாலத்திலாகும். பல சமயப்பிரபந்தங்க ளைப் பாடிய இவர் தாம் வாழ்ந்த காலகட் டத்திற்கு அவசியமானவையாக விளங்கிய தேச முன்னேற்றம், சுகாதாரநலன், சமுதாய ஏற்றத்தாழ்வு, சாதிய ஒடுக்கு முறைகள், ஜீவகாருண்யம் போன்ற சமூக அக்கறை கொண்ட விடயங்களையும் பாட விழைந் தார். பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சூழ லிலே ஈழத்து நவீனத்துவ சிந்தனைகளின் வளர்ச்சிக்களமாக ஈழகேசரிப் பத்திரிகை விளங்கியது. நவீனத்துவம் மற்றும் முற் போக்குச் சிந்தனை கொண்ட படைப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் படைத்த ஈழத்துப் படைப்பாளிக ளுக்கு இப்பத்திரிகை தக்கதொரு நிலைக்களமாக அமைந்திருந்தது. நவீனத் துவ சிந்தனைகள் நிறைந்த அக்காலச் சூழலானது புலவரையும் நவீனத்துவ சிந் தனை கொண்ட படைப்புக்களைப் படைக்கத் தூண்டியது. புலவருடைய படைப்புக்கள் பலவும் அக்காலத்திலே ஈழகேசரியில் வெளிவந்தன. பத்தொன்பதாம் நூற் றாண்டுக் கவிதையுலகம் மற்றும் ஈழகேசரிப் பத்திரிகை தொடர்பாக கலாநிதி செ. யோக ராசா குறிப்பிட்ட செய்தி இங்கு எடுத்துக காட்டத்தக்கது.

ஈழத்து நவீன கவிதை ஊற்று வளமாகப் பிரவாகித்த 1930களில் ஈழகேசரிக் கவிஞர்கள் யாழ்ப்பாணத்திலும் மலையகக் கவிஞர்கள் மலையகத்திலும் அவற்றை முன்னெடுத்தனர். இத்தகைய ஈழகேசரிக் கவிஞர்களுள் முக்கியமானவர்களாக அல்வையூர் மு. செல்லையா, சோமசுந்தரப் புலவர், மு. நல்லதம்பி, வேந்தனார், மனுப் புலியார் போன்றோரைக் குறிப்பிடலாம்.

புலவருடைய "ஏறாத மாட்டுக்கு இரண்டு துலை" எனும் படைப்பானது சாதிய ஏற்ற தாழ்வு, புலால் உண்ணல் பற்றிப்பேசுகிறது. புலவரின் சமகாலத்தவரும் நவீன கருத்துக் களை முதன்முதலில் ஈழத்துத் தமிழ்க் கவிதை உலகில் வெளிப்படுத்தியவருமான பாவலர் துரையப்பாபிள்ளை வெளிப்படுத் திய சாதிய ஏற்றதாழ்வு, ஜீவகாருண்யம், முதலிய குறித்த பாடல்களோடு புலவரின் மேற்குறித்த படைப்பை ஒப்பு நோக்கினால் புலவரின் கவித்துவ ஆளுமை புலப்படும்.

**"புலையரென்றே எமைக் கழிப்பீர்**
**புலையர் தம் மலமுண்டு**
**நிலையுண்ட சேவல் தனை**
**நீர் உண்டீர் இன்றென்றான்**
**ஏறாத மேட்டினுக்கே**
**இரண்டு துலை இட்டதுபோல்**
**நாறுகின்ற மலமதனை**
**நாம் கோழி வயிற்றேற்றி**
**நயிந்தை வயிற்றேற்றுகிறோம்"**

சாதிய ஏற்றதாழ்வு, புலால் உண்ணல் ஆகிய இரண்டுக்கும் எதிரான கண்டனத் தினை வெளிப்படுத்தியதோடு நல்ல குணங்களால் உயர்வதுதான் உண்மை யான மேன்மையாகும் என்பதைப் புலவர் இக்கவிதையினூடாக வெளிப்படுத்தியுள் ளார்.

**"பொல்லாத குடியோடு**
**புலான் மிசையும் தொழில் விட்டு**
**நல்லார்கள் தொடர்புடனே**
**நாளும் அவர் உயர்கின்றான்"**

இவ்வாறு புலவரின், பிற்போக்குச் சிந்தனைக்கெதிரான தார்மீகக்குரல், முற் போக்குச் சிந்தனை, சமூகநலன் சார்ந்த கருத்துக்கள் முதலானவை பிரசுரமாக அல்லாமல் காட்சி மற்றும் கதையாக்கல் உத்திகளினூடாக இயன்றளவு கவித்துவ மாக புலவரின் படைப்பில் உரைநடையாக வெளிப்படுவதனை நாம் அவதானிக்கலாம். இத்தகைய சிறப்புத்தன்மையே ஏனையோ ரிடமிருந்து புலவரை வேறுபடுத்துகின்றது. இலக்கியப்படைப்பில் புலவர் மேற்கொண்ட நவீனத்துவ முயற்சிகளை நாம் அவருடைய சிறுவர் பாடல்களில் அவதானிக்கலாம்.

- ➢ அபிநயித்து நடித்தற்கேற்ற பாடல்கள்
- ➢ துண்டு துண்டான சிறிய வாக்கியங் களால் கவிதைகளை ஆக்கியுள்ளமை
- ➢ பல செய்திகளையும் கதைப் பாடல் களையும் தந்திருக்கின்றமை
- ➢ நாட்டுப்புறக் கதையம்சங்களைப் பயன்படுத்தல்
- ➢ சிறுவர்களின் உளவியலுக்கேற்ற கட்டமைப்பு மற்றும் வெளிப்பாடு
- ➢ சிறுவர்களின் இரசனை மிகும் வண்ணம் விகடமாக வெளிப்படுத்து கின்ற பாங்கு
- ➢ இனிய சந்தம் எளிமையான மெட்டு

முதலானவற்றைப் புலவரின் சிறுவர் பாடல்களில் அவதானிக்கலாம்.

புலவரின் "உயிரிளங்குமரன் நாடகம்" ஈழத் தின் முதலாவது "பா" நாடகமாகும். செய்யுள் நடையும் உரைநடையும் கலந்து உருவாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
270128

கப்பட்ட நாடகமாக இந்நாடகம் விளங்கு கின்றது பெரும்பாலும் சைவசித்தாந்தக் கருத்துக்களையே வெளிப்படுத்துகின்றது.

சமுதாயத்தினதும் நாட்டினதும் முன் னேற்றத்திற்கு அடிப்படையாக விளங்குவது கல்வியாகும். முப்பதாண்டுகால ஆசிரிய வாழ்க்கை மற்றும் அனுபவம் புலவரைக் கல்வியின் சிறப்பினை உணர்த்தும் கவிதை களைப் பாடத்தூண்டியது மட்டுமல்லாமல் சிறுவர்களின் உள்ளத்துணர்விற்கேற்ற பாடல்களைக் கட்டமைத்ததோடு சிறுவர் இலக்கிய முன்னோடி என்னும் அடையாளத் தினையும் அவருக்கு அளித்தது.

"கல்வியே யிருவிழி கல்வியே யிருநிதி
கல்வியே துணைவன் கல்வியே தோழன்
..............................................................
கல்வியே முதுசொம் கல்வியே யின்பம்
கல்வியே சிறப்புக் கல்வியே காவல்
கல்வியே தனிவழிக் கருந்துணை யாமென்
றைய மெடுத்துஞ் செய்ம்முறை கடவா
தொல்லும் வகையா லோதுவித் தருளிய
நன்றியை எம்பெரு மானே
என்றும் மறவா தேத்துகம் யாமே

**(கற்பித்த பத்து)**

புலவரின் படைப்புக்களில் காந்தியச் சிந்தனைகள் விரவி வருவதனை நாம் அவதானிக்கலாம். புலவர் முதலான சமகால ஈழகேசரி எழுத்தாளர்கள் மு. செல்லையா, வேந்தனார், மு. நல்லதம்பிப் புலவர், மனுப் புலியார் முதலானோரின் படைப்புக்களில் இத்தகைய காந்தியச் சிந்தனையின் செல்வாக்கினை நாம் அவதானிக்கலாம். இவர்களுள் மு. செல்லையாவின் படைப்புக் களில் காந்தியச் சிந்தனையின் செல்வாக் கினை அதிகம் அவதானிக்கலாம்.

**முடிவுரை**

ஈழத்துத் தமிழ்க்கவிதை மரபில் குறிப்பாக 19 ஆம் நூற்றாண்டு கவிதைச் சூழலில் தவிர்க்கமுடியாத ஓர் ஆளுமை யாக விளங்குபவர் நவாலியூர் சோமசுந்தரப் புலவர். மரபும், நவீனமும் சார்ந்த கவிதை களைப் படைத்த முக்கியமான ஆளுமை யாளர். சிறுவர் இலக்கியத்திலே நவீனத்து வத்தினைச் செலுத்திய சிறுவர் இலக்கிய முன்னோடி. காலனியச் சூழலிலே கிடைத்த மரபுக்கல்வியும், நவீன கல்வியும் மற்றும் தமிழக அரசியல் விழிப்புணர்ச்சி, காந்தியச் சிந்தனையின் செல்வாக்கு, ஈழத்து அரசியல் விழிப்புணர்ச்சி, ஈழகேசரியுடனான தொடர்பு முதலானவை புலவரை மரபும் நவீனமும் நிறைந்த படைப்புக்களைப் படைக்கத் தூண்டுகோலாக அமைந்தன. மரபும் நவீனமும் கலந்த ஓர் ஆளுமையாக அவர் விளங்குகின்றார்.

**அடிக்குறிப்பு**

01. பண்பாடு, இதழ் - 36, 2009, ப.26.
02. பண்பாடு, இதழ் - 36, 2009, ப.38.

**உசாத்துணை நூற்பட்டியல்**


- கனகரத்தினம், த. (2007) ஈழநாட்டுப் புலவர்களின் கவித்திறமும் தனிப்பாடல்களும், சென்னை : மணிமேகலைப் பிரசுரம்.
- சோமசுந்தரப்புலவர், (1933) தந்தையார் பதிற்றுப்பத்து, சுன்னாகம் : திருமகள் அழுத்தகம்.
- சோமசுந்தரப்புலவர், (1936) நாமகள் புகழ்மாலை, யாழ்ப்பாணம் : ஒறியன் பதிப்பகம்.
- பண்பாடு, இதழ் - 36, 2009




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு.கதிர்காமு ரட்ணேஸ்வரன்**
விரிவுரையாளர் (சித்திரக்கலை)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.



# கலையோடு இயைந்த வாழ்வு

“கலையானது தன்னலங்களும் பழி பாவங்களும் நிறைந்த உலகைவிட்டு தம்மை அப்பால் அழைத்துச் செல்ல வல்லது” என்கிறார் கலைஞானி ரவீந்திரநாத் தாகூர். தான் பெறுகின்ற அனுபவத்தினை பிறரும் அனுபவிக்கத் தூண்டும் இக் கலைகளினால் மனித மேம்பாட்டுக்கு வேண்டிய பண்புகளான பொறுமை, சகிப்புத்தன்மை, சமநிலை ஆளுமை, காருண்யம், மகிழ்ச்சி, தன்னடக்கம், நட்பு, மனத்திருப்தி போன்ற பலவற்றை மனிதருள் வளர்த்துக்கொள்ள முடிகிறது. பல்வேறு போரின் வடுக்கள் பதிந்து போயுள்ள மக்களின் மனங்களில் உள உய்வினை கலைகளால் ஏற்படுத்த முடியும். வேண்டாதவற்றை மனதிலிருந்து கலைந்து வேண்டிய மகிழ்ச்சியையும் ரசஞான உணர்ச்சியையும் தரவல்ல தகுதி கலைகளுக்கு உண்டு. கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள் தமது அழகியல் எனும் நூலில் குறிப்பிடுகையில் “அழகு என்பது ஆய்வுப் பொருளாகிவிட்டது. கலைப்படைப் புகளை அனுபவிப்பதால் சுவைப்பவரது விளக்கம் மேம்படல், விருத்தி பெறல், ஒழுக்கம் நல்லாற்றுப்படல், வாழ்வுப் பயன் மேலோங்கல் முதலானவை எழும் விளைவு களாகும்” என்கிறார்.

நாகரீகம், பண்பாடு, கலாசாரம் என்ப வற்றுக்கெல்லாம் கலைகளே அத்திவார மாக அமைந்திருக்கின்றன. எகிப்து, கிரேக்கம், ரோம், பபிலோனியா, சுமேரியா, இந்தியா போன்ற நாடுகள் எல்லாம் நாகரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தில் மேம்பட்டவை எனச் சொல்வதற்கு கலைகளே ஆதாரமாக இருந்துள்ளன. நாடுகளாலும், மொழிகளாலும், இனங்களாலும், சமயங்களாலும் பிரிந்து வாழும் மக்களின் கருத்துக்களை ஒருவருக்கு ஒருவர் புரிந்து கொள்வதற்கும், வெளிப்படுத்துவதற்கும் கலைகள் ஓர் எல்லை கடந்த மொழியாக விளங்குகின்றன.

**கலைகள் அருமருந்து**

கலைகளோடு இணையாத வாழ்வு பூரணமற்றது. ஆத்மீக வளர்ச்சிக்கும் பெரிதும் உதவும் கலையானது பலவித உடல் உள நோய்களை நீக்கும் ஔடதமாகவும் விளங்குகிறது. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை மனித மேம்பாட்டுக்கு உயிர்ப்பைத் தந்து கொண்டிருப்பது கலைகளே!.

அனுதாபம் உடையதும் அழகியதுமான எண்ணங்கள் விருத்தியடைவது கலைகளின் மூலமாகும்.சமூகத்துக்கு முரணான குரோதம், பகை, பழிவாங்கல்கள் போன்ற கெட்ட உணர்வுகள் மறைந்து மனித ஆதரவும் நயக்கும் திறனுமுள்ள மனிதர்களை




வெளிப்படுத்துவதற்கு கலை பேருதவியாக அமைகிறது. மனித இனத்தின் முன்னேற்றத்திற்காக தன்னடக்கம் உள்ள நற்பண்புகளைக் கொண்ட மனிதப் பண்புகளைப் பெறுதலானது கலைகளின் மூலமே சாத்தியமாகின்றது. சுற்றத்தையும் சுற்றாடலையும் மதிக்கவும் நேசிக்கவும் தெரிந்த ஒருவருக்கு இயல்பாகவே மனித நேய விருத்தி ஓங்குகின்றது. மனிதன் தான் வாழும் பிரதேசத்திலும் நாட்டிலும் இயற்கை எழிலையும் உயர்ந்த அழகையும் ரசிக்கவும், மதிக்கவும், பாதுகாக்கவும், நிலைபெறச் செய்யவும், விருத்தி செய்யவும் கலைகள் பெரிதும் உதவுகின்றன.

**விழுமியங்களை மேம்படுத்துவதில் கலைகள்**

சமநிலை ஆளுமையுடைய மனிதர்களை வெளிப்படுத்த கலைகள் பெரும் பங்காற்றுகின்றன. தனி மனித அறிவு, மனவெழுச்சி, உள இயக்கம் என்பன சிறப்பான முறையில் முன்னேறுவதை சமநிலை ஆளுமைக்குரிய விருத்தி எனலாம். எமது சமூக எத்தனத்தின் வெற்றியானது ஒவ்வொரு தனிநபரிலும், பொது ஒத்துழைப்பிலுமே தங்கியுள்ளது. பலவித கருத்து வேறுபாடுகளுக்குள் ஒத்து வருதல், ஒரு குறிக்கோளை நோக்கி கூட்டாகவும் நல்ல எண்ணத்துடனும் முன்னேறுவதற்கான தொழிற்பாட்டினை அமைத்தல், ஒவ்வொருவரினதும் திறமைகளை மதித்தல், தலைமை தாங்குதல், விமர்சனங்களைச் சகித்துக் கொள்ளல் போன்ற சிறந்த மனப்பாங்குகளை தனிநபருள் விருத்தி செய்வது கலைகளின் மூலம் எளிதாக ஏற்படுத்த முடிகின்றது.

பலவித உடல் உள குறைபாடுகள் நிறைந்துள்ள எமது சமூகத்தில் பொது வேலைகளில் ஈடுபட திறமை வாய்ந்த தலைமைத்துவம் அவசியமாகும். தொடங்கும் ஆற்றல், எதிர்கால தூரதரிசனம், தொடர்புபடுத்தும் ஆற்றல், அமைக்கும் ஆற்றல் போன்ற தலைமைத்துவ குணங்களை விருத்தி செய்கின்ற களமாக கலைகள் விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன், மனிதன் மீது அனுதாபப் பார்வையை செலுத்தினால்தான் அத்தகைய சமூகம் ஒன்றி வாழ்தல் ஆறுதலளிக்கும். இன்று எமது சமூக போக்குகளை உய்த்தறிகின்ற போது பல்வேறுபட்ட பிறழ்வுகளை அவதானிக்க முடிகின்றது. சமூக மட்டத்தில் இவ்வாறான பிறழ்வுகள் ஏற்படுத்துவதற்கு இளவயதினரே காரண கர்த்தாவாக அமைகின்றனர்.

நாளாந்த செய்திகளை அறிகின்றபோது பல்வேறுபட்ட வன்முறைச் சம்பவங்களும் சமூகசீரழிவுகளும் இல்லாமல் இல்லை. பழிவாங்கும் படங்கள், கொலை, கொள்ளை, கடத்தல்,வன்முறைகள், போதைப் பொருள் பாவனை, பெற்றோரை ஆசிரியரை மதிக்காமை போன்ற பல கவலை தரும் சம்பவங்கள் நடந்தேறுகின்றன.

இதற்கிடையில் தென்னிந்திய சாக்கடை சினிமாக்களும், உள்ளூர் தொலைக்காட்சி, வானொலிஊடகங்களும் இன்றைய இளையோர் யுகத்தை வெறும் கற்பனைப் பெட்டகங்களாக, களியாட்ட மன்னர்களாக உருவாக்கியுள்ள சூழ்நிலையில் வெளிநாட்டு பண மீதியால் மோட்டார் சைக்கிள் பாவனைகளும் செல்போன் கவர்ச்சிகளும் மேலும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இவ்வாறான போக்குகளுக்கு வெறும் அரசியல், பொருளாதார சூழ்நிலைகளை காரணம் காட்டுதல் பொருத்தமானது அன்று. இளைஞர்கள் இங்கிதமாய் வாழ்வதற்கும், சமூகத்திற்கு உகந்த, உயர்ந்த மதிக்கக்கூடிய மனிதர்கள் ஆவதற்கும் அவர்களிடம் சிறந்த மனப்பாங்குகள் விருத்தி அடையவேண்டும். அன்பு, தயவு, கீழ்ப்படிவு, கருணை போன்ற சிறந்த குணங்களை சிறுபராயத்தில் இருந்தே வழிப்படுத்தி ஊக்குவிக்க வேண்டும். சுற்றத்தையும் சுற்றாடலும் நேசிக்கவும் மதிக்கவும் தெரிந்த ஒருவருக்கு இயல்பாகவே மனிதநேய விருத்தி ஓங்குகின்றது. மனிதன் தான் வாழும் பிரதேசத்திலும், நாட்டிலும் இயற்கை எழிலையும், உயர்ந்த அழகையும், ரசிக்கவும், பாதுகாக்கவும், மதிக்கவும், நிலைபெறச் செய்யவும், விருத்தி செய்யவும் கலைகள் பெரிதும் உதவுகின்றன.



**கலைத்துறையும் இன்றைய கல்வி நிலையும்**

உலகளாவிய ரீதியில் இன்றைய இனங்களெல்லாம் தமது தேசிய அடையாளங்களைப் பாதுகாக்கவும், பேணவும், அவற்றை நிலைநிறுத்தவும் கலைகளையே பெரிதும் நம்புகின்றன. தேசியத்தின் மூச்சும், பண்பாட்டு விழுமியங்களின் பேச்சும், கலைத்தழுவலிலேயே நிலைத்திருக்கின்றன. 'யுனெஸ்கோ' நிறுவனம் தனது அண்மைய வெளியீடு ஒன்றில் இதனையே தெளிவுபடுத்தி இருக்கிறது.

இன்றைய சந்ததியினருக்கு மொழித்துறை சார்ந்த விருத்தியோடு கலை, இலக்கியம் சார்ந்த கல்விக்கூடாக உயர்ந்த சிந்தனைகளையும் புத்தாக்கத் திறன்களையும் விருத்தியாக்க வேண்டியுள்ளது.

இன்றைய எமது பாடசாலைக் கல்வி முறையானது பெரும்பாலும் வகுப்பறைக்கு உள்ளே மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாகவே அமைகின்றது. பரீட்சைகளை மையமாகக் கொண்டு இயங்கும் இவ்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றான கல்வி முறைமையினால் வீடுகளிலும் தனியார் கல்வி நிலையங்களிலும் மாணவர்கள் ஓர் இயந்திர வல்லுனர்களாகவே செயற்படும் நிலை காணப்படுகின்றது. இதனால் மாணவர்கள் பிற்காலத்தில் ஓர் இயந்திர வல்லுனர்களாக இயங்குவார்களே தவிர, சமூகத்திற்குப் பயன்தரு நல்லவர்களாக பண்பட இடமில்லை. இவர்கள் சுயநல நோக்கோடு சமூக சீரழிவுகளுடன் மானிடப் பண்புகள் மரணித்தவர்களாகவே மீதப்படுகின்றனர்.

பாடசாலைகளில் ஆசிரியர் சார்பான கல்வி முறையால் மாணவர்களில் சுயாதீன விருப்பு வெறுப்புகளை வெளிப்படுத்தும் ஆக்கத்திறனை வெளிக்கொணர முடியாத நிலை காணப்படுவதாக சில கலை ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பிள்ளைகளின் சுய வெளிப்பாடுகள் கலைக்கல்வி மூலமாக வெளிப்படுத்த இடமளிக்க வேண்டுமென "சிறில்பேட்" போன்ற கல்வியியலாளர்கள் முன்மொழிந்துள்ளனர்.

மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும் கலைக் கல்வி மூலம் அறிவு வளர்ச்சி முதலாகக் கொண்ட ஆளுமையும் வளர்ச்சியடைகின்றது. சுதந்திரமான எண்ணங்களையும் கருத்துக்களையும் வெளிப்படுத்துவதற்கான பரப்பாக கலைத்துறை அமைகின்றது. பாடசாலைப் பாடத்திட்டத்தில் உள்ள ஏனைய பாடங்களிலும் விட கலைப் பாடங்களில் அறிவுப்புலமும், ஆற்றல் வளமும், உள இயக்கமும், உரிய முறையில் இணைக்கப்படுகின்ற பாடப் பரப்பாக கலைத்துறை காணப்படுகின்றது.

நவீன கற்றல் கற்பித்தல் முறைகளில் கலைத்துவ புகுத்தல் இல்லாத கல்வி செயற்பாடுகள் உப்பில்லா பண்டங்களாக காணப்படுவது கண்கூடு. கற்றலில் நிறைவு பெறுவதற்கான ஆதாரங்கள் கலைக் கல்வி ஊடாகவே நிரூபணமாகின்றது. பல்வேறுபட்ட சூழல் காரணிகளால் உளக் குறைபாடுகளும், வறுமையும், பின்னடைவுகளும் அடைந்து கொண்டிருக்கும் எமது தேச குழந்தைகளுக்கு கலைக்கல்வி மூலமான ஆற்றுப்படுத்தல் அவசியமா கின்றன.

எமது பாடசாலைகளில் பெரும்பாலானவை கலைக் கல்வியை இரண்டாம் தரமாக வைத்துப் பார்க்கின்ற நிலை கவலையளிக்கின்றது. போட்டிகளில் பங்கேற்பதற்கும், விருந்தினர்களை மகிழ்விப்பதற்குமான ஒரு தளமாகவும் கலைகளைப் பயன்படுத்துவது வேதனை...


இக்கலைப் புறக்கணிப்புகளால் வெறும் அறிவை மட்டும் விழுங்கிய மாணவ சமூகங்களாக ஈற்றில், கலைக் கல்வி மூலம் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற மானுடப் பண்புகளையும் மனித விழுமியங்களையும் இழந்தவர்களாகக் காணமுடிகின்றது. கலைக் கல்வி மூலம் வெளிப்படும் சமநிலை ஆளுமை விருத்தி, ஆரம்ப காலத்திலிருந்தே மாணவர்களிடம் வித்திடப்பட வேண்டும். இது கல்விச் சமூகத்தினரது முக்கிய கடமையாகும். ஆக்க வெளிப்பாட்டுத்திறன், அழகியல் ரசனை உணர்வு, உயர்ந்த உளப்பாங்குகள் என்பவற்றை உருவாக்கக்கூடிய கலைக் கல்வியின் அற்புதங்களை அனைவரும் புரிந்து கொண்டு செயற்படுதல் அவசியமாகிறது.

**"அழகான சிந்தனைகளும்
செயல்களும் விருத்தியடைவது
கலைகளின் மூலமே"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ.காயத்ரி இராசையா
M.A.,M.Phil
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.





# மறைந்த கலைஞரின் வாழ்வியல் பற்றிய

## அனுபவப் பகிர்வு

பொதுவாக கலைஞர்கள் மறைவதில்லை, அவர்களது படைப்புக்களூடாக நம்மிடையே என்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் எனக் கூறுவது பொருத்தமானதாகும். அந்த வகையில் ஓவியக்கலைஞர் ஆசை இராசையா அவர்களது வாழ்வியல் பற்றிய எனது அனுபவப் பகிர்வை இவ்வருட பண்பாட்டலுவல்கள் திணைக்கள வடந்தை இதழில் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பினை எனக்களித்தமைக்கு வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

ஓவியர் அவர்களது துறைசார்ந்த சாதனைகள், நுட்பங்கள், அவருக்கே உரிய தனித்துவமான பாணி ஆகியன பற்றி பலர், பல தடவைகள் பத்திரிகை வாயிலாகவும், நேர்காணல்கள் மூலமாகவும் இன்றும் பகிர்ந்த வண்ணமே உள்ளனர். “ஓவியர் ஆசை இராசையா அவர்கள் ஓவியக்கலை உலகில் நிரப்ப முடியாத நீண்ட ஒரு இடைவெளியினை விட்டுச் சென்றுள்ளார்” என பல கலைஞர்கள் வாயிலாக கூறப்பட்டு வருவது நாம் அறிந்ததே. இதுவே இக்கலை சாம்ராஜ்யத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியர் ஆசை இராசையா அவர்களது மகளாக அவரது வாழ்வியல் பற்றிய எனது அனுபவப் பகிர்வினை இங்கு பகிர்ந்து கொள்கின்றேன். அப்பாவின் மறைவிற்குப் பின்னர் என்னைப் பலர் பல தடவைகள் கேட்டிருப்பார்கள், அப்பாவுடனான உங்க ளது அனுபவத்தினை எழுதத் தொடங்க லாமே என்று. எழுதுவதற்கு நிறையவே உண்டென்றாலும், அதனை எழுதுவதற் கான மன வலிமை என்னிடம் இல்லை. எழுதத் தொடங்கலாம் என ஆரம்பித்த போதும் கூட எனது தொண்டை கனத்து கண் களினால் வழியும் கண்ணீரை கட்டுப் படுத்தும் மனஉறுதி இன்னும் எனக்கு வர வில்லை. ஆனால் இச்சந்தர்ப்பத்தில் இந் நூலில் பதிவுசெய்வது மிகவும் அவசிய மென என் மன உந்துதலினால் அழுகை யையும் மீறி எனது விரல்கள் தட்டச்சினை இயக்கத் தொடங்கியுள்ளது.

இயல்பாகவே, கலைத்துவம் சார்ந்த குடும்பத்தில் பிறந்ததாலோ என்னவோ, எனது தந்தையின் ஈடுபாடு முழுவதும் கலைத்துறை சார்ந்தே வெளிப்பட்டது. அவரது முதற் குருவாக எப்பொழுதும் தனது தாயாரைக் கூறுவது வழக்கம். "கண் பார்த் தால் கை செய்தல் வேண்டும்" என எனது அப்பம்மா கூறுவதனை வேத வாக்காகக் கொண்டு எத்துறையிலும், எச்செயலிலும் சுயமாகவே படைக்கும் ஆற்றலினைக் கொண்டிருந்தார் எனது தந்தை.

அவர் தனது SSLC இல் Geometrical Mechanical Drawing பாடத்தில் திறமைச் சித்தி (Distinction) பெற்றார். ஆனால் அவர் மனமோ ஓவியத்துறையில் மட்டும் சென் றது. எல்லாத் தந்தைகளின் ஆசை போன்றே எனது அப்பப்பாவிற்கும் தனது மகனை சிறந்த நிலையில் வைத்துப் பார்க்க வேண் டும் என்ற எண்ணம். அதனாலே அவர் தனது மகனை கட்டடக்கலை நிபுணராக்கும் நோக்கில் உயர்கல்விக்காக இந்தியாவிற்கு சென்று கற்று வருமாறு கூறினார். அதற்கு என் தந்தை ஓவியத்துறையில் தான் நான் சாதிக்க விரும்புகின்றேன் எனக் கூறி தந்தை யின் விருப்பத்திற்கு மறுப்புத் தெரிவித்தார்.

இவ்வாறு அவரது வாழ்க்கைப் பயணம் ஓவியக்கலையை மட்டுமே உயிர்மூச்சாகக் கொண்டு பயணிக்கத் தொடங்கியது.

அவரது கலைப்பயணம் பேரும் புகழும் பெற்று சிறப்பாக வளர்ச்சிப் பாதையை நோக்கி சென்றுகொண்டிருந்தது. ஓவியக் கலையுடன், புகைப்படக்கலை, யோகக் கலை, கவிதை எழுதும் ஆற்றல், ஆடை வடிவமைத்தல், ஒப்பனைக்கலை, தளபாடங் கள் வடிவமைத்தல், பலவகையான உணவு வகைகள் செய்தல் போன்ற பல கலைச் செயற்பாடுகளில் இயல்பாகவே ஈடுபடும் திறமை கொண்டவராகவும் விளங்கினார்.

தனது வாழ்க்கையில் நடைபெறும் சில சுவாரசியமான சம்பவங்களை கவிதை வடிவில் வடிக்கும் பழக்கத்தினையும் கொண்டிருந்தார். எப்போதும் இணைபிரியா தம்பதிகளாக சுற்றித் திரியும் தனது பாட்டி, பாட்டனார் இறுதியில் பாட்டியின் இறப்பின் பின் பாட்டனார் புலம்புவதாக தனது பின் வரும் கவிதை மூலம் அழகாகக் கூறியுள் ளார்.

**"ஒற்றைத் திருக்கல்லில் ஆரோகணித்திருந்து**
**சுற்றாத் தெருக்களில்லை சுந்தரியே என்னுடன் நீ**
**வெற்றுத் திருக்கலை வீதியிலே காணுகையில்,**
**பற்றி எரியுதடி பாழுமுயிர் என்னுடலில்"**

இவ்வாறு அவரது ஓவியத்தில் மட்டுமல்ல அவரது கவிதை வரிகளிலும் எனக்கு ஈர்ப்பு அதிகம்.

குடும்பத்தினரின் வேண்டுகோளுக் கமைய தனது தாய்மாமன் உறவு வழியில் எனது தாயாரை மணம் முடித்தார். இயல்பா கவே கவிதையும் எழுதும் ஆற்றல் இவருக்கு உண்டு. எனது தாயார் தனது பிரசவத்திற் காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டிருந்த சந்தர்ப்பத்தினை அவர் பின் வரும் கவிதை வரியில் குறிப்பிட்டிருந்தார்.


**விதி**

**ஏழாண்டுகள் கழித்து**
**என் மனைவி கருவுற்றாள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்,
பிறப்பது,
ஆணா? பெண்ணா?
எனக்குள் ஒரு ஏக்கம்.
பிள்ளைகளைப் பெற்றெடுக்க முடியாத பெண்
மலடி என ஒதுக்கி வைக்கப்படுவதும்,
கணவனை இழந்த பெண்ணை விதவையென ஒதுக்குவதும்,
காலங்காலமாக அரங்கேறும் நடத்தைக் கோலங்கள்.
சீதனக் கொடுமையால் எத்தனை பெண்களின் வாழ்வு
கேள்விக்குறியாகிவிட்டன.
"ஐந்து பெண்களைப் பெற்றால் அரசனும் ஆண்டி"
மாதச் சம்பளத்தை நம்பி வாழும் ஒரு கலைஞன்
ஒரு பெண்ணுக்காயினும் சீதனம் சேர்க்கமுடியுமா?
பலதையும் எண்ணிக் கலங்கியது மனம்.
ஆயினும்,
கர்ப்பிணிப் பெண்ணானவள்
இருப்பது, நடப்பது, படுப்பது இவற்றை வைத்தே
அவள் கருவில் சுமப்பது ஆணா பெண்ணா?
எனக் கூறும் ஐதீகம் கூறியது
என் மனைவி சுமப்பது ஆண் குழந்தையே யென்று.
சேதி கேட்டு "யாழ்தேவி" யில் புறப்பட்டவன்
அதிகாலை ஐந்து மணியளவில்
யாழ் மண்ணில்,
மகப்பேற்று விடுதியில் மனைவி.
சத்திரசிகிச்சை வலியிலும்
முகத்தில் ஒரு பூரிப்பு.
மனம் இலோசாகியது.
ஆண்டவனுக்கு நன்றி.
ஆனாலும்,
தொட்டிலில் துயிலும் குழந்தையை எட்டிப் பார்த்தவனை
பெண் குழந்தை வடிவில்
கைகொட்டிச் சிரித்ததாம் விதி.



ஆண் வாரிசை எதிர்பார்த்த ஒரு தந்தையின் ஏக்கம் பெண் வாரிசைக் கண்டதும் தனது உயிர் மகள் தானெனக் கொண்டாடும் அளவிற்கு மாறியது. ஒவ்வொரு நொடியும் எனக்காகவே வாழ்ந்தார். கொழும்பு றோயல் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்ததன் காரணமாக நான் பிறந்த பின் எனது அம்மாவும் நானும் எங்களது ஏனைய குடும்ப உறுப்பினர்களுடனேயே ஊரிலேயே இருக்க வேண்டி இருந்தது. எனது மழலைப் பருவ புகைப்படங்கள் என்

நான் பிறந்ததிலிருந்து அப்பாவின் இறுதி நாட்கள் வரைக்கும் அவரின் கைகளைக் கோர்த்தபடி வாழ்ந்த சந்தர்ப்பங்கள் மட்டுமே அதிகம். "அப்பா" எனும் வரையறை இன்றி ஒரு நல்ல தோழனாக என் வாழ்வில் சகலமுமாய் வாழ்ந்த என் உயிர் விடை பெற்றுவிட்டது என்பதை இன்றும் மனம் ஏற்க மறுக்கின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தைமார்களால் அப்பாவிற்கு அனுப்பி வைக்கப்படுவது வழக்கம். அப்புகைப்படத் திற்குப் பின்னால் கவிதை வடிவில் தனது பாசத்தை இவ்வாறு வெளிப்படுத்தியிருப் பார். "புள்ளிச் சட்டையழகா? இந்தப் புள்ளி மான் கன்றழகா?", "வீணை இசை பழகட் டாம் இந்த வேலையற்ற அப்பாவும், வீணை யின் தந்தி இந்த மென்விரலை வெட் டாதோ?" இவ்வரிகளெல்லாம் எனது அப்பாவின் வாயாலே நான் நிறைய தடவை கள் கேட்டதுண்டு.

இவரது பண்புகளில் என்னைக் கவர்ந்த பண்புகளில் ஒன்று, நான் தனது மகளானா லும் என்னிடம் தேவைப்படின் "நன்றி", "மன்னிக்கவும்" என்ற வார்த்தைகளைப் பயன்படுத்த அவர் தவறியதில்லை. பாட சாலை முடியும் நேரத்திற்கு முன்னராகவே எனது பாடசாலை வாசலில் எனக்காகக் காத்திருப்பார் அப்பா. எப்போதாவது ஓரிரு தடவைகள் வேலைப்பளுவினால் ஐந்து நிமிடம் தாமதமாக வந்தால் கூட நான் எங்கே தன்னைத் தேடிக் கவலையடைவேன் என உணர்ந்து வீடு போகும் வரைக்கும் "Sorry ma, Sorry ma" என பல தட வைகள் கூறியிருப்பார். வீட்டில் இருக்கும் போது அவர் ஏதேனும் சிறு உதவி கேட்டு நாம் அதனை செய்தவுடன் "Thank you ma" எனக் கூறத் தவறியதில்லை. இத்தகைய பண்பு பல குடும்பங்களில் காணப்படுவது அரிது என்பதால், இது போன்ற நிறைய நல்ல விடயங்களை அவரிட மிருந்து கற்றுக் கொள்வது எனக்குப் பிடித்தமானதொன்று.

உதவி என்று யார் வந்து கேட்டாலும் அவர் மறுத்து நான் பார்த்ததில்லை. தனக்கு உடல்நிலை சரியில்லாத நேரங்களில் கூட அதனையும் பொருட்படுத்தாது கடமை களை நிறைவேற்றிய பின்னர் தான் ஓய்வு எடுப்பார். இப்பண்பினை நான் அவதா னித்து ஆச்சரியப்படுவதுண்டு."அப்பா உங்களுக்கு உடம்பு சரியில்லை எண்டு சொன்னீங்க, இப்ப எங்க வெளிக்கிடுறீங்க?" என்று நான் கேட்டாலும் "உடம்புக்கு முடி யேல்லத்தான்; ஆனால் எப்பிடியாவது செய் யத்தானே வேணும்" என்ற அவரது மன



வலிமையினை அவரது இறுதிக்காலம் வரைக்கும் கொண்டு சென்றதை நினைத்து இன்று வரை நான் ஆச்சரியப்படுவதுண்டு.

எனது சிறுவயது முதல்கொண்டு அவரது ஓவியக் கண்காட்சிகள், இவை தொடர்பான பல கலைஞர்களது சந்திப்புக்கள் என சகல இடங்களிற்கும் என்னை அழைத்துச் செல்வது வழக்கம். நேரமுகாமைத்துவம், செய்யும் காரியங்களை அர்ப்பணிப்புடன் திறம்படச் செய்தல் என அனைத்தையும் எனக்கு வழிகாட்டுவார். அவரது சமையல் கைப்பக்குவம் எனக்கு மட்டுமல்ல அனைவ ருக்கும் மறக்க முடியாததொன்று. பல வகை யான பிரியாணி வகைகள், 50 வகையான கேக் வகைகள், புடிங்க் உட்பட அனைத்தி லும் தனது கண்டுபிடிப்பையும் புகுத்தி மிகவும் சுவையாக செய்வதில் அவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரார்வம். அவரது சமையல் முறைகளுக் கான செய்முறைகளைத் தனது கையெ ழுத்து வடிவில் வைத்திருந்தார். இன்று அவற்றை தொகுத்து நூல் வடிவாக்கினால் என்ன என எனது மனதில் எழுவ துண்டு.

தன்னைத் தேடி யார் வீட்டுக்கு வந்தா லும் விருந்துபசாரம் செய்யாது அவர்களை அனுப்புவதில்லை. இப்பண்பினை இந்தி யாவில் இருந்து எமது வீட்டிற்கு வருகை தந்திருந்த ஓவியக் கலைஞர்கள் தங்களது நூல்களில் குறிப்பிட்டுள்ளார்கள். இன்றும் அப்பாவின் யாழ். நண்பர்கள் அவரது பிரிவால் வருந்துவது அப்பாவின் உயர்ந்த பாசத்தினை மட்டுமே உணர்த்துகின்றது. அப்பாவின் நண்பர்கள் வட்டாரத்தில் குறிப்பாக சகோதர மொழிக் கலைஞர்களும் இன்றுவரை என்னுடன் தங்களுடனான உறவினைப் பேணி வருவது என் தந்தை எனக்காக விட்டுச் சென்ற பொக்கிஷங்க ளில் ஒன்று. தான் பெற்ற மகளை மட்டும் பிள்ளையாகக் கருதாது தன்னிடம் ஓவியம் பயின்ற மாணவர்களையும் தனது பிள்ளை களாக வழிநடத்தினார். இன்றுவரை அவரது பல மாணவர்கள் அவரது பிரிவினைத் தாங்காது என்னிடம் பகிர்ந்துகொள்வார்கள்.

நான் பிறந்ததிலிருந்து அப்பாவின் இறுதி நாட்கள் வரைக்கும் அவரின் கைக ளைக் கோர்த்தபடி வாழ்ந்த சந்தர்ப்பங்கள் மட்டுமே அதிகம். "அப்பா" எனும் வரையறை இன்றி ஒரு நல்ல தோழனாக என் வாழ்வில் சகலமுமாய் வாழ்ந்த என் உயிர் விடை பெற்றுவிட்டது என்பதை இன்றும் மனம் ஏற்க மறுக்கின்றது. இவர் இல்லாதது ஓவி யத்துறைக்கு மட்டும் வெற்றிடமல்ல, இவ ருடன் பழகிய அன்பர்கள் மனத்தில் பாசத் திற்கான வெற்றிடமும் என்பதே உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி. சி. கீதநந்தினி**
47/15, கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு.



# பாரம்பரிய உணவுப் பழக்க வழக்கங்கள்

இறைவன் படைப்பில் உயிர்கள் அனைத்திற்கும் உணவு தேவை. கருவில் இருந்து உருவம் பெற்று இறக்கும்வரை அவற்றிற்கு உணவு தேவைப்படுகிறது. உணவிலும் சைவம், அசைவம் என இரு வகைப்படும். உணவில் கூட பசுவிற்கும் புலிக்கும் இடையிலே குண வேறுபாடு காணப்படுகிறது. ஏனெனில் புல், இலை, குழை உண்ணும் பசுவின் குணம் சாத்வீகமாகவும், கொலை உணவுகளை உண்ணும் புலியின் குணம் கொடூரமாகவும் அமைவதைக் காண்கின்றோம். இப்போது நாம் பாரம்பரிய உணவுப் பழக்கங்களைப் பார்ப்போம். பாரம்பரியம் என்றால் பழைய சம்பிரதாயம் என்பதாகும். இன்னும் பழக்கங்கள் வழக்கமாகி வழக்கங்கள் ஒழுக்கமாகி வருகின்றன. முன்பு கிராமங்கள் தோறும் கமம், புலம், பண்ணை, தோப்புகள், கூடல்கள் காணப் பட்டன. எனவே கூடுதலான வேலைப் பழுக்கள், சுமைகள் இருந்தன. அதனால் குடும்பங்கள் கூட்டுக் குடும்பமாகவும், மகிழ்ச்சியாகவும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும், குடும்பத் தலைவனுக்கு கட்டுப்பட்டு வாழும் முறை ஏற்படலாயிற்று. காலையில் சூரிய உதயத்திற்கு முன் எல்லோரும் எழுந்து காலைக்கடனை முடித்து இறை வழிபாட்டின் பின் பழந்தண்ணீரில் (இரவு மிஞ்சிய சோற்றில் நீர் ஊற்றல்) வெங் காயம், மோர், பச்சைமிளகாய், ஊறுகாய் இட்டு சிறு குழந்தை முதல் பெரியவர் வரை குடிப்ப தால் இரவு முழுவதும் உடம்பில் ஏற்பட்ட சூட்டைத் தணிப்பதாகக் கூறுவர். சிலர் பனாட்டைக் கடித்துக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழந்தண்ணீரைக் குடிப்பார்கள். வயலுக்குச் சென்று வேலை செய்து கூட்டான குடும்ப மாக பாங்குடன் வேலை செய்து களைப்பு நீங்க பெண்கள் சோற்றுப் பானையுடன் (குத்தரிசி, சாமை அரிசி, வரகு அரிசி), கீரைக்கறி (தொய்யில், புளிக்கீரை, பசளி, முளைக்கீரை), பச்சடி வகைகள் (மொசு மொசுக்கை, தூதுவளை, வல்லாரை, பொன் னாங்காணி) வகைகளும், கத்தரிக்காய் (வழுதுலங்காய்) கறியும், முசுட்டை, முல்லை, காரை குழம்பும் பொரியல் வகையுடன் பனைஓலை பிளா தட்டமும் கொண்டு சென்று மதிய உணவை உண்பார்கள். சாப்பிட்டு முடிந்த பின் பனை ஓலைப் பிளாவை எறிவதால் பசளையாகப் பயன்படு கிறது. சூழலும் மாசுபடாமல் இருக்கிறது. குடும்பம் ஒன்றாக இணைந்து உண்பதா லும், வேலை செய்வதாலும் களைப்பு ஏற்படாது. இன்னும் சமூகத்தில் வீடு வேய்தல், சடங்குகள், திருமணங்கள் நிகழ்விலே கூழ் காய்ச்சுவார்கள். புலவர் ஒருவர் கூழுக்கு,

**தால /கீல / மூல/சூரண / தைலம் / பனை /பகுதி கிழங்கு/ ஒடியல்மா கூழ்.**

என பெயரிட்டார். இந்தக் கூழை சுகபேதி என்றும் கூறுவர். ஏனெனில் இந்தக் கூழைக் கிழமைக்கொருமுறை குடித்து வந்தால் வயிற்றுப் பொருமல், வயிறு அஜீரணம் வராது என்பது நம்பிக்கை. கூழிலும் சைவ, அசைவ கூழ்வகைகள் உண்டு. உறைக்க உறைக்க கூழை ஊதி ஊதி குடிப்பர். மாலையானதும் கிராமத்தவர்கள் புளியமரத்தடியில் ஒன்று கூடி நாட்டு நடப்பைப் பற்றியும், கூட்டாகச் செய்யும் வேலைகள் பற்றியும் கலந்துரையா டுவார்கள். கச்சான் சப்புதல், புளுக்கொடி யல் சாப்பிடுதல், சோளன்பெரி உண்ணு தல், அவித்தகடலை உண்ணுதல், பயறு, உழுந்து, எள்ளுத்துவையல் ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும் ஒவ்வொரு பொரு ளாகக் கொண்டு வந்து சாப்பிட்டு பாடி ஆடி மகிழ்வார்கள். சிறு குழந்தைகளுக்குப் பாலைச் சூடாக்கி ஆடையை நீக்கி அதில் பூடு ஒன்றைப் போட்டு அல்லது ஒரு ஏலக் காயைப் போட்டு குடிக்கக் கொடுப்பார்கள். உருக்கிய நெய்யிலே சூடான சோற்றைப் பிரட்டிக் கொடுப்பார்கள். சனிக்கிழமை தோறும் எல்லா வீடுகளிலுமே நல்லெண் ணெய் குளியல் உடம்பின் எல்லாப் பாகங்களிலுமே தேய்த்து, தலை முதல் பாதம் வரை தேய்த்து அதாவது வைத்த எண்ணெய் உடலின் உள்ளே செல்லும் வரை தேய்த்து கண்ணிற்கும் விடுவார்கள். சூடானநீரால் தலையில் முழுகி உடம்பில் உள்ள எண்ணெயை அகற்ற பயற்றம் பருப்பை அரைத்து தேய்த்து முழுகுவர்.

மதிய உணவாக முழுகிய பின் இறைச்சிவகை ரசமும் சேர்த்து உண்பார் கள். ரசத்தில் மிளகு, சீரகம், இஞ்சி அல்லது வேர்க்கொம்பு, பூடு, கறிவேப்பிலை, மல்லி இவைகளை இடித்து குத்துரசம், அரைத் தரசம், பத்தியரசம் சாப்பிடுவார்கள். உடம் பிற்கு சீரகம், மல்லி, இஞ்சி, மிளகு இவை களை சேர்ப்பதால் குளிர் பிடிக்காது. சளி, தடிமல் பிடிக்காது என்பது பாரம்பரிய முறை. ஒவ்வொரு உணவும் ஒவ்வொரு உறுப் புக்கும் உகந்தது. தலைக்கு (எள் நெய்) நல்லெண்ணெய்யும், எலும்புக்கெல்லாம் முடக்கொத்தான் இலை ரசமும், கண்பார் முருங்கை இலையும் உண்பார்கள்.

**“இளைத் தவனுக்கு எள்ளும் கொழுத்தவனுக்கு கொள்ளும்”**

இவற்றில் இருந்து உடம்பு மெலிந்தவனு வக்கு எள்ளுத் துவையலும் (எள்ளு ருண்டை), பருத்தவனுக்கு கொள்ளும் ஊறவைத்து குடிப்பதாலும் மெலிதலையும், பருத்தலையும் ஏற்படுத்தலாம். உடம்பு மென்மையாகவும், மிருதுவாகவும் மிளிர செவ்வரத்தம் பூவை சூடான கொதித்த பாலினுள் அமிழ்த்தி சிறிது நேரம் வைத்து மூடி சில நிமிடங்களின் பின் எடுத்தால் பூ வெண்மையாகவும், பால் செம்மையாகவும் காட்சி அளிக்கும் அந்தப்பால் குங்குமப் பூவின் சத்துக்கு சமமானது என்று பாரம் பரிய உணவுப் பழக்கத்தில் குறிப்பிடுகிறார் கள். உணவிற்காக சாப்பிடுவதற்கு வாழை யிலை, தாமரை இலை, தென்னோலை ஓலையை எடுத்து ஈர்க்குகளால் குத்தி வைப்பது, ஆலமிலை, கத்தாப்பூ மரஇலை,



290128
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கமுகம் மர ஓலைப்பட்டையில் சாப்பிடுவார்கள். தாமரை இலை என்றால் எப்போதும் நீர் இலையில் பட்டுக்கொண்டே இருக்கும். எனவே இலையின் நீர் பட்டுக்கொண்டு இருக்கும் பகுதியில்தான் உணவை உண்பார்கள். மேற்பக்கம் நீர்ப் பதார்த்தங்களை வைத்து உண்ண முடியாது. அதே போல் குடிப்பதற்கு பாற்கஞ்சி, பழங்கஞ்சி, கூழ், மோர், இளநீர், நுங்கு இவை பருகத் தேங்காய் சிரட்டையைச் சீவி தும்புகளை நீக்கி உள்பக்கம், வெளிப்பக்கத்தை துப்பரவாக்கி அதனைப் பயன்படுத்தி சுகாதாரத்தைப் பேணுவர்.

சிறுவர்கள், பால்குடிக் குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், பருவமடைந்த பெண்கள், தம்பதிகள், வயோதிபர்கள் இவர்களுக்கெனத் தனித் தனி உணவுப் பழக்கவழக்கங்கள் உண்டு. பொதுவாக எல்லோருக்குமே இஞ்சி, பூடு, மிளகு, சுக்கு இவை பொருந்தும். கர்ப்பிணி, பருவடைந்த பெண்களுக்கெல்லாம் நொச்சி, ஆடாதோடை, பருத்தி, ஆமணக்கு, வேப்பம்பட்டை, கொழுந்து இவற்றை முதல் நாள் ஊறவைத்து அடுத்தநாள் வேப்பம்பட்டை விறகில் எரித்து சூடாக்கி அந்த நீரை குடிக்கக் கொடுப்பார்கள். இவை நாரிநோ, உடம்பு வலியைப் போக்கி குடலில் உள்ள அஜீரணத்தை போக்கும் என்பது நம்பிக்கை. உணவில் வேப்பம் பூ வடகத்தையும் சேர்ப்பார்கள்.

உணவின் பின் பழங்கள், வாழைப் பழம், பலாப்பழம், மாம்பழம், பலப்பழம், வீரப்பழம், நாவல்பழம், தேக்கம்பழம், இலந்தைப்பழம் போன்ற கிராமியப் பழங்களையும் இன்னும் நுங்கு, இளநீரைக் குடித்து இதனுள் இருக்கும் வழுவழுப்பாள வழுக்கலை உடம்பிலே முகத்திலே பூசுவார்கள். மோரைக் கரைத்து மத்தில் படியும் வெண்ணெய்யை எடுத்து கை, கால், முகத்தில் பூசுவதன் மூலம் தற்கால முகப்பூச்சை விட ஆரோக்கியமானது. இப்படியான பாரம்பரிய உணவுப்பழக்கத்தை மறந்ததால்தான் எத்தனையோ வைத்திய சாலைகள் உருவாகவும், இனந்தெரியாத நோய்கள் ஏற்படவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

**"பழமையை மறந்தோம்**
**களனியைத் துறந்தோம்**
**மரங்களை அழித்தோம்**
**பனைகளை தறித்தோம்**
**புதுமையைக் கண்டோம்**
**சுகவாழ்வினை தொலைத்தோம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி காசிநாதன் நிருபா MA
கலாசாரஉத்தியோகத்தர்
பிரதேசசெயலகம்
காரைநகர்

# நாகர் இன ஆட்சியும் (நாக) தீவகத்தில் அவர்களது பண்பாட்டுக்கூறுகளின் நீட்சியும்



ஈழ தேசமானது இந்திய பெருநிலப் பரப்பில் இருந்து விடுபட்டு கடலிடை சூழ்ந்த தனித் தீவாக தோற்றம் பெற்றதாக பொது வாக கொள்ளப்படுகின்றது. கி.மு 2387 ற்கு முன்பும் சரி பின்பும் சரி ஈழத்தில் வாழ்ந்த வர்கள் நாகர்களும் இயக்கர்களுமே என ஆதிக்குடிகள் பற்றி நமக்கு கிடைக்கும் தக வல்களும் தொல்லியல் ஆய்வுகளும் நிரூபித்து வருகின்றன. இந்நிலையில் நிலம் என்பது மனிதனது வாழ்க்கைத் தோட்டம் எனவும் இயற்கை அவனது உயிரோட்டம் எனவும் கொள்ளப்படுவதுடன் இவற்றுடன் பின்னிப்பிணைந்ததே மனித வாழ்வாகவும் காணப்படுகின்றது. இந்நிலையில் ஈழத்தின் நிலப்பரப்பில் பின்னிப்பிணைந்து வாழ்ந்த ஆதிக்குடிகளில் ஒரு பிரிவினராக அறிவியல் ரீதியாக அறியப்படும் நாகர் இனத்தவரது வாழ்வின் நிலக்களமும் கூட விரிந்த எல் லைக்களைக் கொண்டதாகும். எனவே இந் நாகர் இனத்தின் வரலாற்றையும் தீவகத்தில் இன்று வரையான அவர்களது கலாசார பண்பாட்டுக்கூறுகளின் நீட்சியையும் சுருக்கமாக ஆய்வு செய்வதே இப்பத்தியின் பிரதான கருப்பொருளாகும்.

### வரலாற்றுக் காலத்தில் நாகர்கள்

நாகர்களது வரலாற்றினை நோக்கும் போது இலங்கையில் பரவி நிலை பெற்ற பெருங்கற்காலப் பண்பாடானது நாகரோடு தொடர்புடையதாகவே காணப்படுகின்றது. இலங்கையின் பல்வேறுபட்டபகுதிகளிலும் ஆய்வுகளை மேற்கொண்டபோது கிடைக் கப்பெற்ற தொல்லியல் சின்னங்களும் பெருங்கற்கால பண்பாடுடைய நாகர்களது கலாசாரத்தையே உறுதிப்படுத்து கின்றன. கந்தரோடை, அல்லைப்பிட்டி , சாட்டி, சந்திராந்தை, ஆனைக்கோட்டை பூநகரி நெடுந்தீவு இரணைமடு, இப்பன்கடுவ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரியாலைநாகபடுவான் போன்ற பல இடங்களிலும் அகழ்ந்தெடுக்கப்பட்டவைகள் யாவும் இவற்றையே உறுதி செய்கின்றன. கந்தரோடை அகழ்வின் மூலம் கிடைக்கப் பெற்ற தொல்லியல் ஆதாரங்களும் ஆதி வரலாற்றுக் காலத்திலேயே அது ஒரு பிரதான வாணிப பண்பாட்டு மையமாக விளங்கியதனையும் அங்கு நாக வழிபாடு, சைவ வழிபாடு மற்றும் பௌத்த நெறி முறைகள் என்பன நிலைபெற்றிருந்தமையை வெளிப்படுத்துகின்றன. ஈமத் தலங்கள் குடியிருப்புக்கள் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் இதனையே சான்று பகர்கின்றன என்றும் இப் பண்பாட்டை பரப்பிய நாகர்கள் தமிழ் மொழி பேசிய தமிழர்கள் என்றும் இவற்றால் உறுதியாவதுடன், இவற்றில் நாக வழிபாட்டுச் சின்னங்கள் அமைந்திருப்பதும் அவற்றின் மற்றொரு சிறப்பம்சம் என்கின்றார் பேராசிரியர் எஸ். பத்மநாதன் அவர்கள். மேலும் யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் காணப்படும் நாகர்களின் தொல்லியற் சின்னங்கள் பற்றிய புரிந்துணர்வு ஏற்படுவதற்கு பதவிகம்பொல பள்ளியறை மற்றும் இப்பன்கடுவ ஈமச் சின்னங்கள், மட்கலங்கள் மற்றும் உடைந்து போன மட்கல துண்டுகளையும் ஒப்பு நோக்குதல் அவசியம் எனகின்றார். இம் மட்கலங்களில் காணப்படும் தமிழ்ச் சொற்களுடன் அங்குள்ள எல்லா வகையான சின்னங்களிலும் காணப்படும் மூன்று தலைமுறைக்குரிய நாகர்களின் பட்டப் பெயர்களடங்கிய இரு சிறிய வாசகங்கள் போன்றவை காணப்படுவதும் கூட நாகர்களது மரபு என்பதனையே உறுதிப்படுத்து கின்றது என்கின்றார். இப்பேராசிரியர்

மகாவம்சமானது, ஈழத்தின் ஆதிக் குடிகள் பற்றிப்பேசும்போது ஈழத்தில் இயக்கர், நாகர் என்போர் வாழ்ந்தனர் என்பதனை உறுதிப்படுத்துகின்றது. பரணவிதான அவர்களும் சிங்களம் மற்றும் தமிழ் மொழி பேசுவோர் முறையே இயக்கர், நாகர் என்போரின் வழித்தோன்றல்கள் என்கின்றார். சிரான் தெரனியகல போன்ற தொல்லியல் ஆய்வாளர்களும் நாகர்கள் குறுணிக்கற்காலப் பண்பாட்டினை முடித்து வைத்து வரலாற்று உதயகாலத்தினை ஈழத்தில் தொடக்கிவைத்தவர்கள் என்கின்றனர். அதாவது செப்புக் காலத்தினை குறிக்கும் பெருங்கற்காலயுகத்தினை ஈழத்தில் தொடக்கி வைத்த இனமாக நாகர்கள் இன்று கருதப்படுகின்றனர். ஈழத்தில் பிராந்திய ரீதியாக வாழ்ந்த நாகர் இன சமூக மக்களே உள்நாட்டு வெளிநாட்டு வாணிப முனைப்புகளால் உந்தப்பட்ட இனமாகத் திகழ்ந்தனர் என்பதும் குறிப்பிடக் கூடியதாகும். சீன நாடுகாண் பயணியான பாகியன் என்பவர் ஈழத்து ஆதிக்குடிகள் பற்றிய தனது நூலில் இத்தீவில் ஆதியில் தேவதைக ளும், நாகர்களும், இயக்கர்களும் இருந்தார்கள் என்றும் நாகர்கள் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வியாபாரிகளுடன் வர்த்தகம் செய்து வந்தனர் என்றும் குறிப்பிடுகின்றார். எனவே சர்வதேச சமூகத்துடன் வர்த்தகம் செய்யும் அளவிற்கு இவர்கள் கலாசார மற்றும் நாகரீக மேம்பாடடைந்தவர்களாக அக் காலத்திலேயே விளங்கி வந்தமையும் நிரூபணமாகின்றது. அறிஞர் சோ.போல் பீரீஸ் என்பவரும் விஜயனது பிறப்பிற்கு பல நூற்றாண்டுகட்கு முன்பே வடஈழத்தில் குடியிருப்புக்கள் விருத்தியுற்றிருந்தன என்கின்றார். எனவே பண்டைய காலத்தில் ஈழம் முழுவதும் நாகர்கள் பரவி வாழ்ந்துள்ளனர் என்பதுடன் சிறப்பாக நாகதீவு என வரையறுக்கப்பட்ட பகுதியில் செறிந்து வாழ்ந்தமையாலேயே வடபகுதி நாகதீபம் அல்லது நாகதீவு என அழைக்கப்படக் காரணமாயிற்று எனலாம். ஆரியர்களின் இலங்கை வருகையின் போதும் தாமிர பரணிப் பிரதேசத்தில் காணப்பட்ட இயக்க குடியிருப்புகளுக்கிடையே தென் கரை ஓரத்தில் கல்யாணி(களனி)யிலிருந்து நாகர் கோயில், நாகதுமை, நாகன்சாலை, திரிகூடம் ஆகிய பிரதேசங்கள் நாகர் குடியிருப்புக்களாகக் காணப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது. கி.மு 3ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஈழத்தில் நாவலந்தீவு, நாகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில், மணிபல்லவம், மணற்றி, நாகபடுவான், பாலிவாவி, குருந்தன்குளம், பதி, மகாதீர்த்தம், மகாவிலாச்சி, நாக பொக்குண (மன்னம்பிட்டி), குதிரைமலை, திரிகூடம், நாகபர்வதம், சூரியன்துறை(மட்டக்களப்பு-பெருந்துறை), நாகன்சாலை(மண்டூர்), நாகமுனை(திருக்கோயில்), நாகதுமை, தேவேந்திர(தேவிநுவர) கதிரைமலை, நாக சதுக்கம், மிகிந்தலை, ஜம்புகோளப் பட்டினம், கல்யாணி போன்ற இருபதுக்கும் மேற்பட்ட நாகர் குடியிருப்புக்களும் பன்னிரண்டு இயக்கர் குடியிருப்புக்களும் காணப் பட்டதாக குறிப்புக்கள் கூறுகின்றன.

இலங்கையின் வரலாற்றை பெருங்கற் கால பண்பாட்டில் இருந்து ஆராயும் மரபே காணப்படுகின்றது. இப் பெருங்கற்கால பண்பாட்டில் தோன்றி வளர்ந்த அறிவியல் சார்ந்த ஆக்க சக்திகள் யாவும் பிற்கால பண்பாடுகளிலும் தொடர்ந்து இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும் கலை, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம் போன்றவற்றை தெளிவாகக் குறிப்பிடக் கூடிய வரலாற்றுச் சான்றுகள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. ஈழத்தின் ஆதிக்குடிகளுக்குரிய கலாசாரம் பெருங்கற் கால கலாசாரம் என்பதே ஆய்வாளர்களின் முடிபாகும். ஆனைக்கோட்டை, பொம்பரிப்பு, குஞ்சுப்பரந்தன், இப்பன்கடுவ, கித்துல்கல, குருவிட்ட பத்தொம்பலன , பதியகம்பொல போன்றவற்றில் கண்டெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழிகள் நாகர் (திராவிட) இன கலாசாரத்தையே உறுதிப் படுத்துவதாக வல்லுனர்கள் கூறுகின்றனர். எனவே ஈழத்தின் ஆதிக்குடிகள் இயக்கர் மற்றும் நாகர் என்பதுடன் நாகர்களது கலாசாரம் என்பதனை நிருபிக்கும் வகையில் கண்டெடுக்கப்பட்ட ஈமச்சின்னங்கள், ஆதிப்பிராமிச் சாசனங்கள், மற்றும் ஆதி மக்களது சமய வழிபாடுகள் என்பவையும் இவற்றுக்கு ஆதரங்களாகின்றன.

கி.மு1000 ஆண்டு காலப்பகுதியை ஒட்டியதாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் நாகர்களின் வாழ்விடங்களில் குடியிருப்பு, இடுகாடு, வயல்வெளி, குளம், இடைக்காடு என்பவற்றை உள்ளடக்கிய ஆதித் திராவிட பண்பாட்டுத் தடயங்களும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் கி.மு 5ம்-3ம் நூற்றாண்டுகட்கு இடையில் உருவாக் கப்பட்ட பெலிவாவி (வவுனியன்குளம்) தண்ணிமுறிப்புக்குளம், மாமடு. ஒலுமடு, பல்லவங்கம்(பதவியா) கனகராயன்குளம், பாவற்காய்க்குளம்(பாவற்குளம்), அலவிஞ் சைக்குளம் (ஈரற்பெரிய குளம்) ஆகியவை நாகர்களால் உருவாக்கப்பட்டதனை ஆய் வாளர்கள் தமது ஆய்வுகள் மூலம் நீருபித் துள்ளனர். மேலும் பாவற்குளம், சின்னத் தம்பனை, மதவு வைத்தகுளம், முத்தை யன்கட்டுக்குளம் ஆகியவற்றின் குளக் கட்டுக்களிலும் ஆங்காங்கே காணப்படும் மரங்களின் கீழும் தங்களது இஷ்டதெய்வ மான ஐந்து தலை நாகத்தினுடைய கருங் கல்லினாலான சிலைகளை வைத்திருப்பத னையும் இன்றும் காணமுடியும். மேலும் தாங்கள் கட்டிய குளங்களை அண்மித்தே தமது வாழ்விடங்களையும், பயிர்செய்கை மற்றும் வயல் நிலங்களையும், கால்நடைக் கான மேய்ச்சல் தரவைகளையும் அமைத்து வாழ்ந்து வந்தமையையும் கண்டுகொள்ளக் கூடியதாக விருக்கின்றது. பட்டினத்துப் பாலை எனும் சங்கநூல் தொகுப்பில் காணப்படும் பத்துப் பாட்டில் புலவர் கடிய லூர் உருத்திராங் கண்ணனார் என்பவர் கி.பி 1 நூற்றாண்டில் சோழநாட்டை ஆண்ட கரிகாற்பெருவளத்தான் எனும் கரிகாற் சோழனது புகழ், வீரம் மற்றும் பெருமை பற்றியும் காவிரிப்பூம்பட்டினத்தின் செல்வம், வளம், மக்கள் வாழ்கின்ற முறை பற்றிய

“காடு கொன்று நாடாக்கி குளம் தொட்டு வளம் பெருக்க”என அவன் புகழ் பாடியிருப்பார்.

ஆனால் இம்மன்னனது காலத்திற்கு முன்னரே அதாவது கி.மு5ம்-3ஆம் நூற் றாண்டுகட்கு இடைப்பட்ட காலத்திலேயே ஈழத்தில் நாகர்கள் காடு கொன்று நாடாக்கி குளம் தொட்டு வளம் பெருக்கி எனும் பாடல் வரிகளுக்கு ஒப்ப நாக நாடு முழுவதும் (வன்னிப்பகுதி உட்பட) குளம் வெட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயம் செய்ததனை ஆதாரத்துடன் மேலே குறிப்பிடப்பட்டிருப்பதன் மூலம் உறுதிப்படுத்தக்கூடியதாயிருக்கிறது. மேலும் நாகர்களது காலத்தில் ஈழத்தில் இருந்து அயல் நாடுகளுக்கு நெல் போன்ற தானியங்களும் உணவுப்பொருட்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதனையும் இதே பட்டினப்பாலையில் "ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும் "எனும் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது. அதாவது ஈழத்து உணவுப்பொருட்களும் (தானியங்கள்) பர்மாவின் தேக்கு மரங்களும் சோழ நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் குவிந்து கிடந்தனவாக இப்பாடல் அமைகின்றது. எனவே நாகர்கள் காலத்தில் சுய உற்பத்தியும் தன்னிறைவுப் பொருளாதாரமும், உபரி உற்பத்தியும் காணப்பட்டமையே அயல் நாடுகட்கான ஏற்றுமதிக்கும் காரணமாகியது என துணிந்து கூறலாம்.

**நாக அரசர்கள்:**

ஈழத்தில் இருந்த நாக அரசர்களைக் கருதும் போது மணியக்கியன், ஈழநாகன், மகோதரன் குலோதரன், மண்டுநாகன், சிகிரியன், மகாநாகன், வளைவாணன் (வளை கண்ணன்) திருவாசன் எனும் வெடியரசன் போன்றோருடன் காரைதீவு (காரைநகர்) பகுதியில் வாழ்ந்த முடிநாக அரையர் என்ற நாகர் இன அரசவம் புலவர் பற்றியும் அறியக்கூடியதாக விருக்கின்றது. மேலும் சங்கமுகன் போன்ற அரசர்களது பெயர்களையும் அறியக்கூடியதாகவிருக்கின்றது. கி.பி 3ம்,9ம் நூற்றாண்டுகள் வரையான கடைச்சங்க காலப் பகுதியில் தமிழ் நாட்டில் குறிப்பாக தென் இந்தியாவில் சோழர்களது வரலாறு பற்றி அறிய முடியாதிருப்பது போலவே் கி.பி 1ம், 2ம் நூற்றாண்டின் பின் ஈழத்து நாக அரசர்கள் பற்றிய விபரமும் கிடைக்கவில்லை. புத்தரின் 3 தடவைகளான ஈழ வருகையின் போது அதில் இரு தடவைகளில் கல்யாணியின் மன்னனான மணியக்கியன் எனும் நாக அரசன் புத்தரின் போதனைகளை ஏற்று பௌத்தத்தை கடைப்பிடித்தான் என்று மகாவம்சம் மற்றும் மணிமேகலை (8ம் காதை 52ம்-53ம் வரிகள்) என்பன கூறுவதிலிருந்தும், குலோதரன் (கந்தமாதனம்), மகோதரன் (நாகதீவு) ஆகிய இரு நாக அரசர்களிடையே ஏற்பட்ட பிணக்கினைத் தீர்க்க புத்தர் 2வது தடவையாக இலங்கைக்கு வந்து அவர்களுக்கு போதனை செய்து சமரசத்தை உருவாக்கினர் என்று மகாவம்சம் கூறுவதிலிருந்தும், இப்பகுதிகளை நாக அரசர்கள் ஆண்டார்கள் என்பது நிருபணமாகின்றது . மேலும் வசபன் எனும் மன்னன் (கி.பி 127-171) அநுராதபுரத்தை ஆண்ட காலத்தில், சிகிரியன் நாக தீபத்தை ஆண்டான் என்பதனை வல்லிபுரத்தில் கிடைத்த பொற்சாசனத்தினை போராசிரியர் பரணவிதான அவர்கள் வாசித்து உறுதிப்படுத்தியுள்ளார்கள். அதே போன்று வளைவாணன் என்ற நாக மன்னன் ஆண்ட நாடு நாகதீபம் என மணிமேகலையும் (சுவாமி நாத ஐயர் பதிப்பு) அவன் (நாகர்களது) ஆட்சியை உறுதி செய்கின்றது. மேலும் நாக இன இறுதி மன்னர்களாக வெடியரசனதும் அவன் தம்பிமார்களது பெயர்களும் அவர்களது ஆட்சிப்பரப்பும், வரலாறுமே எமக்கு கிடைத்துள்ளன. இவை ஒரு சில நூல்களில் விபரமாகவும் தரப்பட்டிருக்கின்றன.

இவ் இறுதி நாகர் குலத்தினரின் ஆட்சி பற்றியும் அவர்களது அழிவு பற்றியும் குறிப்பிடும் போது வெடியரசனும் அவனது தம்பிமாரதும் இறுதி ஆட்சியானது நாகமணி வாங்கி வர சோழ மன்னனால் அனுப்பப்பட்ட சோழனது கடற்படைத் தளபதியான மீகாமனதும் அவன் படையினரதும் நேரடி கடற்சமருடன் முடிவுக்கு வருவதுடன் மீகாமன் கொண்டு சென்ற நாக இரத்தினக்கற்களால் செய்யப்பட்ட கண்ணகியின் காற்சிலம்புடன் கள்வன் என குற்றம் சாட்டப்பெற்று கொலையுண்ட கோவலனது மனைவியான கண்ணகியால் தமக்கு ஆபத்து வரும் எனப்பயந்து அவர்கள் வட ஈழத்தை விட்டு மட்டக்களப்புப் பகுதியை நோக்கி இடம் பெயர்வதுடன் முற்றுப்பெறுகின்றது. அதன் பின்னரான நாகர் இனத்தவரது வரலாறுகள் இதுவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு கிடைக்கவில்லை என்பது கவலைக் குரியதாகும்.

நாகர்கள் திராவிடர்கள் என்பதுடன் ஈமச்சின்னங்கள், ஆதிப் பிராமிவடிவ சாசனங்கள் மற்றும் ஆதி மக்களது சமய வழிபாடுகள் என்பன இலங்கையின் ஆதிக் குடிகளுடைய கலாசாரம் பெருங்கற்கால கலாசாரம் என்று உறுதிப்படுத்துவதுடன் பெருங்கற்களைப்பயன்படுத்தி ஈமச்சின் னங்களைப் புதைத்தமையால் இப்பெயர் பெற்றது என்றும் அறியப்படுகின்றது. மேலும் இலங்கையில் சைவ சமயம் நாகர் மூலமாகப்பரவியது என்பதுடன் இங்கு கிடைக்கப்பெற்ற தொல்லியல் சின்னங் களை நோக்கும் போது பெருங்கற்காலப் பண்பாட்டு மட்கலங்களில் காணப்படும் பெருந்தொகையான குறியீடுகளும், லிங்கம், திரிசூலம் ஆகிய சின்னங்களும் நாகர் இனப்பண்பாட்டையே பறைசாற்று கின்றன எனலாம். கந்தரோடையில் கண்டெ டுக்கப்பட்ட வெண்கலவார்ப்பான படிமத் தில் மணிநாகன் என்ற பெயர் தெளிவாகத் தெரிவதாகவும் கற்பொக்குண எனுமிடத் தில் பேராசிரியர் பெ.கிருஸ்ணராஜாவால் கண்டெடுக்கப்பட்ட படிமம் ஆனது கி.பி 4ம் 5ம் நூற்றாண்டை சேர்ந்ததாகும் எனவும் அறிய முடிகிறது. இவற்றின் மூலம் முருக வழிபாட்டைப் போல கணபதி வழிபாடும் நாகர் மூலம் பரவியது எனலாம் மேலும் மணிநாகன் எனும் பெயர் பொறிக்கப்பட்டி ருப்பதானது நாகர்கள் தமது இஷ்டதெய்வ மான மணிநாகன் என்பதனை தமது சின்னங்களில் பொறிப்பதனையும் உறுதி செய்கின்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக வரலாற் றுத் துறையின் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள வாரிவணேஸ்வரர் ஆலய வளாகத்தில் கிடைத்த சைவசமயம் தொடர் பான தொன்மையான கடவுள் படிமங்களும் யாழ்ப்பாண ஆதி வரலாற்றுக் காலத்து சிற்பக்கலையின் உன்னத வளர்ச்சியின் அடையாளமாக விருப்பதுடன், நாகர் வழிபாடு தொடர்பான அடையாளங்களுடன் சைவசமயம் சார்நத சின்னங்களும் கலப்புற்ற நிலை தெரிவதுடன் திரிபுராந் தகர், அம்மன், மகாவிஸ்னு ஆகியோரது படிமங்களும் அவற்றிடையே காணப்படுவ துடன் அவை அனைத்திலும் நாகர்களின் வழக்காறான மணினாகன் எனும் கடவுள் பெயர் பொறிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றை செய்வித்து வழங்கிய வேள்நாகனின் பெயரும் காணப்படுகின்றது.மேலும் அக் கல்லில் காணப்படும் வேள்நாகன் மகன் வேள்கண்ணன் எனும் பெயரும் காணப்படு கின்றது. இவையாவும் நாகரது வழிபாட்டு அம்சங்கள் சைவசமயம் சார்பான பௌராணிக சிந்தனையோடு கலப்புற்றமை யின் அடையாளம் என்கிறார் பேராசிரியர் எஸ். பத்மநாதன் அவர்கள் மேலும் யாழ் கோட்டைப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட ஈமத்தலத்திலிருந்த கல்லறைகளின் மூடிகளும் 2000ஆண்டுகள் பழமை வாய்ந் தவை அருங்காட்சியகத்தில் உள்ள கல்லின் ஒரு பகுதியில் நாகபந்த வடிவத்துடன் சுவரக் கல்லொன்றின் பெரியளவிலான கற்பலகை யில் ஐந்து தலை நாகம் இடம் பெற்றிருப் பதுடன் மட்கலங்களில் நாகபந்தமும் பல்வேறு அளவுகளிலான பாம்பு வடிவங்க ளும் மற்றும் நாகரைப் பற்றிய வசனங்களும் இடம்பெறுகின்றன. மேலும் பதவி கம்பொல விலுள்ள பள்ளிப்படையான கல்லறை யினை அவதானித்த போது அதன் சுவர்க் கல்லொன்றில் ஐந்து தலைநாகம் மற்றும் நாகபந்தம் என்பனவும் பல்வேறு அளவுக ளிலான பாம்புகளின் வடிவங்களும். வாச கங்களும் காணப்பட்டதை போன்றே இப்பன் கடுவ கல்லறையிலும் இரு வாசகங் கள் எழுதப்பட்டமையையும் அவதானிக்க கூடியதாகவும் இருந்ததை அறியமுடிகிறது. யாழ்ப்பாண கோட்டையின் இடிபாடுகளில் காணப்பட்ட20 ற்கும் மேற்பட்ட ஈமத்தாழிச் சின்னங்கள் யாழ்பாண கல்லூரி வளாகத் திலுள்ள தேவாலயத்தின் பிற்கோடியில் வைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்திலும் தமிழ் பிராமியில் நாகரைப்பற்றிய வசனங் கள் காணப்படுகின்றன. ஒட்டுமொத்த மாகப் பார்க்கும்போது கோட்டைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் நாகரின் பெருந்தொகையான கல்லறைகள் ஈமத்தளமொன்றில் அமைக் கப்பட்டிருப்பதனையே இது வெளிக் கொணர்ந்துள்ளது. இவையாவும் இணை யில்லாத நாகர்களது வரலாற்றுச் சின்னங் களாகும். இவையாவும் வட இலங்கையில் நாகரின் ஆட்சி வலுவான நிலையில் இருந்தமைக்கும் தமிழ் மொழி வழக்கில் இருந்து வந்தமைக்கும் உறுதியான ஆதாரங்களாகின்றன. இவற்றின் மூடிகளில் வேள்நாகன் மகன் வேள்கண்ணன் என்ற வாசகமும் அதனை உறுதிசெய்வதுடன் நாகபந்தமும் கோட்டையின் அண்மையில் உள்ள ஈமத்தாழி கல்லறைகளின் மூடிகளில் காணப்படும் தமிழ் பிராமி வடிவ எழுத்துக்களும் இதனையே உறுதிப்படுத்து கின்றன.

**சிலப்பதிகாரத்தில் நாகநாடும், நெடுந்தீவும்:**

“நாக நீணகரோடு நாக நாடதனோடு போக நீள் புகழ் மண்ணும் புகார் நகரது தன்னில்....” எனும் பாடல் வரி மூலம் புகார் நகரது சிறப்புக் கூறப்படுவதுடன் புகார் நகரமானது நெடிய நகருக்கு ஒப்பாக பல்வகைச் சிறப்புக்களை கொண்டதாக ஒப்பிடப்படுவதனையும் காணமுடிகின்றது. இங்கு குறிப்பிடப்படும் நாக நீள் நகர் என் பது “புட்கரம்”, கமலம் என்று நெடுந்தீவு அன்று அழைக்கப்பட்டது போலவே பண் டைக்காலத்தில் நாகநீள்நகர் என்றும் சங்க காலம் முதலே நெடிய தீவாகிய நெடுந்தீவுக் குப் பெயர் உண்டென்பதனையும் ஈண்டு நோக்குதல் அவசியமாகின்றது.

**நாக வழிபாடு**

நாகர்களது வணக்கங்களில் அல்லது வழிபாடுகளில் முக்கியத்துவம் பெறுவது நாகவழிபாடாகும். நாகர்களது பெருங்கற் கால பண்பாட்டு தொல்லியல் சான்றுகளில் (சின்னங்களில்) அவர்களது இஷ்ட தெய்வ மான ஐந்து தலை நாகமும் வெவ்வேறு அளவுகளிலான நாக படங்களும் காணப் படுவதுடன் அவற்றின் எழுத்து வடிவங்களில் நாகர்களது இஷ்ட தெய்வத்தின் பெயரான மணிநாகன் எனும் பெயரும் காணப் படுவதும் இதனை உறுதி செய்கின்றன. இந் நாகவழிபாடானது ஈழத்தின் சகல பகுதி களிலுமுள்ள தமிழர் பிரதேசங்களிலும் அதன் நீட்சியாகக் காணப்படுகின்றது. ஆரம்பத்தில் அச்சத்தின் அடிப்படையில் நாகத்தை வணங்கிவந்தாலும் நாளடைவில் இந்நாகங்கள் பூமிக்குள் இருந்து வந்து (புற்று)மீண்டும் பூமிக்கே(புற்று) சென்று விடுவதாலும் இவை தமது முன்னோருடன் தொடர்பில் இருப்பதாக காரணகாரிய இயைபுடன் நம்பி வணங்கி வந்தனர். மண். கடல். மலை. வானம் போன்ற இயற்கைக் கூறுகளிலிருந்து தோன்றும் வெள்ளம், காற்று, புயல், இடி, மின்னல், மழை ஆகிய அனர்த்தங்களும் பாம்பு போன்றவையும் திரும்பவும் தோன்றிய அதேயிடத்திற்கே சென்று மறைவதும் கூட அவர்கட்கு அச்சத்தை ஏற்படுத்தியதுடன் அவர்களது இயற்கை மீதான வழிபாட்டுக்கும் காரண மாக அமைந்ததுடன் இதுவே சூரியன், சந்திரன் போன்றவற்றை வணங்கவும் காரணமாயிருக்க முடியும். இன்றும் ஈழத் தின் பல பாகங்களிலும் இவ்வழிபாடு களைக் காணக்கூடியதாகவே இருக்கிறது. இந்நிலையில் வடபகுதியில் நயினாதீவு நாகபூசணி அம்மன், புளியம் பொக்கணை நாகதம்பிரான் கோயில், காரைநகர் பாலாவோடை அம்மன் ஆலயம் போன்ற பல இடங்களிலும் ஏனைய நாகதம்பிரான் ஆலயங்களிலும் காணப்படும் இந்நாக வழிபாடனது நாகர்குல பண்பாட்டின் மிகச்சிறப்பான நீட்சியாகும். பெரும்பாலும் சைவசமயத்தவர்கள் நாகபாம்பைக் கண்டால் அதனைத் துரத்துவதையோ, துன்புறுத்துவதையோ, அடித்துக் கொல்வதனையோ தவிர்ப்பதுடன் அதனை வழிபடுவதுடன் அதனை அதன் போக்கி லேயே விட்டு விடுவதனையும் காணமுடி யும். பெரும்பாலான பௌத்த விகாரை களிலும் நாகவடிவமும் அதன் வடிவிலான உண்டியற் சுவர் வாயில்களையும் காணக் கூடியதாகவே இருக்கிறது. இவை யாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகர் இனப்பண்பாட்டின் நீட்சியாக கொள்ளமுடிவதுடன், பௌத்த விகாரைக ளும் புத்தர் சிலைகளும் நாக வடிவத்துடன் அமைந்திருப்பதற்கு நாகர்கள் மூலமே இலங்கையின் பௌத்தம் வளர்க்கப்பட்ட மையும் கூட காரணமாக இருக்கலாம் என்பதுடன் புத்தர் (ததாதகர்) நாகர் இன மக்களுடன் வடஇந்தியாவில் (அவரது வாழ் நாளில் இலங்கை வரவில்லை என்ற உண்மையை வரலாறுகள் தெரிவிக்கின்ற போதும்) கொண்டிருந்த தொடர்புகளும், அவருக்கு வடஇந்தியாவில் நாக இளவரசி தானம் வழங்குவதிலிருந்தும் கூட சில அடிப்படைக் காரணங்களை நாம் ஊகித்துக் கொள்ளமுடியும்.

**கணபதி மற்றும் அம்மன் வழிபாடு**

ஈழத்து நாகர்களின் பண்பாட்டு அங்களில், கணபதி மற்றும் அம்மன் போன்ற வழிபாடுகளுக்கும் நாகரின் வழி பாடுகளுக்குமிடையில் தொடர்பில்லை. எனினும், நாகர் மூலமே கணேசர் வழிபாடும் அம்மன் வழிபாடும் ஈழத்தில் பரவியது எனவும் ஆந்திரதேசத்தோடு நாகர்கள் கொண்டி ருந்த தொடர்புகள் அதற்குரிய காரணமாக இருக்கலாம் எனவும் பேராசிரியர் எஸ். பத்மநாதன் அவர்கள் எடுத்துக்காட்டுகின்றார். மேலும் லிங்கம், திரிசூலம் என்பவையும் நாகர் இனப்பண்பாட்டையே எடுத்தியம்புவதாக அவர் கூறுவதிலிருந்து இன்று வரை நீடிக்கும் இவ் வழிபாடுகளும் (முருக வழிபாடு உட்பட) எமது முன்னோரான நாகர்களிடம் இருந்தே வந்திருக்கின்றது என்பதும் நிரூபணமாகின்றது.

**ஊர்களதும் கோயில்களதும் பெயர்கள்**

தமிழகத்திலும், ஈழத்திலும் நாகர் என்ப முன்னொட்டாகக் கொண்டு கோவில்களும், ஊர்களும் (இடப்பெயர்களும்) காணப்படு கின்றன. இவற்றை விபரிக்கின்ற பட்டியல் நீண்டு கொண்டே போகுமென்பதால் விரி வினை அஞ்சி ஒரு சிலவே இங்கு தரப்படுகின்றன.

நாகர் கோவில், நாகபூசணி அம்மன் கோயில், நாக தம்பிரான் கோவில், நாக விகாரை, நாகநீள்நகர், நாகபடுவன், நாக பட்டினம் என இது நீண்டு கொண்டே போகும். இவையும் கூட நாகர் இனப் பண்பாட்டின் நீட்சிகள் எனலாம்.

**மனிதர்களின் பெயர்கள்:-**

நாகலிங்கம், நாகேஸ்வரி, நாகநாதன், நாகராணி, நாகம்மா, நாகமுத்து என இப் பெயர்கள் நீண்டு கொண்டே போகின்றது. அதே போன்று சிவன் முருகன் இராமன் என்று அன் விகுதியுடன் அழைக்கும் போக்கும் நாகருக்கே உரித்தானதாகும். இன்றும் இப்படியான பெயர்களும் அதே போன்று அன் விகுதியுடன் அழைக்கப்படும் பல பெயர்களும் எண்ணிலடங்காதவை யாகும்.

**நாகநீள்நகர்:-**

நாகர்களது புற வாழ்க்கைமுறை நாகரிகம், என்றும் அகவாழ்க்கைமுறை பண்பாடு என்றும் அழைக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது. நாகரீகம் எனும் சொல்கூட நாகர்கள் நகர்கள் அமைத்து வாழ்ந்தவர்கள் என்ற ரீதியில் தோன்றிய தாகும் என்பதுடன் நகர் என்பது காவல் அரண்களைக் கொண்ட ஊர் என்றும் இத்தகைய ஊர்களில் வாழ்ந்தோர் நாகர்கள் என்போர் என்றும் தென்னிந்தியாவை சேர்ந்த முனைவர் செ.இராஜேஸ்வரி அவர் கள் கூறுகின்றார்கள் . தீவகத்தில் பண்டைக் காலத்தில் இருந்து இன்று வரையும் நெடிய தீவான நெடுந்தீவானது "நாகநீள்நகர்" என்று அழைக்கப்பட்டு வருவதனையும் கவனத்திற்கொள்வது அவசியமாகும்.

**பிடாரி வழிபாடு :-**

நாகர் இனத்தின் தலைவனை பிடாரன் என்றும் தலைவியை பிடாரி என்றும் அழைப்பதும், நாகர் இன ஆணை நாகன் எனவும் பெண்னை நாகினி என்றும் அழைப் பதும் வழக்காறு ஆகும் பிடாரன் என்று அழைப்பது அச்சம் அல்லது பயத்தின் காரணப்படுகின்றது. மானிட வாழ்வியலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் அச்சம் அல்லது பயத்தின் காரணமாவே வழிபாடுகள், வணக்கங்கள் என்பன இடம் பெற்றதனை அவதானிக்க லாம். நாளடைவில் மரியாதையின் நிமித்த மாக வணங்குதல் இடம் பெற்றுவருவதனை யும் மறுப்பதற்கில்லை. நாகர் இனத்தின் தலைவனாகக் கொள்ளப்பட்ட பிடாரன் பிற்காலத்தில் சிவனாக உயர்வு பெற பாம்புகள் அவன் கையிலும் தலையிலும் மார்பிலும் தவழ்வதாக (சுற்றித் திரிவதாக) உருவகம் பெற்றன. அதேபோன்று நாகர் தலைவியான பிடாரியும் பிடாரியம்மனாகவும், காளி அம்மனாகவும் உருமாற்றம் பெற்றாள். அதன் பின்னராக பிடாரி அம்மன் வழிபாடும் காளி அம்மன் வழிபாடும் தோற்றம் பெற்றன இன்றும் நாகர் இனத்தவரது இறுதியரச னாக அறியப்படும் வெடியர சனது ஆட்சித் தலைமையமாக இருந்த நெடுந்தீவில பிடாரி அம்மன் ஆலயமும் வழிபாடும் இருந்து வருவதனையும் அவதானிக்கலாம் .

**நடுகல் அல்லது வீரக்கல்**

தமிழகத்தைப் போன்றே இலங்கை யிலும் பெருங்கற் கால பண்பாட்டின் இடுகாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. கல்வட்டம், நீள் சதுரக்கல்லறை, ஈமத் தாழிகள் ஆகிய மூன்றுவகைகளும் தமிழ கத்திலும் இலங்கையிலும் பொதுப்பண் பாட்டை விளக்கும் களங்களாகக் காணப் படுகின்றன. ஆனால் தமிழகத்திற்கு சிறப் பானவை போன்றே நடுகல் அல்லது வீரக்கல் வணக்கமும் (Hero Stone) போர்த்துக்கே யரது வருகைக்கு முன் நாராந்தனையிலும் (ஊர்காவற்துறை) காணப்பட்டது.

**விழுத்தொடைமறவர் வில்லிடை வீழ்ந்தோ**
**ரெழுத்துடை நடுகலின்னிழல்**

(அகநானூறு .53)

**நடுகல் பீலிசூட்டித் துடிப்படுத்துத்**
**தொப்பிக்களோடு துரு உப்பலி**
**கொடுக்கும் (அகநானூறு 35)**

எனும் வரிகளால் இவை வீரக்களுக்காக நடப்பட்டவை என்பது உறுதிப்படுத்து கின்றது.

நாக இனத்தை சேர்ந்த வெடியரசனது தம்பியாகிய வீரநாராயணன் மீகாமனிடம் சிறைப்பட்டு இருந்த வெடியரசனை மீட்பதற்காக சோழர்படைத்தளபதியான மீகாமனுடன் போர்செய்து வீரமரணம் அடைந்ததனை நினைவுபடுத்தி அவனுக்கு வீரவணக்கம் செலுத்தும் முகமாக, அன்றைய வேலணைத்தீவு முழுவதும் வீர நாராயணனது நிர்வாகத்தில் இருந்தமை யால் அவன் சார்ந்த மக்கள் வேலணைத் தீவின் ஒரு பகுதியான ஊர்காவற்துறையின் ஒர் குறிச்சியாகக் காணப்படும் நாராந்த னையில் நடுகல்லை இட்டு வீரவணக்கம் செலுத்திவந்ததாகவும் பின்னர் போத்துக் கேயரது (16ம் நூற்றாண்டு) வருகையின் பின் அவர்களுக்குப் பயந்து அது நிறுத்தப் பட்டதாகவும் தெரிகின்றது. இன்றும் அவ் வீதி வீரன்கல் வீதி என பெயர் சூட்டப்பட் டுள்ளது.

**நாகர் இன இடப்பெயர் அமைவுகள் (காணிகள் அல்லது நிலங்கள்)**

நாகர் இனத்தின் வரலாற்றை பேசும் சான்றுகளாக பின்வருவற்றையும் குறிப்பிட முடியும். அல்லியன் கேணி, ஈச்சங்காடு, செம்பட்டையன் தோட்டம், சோரன் தொம்பு, கிழங்கன் தோட்டம், கறுத்தப்பெரியான் வளவு, பெத்தான் வளவு, சுள்ளியன் குருசடி, சீக்கிரியான் பள்ளம், அப்பாத்தை பள்ளம், என நாகர் காலப் பெயர்களால் இன்றும் தீவகத்தில் காணிகளின் பெயர்கள் வழங்கி வருகின்றன.

**மரங்களின் பெயர்களும் நாக முன்னொட்டும்**

நாகதாளி (சப்பட்டைக்களளி) நாகலிங்கம் போன்று பல்வேறு மரங்கள் இவர்கள் பெயரை முன்னெட்டாக கொண்டு அழைக் கப்பட்டு வருகின்றன. மேலும் இலங்கை யின் தேசிய மரமாக அறியப்படும் நாக மரம் என்பதும் நாகருடன் தொடர்புடையதா என்பது பற்றிய ஆய்வு செய்தலும் அவசிய மாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நெசவுக் கைத்தொழில்**

நாகர் இனப்பண்பாட்டில் முக்கியத் துவம் பெறும் சிறப்பம்சம் என்னவெனில் நெசவுக் கைத்தொழிலாகும். இந்நாகர் இன வாழ்விடங்களில் பருத்திச்செய்கை பெருமளவில் மேற்கொள்ளப்பட்டு வந்தமை யுடன் நூல் நூற்றலும் ஆடை நெய்தலும் முக்கிய தொழிலாகவும் விளங்கியது எனலாம் அதனை நிருபிக்கும் வகையில் தீவகம் எங்கும் பருத்திச்செய்கை சிறப்பாக செய்யப்பட்டு வந்த பல இடங்களின் பெயர் கள் பருத்தி அடைப்பு, பருத்தி வளவு என இன்றும் இவை பெயரிட்டு அழைக்கப்பட்டு வருகின்றன. பருத்தித்துறை என்பது கூட நாகர் இனத்தவரது பருத்தி ஏற்று மதித்துறையாக இருந்தமையால் அப்படி அழைக்கப்பட்டதோ தெரியவில்லை. ஆனால் அதுவும் ஆய்வுக்குரியதே. பேராசிரியர் எஸ்.பத்மநாதன் அவர்களும் நாகர்கள் நெசவுக் கைத்தொழிலிலும் ஈடுபட்டிருந்த தாக அவரது ஆய்வின் முடிவில் கூறியிருக் கின்றார். ஆடை நெய்யும் கைத்தொழில் மரபும் இலங்கையினுடாகவே தீபகற்ப இந்தியப்பரப்பினை சென்ற டைந்தது என தென்கிழக்காசிய தொல்லியல் ஆய்வாளர் கள் தாம் மேற்கொண்ட அண்மைக்கால ஆய்வுகளைக் கொண்டு உறுதி செய்கின்ற னர். மகாவம்சம் , விஜயன் வரும் போது குவேனி நூல் நூற்றுக் கொண்டிருந்ததாக குறிப்பிடுவதும் கூட இயக்கர் நாகர் நெசவுத் தொழிலில் தேர்ச்சி பெற்றிருப்பதனையே சான்று பகிர்கின்றது.

கணனிமயமாகவும் அவசரகாலமாகவும் திகழும் இவ் 21ஆம் நூற்றாண்டில் எவற்றை யும் நுட்பமாகவும் சுருக்கமாகவும் காண விழைகின்ற மக்களது இயல்பு பெருகி விட்டது. இதுவே இன்றைய வாழ்வியல் நெறியாகவும் மாறிவிட்டது. இந்நிலையில் எமது இன்றைய மற்றும் வருங்கால சந்ததி யினருக்கு எமது முன்னோரான நாகர் இனத்தவரது ஆட்சி பற்றியும் தீவகத்தில் இன்றும் அவர்களது கலாசார பண்பாட்டுக் கூறு களாக நீட்சி பெற்று எம்மவரால் மரபு வழியாக கடைப்பிடிக்கப்பட்டு வருவன பற்றியும் விரிவாக சொல்வதற்கு பல இருப்பினும் கூட இட விரிவினைக்கு அஞ்சி அவற்றில் ஒரு சிலவே இங்கு விபரிக் கப்பட்டுள்ளன. எனினும் விசக்கடி வைத்தி யம், புற்று வணக்கம், மரவழிபாடு, ஆவி வணக்கம், படையல் (இறந்தவர்களுக்கு), கால்நடைகளுக்கு ஆரோக்கியம் கருதியும் மற்றும் செய்திகளை தெரிவிக்கும் வகையி லும் குறி இடுதல் (சுடுதல்), விருந்தோம்பல், பகிர்தல் (துன்பம் இன்பம் மற்றும் உணவு), தோழமை நட்புணர்வு, மரம் வளர்த்தல், சூழலைப் பேணுதல் போன்றவற்றுடன் ஆவுரஞ்சிக்கற்கள் நடுதல் , இறந்தவர்களை புதைத்தல், சவப்பெட்டிகளில் வைத்து அடக்கம் செய்தல், சமாதி நிலையில் புதைத் தல், இறந்தவர்களின் கல்லறையில் நினைவுக்கல் நடுதல் போன்ற இன்னும் பல பண்பாட்டுக் கூறுகளும் இந் நாகர் இன மக்களிடம் இருந்தே வந்தமையும் நாம் ஈண்டு நோக்குதல் அவசியமாகின்றது. எனவே இவை அனைத்தும் தீவகத்தில் இன்றும் காணப்படுகின்றமையானது நாக ரின பண்பாட்டின் நீட்சியையே புலப்படுத்து கின்றது.

நிறைவாக: ஓர் இனத்தின் பண்பாடா னது இன்னோர் இனத்தின் பண்பாட்டுடன் கலந்து அப் பண்பாட்டு அம்சங்களை உள் வாங்கிக் கொண்ட இனம் அப்பண்பாட்டை பேணிப் பாதுகாத்து வருமானால் அப்பண் பாடானது அவ் இனத்திற்குரிய மரபுரிமை யாகக் கொள்ளப்படுவதனையும் சுட்டிக் காட்டுவதுடன் இறுதியாக நாகர் இன அரசர்கள் யாழ்.குடா நாட்டினை அண்டிய தீவகத்திலேயே (தீவுக்கூட்டங்களில்) தமது ஆட்சியை மேற்கொண்டு நிர்வகித்து வந்தமையையும் அறியக்கூடியதாகவிருப்ப தால் இன்றைய எமது வரலாற்று ஆய்வாளர் கள் தமது ஆய்வுக்களமாக தீவகத்தினை கருதி இந் நாகர்களது மேலும் மறைந்து கிடக்கும் வரலாறுகளையும் அவர்களது பண்பாட்டம்சங்களையும் அறிவியல் ரீதியாக வெளிக் கொணர்ந்து வருங்கால இளம் தலைமுறையினருக்கு வழிகாட்ட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**உசாத்துணை நூல்கள்**

1. இலங்கையிற் தொல்லியல் ஆய்வுகளும் திராவிடக் கலாசாரமும் - திருமதி. தனபாக்கியம் குணபாலசிங்கம் 2001.
2. இலங்கை வரலாறு பாகம்- 1 பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா. 20 மாசி 2005.
3. பேரும் ஊரும் - ஈழத்து இடப்பெயர் ஆய்வு ஞா.ஜெகநாதன். 2019 .
4. மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம் வெல்லவூர்க் கோபால் 3ம் பதிப்பு 2011.
5. மட்டக்களப்பு தமிழகம் வித்துவான் பண்டிதர் ஏ.ஊ..கந்தையா. 1964 .
6. ஈழத்தவர் வரலாறு கலாநிதி .க.குணராசா . AUGUST 1996.
7. கோணேஸ்வரம்:- செ.குணசிங்கம் பேராதனை . 1973.
8. ஈழத்தமிழர் வரலாறும் பண்பாடும் பேராசிரியர். எஸ். பத்மநாதன்.
(தொகுப்பு .நா.தனுஜா வீரகேசரி ஞாயிறு வாரமலர் தொடர் கட்டுரைகள் 2022.)
9. இலங்கை சுருக்க வரலாறு:- (கி.மு 600 – 2007 வரை) கலாநிதி. செ. குணராசா . April 2008.
10. சோழர் வரலாறு பேராசிரியர் சி. கோவிந்தராசனார் மற்றும் முனைவர் சி. கோ. தெய்வநாயகம் 2004.
11. விஷ்ணு புத்திர வெடியரசன் வரலாறு மு.சிவப்பிரகாசம் 1988.
12. தீவகத்தில் வெடியரயசனின் ஆட்சி ஓர் தேடல் (கட்டுரை) - திருமதி.யாழினி செண்பக விநாயகம் 2021 .
13. நாகர் குலமும் நெடுந்தீவும் . றொக்கேசியன் சந்திரகுமார்.S 1960.
14. வெடியரசன் ஓர் மீள்பார்வை கட்டுரை வே..வின்செனற் 1960 .
15. கச்சதீவு ஓர் மீள்பார்வை (கட்டுரை அலைமொழி 2021)
செல்வி ரோஜின் ஹர்சினி N. வரதராஜன்.
16. மயில்வாகனப்புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை, ஆய்வு நூல். முதலியார் குலசபாநாதன் 1953.
17. வேரைத்தேடும் விழுதுகள் (கட்டுரை). செல்வி அன்ரன் லூர்த்து றோஸ்செ.
18. மணிமேகலை சுவாமி நாத ஐயர் பதிப்பு.
19. சாதியமும் சமூக மாற்றமும் ந. இரவீந்திரன்.
20. நாகரின் ஆட்சியில் தீவகம் . எஸ். வி . அருட்பிரகாசம் 1988.
21. கலாசாரப்பண்பாடும் தீவக மக்களும் : நீ. செபதேயு 1970.
22. ஈழத்து இடப்பெயர்வு ஆய்வு . யாழ் மாவட்டம் : கலாநிதி. இ. பாலசுந்தரம் 2002.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. வேலுப்பிள்ளை அம்பிகைபாகன் (M.P.H)
மயிலிட்டித்துறை தெற்கு,
காங்கேசன்துறை.



# வரலாற்றில் தொல்புரம் முத்துமாரி அம்மன் கலைத்தேர்

*தொல்புரம் முத்துமாரி அம்மனின் கலைத்தேர் அமைப்பினை ஆதாரமாகக் கொண்ட, பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழப்பாணத்துத் தேர்க் கலையுலகின் தோற்றம் வளர்ச்சியின் பரிணாம, பரிமாணங்களை இனங்கான முனையும் ஓர் கன்னி முயற்சி.*

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன், மகோற்சவ காலத்தில் வீதி வலம் வருவதற்கென உருவாக்கப்பட்டு இன்றும் நல்ல நிலையில் வீதி வலம் வந்து கொண டிருக்கும் இயற்தேர் ஆம் கலைத்தேர், இன்றைய சமகால கட்டத்தில் ஈழத்திலேயே மிகவும் புராதனம் வாய்ந்த ஒரேயொரு அம்மன் சிற்பத்தேர்" என்னும் சிறப்புத் தகைமையையும் கூடவே தன்னுடன் தக்க வைத்திருக்கும் சிறப்பு வாய்ந்ததாகும். இவ்வம்சம் யாழ்ப்பாணத்து இந்துக் கலை அல்லது தமிழர்கலை வரலாற்றிலேயே தனித்ததோர் இயலாகச் சிறந்து ஒளிர் வதாகும்.

இவ்வாய்வு, வசதிகருதி பின்வரும் பகுதிகளாகப் பகுத்து அமைக்கப்பட் டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிமுகம்**

**தேரமைத்த கலைஞர் குழுவும் பண்பும்**

**தேரமைப்பும் கலைத் திறன்களும்**

**தேரில் நாவலர் செல்வாக்கும் காலநிர்ணயமும்.**

**வரலாற்றுப் பின்னணியில் முத்துமாரி தேர்**

நிறைவுரை.

தேர் நிர்மாணித்த கலைஞர் குழு எது என்றோ அல்லது எந்த நாட்டைச் சேர்ந்தது என்றோ துல்லியமான வரலாற்றுக் குறிப் புக்கள் எதுவும் ஆலயவரலாற்றில் இடம் பெற்றிருக்கவில்லை என்பது மிகவும் துரதிஷ்ட வசமானதேயாகும். இருப்பினும் பத்தொன்பதாம் நுற்றாண்டில் ஏற்பட்டு வந்த ஈழத்து இந்துப் பண்பாட்டு மறுமலர்ச் சியின் வரலாற்றுப் பின்னணியில் நாம் சில கலை வளர்ச்சிப் போக்குகளை அல்லது பண்புகளை இனம் கண்டு கொள்ள வேண்டி யது புதிய பண்பாட்டு வரலாறெழுதுதலுக்கு அவசியமானதோர் விடயமாகும்.

போர்த்துக்கேய, ஒல்லாந்த அரசுகளின் அதிதீவிரப் போக்குகளால் நிலைகுலைந்து போன இந்துப் பண்பாடு, அதே ஒல்லாந்த அரசுக்கால இறுதிக்கு அண்மையிலிருந்து மீண்டும் மறுமலர்ச்சி அடையலாயிற்று. ஆலயம், கோபுரம், விமானம். தேர், ஏனைய வாகனங்கள், எழுந்தருளிகள், சிற்பிகள், யாழ்ப்பாணத்தில் உடன் கிடைத்திருப்பர் என்று கருதுவதற்கில்லை கி.பி.1621 - 1790வரையிலான அந்த இருண்ட காலத்தில் தொடர்ந்து வந்த கலைஞர் குழுக்கள் அவ் வவ் அரசுகளின் அரண்மனை, கிறிஸ்தவ தேவாலய நிர்மாணங்களிலும் தளபாட வடிவமைப்புக்களிலும் தம்மை முற்று முழுதாக ஈடுபடுத்திக் கொண்ட நிலையில் ஓர் வரண்டதும் சூனியமும் நிறைந்துள்ள துமான பண்பிலேயே இப்பிரதேசம் விளங்கி யிருக்க முடியும் என்பதை நிறுவுகின்றது எனலாம்.

இந்நிலையில் செந்நெறி சார்ந்ததும் பிரம்மாண்டத் தன்மை நிறைந்ததுமாகிய மேற்குறித்த துறைசார் கலைஞர்கள் இந்தியத் தமிழகத்தில் இருந்து வரவழைக் கப்பட்டவர்களாகவே இருந்திருக்க முடியும் என்று கருதுவதில் எதுவிதத் தவறும் இருக்க முடியாது எனலாம். இவ்வாறு வருகை தந்த தமிழகக் கலைஞர்களுடன் உதவியாளர் களாகவும் பயிற்சியாளர்களாகவும் அமர்ந்து பெரும் நிர்மாணங்களில் பணி புரிந்த யாழ்ப்பாணத்தின் மாவிட்டபுரம், மயிலிட்டி, நீர்வேலி, வட்டுக்கோட்டை, சுதுமலை, மாதகல், வண்ணார் பண்ணை ஆகிய ஊர்க ளைச் சேர்ந்த பாரம்பரியம் நிறைந்தவர்க ளும் புதியவர்களும் ஆகிய கலைஞர்கள் தத்தமக்கு இசைவான சக கலைஞர்கள், உதவியாளர், தொழில்நுட்பக் கலைஞர், போன்றோரை இணைத்த நிலையில் ஸ்தபதிகளாக மேற்கிளம்பலாயினர் என்று கருதலாம்.

இத்தகைய வரலாற்றுப் போக்குகள் அமைந்த நிலையில் பறாளாய், சுதுமலை, நுணசை ஆலயத் தேர்களில் குறிப்பாக பறாளாய், நுணசைத் தேர்களில் பணியாற் றிய ஸ்தபதியின் கீழ் பயிற்சி பெற்றதோர் இளங்குழுவே இத் தொல்புரம் முத்துமாரி தேர் நிர்மாணத்தை நிறைவேற்றியது என்று சொல்வது மிகவும் பொருத்தமானதாகும். ஆக, இந்திய ஸ்தபதியிடம் பயிற்சி பெற்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளங்கலை ஞன் ஒருவன் தன் சகபாடிகள் (இலங்கை, இந்தியா) சகிதம் நிர்மாணித்து வழங்கிய கலைப்படைப்பே தொல்புரம் தேர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆலயக் காற்புறவாய் 9:2 என்னும் அளவுத்திட்டத்தை ஆதாரமாகக் கொண்ட இத்தேர், நாகர மரபில் பூசாந்திர வடிவமைப் பில் உயரமுடையதாகும் 6சில்லுகள் கொண்ட இது 5பார்களுடன் அமைந்துள்ள பார்விதானத்தை உடையதாகும் 3தனிக் கண்டங்களின் இணைப்பு மூலம் உருவாக் கப்பட்டுள்ள பெரிய சில்லுகள் நான்கும் உறுதியான கட்டுமானத் திறனுடன் நிகழ்வதனை அவதானிக்கலாம்.

நட்டுக் கண்கள் மிகவும் சாதாரண மாக உள்ள பார்விதானம், உபபீடம், அதிஷ்டானம், பேரூர் மட்டம். நுராசன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டம், தேவாசனம், சிம்மாசனம் என்னும் தளங்களுடன் இயற்தேராக விளங்கும் இத்தேர் எளிமையான மணிமண்டபமும் மேல் விமானமும் கொண்டமைவதாகும் தேர்த்தளம் நாகரமாகவும் நராசனமும் அதன் மேற்பகுதியும் திராவிட எண் கோணமாகவும் வடிவமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தேவாசனம், தளப்பண் பைப் பிரதிபலிக்க சிம்மாசனம் மேலும் ஒரு பத்திரம் விரிவடைந்து காணப்படுகின்றது.

பனஞ்சலாகைகள், தூண்களால் உருவாக் கப்பட்டு மேல் அலங்காரச் சேலைகளாலும் கொடிகளாலும் வாகை மாலைகளாலும் பலவர்ணக் கொடிகள் பழவகைகள் என்ப வற்றினாலும் தோற்றம் பெறும் விமானத் தின் இயற்பண்பு, மாவிட்டபுரம் கந்த சுவாமி, மாதகல் நுணசை முருகமூர்த்தி போன்ற திருக்கோயிற் தேர்களின் பிரமையைத் தோற்றுவித்து நிற்பதாகும்.

சித்தூர் மட்டம் பேரூர் மட்டம் என்பவற் றில் விக்கிர அலங்காரச் சிற்பங்கள் காணப் பட, நராசன மட்டம் அடியவர்களின் அரைப் புடைப்புச் சிற்பங்களையும் சிவலிங்கவுருக் களையும் கொண்டு விளங்குகின்றது. தேவாசனம் வெறுமையாகக் காணப்பட சிம்மாசனம் முன்பகுதியில் மட்டும் நடராஜர் சிற்பத்தைக் கொண்டு இந்துத் தேர் மரபிலக் கணத்திற்கேயுரிய பண்பைப் பெற்று மிளிர்கின்றது.

இத்தேரமைத்த சிற்பக்குழுவின் பொதுக் கலைத்திறன்கள் பற்றியும் சிறிது கவனித்தல் அவசியமாகின்றது. சுதுமலை, பறாளாய், நுணசை ஆகிய பத்தொன்பதாம் நூற்றாண்டின் நாகரத் தேர்களில் இம் மூன்றும் மூன்று படி நிலைகளிலான கலைத்திறனில் அமைந்துள்ளமை சிற்ப இலக்கண, தேர் இலக்கண அடிப்படையில் நிறுவப்படக்கூடியதே. இவற்றில் பறாளாயி னின்று பின் தங்கியதும் ஏறக்குறைய நுண சைக்கு சமாந்தரமானதுமாகிய கலைப் போக்கு ஒன்றின் பரிணமிப்பே தொல்புரம் முத்துமாரி தேர் என்பதில் ஐயமில்லை .

இன்னும் சற்று நுணுகி நோக்கும் போது நுணசைத் தேர் அமைத்த குழுவிலிருந்து சிற்ப வடிவமைப்பியலில் இக்குழு பின்தங்கியது என்பதைக் கண்டுணரலாம். இதற்கு விக்கிரக சிற்பங்களும் காமவியல் சிற்பங்களுக்குப் பிரதியாக நிறுவப்பட்ட யாளி, பாம்பு, யானை போன்ற மங்கள விலங் குருவ அலங்காரச் சிற்பங்களும் தகுந்த சான்றுகளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேர்க் கட்டுமானத்தைப் பொறுத்தள வில் அளவுப் பிரமாணம், அடித்தளத்திற் சிறப்புறப் பின்பற்றப்பட்டுள்ளமை அதன் புறவுருவரைபின் மூலம் தெளிவாகின்றது. தேரின் மெல்லென உயர்ந்து, இறுகி மீண்டும் விரிந்துயர்ந்து மேற்கிளம்பும் பேரூர்மட்டத்தின் மேலான நராசன மட்டம் பறாளாய், நுணசை ஆகிய தேர்களின் அமைப்புத்தரத்தில் விளங்குவது இவ்வி டத்திற் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஆலய வரலாற்றிலும் சரி யாழ்ப்பாணப் பண்பாட்டு வரலாற்றிலும் சரி தொல்புரம் முத்துமாரியின் தேர் எந்த ஆண்டில் நிர் மாணிக்கப்பட்டது என்ற விபரத்தைப் பெற் றுக் கொள்ள முடியாவிட்டாலும் கூட இவ் வாலயத்தில் தேர்த்திருவிழா நடைபெற்று வந்த நிகழ்வை வெளிப்படுத்தும் முதல் ஆவணம் அரசு மட்ட அலயப்பதிவே ஆகும் இக்குறிப்பு ஒன்றைத் தவிர்த்து பத்தொன் பதாம் நூற்றாண்டில் வேறெதுவும் இதுவரை யிற் கிடைக்கப் பெறவில்லை என்பது மனம் கொளத்தக்கது. அப்பதிவேட்டுக் குறிப்பின் மீது சென்று நுணகி ஆராயும் போது இவ்வாலயத்தில் தேர்த்திருவிழா நிகழ்ந்து வந்த செய்தியை மட்டுமே உறுதிசெய்து கொள்ள முடியும், மாறாக இத்தேர் அமைப் புப் பற்றியோ எதுவித தரவுகளும் இடம் பெறவில்லை .

இந்துப் பண்பாட்டு மறுமலர்ச்சியின் பிதாமகராக பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய பகுதியிலிருந்து புரட்சி செய்த ஆறுமுகநாவலரின் கண்டனம் அல்லது கண்டன எழுத்துக்கள், விமர்சனங்களின் தாக்கம் அல்லது அளவு கடந்த செல்வாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்புரம் முத்துமாரி அம்மன் தேரமைப் பில் ஓர் நெறிப்படுத்தலைச் செய்திருக் கின்றது என்று கருதுவதற்கு இடமுண்டு இங்கு அதற்கான சில கருத்துக்களை முன்வைக்க இவ்வாய்வு முயல்கின்றது.

நாவலரின் பண்பாட்டியல் சார்ந்த கண்டன விமர்சன எழுத்துக்கள் வெளிவந்த ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு" என் னும் நூலில் தொகுப்பாக இடம் பெற்றுள் ளன. மாவிட்டபுரம், பறாளாய், நுணசை என்னும் தேர்கள் உயிர்த்துடிப்பு - நிறைந்த இன்பியல் சிற்பங்களுடன் கி.பி.1792 கி.பி 1840 ஆண்டுக் காலப் பகுதியில் நிர்மாணம் நடைபெற்று ஓர் பரபரப்பை உருவாக்கி யிருந்த சூழ்நிலையில் இந்து சமயம் தொடர் பிலான கண்டனங்கள் பலவும் கிறிஸ்தவ சமய குருமார்களால் முன்வைக்கப்பட்டு இருந்தமை நாவலரைப் பல வகையிலும் சிந்திக்க வைத்தது, தடுமாறவும் செய்தது எனலாம். ஆயினும் மறுமலர்ச்சியாளராக வளர்ந்து கொண்டிருந்த ஆறுமுக நாவலர் தவிர்க்கப்பட வேண்டியவற்றில் ஆலயக் கோபுரம், தேர் ஆகியவற்றில் இடம்பெறும் இன்பியல் சார் சிற்பங்களையும் ஓவியங் களையும் முக்கியமானதாகக் கொண்டு விமர்சிக்க முனைந்தமை தெளிவு அவர் செல்வாக்கு அதிகளவில் எழுச்சி பெற்று வந்த பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஐந் தாம், ஆறாம் தசாப்தங்களில் யாழ்ப் பாணத்தின் மூலை முடக்குகள் எங்குமே நாவலர் மயமாகவே விளங்கியிருக்க முடி யும் என்பதற்கு ஐயமேதுமில்லை.

அதே சமகாலத்தில் அல்லது அதன் இறுதிப்பகுதியிற் தான் தொல்புரம் தேர் நிர்மாணம் நடைபெற்று இருத்தல் வேண் டும் என்று கருதுவதிற் தவறில்லை எனலாம். அச்சந்தர்ப்பத்தில் ஆலய அறங்காவலர், முகாமையாளர், ஆலயம் சார் சமூகப் பிர முகர்களின் அபிப்பிராயங்களும் நெறிப் படுத்தல்களும் உள்வாங்கப்பட்ட நிலையில் இத்தேர் நிர்மாணம் நடைபெறலாயிற்று என்றும் அதன் காரணமாகவே இன்பியல் சிற்பங்கள் தவிர்க்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாகப் படமெடுத்தாடும் பாம்பு, யானை, யாளி போன்ற விலங்குருவச் சிற்பங்கள் இடம்பெற்றன என்றும் கருதலாம்.

இத்தேர் நிர்மாணம் நடைபெற்ற காலத்தில் நாவலர் ஆலய வளாகத்திற்கு நேர்முகமாகவும் சென்று தேர் நிர்மாணத் தைப் பார்வையிட்டு ஆலோசனை வழங்கியி ருக்கவும் கூடும் என்று ஊகிப்பதற்கும் சந்தர்ப்பம் உள்ளது. ஏனெனில் அவர் பெரும் ஆலயத் திருவிழாக்களை எல்லாம் விமர்சித்தவர், அவற்றில் தொல்புரம் ஆலயமும் ஒன்று அத்துடன் மாதகலில் வசித்த அவர்களுடன் மிகவும் நெருங்கிய உறவும் சகவாசமும் கொண்டிருந்தவர் நாவலர் என்பது வரலாறு கண்ட உண்மை . இந்நிலையில் அரசு மட்ட உயர்நிலைப் பிரதானிகள் பலரதும் நல்லபிமானத்தைப் பெற்றிருந்த நாவலர் பலரதும் அழைப்பின் பேரில் தொல்புரம் முத்துமாரி தேர் நிர்மாணத்தைப் பார்வையிட்டு ஆலோ சனை வழங்கியுள்ளார் என்று கருதுவது எவ்வாற்றாலும் மிகப் பொருத்தமான தொன்றே எனலாம்.

போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் அவர்களால் அழிக்கப்பட முடியாத அருள் சிறப்புப்பெற்ற சுழிபுரம் பறாளாய் விநாயகர், ஏனைய மாவிட்டபுரம் கந்தசாமி, சுதுமலை புவனேஸ்வரி, நயினை நாக பூசணி, மாதகல் நுணசை முருகமூர்த்தி, பொன் னாலை வரதராஜப்பெருமாள், மானிப்பாய் மருதடி விநாயகர், நல்லூரக் கந்தசாமி ஆகிய ஆலயங்களில் புராதன தேர்கள் குறிப்பிட்ட இலக்கண கலைத் தரத்துடன் அமைந்து காணப்பட்டன. இவற்றில் நல்லூரக் கந்தசுவாமி தேர், 1960 களின் ஆரம்பத்தில் சிதைந்து போய்விட, இந்தியத் திருவிடை மருதூர் இரா. கோவிந்தராஜு ஸ்தபதியின் நிர்மாணத்தில் உருவாகிய புதிய சித்திரத்தேர், 1964 இல் வெள்ளோட் டம் கண்டது. சுதுமலை புவனேஸ்வரி தேர் 1950 களிலேயே சிதைந்து நிற்க, ஆலய நிர்வாகத்தினர் அதன் சிற்ப வடிவங்களைக் கழற்றி எடுத்து ஆலயத்தில் பாதுகாத்தனர். பின்னர் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெற்ற "தமிழின்பக் கண்காட்சி -1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் இந்நூலாசிரியரால் காட்சிப்படுத் தப்பட்டது.

அந்த தேர்த்தளத்தின் எஞ்சிய பகுதியை காரைநகர் பாலாவோடை முத்துமாரியம் மன் ஆலய நிர்வாகத்தினர் தமது ஆயலயத் திற் கென உருவாக்கப்படவுள்ள தேருக்குப் பயன்படுத்தும் நோக்கில் கொள்வனவு செய்து கொண்டு செல்லலாயினர். இருந்த போதிலும் அது பயன்பாட்டுக்கு உரியதாக வில்லை. புதுக் தேர் ஒன்றே (1984) மயிலிட்டி ச.ஜெயராஜா ஸ்தபதியால் வடிவமைக் கப்படலாயிற்று அதே வேளையில் சுதுமலை யில் கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்க ளால் நிர்மாணிக்கப்பட்ட (1974) சிற்பத் தேர் ஒன்று பயன்பாட்டிற்கு வந்தது. நயினாதீவு நாக பூசனி அம்மன் பழைய தேர் 1955 வரையில் ஈடாடிக் கொண்டே வீதி வலம் வந்த நிலையில் இந்திய சிற்பி சென்னை எஸ் குமாரசுவாமியின் நிர்மா ணத்தில் புதிய சிற்பத் தேர் மிகவும் தரமான முறையில் உருவாகியது.

இந்நிலையில் மாவிட்புரம், பறாளாய், நுணாசை, தொல்புரம், பொன்னாலை ஆகிய தலங்களில் உள்ள தேர்கள் மட்டுமே "புராதனத் தேர்" என்னும் சிறப்பினைப் பெறுகின்றன. இவற்றுள் பொன்னாலை, புராதனத் தேர், சிதைவுபடாவிடினும் பயன்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டு, புதுத் தேர் (1983) ஒன்று மாயவரம் ச. ஏகாம்பரம் ஸ்தபதியால் உருவாக்கப்பட்டு பயன்படுத் தப்பட்டு வருகின்றது. இது ஈழத்தின் தலை சிறந்த சிற்பத் தேர்களுள் சிறந்த மூன்றில் ஒன்று என்னும் தகைமையையும் கொண்ட மைந்தது. பழைய தேர் முழுமையாகப் பார்க்கத்தக்க வகையில் ஆலயத்தின் வடக்கு வீதியில் பேணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்திலே தற்போது காணப் படும் தேர்களில் மிகவும் பழைமையான தேர் அமைப்பு மரபு முறையில் அமைவது பொன்னாலை வரதராஜப் பெருமாளின் தேர் ஆகும். இத்தேர் அவ்வாறே ஓரளவு புராதன காலத்திற்குரியதா அல்லது அம்மரபினை அடியொற்றி பிற்காலத்தில் அமைக்கப் பெற்றதா என்று கூறுதல் கடினமான தொன்றே. இதன் காலம் பற்றிய முரண்பாடு கள் நிறைய உள. "எப்பொழுது யாரால் உரு வாக்கப்பட்டதென தெரியாத தேர்" என்ற அளவில் ஆலய வரலாறு கூற நானூறு ஆண்டுகளுக்கு முன்னென்று எடுத்துச் சொல் வோரும் உளர். அவ்வாறாயின் பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் என்றாகும். அது யாழ்ப்பாணத் தமிழ் அரசுக் கால இறுதியைத் தொடரும் போர்த்துக்கேய அந்நிய அரசுகளின் காலம் என்றாகும். அவ்வாறாயின் கலையழிப்புக் கொள்கை யிலிருந்து தப்பியது என்று கொள்வது சற்றேனும் பொருத்தமானதல்ல. ஆலயம் முற்றாக நிர்மூலமாக்கப்பட்ட நிலையில் பழைய தேரும் அதே நிலையையே அடைந் திருக்கும் என்பதில் ஐயமேதுமில்லை. கலை, பண்பாட்டு மறுமலர்ச்சிக் காலத்தில் அமைக்கப் பெற்றதாகவே தற்போது பயன் பாடற்ற நிலையில் காணப்படும் பழைய தேர் இருத்தல் வேண்டும் என்று கொள்வது பொருத்தமாகின்றது.

கலை அல்லது "தேர் இலக்கண" அடிப் படையில் குறிப்பிடத் தகுந்த ஒன்றில்லா விடினும் பின்னதன் சில முக்கிய அம்சங்க ளுடன் புராதன சிற்ப அமைப்பு மரபினைப் பிரதி பலிப்பதும் இத் தேரின் சிறப்பம்ச மாகும். இது நான்கு சில்லுகளையுடைய "நாகர முகபத்திர" மரபிலமையும் "முகோத் தரத் தேராகும். பார்விதானம் ஐந்து பார்களு டைதாயிருப்பினும் நட்டுக்கண்கள் ஏதுமற்ற நிலையில் அவை அத்துடன் இணைக்கப் பட்டிருப்பது சிறப்பம்சமாகும் "விக்கிரக சிற்பங்கள்" ஏதுமற்ற நிலையில், ஏனைய சில விலங்குருவங்களுடன் ஊர்வன, பறவைகள் போன்றவற்றின் சிற்பங்கள் பெருமளவிற் காணப்படுகின்றன. பாம்பு, கிளி, யானை, யாளி போன்றவை சோடியாக வும் வெவ் வேறிடங்களில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய சிற்ப மரபுத் தேர்களே இக்கால கட்ட ஆரம்பத்தில் சட்டங்களால் சகடைகளில் உருவாக்கப் பட்ட கட்டுத் தேர்களில் இருந்து முன்னேறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண அலங்காரத் தேர்களின் அடுத்த கட்ட வளர்ச்சியாகும் நல்லூர் தேர் திராவிட மரபிலமைய இது நாகர மரபிலமைவது முக்கிய மாறுபாடாகும்.

பறாளாய் விநாயகர் தேர் 1970 களின் ஆரம்பத்திலேயே பயன்பாட்டிற்கு உதவ முடியாத நிலை தோன்றவே, சிவ சுப்பிர மணியராலயத்திற்கென்று திருநெல்வேலி ஆ.ஜீவரத்தினம் ஸ்தபதியால் நிர்மாணிக் கப்பட்ட (1985) தேரில் விநாயகர் பவனி வரும் அற்புதம் நிழ்ந்தது. முன்னர் இந்த விநாயகர் தேரிலேயே முருகனும் தனது திருவிழாவின் போது பவனி வந்த அற்புதம் வேறெங்குமே கண்டு கொள்ள முடியாத தோர் சிறப்பம்சமாகும். இந்நிலையில் நுணசையும் மாவிட்புரமுமே எஞ்சிய தேர்க ளாகின்றன. மாவிட்டபுரம் கந்தசுவாமி சண்முகர் சிற்பத்தேர், மகாரதம் எனும் சிறிய இலக்கணப் பெருந்தேருக்குரிய பண்புகள் யாவும் நிரம்பியதாகும். அதே வேளையில் 1990 களைத் தொடர்ந்து இடப்பெயர்வுக ளால் இயற் சேதம் ஏற்பட்டு புனர் நிர்மாணம் வேண்டி நிற்பது எமது கருத்திற் கொள்ளப் பட வேண்டியதாகும். நுணசை முருகன் தேர் மட்டடுமே சுவாமி தேரேறும் வகையிலான நிலையில் பயன்பாட்டில் இருந்து வரு கின்றது.

ஆக, இவ்வரலாற்றுப் பின்னணியில் இருந்து வழக்கம்பரை தொடர்பிலான முக்கியத்துவம் பெறும் பண்புகள் சில தெரியவருகின்றன. யாழ்ப்பாணத்தின் புராதன தேர்களில் சுவாமி தேரோடும் வகை யில் பயன்பட்டு வரும் இப் பெருந்தேர்களில் ஒன்றாகவும் ஈழத்திலேயே சக்தி ஆலயங் களில் பயன்படும் ஒரேயொரு சிற்பத் தேராக வும் இயற் தேராகவும் அமைந்து நிற்கும் சிறப்பு தொல்புரம் முத்துமாரியின் சிற்ப இலக்கண இயற்தேருக்கே உரியதாகின் றது. இது வழக்கம்பரை மகாநாயகியின் அற்புதங்களில் ஒன்று எனவும் கருதப்படக் கூடிய சிறப்பியல்பே எனலாம்.

**நிறைவுரை**

இவ்வாய்விற் கூறப்பட்டுள்ள கருத்துக் களைத் தொகுத்து நோக்கலாம். தொல்புரம் முத்துமாரி அம்மன் கலைத்தேர் அமைப் பினை ஆதாரமாகக் கொண்டு பத்தொன்ப தாம் நூற்றாண்டின் யாழ்ப்பாணத்துத் தேர்க் கலை உலகின் தோற்றம், வளர்ச்சியின் பரிமான, பரிணாமங்களை அதன் வரலாற்றுப் போக்கில் ஆராய்ந்து, இந்துப் பண்பாட்டின் நவ பரிணமிப்பில் அது செலுத்தி நிற்கும் செல்வாக்கு எத்தகையது என்பது இனங் காணப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது. சுருங்கச் சொல்வதாயின் தொல்புரம் முத்துமாரி தேர், யாழ்ப்பாண இந்துக் கலையுலகில் ஓர் அற்புத ஆணி வேர்களில் ஒன்று என்பதில் ஐயமேது மில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி தக்சாயினி செல்வகுமார்**
(பண்பாட்டியல் முதுகலைமானி)
கலாசார உத்தியோகத்தர்
தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை.

# எங்கே செல்கின்றோம் ....

(அனுபவங்களும் அவதானிப்புக்களும்)

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்ற ஔவையார் வாய் மொழிக் கமைய மானிடப்பிறவியனது வேறெந்தப் பிறவிக்கும் இல்லாத சிறப்பினை உடையது. இதற்குப் பிரதான காரணமாக அமைவது நாம் எம்மிடையே ஆக்கபூர்வமான சமுதா யக் கட்டமைப்பை கொண்டு இயங்கிக் கொண்டிருப்பதாகும். அதாவது ஒவ்வொரு மனிதனும் தான் வாழ்கின்ற காலம் வரை வளமாக வாழ வேண்டும் என்ற வேட்கையும் விருப்பமும் தளராத முயற்சியும் கொண்டு வாழ்ந்து வருதல் ஆகும். குறிப்பாக ஒவ் வொரு மனித குலமும் தனக்கான பண்பாடு மற்றும் கலாசார விழுமியக் கட்டமைப் புக்களுடன் தன்னை தகவமைத்துக் கொள் கின்றான். இவ்வாறு தனது பண்பாடுகளை தகவமைத்துக் கொள்ளாத எந்த ஓர் இன மும் தொடர்ச்சியாக வாழ்ந்ததாக சரித்திர மில்லை.

ஓர் இனத்தினை அழித்து விட வேண்டு மாயின் அவர்களின் பண்பாடுகளை (இனம், மொழி, சமயம், பண்பாட்டு சின்னங்களை) சிதைத்தாலே போதுமானதாகும் என கூறப் படுகின்றது. இந்த வகையில் நாம் யாழ்ப் பாணத்துப் பண்பாட்டு பாரம்பரியங்கள் எங்கே செல்கின்றது என சற்று சிந்திப் போமானால்

யாழ்ப்பாண கலாசாரம் என்பது கந்த புராண கலாசாரம் என்று பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களால் முன்னதா கவே சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. இவ் வாறு சிறப்பித்துக் கூறும் அளவிற்கு மிகவும் உச்சம் வாய்ந்ததாக எமது பண்பாட்டினை கொள்ள முடியும்.

பண்பாடு என்பது பாடறிந்து ஒழுகுதல் என்பதாகும். அதாவது பண்புடன் வாழ்தல் என்று அர்த்தப்படுகிறது. குறிப்பாக ஒரு சமுகத்தின் அத்தனை வாழ்வியற் கூறுக ளையும் பண்பாட்டிளுள் அடக்கிவிட முடி யும்.

மாற்றம் ஒன்றுதான்
மாறாதது என்பதற் கமைய
யாழ்ப்பாண பண்பாட்டு
நீரோட் டத்தில்
ஆங்காங்கே பல
மாறுதல்கள் இடம் பெற்று
வருவதனை அவதானிக்க
முடி கின்றது.
இவற்றிற்கான
காரணத்தினை நாம் ஒரு
சாராரிடம் விட்டுவிட
முடியாது. மாறாக
ஒவ்வொரு மனிதனும்
சமூகத்தின் பிராணி என்ற
வகையில் நாம் ஒவ்வொரு
வரும் இவற்றுக்கு
பொறுப்புக்கூற வேண்டிய
வர்களாக உள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் யாழ்ப்பாண குடா நாடா னது ஈழத்தில் சிறப்பித்து வர்ணிக்கப்படு கின்ற புவியியல் காலநிலை அம்சங்களைக் கொண்ட ஒரு பிரதேசமாகும். சிறந்த கல்விமான்கள், புலவர்களை, சித்தர்களை, பேராசிரியர்களை கொண்டு பண்பாட்டை தகவமைத்துக் கடந்து செல்கின்றது. இதற்கு வாழ்ந்து மறைந்த பெரியோர்கள் பலரும் எமது பண் பாட்டுச் சின்னங்கள் பலவும் சான்றா கின்றன.

பண்பாடானது மீறப்படும் போதோ அல்லது சிக்கல்களை ஏற்படுத்தும் போதோ அல்லது தேவை ஏற்படும்போது தான் தன்னை வெளிப்படுத்தி நிற்பதைக் காண லாம். மாறாக தளம்பல்கள் அற்ற நிலையில் அது தானாகவே ஓடிக் கொண்டிலுக்கும்

மாற்றம் ஒன்றுதான் மாறாதது என்பதற் கமைய யாழ்ப்பாண பண்பாட்டு நீரோட் டத்தில் ஆங்காங்கே பல மாறுதல்கள் இடம் பெற்று வருவதனை அவதானிக்க முடி கின்றது. இவற்றிற்கான காரணத்தினை நாம் ஒரு சாராரிடம் விட்டுவிட முடியாது. மாறாக ஒவ்வொரு மனிதனும் சமூகத்தின் பிராணி என்ற வகையில் நாம் ஒவ்வொரு வரும் இவற்றுக்கு பொறுப்புக்கூற வேண்டிய வர்களாக உள்ளோம்.

சமூகம் எனும் போது அதன் மிகச் சிறிய அலகான குடும்பத்தில் இருந்தே அத்தனை விடயங்களுக்குமான வேர்கள் தோற்று விக்கப்படுகிறது. நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழக் கழகம் என்றும் குடும்பமே கோயில் எனவும் குடும்பங்கள் சிறப்பிக்கப் படுகின்றது.

எந்தப் பிள்ளையும் நல்ல பிள்ளை தான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவ ராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பி னிலே எனும் பாடல் வரிகளை ஞாபகப்படுத் திக் கொண்டு இன்றைய இளைய தலை முறை எங்கே செல்கின்றது. எவ்வாறு செல் கின்றது. என்ற பல வினாக்கள் எம்மிடையே எழுகின்றது.

அதாவது யுத்தம் சப்பித் துப்பிய பூமியில் ஏன் இவ்வாறான மாறுதல்கள், தமிழும் சைவமும் உச்சம் தொட்ட மண்ணில் ஏன் இவ்வாறான வேறுபாடுகள். ஏன் இன்றைய சமூகம் இவற்றுக்குப் பொறுப்புக்கூற மறுக் கின்றது விலகி வேடிக்கை பார்க்கின்றது என்ற ஏக்கங்கள் நம்மில் பலரிடையே காணப்படுகின்றது.

ஒருபுறம் அடிமை வாழ்க்கையின் தொடர்ச்சி செல்கின்றது. மறுபுறம் பண்பாட் டுப் பிறழ்வுகளின் தாண்டவம் என நீண்டு செல்கின்றது.

இவற்றுக்கான காரணங்களின் தேடுத லில் நாம் பழமையைப் புறம் தள்ளி விட் டோமா அல்லது நவீனத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டோமா எனும் கேள்விகளும் நிலவுகின்றது. நாம் பழமையின் உச்சங் களை முழுமையாக நிராகரித்தல் ஆகாது. அவ்வாறே நவீனத்தை கேள்விகள் இன்றி ஏற்றுக்கொள்வதும் ஆகாது. பழயனவற்றின் உன்னதங்களையும் புதியனவற்றின் முன்னேற்றங்களையும் இணைத்து பயணிப் பதே சிறப்பானது.

குறிப்பாக தொழில் நுட்ப வளர்ச்சி எனும் போர்வையில் பல முன்னேற்றங்கள் இடம் பெற்றிருப்பினும் சிலர் தொழில் நுட்ப முன்னேற்றத்தின் மதிப்பினை விளங்காத நிலையில் அதனை தவறான வழிகளிலும் கையாள்வதை அவதானிக்கலாம். உதார ணமாக கைத்தொலைபேசி பாவனையா னது ஓர் கத்தியை பயன்படுத்துவதைப் போல ஓர் உயிரினை காப்பாற்றவும் பயன் படுத்தலாம் அதேவேளை ஒரு உயிரின் வாழ்வை அழிக்கவும் பயன்படுத்தலாம். கைத் தொலைபேசி ஊடாக எமது வாழ்க்கை உள்ளங்கை நெல்லிக்கனி போல உலகை சுருக்கி விட்டது எனலாம்.

இன்று நம்மவர்களில் பெரும் பாலும் ஆடம்பர வாழ்க்கையை பெரிதும் விரும்புகின்றனர். வெளிநாட்டு மோகத்தி னால் புலம்பெயர் தமிழர்களின் பண உள் வருகையினால் இன்றைய இளம் தலை முறையினர் சிலர் தவறான வழி நடத்தல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய வாழ்க்கை முறையில் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்த நாம் இன்று தனித்தனி குடும்பமாக, தனியாகி, சமூகத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில் இங்கு பண்பாட்டை அடுத்த தலை முறைக்கு காவி செல்வதில் இடர்பாடு காணப்படுகின்றது.

ளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அதிலும் குறிப்பாக போதைப் பொருட்களின் பாவனையானது யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கப்பட்டு இருப்பதனை தினமும் ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. இப் போதைப் பொருட்களின் பாவனை யாழ்ப்பாணத்தை பொருத்தமட்டில் பல்வேறு வழிகளில் உள்ளீர்க்கப்படுகின்றது. இவை எம்மவர்களை திட்டமிட்டு அழிக்கும் செயலலோ அல்லது வியாபார நோக்கின் உச்சமோ என எண்ண வைக்கின்றது. போதைப் பொருட்களின் தாண்டவத்தில் பல குடும்பங்கள் நிர்க்கதியாகி உள்ளதுடன் தற்போது இவை மாணவ-மாணவிகளை இலக்குவைத்து நகர்த்தப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இதனால் இன்று பலர் இளவயதில் தற்கொலைகள் செய்து கொண்டமையும், நோய் நிலைகளுக்கு உள்ளாகியமையும் குடும்ப பொருளாதார சுமைகளை தாங்காது தள்ளாடுவதையும் துஸ்பிரயோகங்கள் அதிகம் இடம்பெறுவதற்கு வாய்ப்புக்களை வழங்குவதையும் அவதானிக்க முடிகின்றது. இவற்றிலிருந்து எமது சமூகத்தை பாதுகாக்க அனைவரும் உடனடியாக ஒன்று சேர வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

பண்பாட்டு வெளியில் கடந்த சில வருடங்கள் மாறாத வடுவாக அமைந்திருந்த கொரோனா எனும் பெருந்தொற்றினை கூறிக்கொள்ளலாம். குறிப்பாக பெருந்தொற்றானது எமது பழைமையை மீட்டிப் பார்க்க வைத்ததோடு பல சமூக இடைவெளிகளை தோற்றுவித்துக் கொண்டது.

மற்றும் அன்றைய வாழ்க்கை முறையில் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்த நாம் இன்று தனித்தனி குடும்பமாக, தனியாகி, சமூகத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில் இங்கு பண்பாட்டை அடுத்த தலைமுறைக்கு காவி செல்வதில் இடர்பாடு காணப்படுகின்றது. அதாவது குடும்ப ஒற்றுமை, அன்பு, விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, பாதுகாப்பு என்பன குறைவடைந்த நிலையில் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. கூட்டுக் குடும்பமாக வளரும் பிள்ளை பாதுகாப்புடன் வளர்வதையும் ஒரு குடும்பத்தில் தாய் தந்தை இருவருமே வேலைக்கு போகின்ற தருணத்தில் பெற்றோர் பிள்ளைகளுடன் நேரம் செலவு செய்யாது விடத்தும் பிள்ளைகள் தனித்து விடப்பட்டு பாசத்திற்காக ஏங்கும் நிலையையும், இதனால் அவர்கள் வழிதவறிச் செல்கின்ற நிலையும் அதிகரித்துள்ளது.

மூத்தோரை மதிக்காது முதியோர் இல்லங்களில் சேர்ப்பதும் தாய் தந்தையரை இழந்த பிள்ளைகளை சிறுவர் காப்பகங்களில் விடுவதும் அதிகரித்துள்ளது.

இன்று அதிகரித்து வருகின்ற சினிமா மோகம், சின்னத்திரை என்பனவும் இளம் தலைமுறையின் உன்னத வாழ்வை தின்று தள்ளுவதாகவே உள்ளது.

இவை மட்டுமல்லாது நமது பண்பாட்டில் அதிகம் தாக்கம் செலுத்தும் சக்தியாக சமூகவலைத்தங்களின் பாவனை காணப்படுகின்றது. அதாவது இன்றைய காலகட்டங்களில் ஒவ்வொரு குடும்பத்தவர்களும் சமூக வலைத்தளங்களான முகப் புத்தகம், இன்ஸ்டகிராம் மற்றும் டுவிட்டர் போன்ற பலவற்றில் மூழ்கி தமது பொன்னான நேரத்தைக் கழிப்பதை காணலாம். இதனால் அருகில் உள்ள உறவினைவிட தூரத்திலுள்ள முகம் தெரியாத உறவுகளுடன் நட்பைப் பெறுவதைக் கண்டு கொள்ளலாம். இதனால் பண்பாட்டில் நட்பு எனும் அர்த்தம் கூட வேறு தளத்திற்கு சென்றுவிட்டது.

சமூக புறசக்தியான சமூக வலைத்தளங்கள் இணையதள பாவனைகள் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வாத திருமணங்கள், தற்கொலைகள், பாலியல் துஷ்பிரயோகம் என்பன அதிகரித் தமை நோக்க முடிகின்றது. இவற்றினை ஊடகங்களும் ஊடக தர்மம் அற்ற நிலை யில் செய்திகளை வெளியிடுவதும், பாது காப்பு பொறிமுறைகளை வழங்குகின்ற தரப்பினர்களும் லஞ்சம், ஊழல், அரசியல் தலையீடுகள் என்று தமது கடமைகளில் தவறு வதும், பொறுப்பான அரச அலுவலர்கள் சிலர் பொறுப்புகளை தட்டிக் கழிப்பதும் வெறுமனே சம்பளத்திற்காக கடமைகளை ஆற்றுவதும் எமது பாதையில் நாம் எங்கே செல்கிறோம் எனும் தளத்தை சிந்திக்க வைக்கின்றது.

இன்று ஒவ்வொரு சமூகமும் சுயநல நோக்குடன் வாழ்ந்து வருவது சமூகப் பொறுப் பினை ஏற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டு வதும் எமது பண்பாட்டு மேம்பாடுகளில் பின்னடைவை ஏற்படுத்துகின்றன. மற்றும் “சமூக அரண்மனையின் தூண்கள்” எனப்படுகின்ற ஆசிரியர்களின் கண்டிப்பு பாடசாலைகளில் இல்லாமல் போனதாலும் மாணவர்கள் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என வாழ முயல்கின்ற நிலை காணப்படுகின்றது. முன்னைய தலைமுறை யில் மானிட சமூகத்தின் மிகப்பெரிய சிற்பி களான ஆசிரியர்களின் கண்டிப்பும் கனிவும் அறிவுரைகளும் எமது பண்பாட்டுச் சிந்த னைத் தளங்களின் ஊன்றுகோல்கள் எனலாம்.

பாடசாலையைப் பொருத்தமட்டில் முன் னைய காலங்களில் விளையாட்டுகள், குரு பூஜை விழாக்கள், நிகழ்வுகள், மன்றங் களின் செயற்பாடுகள், தலைமைத்துவப் பயிற்சிப்பாசறைகள், தியானப் பயிற்சிகள், யோகா, கண்காட்சிகள் என்பவற்றின் மூலம் வாழ்வியலுக்கான வண்ணங்களை ஆரம் பத்திலேயே விதைப்பதன் மூலம் பண்பான சமூகத்தை கண்டு கொள்ள முடிந்தது. ஆனால் இன்று காலம் போட்ட கோலமோ தெரியவில்லை. சமய பாடத்திற்கு, மற்றும் அறநெறிக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றமை அருகி வருவதை அவதானிக்க முடிகின்றது.

மாறாக நாம் எமது பண்பாட்டு தளங்க ளில் அக்கறை உள்ளவர்களாக மாற வேண் டிய கடப்பாடுகளில் வெள்ளிக்கிழமை களில் ஆலயம் செல்லல் மற்றும் சமய வகுப்புகள் நடத்துவதுடன் சிவபுராணம் ஓதுதல் ஆன் மிகப் பணிகளில் மாணவர்களை ஈடுபடுத்து வதும், அதுமட்டுமல்லாது பாடசாலையில் சமய பாட வகுப்பிற்கும் ஆன்மிக பெரியார் களின் சொற்பொழிவுகளுக்கு அதிக முக்கி யத்துவம் கொடுக்கப்பட வேண்டும். மாணவர் கள் வீண் பொழுதுகளை போக்காது பாட சாலை நேரத்தை அதிகரிப்பதுடன் பிரத்தி யோக வகுப்புகளை நடத்துவதும் இரண் டாம் மூன்றாம் முறை உயர்தரம் கற்பதற் கும் வாய்ப்புகளை ஏற்படுத்தியும் கொடுக்க வேண்டும்.


இவை மட்டுமல்லாது அண்மையில் அதிகமாக புதிதாக திறக்கப்படுகின்றன மதுச்சாலைகள், விசேட உணவுச் சாலை கள், விடுதிகளுக்கு அனுமதி வழங்காது இருப்பதுடன் பிள்ளைகளுடன் பெற்றோர் அதிக நேரத்தை செலவிடுவதற்கான சந்தர்ப்பங்களை அதிகரிப்பதாகவும், பாதுகாப்பு பொறிமுறையினை ஏற்படுத்து கின்ற தரப்பினரை சீர்படுத்துவதன் மூலமும் கல்வி பெறுபேறுகளுக்கு அப்பால் மாண வர்களின் ஒழுக்கத்தில் சமூகம் சார்ந்த அக்கறை செலுத்த வேண்டும்.

இறுதியாக இன்று ஒவ்வொரு சமூகமும் சுயநலமாக வாழ்ந்து வருவதும் சமூகப் பொறுப்பினை ஏற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டுவதும் எமது பண்பாட்டு மேம்பாடு பின்னடைவை ஏற்படுத்துகின்றது. நாம் இவற்றிலிருந்து எமது பண்பாட்டு நீரோட் டத்தை முறையாக எடுத்துச் செல்வதற்கும் எமது இனத்தின் வேர்களை ஒன்று திரட்டி வளர்ப்பதற்கும் அடுத்து சந்ததியின் மீது அனைவரும் அக்கறை உடையவர்களாக திகழ வேண்டும் என்பதுடன் நாம் எங்கே செல்கின்றோம் எனும் பாதையினை உணர்ந்து கொள்வதனூடாக நமது பண்பாட்டுப் பெருமை யினை நிலை பெறச் செய்யலாம் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு. ஞானப்பிரகாசம் யூட்அல்போன்சஸ்**
தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
வலயக்கல்வி அலுவலகம்.
தீவகம்.



# இலங்கையின் வடமாகாணத்தில் உள்ள சுற்றுலாத்தளங்களை மேம்படுத்தல்

சுற்றுலா என்பது Tour எனும் ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம் ஆகும். Tour எனும் ஆங்கிலச் சொல்லானது Tornus எனும் லத்தீன் மொழியிலிருந்து பிறந்தது. டோர்னஸ் என்றால் சக்கரம். எனவே இச் சொல் ஆங்கிலமொழியில் கலந்து பயணம் எனும் சொல்லை குறித்தது. Tour எனும் சொல் ஹிப்ருமொழியில் உள்ள Torah எனும் சொல்லிலிருந்து பிறந்ததாகவும் கூறுவர். "ஓய்வு நேரத்தை அறிவு பூர்வமாய் பயன்படுத்தும் கலைதான் நாகரீகத்தின் மிகச் சிறந்த அடையாளம்" சுற்றுலா (அறிஞர். பெட்ரான்ட் நஸ்ஸல்) என கொள்ளப்படுகின்றது,

இலங்கையில் பல சுற்றுலாத்தளங்கள் உள்ளன. குறிப்பாக வடமாகாணத்தை எடுத்துக் கொண்டால் புராதன வரலாற்றுச் சின்னங்கள் ஏராளமாக காணப்படுகின்றன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் வடமாகாணத்தினுள் உள்ளடங்குகின்றன. தமிழர்கள் அதிகமாக வாழும் இப்பகுதிகள் 30 வருட யுத்தம் காரணமாக பல புராதனசின்னங்களை இழந்துள்ளன. யுத்தகாலமுடிவின் பின்னர் எஞ்சிய வரலாற்றுச் சின்னங்களை அரச மற்றும் தனியார் நிறுவனங்களினால் புனரமைக்கப்படுவதுடன் பாதுகாக்கவும் ஆன முயற்சிகளை எடுத்து வருகின்றன.

இலங்கையின் வடமாகாணத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், சுற்றுலாத்துறைசார் வளர்ச்சி காரணமாக சுற்றுலாத்துறைசார் ஏற்பட்டுள்ள சாதக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதக நன்மைகள் சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளும் அவற்றை மேம்படுத்துவதற்கான வழி முறைகளும் பற்றி தனித்தனியாக நோக்குவோம்.

வடமாகாணத்தில் யாழ்மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத் தளங்கள் சிலவற்றைப் பார்ப்போம். சங்கிலியன் தோப்பு, நெடுந்தீவுக் கடல் கோட்டை, காரைநகர் கடல்க்கோட்டை, யாழ்ப்பாணக் கோட்டை, கடுறுகொடவிகாரை, ஊர்காவற்றுறை கோட்டை, கோவிலன்பெயின்ற் வெளிச்ச வீடு, நல்லூர் மந்திரிமனை, மாவட்டபுரம் கந்த சுவாமிகோவில், நகுலேஸ்வரம் கோவில், பழைய பூங்கா, நெடுந்தீவு குயின்ரவர், நல்லூர் கந்தசுவாமிகோவில், நாகதீப விகாரை, நயினாதீவு அம்மன் கோவில், அரியாலை சித்திவிநாயகர்கோவில், கோட்டு வாசல் அம்மன் கோவில், கோவிற் கடவை, கதிர்காமம் முருகன் கோவில், யாழ்.பொது நூலகம், கடற்கரைகளான கசூரினா, சாட்டி, காங்கேசன்துறை, தொண்டை மானாறு அக்கரை போன்றனவும் சிறந்த சுற்றுலாத் தளங்கள் ஆகும்.

இவற்றோடு சங்குப்பிட்டிப்பாலம், நிலாவறைக்கிணறு, வில்லூன்றி, மரியன்னை ஆலயம், சங்கிலி மன்னன்சிலை, நெடுந்தீவு தேசியபூங்கா, யாழ். மணிக் கூட்டுக் கோபுரம், உப்பாறு, சிறுத்தீவு, சுண்டிக்குளம் தேசியபூங்கா, மேலும் பல சுற்றுலாத்தளங்கள் வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படுகின்றன. இதேபோல் ஏனைய மாவட்டங்களிலும் காணப்படுகின்றன.

சுற்றுலாத்துறையால் ஏற்படும் எதிர் மறையான விளைவுகள் பல. அத்தகைய செயற்பாடுகளையும், விளைவுகளின் தன்மையையும் நோக்குவோம். காடழித்தல், கரையோர தாவரங்கள் அழிதல் காரணமாக உயிரினத்தொகுதியில் பாதிப்பு ஏற்படுகின்றது. மண்ணரிப்பு ஏற்படுதல் முறையற்ற விதத்தில் கழிவுகள் அகற்றுதல், சுத்திகரிக் கப்படாத கழிவுகள், காரணமாக நீர், நிலவளங்கள் மாசடைதல். பாதுகாக்கப்பட்ட வனம் மற்றும் உயிர்ப்பல்லினத்தன்மை செறிவாகக் காணப்படும் இடங்களில் உட் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதலால் உணவுச்சங்கிலி பாதிக்கப்படுவடன் உயிரினங்களின் மீள் இனப்பெருக் கத்தையும் அவை பாதிக்கின்றன.

சுற்றுலாத்துறையால் ஏற்படும் எதிர் மறையான விளைவுகள் பல. அத்தகைய செயற்பாடுகளையும், விளைவுகளின் தன்மையையும் நோக்குவோம். காடழித்தல், கரையோரதாவரங்கள் அழிதல் காரணமாக உயிரினத்தொகுதியில் பாதிப்பு ஏற்படுகின்றது.

அதிகளவான சுற்றுலாப்பயணிகள் வருகை,அதிகரித்த வாகனப்போக்குவரத்து, அதிகரித்த சத்தம் ஆகியவை காரணமாக சுற்றுலாத்தளங்கள் சார்ந்த பகுதிகளில் வாழும் உயிரினங்களின் நடத்தையில் மாற்றம் நிகழும். விலங்குகள், பறவைகள், கடல்வாழ் உயிரிகளுக்கு தொந்தரவை ஏற்படுத்தல், உயிரினங்கள் வேறுபகுதிக்கு இடம் பெயர்தல், இரை கவ்விகள் இடையே போட்டி நிலவுதல். முருகைகற்பாறைகள் பாதிக்கப்படுதல். படகுகள், கப்பல்களில் இருந்து வெளியேறும் எண்ணெய் கழிவுகளால் கடல் சார் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

தமிழர் பாரம்பரிய வரலாற்றுச் சின்னங்கள் பராமரிப்பின்றி பாரிய அளவில் பின்னடைவை சந்தித்துள்ளன. 30 வருட யுத்தமுடிவுக்குப் பின் வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்தளங்களில் காணப்படும் குறை பாடுகள் நிவர்த்தி செய்யப்படவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. போக்குவரத்து, மின்சாரம், குடிநீர் போன்ற அடிப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்குதல் வேண்டும். சுற்றுலாதளங்களை மேம்படுத்துவதோடு பயணவழிகாட்டி, துறைசார்கையேடுகள், மொழியறிவு ஆகிய குறைபாடுகளையும் நிவர்த்தி செய்ய வேண்டும்.

யுனெஸ்கோவினால் 2010ஆம் ஆண்டு வடமாகாணத்துக்குரிய மரபுரிமை சின்னங்கள், சுற்றுலாத் தளங்கள் அடையாளப் படுத்தப்பட்டன. கசூரினாக் கடற்கரை, காங்கேசன்துறை கடற்கரை, மணற்காடு பிரதேசம், சாட்டிக் கடற்கரை போன்றன அவையாகும். மேலும் வடமாகாணத்தில் உள்ள ஏனைய சுற்றுலாத் தளங்களாலும் சமூக பொருளாதார மாற்றங்கள் நிகழ்கின்றன. அத்தோடு இவற்றால் அந்நியச் செலவாணியும் வேலை வாய்ப்பும் பிரதேச அபிவிருத்தியும், அரச வருமானமும் பொருளாதார அபிவிருத்தியும் பிரதேச மக்களின் வாழ்க்கைத்தரமும் உயர்வடை கின்றது.

சுற்றுலாத்தள அபிவிருத்திகளால் சாதகமான நிலமைகள் பல காணப் பட்டாலும் பாதகங்களும் ஏற்படாமலில்லை. பொறுப்பற்ற சுற்றுலாப்பயணிகளால் சுற்றுலாத்தளங்களின் வரலாற்றுச் சின்னங்கள் மீண்டும் புனரமைக்க அல்லது மீட்க முடியாத அளவுக்கு சிதைக்கப்படலாம். சுற்றுச் சூழல் பாதிக்கப்படல், மற்றும் தொற்று நோய்கள் பரவுவதற்கான வாய்ப்பு உண்டாகுதல். உள்ளூர் மக்களின் வாழ்க்கை பாதிக்கப்படலாம். உதாரணமாக கடலுணவின் விலை அதிகரித்தலால் உள்ளூர் மக்களின் வாழ்வியல் பாதிக்கப்படுகிறது.

மேலும் பெண்கள், சிறுவர்கள் துஸ்பிரயோகத்துக்குள்ளாகுதல். பாலியல் தொந்தரவுகள், மோசடிகள், களவுகள், போன்றனவும் பாதகமான நிலமைகளும் சிலவாகும். அதேநேரம் பெண் தலைமைத்துவ குடும்பங்களால் மேற்கொள்ளப்படும் கைப்பணிப் பொருட்களுக்கான சந்தைவாய்ப்பு சுற்றுலாப்பணிகளால் மேம்படுவது சாதகமான நிலமைகளுள் முக்கியமானதாகும்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடான இலங்கை, ஒழுங்கமைக்கப்பட்ட சுற்றுலாத் துறைசார் மேம்படுத்தல்களை முன்னெடுப்பதன் அவசியம் பற்றிப் பார்ப்போம். இலங்கை சுற்றுலாத்துறையை, சூழலைப் பாதுகாப்பதற்காக வருமானத்தைப் பெற்றுத்தரும் ஒரு துறையாக கருதாது அதனை பொருளாதார விருத்திக்குரிய மூலமாக கருதுகின்றது. இதன் காரணமாக சுற்றுலா விடுதிகள் பலவற்றை புனரமைப்பு செய்ததுடன் புதிதாகவும் சுற்றுலா விடுதிகளை உருவாக்கியது.

அத்தகைய விடுதிகள் இயற்கை, மற்றும் கலாசாரச் சூழலை பாதுகாப்பதுடன் பௌதிக அம்சங்களுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தாது பொருந்தக் கூடியதாக பிரதேச பண்பாட்டுக்கு முரணற்ற முறையில் அமைக்கப்படுகின்றன. வேலைவாய்ப்பு கிடைக்கின்றது. அத்தோடு மக்கள் சர்வதேச மொழிகளை தெரிந்து கொள்வதற்கான சூழ்நிலை உருவாகின்றது. சக்தி வளங்களின் பயன்பாடு அதிகரிக்கின்றது. (சூரியசக்தி,காற்றுவலு,நீர்மின் வலு) கழிவுப் பொருட்கள் மீள் சுழற்சிக்கு உட்பட்டு மீள்பாவனைக்கு உட்படுத்தப்படுகின்றது.

சுற்றுலாத்தளங்கள் மேம்படுத்தப்படும் போது பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படுவது அவசியமாகும். குறித்த பகுதியின் பசுமை வலயம், வீதிகள் (பிரதானவீதிகள் , சிறுவீதிகள், நடைபாதைகள்). மக்கள் வாழ்விடங்கள், வர்த்தக மையங்கள் அனுமதிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் அதன் செறிவுகள் போன்றவற்றோடு சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்தக்கூடாத நடைமுறைகளும், சுற்றுலாத்துறைக்கு பயன்பாடற்ற பகுதிக ளும் தெளிவாக குறிப்பிடப் பட வேண்டும்.

சுற்றுலாத்துறைசார் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படும் போது மக்களின் கருத்துகளும் உள்வாங்கப்படல் அவசியமாகும். திட்டங்கள் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தல், அவர்கள் சிந்தித்து முடிவெடுக்க சந்தர்ப்பம் அளித்தல். ஏனெனில் சுற்றலாதளங்கள் அமைந்துள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச மக்களின் பங்குபற்றல் இல்லாமல், பலவந்தமாக திணிக்கப்படும் மேம்படுத்தல்கள் நிலைத்து நிற்க கூடியதாக காணப்பட மாட்டாது. (Mowforth and munt 1998)

மேலும் சுற்றுலாத்தளங்களை மேம்படுத்தும்போது பிரதேசத்தின் தோற்றம், காலநிலை பொருளாதாரம், அபிவிருத்தி, சுற்றுலாப்பயணிகளின் வருகையின் எண்ணிக்கை, அவர்கள் தங்கியிருக்கும் கால அளவு ஆகியனவும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். மேம்படுத்தல் திட்டங்கள் சுற்றுலாத் தளங்களுக்கு தீங்கினை ஏற்படுத்தவில்லை என்பதை உறுதிப்படுத்தல். சிறுகைத்தொழில் மையங்களை உருவாக்குதல், சுற்றுலாத்தளங்கள் அமைந்துள்ள பிரதேசங்களின் மக்களின் பண்பாடுகள் சமய ஒழுக்க விழுமியங்கள், சமூகக் கட்டுப்பாடுகள் சுற்றுலாப் பிரயாணிகளால் பாதிக்கப்பட்டாதவாறு குறித்த விடயங்கள் பற்றி முன்கூட்டியே பயணிகளுக்கு தெளிவுபடுத்தல் இதன் மூலம் இலங்கையின் கலாசாரம் உலகம் முழுவதும் பிரபல்யமடையும். எம், கலைநுட்பங்கள் வடிவமைப்புக்கள் பிரபல்யமடையும்; அலங்காரப் பொருட்கள் கைப்பணி உற்பத்தி செய்பவர்களின் வருமானம் உயர்வடையும் கைப்பணிகைத் தொழில்கள் வளர்ச்சியடைதல்; அந்நிய மொழிப் பாவனையில் ஊக்கம் அதிகரித்தல் போன்றன நிகழ்வதற்கு சாத்தியம் உண்டாகும்.

சுற்றுலாத்தளங்கள் மேம்படுத்தப்படும் போது உள்ளூர், வெளியூர்வாசிகள் மட்டுமல்லாது வெளிநாட்டுப் பயணிகளும் பல நன்மைகளை அடைகின்றனர். அத்தகைய பகுதிகளுக்கு செல்வதால் புத்துணர்ச்சி, மகிழ்ச்சி உண்டாகிறது. கடுமையான உழைப்பு, மன உளைச்சல், களைப்பு, சோர்வு ஆகியன நீங்கி புது அனுபவம் ஏற்படுகின்றது. உடலும் உள்ளமும் ஓய்வை விரும்பி இளைப்பாறுதல் பெறுகின்றன. தூய்மையான காற்று, சூரியஒளி, ஆரோக்கியத்தை தருவதோடு பாரம்பரிய விளையாட்டுக்களை கண்டுகளிக்கவும், கலந்து கொள்ளவும் ஆர்வம் உண்டாகிறது. உதாரணமாக நடைபயணம், படகோட்டம், மாட்டு வண்டிச் சவாரி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

சமயம் சார்ந்த ஆன்மீக உணர்வுகள், பிற கலாசாரங்களில் ஏற்படும் அறிவார்வம், புதிய நண்பர்களை, உறவுகளைப் பெற்றுக்கொள்ளல், கடலுணவுக்கான கேள்வி அதிகரித்தல், தெங்கு, பனை உற்பத்திக்கான சந்தைவாய்ப்பு அதிகரித்தல், தைத்தஆடை உற்பத்தி அதிகரித்தல், கைத்தறி புடவைகளுக்கான கேள்வியும், கைவினைப் பொருட்களுக்கான கேள்வியும் அதிகரித்தல். தனிநபர் வருவாய் பெருகும் சந்தர்ப்பம் மேம்படும். யுத்தத்தால் பின் தங்கிய வடமாகாணம் இத்தகைய செயற்பாடுகள் காரணமாக முன்னேற்றமடையும். அதற்கு ஆரம்ப புள்ளியாகச் சுற்றுலாத் தளங்கள் அமையும். எனவே இலங்கையின் வட மாகாணத்தில் உள்ள சுற்றுலாத் துறைகள் மேம்படுத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது.

வடமாகாண சுற்றுலாத்தளங்களை மேம்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். ஒன்று முதன்நிலை சுற்றுலாத்துறைசார் செயற்பாடுகளை மேம்படுத்தல். இதனுள் சுற்றுலாவிடுதிகள் சார் அபிவிருத்தி, உணவு உற்பத்தி மற்றும்

சுற்றுலாத்தளங்களை மேம்படுத்தும்போது பிரதேசத்தின் தோற்றம், காலநிலை பொருளாதாரம், அபிவிருத்தி, சுற்றுலாப்பயணிகளின் வருகையின் எண்ணிக்கை, அவர்கள் தங்கியிருக்கும் கால அளவு ஆகியனவும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிப்பு செயற்பாடுகள், சுற்றுலாத் தளங்கள் மற்றும் துறையோடு இணைந்த முகவர்கள் மற்றும் நிறுவன செயற்பாடும் அபிவிருத்தியும், போக்குவரத்து அபிவிருத்தி (புகையிர தம், கப்பல் படகு,விமானம், நெடுஞ்சாலை) ஆகிய அடங்கும்.

இரண்டாம் நிலைச் சுற்றுலாதுறை சார் செயற்பாடுகளாக விற்பனை நிலையங் களை நிறுவுதல், நூல்கள், முடி அலங் காரம், சலவையோடு இணைந்த செயற்பாடு கள், பொழுதுபோக்கு அம்சங்கள் செயற் பாடுகள், பொழுதுபோக்கு அம்சங்கள் (திரையரங்குகள், படக்காட்சிகள், சிறப்புக் கலை விழாக்கள், விளையாட்டுப் போட்டி கள்) போன்றன காணப்படுகின்றன.

மேலே வணிக விடுதிகள், தங்கல் விடுதி கள் (Residental hotels), பொழுதுபோக்கு விடுதிகள் (Resort hotels) நட்சத்திர விடுதிகள், பாரம்பரிய விடுதிகள் ஆகியவற் றையும் மேம்படுத்த வேண்டும். மேலும் வடமாகாண சுற்றுலாதளங்கள் பற்றி அயல் நாடுகளுக்கு அறிமுகப்படுத்த சுற்றுலாத் துறை உதவ வேண்டும். போதுமான விளம் ரங்கள் சுற்றறிக்கைகள், சுவரொட்டிகள், மூலம் தகவல் பரிமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

சுற்றுலாத்தளங்களை அண்மித்த இடங் களை தூய்மையாக வைத்திருத்தல். தெருக் களில் பிச்சை எடுப்போரையும், தெரு நாய்க ளையும் கட்டுப்படுத்தல், போன்ற செயற் பாடுகளை முன்னெடுப்பதும் பொருத்தமான தாக அமையும்.

---

**உசாத்துணை**


- www.tamilwn.com
- லங்காசிறி 2017 SEO.26.
- வடக்கு மாகாண சுற்றுலா இணைத்தளம் அங்குராப்பணம்
- Tamilgwography news. இலங்கையின் சுற்றுலாதளங்கள். 2018 மே – 10
- வைத்தியட்ணம் பத்மானந்தகுமார் "சூழல்சார் சுற்றுலாத்துறை" சிந்தனை வெளியீட்டகம், பொல்கொல்லை, இலங்கை.
- பேராசிரியர்.ம. இரா. தங்கமணி 2014, சுற்றுலாவியல் ஓர் அறிமுகம், கொங்கு பதிப்பகம் 9/488 பாண்டியன் நகர், கரூர்.
- ச. ஜெயராசா, இலங்கையின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி, " இலங்கையின் சமகால சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள்", பொருளியல்துறை, யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
- சுற்றுலாவும் பிறதுறைகளும், கமலம், சங்கர் நியூ செஞ்சி புக்கவுஸ் பிறைவேற் லிமிட்டெட்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யூ.மேவிஸ் ஜீன்சியா,**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.



# யாழ்ப்பாணம் பாசையூர் பிரதேசமும் அதனுடன் இணைந்த கலைகளும் கலைஞர்களும்

இந்து சமுத்திரத்தின் நித்திலம் என போற்றப்படும் இலங்கைத் தீவின் வட பகுதியில் அமைந்துள்ள யாழ். குடாநாட்டின் கரையோரப் பகுதியில் அமைந்துள்ள 62.29 ஏக்கர் விஸ்தீரணத்தைக் கொண்ட புகழும் புதுமையும் மிக்க புனித அந்தோனியார் ஆலயத்தைக் கொண்டு அமையப் பெற்ற கிராமமே பாசையூராகும். வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாசையூர் கிராமமானது ஜே64 பாசையூர் கிழக்கு, ஜே65 பாசையூர் மேற்கு என இரு பிரிவுகளைக் கொண்டது. பாசையூரின் வடக்கிலும், கிழக்கிலும் கொழும்புத்துறை காணப்படுகின்றது. தெற்கே கடற்கரையும் மேற்கே குருநகரும் அமைந்துள்ளது. கிராமத்தின் மையப்பகுதியாக பாசையூர் புனித அந்தோனியார் தேவாலயம் அமைந்துள்ளது. நூற்றாண்டு கால பழைமை வாய்ந்த இத் தேவாலயம் புகழ் பெற்ற வணக்கஸ்தலங்களுள் ஒன்றாகும்.

இங்கு வாழ்பவர்களின் பூர்வீகம் நல்லூர் மற்றும் மட்டுவில் பிரதேசங்களுடன் தொடர்புபட்டுள்ளது. நல்லூர் வாசிகளுக்கும் இவர்களுக்கும் இடையில் நல்லூர்க் கந்தன் தேரை இழுப்பது தொடர்பான சச்சரவுகள் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து இவர்களுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதுடன் அவர்களிடமிருந்து பிரிந்து இப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தனித்து வாழ்ந்தார்கள் என்று இப்பிரதேச முதியவர்கள் கூறுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசையூர் பிரதேசம் கிறிஸ்து பிறப்ப தற்கு முன் மூவாயிரம் ஆண்டுகளில் "மணற்றி" எனும் பெயரில் காணப்பட்டது. இவர்களின் மூதாதையர்கள் சிலகாலம் வரை முற்று முழுதாக சைவ சமயத்தை பின்பற்றுபவர்களாக பரம்பரை பரம்பரை யாக வாழ்ந்து வந்துள்ளார்கள். முன்னைய காலத்தில் காட்டுவளவு என அழைக்கப்பட்ட இடத்தில் புளியமரத்தின் கீழ் சிவபெரு மானுக்கு கோவில் அமைத்து வணங்கி வழிபாடு செய்து வந்துள்ளார்கள்.

இப்பிரதேசத்தின் ஆறாம் தலை முறை யினரின் பெயர்கள் இந்துப் பெயராகவே காணப்பட்டுள்ளது. இதிலிருந்து இவர்கள் ஐரோப்பியர் வருகைக்கு முன் இந்துக்களாக வாழ்ந்துள்ளார்கள் என்று நம்ப முடிகின்றது. ஐரோப்பியரின் ஆக்கிரமிப்பின் பின்னர் கரையோரப் பகுதிகளில் இருந்த மக்கள் கட்டாயமாகவும் நிர்ப்பந்தத்தின் பேரிலும் உயிருக்குப் பயந்தும் கிறிஸ்தவர்களாக தங்களை மாற்றிக்கொண்டனர்.

அச்சந்தர்ப்பத்தில் இந்துக் கோவில்கள் அவர்களின் மதவழிபாட்டு இடங்கள் ஐரோப் பியரால் அழிக்கப்பட்டு தேவாலயங்கள் கட்டப்பட்டு கிறிஸ்தவ மதவழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பின்னர் அப் பழக்க வழக்கங்கள், சடங்குகள், சம்பிரதா யங்களை இப்பிரதேச மக்கள் பின்பற்றி இன்றுவரை நடைமுறைப்படுத்தி வருகின் றார்கள். காலப்போக்கில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட பயிற்றுவிக்கப்பட்டுள் ளார்கள். அதற்கு முன் இப்பிரதேச மக்கள் எந்த வகையான தொழிலில் ஈடுபட்டார்கள் என்று அறிய முடியவில்லை. கரையோரத் தில் வாழ்ந்ததால் கரையார் எனும் பெயரிலும் அழைக்கப்படுகிறார்கள்.

இப்பிரதேச மக்களுக்கு முதன் முதலில் மீன்பிடித் தொழிலை பழக்கிய, அறி முகப்படுத்திய அருட்திரு விக்டர் டெலாண் டெஸ் அடிகளாரின் உருவச்சிலை தற்போது கடற்கரைப் பகுதியில் அவரின் நினைவாக வைக்கப்பட்டுள்ளதை காணலாம். அத்து டன் அவர் இறந்த பின்னர் அவரது உடல் ஆலயத்தின் மேற்குப் புறமாக உள்ள கோவிலின் உட்பகுதியில் அடக்கம் செய்யப்பட்டது.

ஒல்லாந்தர் காலத்தில் குருகுலத் தலை வனான புண்ணியானந்தன் என்பவருக்கு அவரின் சிறப்பான பணியையும் அவர் மேல் உள்ள அதிகப்படியான மரியாதையும் காரணமாகக் கொண்டு கொழும்புத் துறையை அவருக்குப் பரிசாக வழங்கினர். இதனடிப்படையில் இப்பகுதியினர் குரு குலத்தவர் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கொழும்புத் துறைபகுதியானது பாசையூர் கிராமத்தின் கிழக்கில் உள்ளது. முன்னைய காலங்களில் கொழும்பு மற்றும் ஏனைய பகுதிகளுக்கு செல்வதற்கான போக்குவரத்து நடவடிக்கைக்கான பாஸ் அனுமதி பாசையூரில் தான் வழங்கப்பட் டுள்ளது. பாஸ் செய்யும் ஊர் என்பது பிற் காலத்தில் திரிபடைந்து பாசெய்யூர் எனமாற்றம் பெற்றிருக்கலாம்.

"கி.பி 1665 இல் குலசேகர சிங்கையாரிய சக்கரவர்த்தி பரராசசேகரனை, சோழநாட் டைச் சேர்ந்த கவிவீரராகவன் போற்றிப் பாடியதால் மன்னன் அவனுக்கு மணற்றி எனும் நிலப்பகுதியை பரிசாக வழங்கினான்." என மாதகல் மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவ மாலையில் கூறப்பட் டுள்ளது. இந்த "மணற்றி" எனும் பிரதேசம் தான் தற்போதைய பாசையூரும் குருநகரும் என முதலியார் செ.இராசநாயகம் தமது யாழ்ப்பாண சரித்திர நூலில் கூறியுள்ளார். (யாழ்ப்பாண சரித்திரம் பக்கம் 50)

"கலைஞர்கள் மேல் கருணை கொண்ட கொடை வள்ளலான மன்னா! தொலை தூரம் இருந்து வந்தேன். உன்முகத்தை பார்க்க வேண்டி திரையொன்று மறைக் குதையா. ஏன் இதயம் கலங்குதையா. தர்மத்தின் தலைவா இந்த ஏழைக்கு இரங் கும் ஐயா" என்று மனமுருகி பாடியதைக் கேட்ட மன்னன் திரையை நீக்கி வெளியே வந்து உனக்கு என்ன வேண்டும் கேள் என்று அன்புடன் கேட்டான். அதற்குப் பாணன் மன்னனே தங்களைப் புகழ்ந்து பாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியத்தை அடியேனுக்கு அருள வேண டும் என்று கேட்க மன்னனும் சம்மதித்தான். பின்னர் அரச மரியாதையுடன் பாணனை அழைத்துச் சென்று மணற்றியை பரிசாக வழங்கினான் என்றும் வரலாறுஉ ண்டு.

பாணன் பாட்டினாலும் கவியினாலும் மன்னனைப் புகழ்ந்து பாடி அதற்குப் பரிசாகக் கிடைத்த பகுதி என்பதால் பா (பாடல்,கவிதை) செய்யூர் எனப் பெயர் பெற்றிருக்கலாம். இல்லையெனில் இப்பிர தேசமானது பாடல்கள், கூத்துக்கள் திறம்பட இயற்ற அதனை நடித்து தாம் சொல்ல விரும்பும் கருத்தை பாட்டிலேயும் கவியி லேயும் உரைநடையாக சொல்லக்கூடிய கவிஞர்களையும் புலவர்களையும் அண்ணாவிமார்களையும் கலைஞர்களையும் தன்னகத்தே கொண்டிருந்ததால் பிறரால் இப்பிரதேசமானது பா-செய்யூர் என அழைக்கப்பட்டது. இத்தகைய சிறப்பு மிக்க ஊரில் பிறந்து கலைக்காக வாழ்ந்து மறைந்த கலைஞர்கள் பற்றித் தொடர்ந்து பார்ப்போம் .

**இன்சுவைக் கவிமணி**
**பெஞ்சமின் கிறிஸ்தோப்பர்**

இன்சுவைக் கவிமணி பெஞ்சமின் கிறிஸ்தோப்பர் என அழைக்கப்பட்ட இப்புலவர் 1913.06.11 இல் பாசையூர், யாழ்ப் பாணம் என்னும் கிராமத்தில் பிறந்தார். கொழும்புத்துறை புனித சூசையப்பர் பாடசாலையில் ஆரம்பக்கல்வியை கற்றார். மட்டுவில் பண்டிதர் வே.அருளானந்தர் என்பவரிடம் செய்யுள் இலக்கணங்களைக் கற்றறிந்துள்ளார்.

பண்பாட்டு வாசனையும் பொருட் சுவையும் கொண்ட இனிய பாடல்களை நாட்டுக் கூத்தில் எழுதி கூத்துக்கு மகுடம் சூட்டினார் இப்புலவர். இவர் பவுலீனப்பர், ஞானசவுந்தரி, சவேரியார், செபஸ்தியார், குணசீலன், அருளானந்தர், பிலோமினம்மா, சவீன கன்னி, கற்பகமாலா, பிரகாசராசன் ஆகிய கூத்துக்களை எழுதியுள்ளார். நடசாரிப் பாடல்களையும் எழுதியுள்ளார்.

பெரும்பாலும் சமயம்சார் படைப்புக் களுக்கு முன்னுரிமை அளித்துள்ளார். 1940 இல் எழுதப்பட்டு 1946 இல் அரங்கேற்றப் பட்ட ஞானசவுந்தரி நாட்டுக்கூத்து பாசையூரில் அரங்கேற்றப்பட்டது. அன்பு, காதல், மோகம், பாசம், கோபம், பொறாமை, வீரம், மன்னிப்பு, நம்பிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய இந்நாடகமானது பலரது பாராட் டைப் பெற்றது. மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட இப்புலவர் 1993.11.18 இல் கலையுலகிற்கு கண்ணீர்தந்து இவ்வுலகை விட்டு உயிர்நீத்தார்.

இவர் பெஞ்சமின் மற்றும் ஆரோக்கி யத்தின் அழகு மகனாவார். பாசையூரின் முதல் ஆங்கில ஆசிரியரான சவிரிமுத்து அந்தோனிமுத்து அவர்களை தந்தை வழிப் பேரனாகவும், ஞானக்கும்மி, ஞானரூபன், பெரியஒப்பாரி, சின்ன ஒப்பாரி ஆகிய நூல் களை பெருமையுடன் அளித்த முதற்புல வரான சுவாம்பிள்ளை அவர்களை தாய் வழியாகவும் கொண்டு சான்றோர் வழிவந்த பெருமைக்குரியவர். பாசையூர் வளர்பிறை நாடக மன்றத்தினால் கண்டி அரசன், தீர்க்க சுமங்கலி, மாணிக்கப்பரலில் இடம்பெற்ற இவரது பாக்கள் இலங்கையின் எட்டுத் திக்குகளிலும் ஒலித்துக் கொண்டிருக்கின் றன. இவை தவிர இவரால் பாடப்பட்ட ஞான சவுந்தரி நாடகப்பாடல் இன்றும் பலரது நாவில் களிநடனம் புரிகின்றன. இவரது சேவைகளையும் கவிச்சிறப்புக்களையும் பாராட்டி பாசையூர் வளர்பிறை நாடக மன்றத்தினர் இவருக்கு“இன்சுவை கவிமணி” பட்டத்தை வழங்கி கௌரவப்படுத்தினர். இவரது கலைப்பயணத்தை இவரது பேரனான அஸ்செனிக் பிராங்கிளின் ரூஸ்வேல்ட் தொடர்ந்து செய்து வருகின்றார். இவர் பிரதேச, மாவட்ட, மாகாண மட்ட ரீதியில் இளங்கலைஞருக்கான விருதைப் பெற்று தனது பூட்டன், பாட்டனாரின் கலை யினை அழியாது பாதுகாத்து வருகின்ற இவரும் சிறந்த நாடகக்கலைஞர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமரர் "வித்தாரக்கவி" வயித்தி கபிரியேல் (தொம்மையார்)**

அமரர் வித்தாரக்கவி வயித்தி கபிரியேல் (தொம்மையார்) என்னும் இப்புலவர் அகுஸ்தி வயித்திக்கும் றோசம்மாவுக்கும் மகனாக 1887.07.20 அன்று பாசையூர், யாழ்ப்பாணம் என்னும் கிராமத்தில் பிறந்தார். பாசையூர் கிராமத்திலேயே உள்ள பாட சாலையில் கல்வி கற்றுக்கொண்டார். இவரது தந்தையிடமிருந்து ஆயுள்வேத வைத்தியக் கலையையும், மாந்தீரிகக் கலையையும் கற்று பிரகாசித்தார்.

சூடாமணி, பிங்கலம் என்ற நிகண்டு வகைகளையும், இராமாயணம், மகாபார தம், நளவெண்பா போன்ற காவிய நூல்க ளையும் கற்றறிந்த இப்புலவர், 1939 இல் சவேரியார் கூத்தை முதன் முதலில் எழுதி னார். பின் லெயோன், கிறிஸ்தீன கன்னி, புனிதவதி ஆகிய கூத்துக்களையும் சமய உள்ளீடுகளுடன் சேர்த்து எழுதினார். கூத்துக்களோடு சமூக நாடகங்களையும் எழுதினார். 1941 இல் எழுதப்பட்ட புனிதவதி கூத்து 1948 இல் பாசையூரில் மேடையேற்றப் பட்டது. இக்கூத்தை பொறுப்பெடுத்து வயித்தி எசேக்கியேல் முன்னின்று நடத்தி முடித்து பலரின் பாராட்டைப் பெற்றார். சமூகத்துக்கு தேவையான கருத்தை பாடலில் சொல்லும் திறமை இப்புலவரின் சிறப்பாகும். இவரது கூத்துக்கள் பல இடங்களில் பல தடவைகள் மேடையேற்றப்பட்டன. குறிப்பாக பாசையூர், மண்ணித்தலை ஆகிய இடங்களில் அதிகம் மேடையேற்றப்பட்டன. அதில் அண்ணாவி யார் ஞானப்பு மடுத்தீஸ், அண்ணாவியார் தீயோ இராசேந்திரம் என்பவர்களாலும் நெறியாள்கை செய்யப்பட்டு மேடையேற் றப்பட்டது. இத்தகைய சிறப்புமிக்க இவர் 1951.06.29 இல் மரணமடைந்தார்

**அமரர் ஞானப்பிரகாசம் லோறன்ஸ்**

அமரர் ஞானப்பிரகாசம் லோறன்ஸ் என அழைக்கப்படும் இவர் வீரன் என்னும் செல்லப் பெயரால் அறியப்படுகின்றார். இவர் ஞானப்பிரகாசம் பிலோமினாவுக்கு மகனாக 1956.01.23 இல் பாசையூரில் பிறந்தார். பரம்பரை வழியாக கலையானது கடத்தப்பட்டு அதன்மூலம் கலையில் ஈர்க்கப்பட்டார். இவரது தந்தை ஞானப்பிர காசம் ஒரு புல்லாங்குழல் இசைக்கருவி வாசிக்கும் இசைக் கலைஞன் ஆவார். அதில் சிறப்பு என்னவெனில் எல்லோரும் வாயால் புல்லாங்குழல் வாசித்தால் இவரது தந்தை மூக்கால் வாசிப்பார். எல்லோரும் வாயைப் பிளந்து அவர் இசையை மெய் மறந்து ரசிப்பர். இவ்வழியில் லோறன்ஸ் அவர்கள் இசைக்கருவிகளை வாசிப்பதில் ஆர்வம் இல்லாவிட்டாலும் நாடகம், நாட்டுக்கூத்து ஆகியவற்றில் விரும்பி நுழைந்தார். இவர் 1976 இல் "பூதத்தம்பி" கூத்தில் முதன் முதலில் நடிகனாக அறிமுக மானார். அமரர் செல்லக்குமார் சின்னக் குமாரன் நடித்த பூதத்தம்பி (1976) நாடக மானது பாசையூரில் மேடையேற்றப்பட்டு மக்களின் பாராட்டைப் பெற்றதால் அதன் பின்னணியில் இவர் தனது கலைப் பயணத்தை தொடங்கினார்.

கட்டப்பொம்மன் (1988), பண்டார வன்னியன் (அரசன் 1989), ஞானசவுந்தரி (தர்மராசா 1990), புனிதவதி (அமைச்சர் 1992), அந்தோனியார் (தச்சன் மகன் 1993), முத்தா மாணிக்கமா (பொற்கொல்லன் 2003) தொடரும் வெற்றி உட்பட இன்னும் பல நாடகங்கள், நாட்டுக்கூத்துக்களில் நடித்து கலைக்குப் பெருமை சேர்த்தார். சினிமாப் பாடல்களையும் மிகவும் இரசிக்கும் வண்ணம் இனிமை ததும்பப் பாடுவார். இவர் வீட்டுக்கு யாராவது சென்றால் வீட்டில் தேனீர் அருந்துகிறார்களோ இல்லையோ இவரது பாடலைக் கேட்காமல் போகமாட்டார்கள். இவரது மனைவி லோறன்ஸ் ராகினி சிறு வயதில் அண்ணாவியார் மனுவல் பாக்கிய ராசாத்தி அன்னம்மாவின் "திருநீல கண்டன்" நாடகத்தில் நடித்து சிறப்பைப் பெற்றவர். மகள் ஆன் லியூலின் சிறந்த நாடக நடிகை மற்றும் பாடகி ஆவார். லோறன்ஸ் அகிலன் அவரது கடைசி மகன். கலைத்துறையில் நாடகங்களில் ஆர்வம் இல்லாவிட்டாலும் தொலைக்காட்சி நிகழ்வுகளில் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களால் தனக்கென ஒரு ரசிகர் பட்டாளத்தையே கொண்டுள்ளார் என்பது மறுப்பதற்கில்லை. கலைப்பணியில் நல்ல எடுத்துக்காட்டாக திகழ்ந்த லோறன்ஸ் விபத்துக் காரணமாக 2014ஆம் ஆண்டில் மரண மடைந்தார். இவரது சகோதரர் அமரர் ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை சிறந்த கூத்து மற்றும் நாடகக்கலைஞர் ஆவார். இவரது மற்றைய சகோதரர் ஞானப்பிரகாசம் யுவராஜா இன்றுவரை கலைத்துறையில் ஈடுபட்டு வருகின்றார்.

**அமரர்சூசைப்பிள்ளைபிலிப் பாலன்**

அமரர் சூசைப்பிள்ளை பிலிப் அல்லது பாலன் என அழைக்கப்படும் இவர், 1927.07.27 இல் பாசையூரில் பிறந்தார். திடமான உடலமைப்புக் கொண்ட இவர் தனது கம்பீரமான குரலாலும் அங்க அசைவாலும் பார்வையாளர்களைக் கவரும் தன்மை உடையவர். இளமைப் பருவத்திலேயே நாடகத்தின் இனிமையால் கவரப்பட்ட இவர், 1948 இக்குப் பின்னர் புதுமுகமாக கலையில் அறிமுகமானார். புதுமுக நடிகன் என்று சொல்ல முடியாத அளவுக்கு அவரது திறமை இருந்தது. பலரும் வியந்து பாராட்டினர். பூதத்தம்பி, அந்தோனியார், கனகசபை போன்றன இவர் நடித்த நாடகங்களுள் பிரபல்யமாகப் பேசப்பட்டவை. இவற்றைவிட 1952 இல் பாசையூரில் அரங்கேறிய கற்பகமாலா கூத்தில் நரசிம்மனாக நடித்துள்ளார். 1953 இல் பாசையூரில் அரங்கேறிய செபஸ்ரியார் கூத்தில் பங்கிராஸ் எனும் கதாபாத்திரத்தில் இவர் நடித்து மக்கள் மனத்தில் இடம்பிடித்தார்.

இவரது பெற்றோர் சூசைப்பிள்ளை செல்லத்திரவியம். இவருக்கு மூன்று ஆண் பிள்ளைகள் உண்டு. கலைத்துறையில் இவரைப்போன்று ஆர்வம் இல்லை. இவரது மனைவி பெயர் லூர்த்து ஆவார். எனினும் கலைஞர்களை ஊக்கப்படுத்தும் நற்குணம் கொண்டவர்கள் இவரது பிள்ளைகள். பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளுக்கு இவரும் ஒரு குலவிளக்காகத் திகழ்கின்றார். இத்தகைய சிறப்புமிக்க கலைஞரான இவர் முதுமை காரணமாக மரணமடைந்தார்.

---

**உசாத்துணை**


- முு.சிங்கராயர், பாசையூரும் நாட்டுக்கூத்தும் பாசையூர் அபிவிருத்திக்குழு, பிரான்ஸ் 2009. பக்கம் 137 108 19 20 1-3
- யாழ்.பாடி, கலாசார மலர், யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் 2014 ( பக்கம் 107 156 160 155 77 1-3 )
- யூ.மேவிஸ் ஜீன்சியா,"யாழ்ப்பாண பாசையூர் பிரதேசமும் அதனுடன் இணைந்த நாட்டார் கலைகளும்", யாழ்.பாடி, கலாசார மலர் 6, யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் 2022


**நேர்காணல்கள்**

- பாஸ்ரன் ரமிலா, பாசையூர், யாழ்ப்பாணம்
- லோறன்ஸ் ராகினி, பாசையூர், யாழ்ப்பாணம்
- லோறன்ஸ் அகிலகுமார், பாசையூர், யாழ்ப்பாணம்
- அ.பிறாங்கிலின் ரூஸ்வேல்ட், பாசையூர், யாழ்ப்பாணம்
- ஞானப்பிரகாசம் யுவராசா பாசையூர், யாழ்ப்பாணம்
- மரியநாயகம் ஞானகீதன் பாசையூர், யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.ஸ்ரீ. நதிபரன்
யோகா போதனாசிரியர்,
நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்.



மானிட வாழ்க்கையை அர்த்தமுடையதாக்கும்

# யோகக்கலை உணர்த்தி நிற்கும் வாழ்வியற் கூறுகள்

இந்துமதத்தின் ஊற்றுக்கண்களாகவும் மனித வாழ்வியலை வளம்படுத்துகின்றன வாகவும் விளங்கும் இந்தியப்பெருங்கலை வடிவங்களுள் ஒன்றாகத்திகழும் யோகக் கலைக்கு காத்திரமான பங்குண்டு. மனிதப் பிறவியெடுத்த நாம், சாதாரண மனித நிலையில் வாழமுற்படாது கடைநிலையான விலங்குநிலையிலே வாழ்ந்து வருகிறோம். இவ்விருநிலைகளையும் தாண்டி உயர்ந்த நிலையாகிய தெய்வீக நிலைக்குயர்த்தும் புனிதத்தன்மை வாய்ந்த கலையாக யோகக் கலை மிளிர்கின்றது. மனிதர்களிடத்தில் இயல்பாகவே உள்ள மனித குணங்களுடன் கீழான மிருக குணங்களும் மேலான தெய்வீக குணங்களும் இரண்டறக் கலந்துள் ளன. ஒருவனிடத்தில் மனித குணங்களுடன் மிருக குணங்கள் மிகுகையில் அவன் அசுரத்தனமாக, மிருகங்கள் போல் நடந்து கொள்கிறான். அதேசமயம் தெய்வீக குணங்கள் அதிகமாகும் போது அவன் புனிதனாக உயர்ந்த வாழ்க்கையை வாழத் தலைப்படுகிறான். இக்கருத்தை வலியுறுத் துவதாகவே மனிதனுக்குள் இருக்கக்கூடிய தான முக்குணங்கள் பற்றி (ராஜசம்-மிருக குணம், தாமசம் -மனிதகுணம், சத்துவம்-தெய்வீககுணம்) இந்துமதம் எடுத்தியம்பு கின்றது. மனிதன் இயற்கையின் அங்கம் என்பதால், இயற்கைகூட முக்குணங்களா லானதும் ஆளப்படுவதுமாகும். மேற்கூறப் பட்ட முக்குணங்கள் மனிதனுக்கிருக்கும் குணங்களை மட்டும் குறிப்பதல்ல. அதற்கு மப்பால் பிரபஞ்சத்தின் பன்முகப்பட்ட படைப்புகள் தோன்றுவதற்கும் நிலை பெறுவதற்கும் அடிப்படையானவையாகும். இவற்றாலேயே கூர்ப்பும் நடைபெறுகிறது. கூர்ப்பு என்பது படைப்பும், அதுசார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியான விருத்தி நிலைகளும், ஆளுமையும், உடல், மனம், பிராணன் என்பவற்றின் சேர்க்கையுமாகும். இவற்றுக் கிடையிலான ஒருங்கிசைவற்ற தன்மைகள் ஏற்படுகையில், மனிதன் முக்குணங்களின் பிடியில் சிக்கி அல்லலுறுவதுடன் பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கும் இடர்களுக்கும் நோய்களுக்கும் முகங்கொடுக்கின்றான். யோகசாதனையே இவற்றின் பிடியிலிருந்து மனிதனை விடுவிக்கும் கருவியாக அமைகின்றது. எனவேதான், உயர்தரமான வாழ்க்கையை வாழ்வதற்கு உயர்தரமான கருவியொன்று தேவை. அதுவே யோகம் என்பதாக அமைகின்றது. இதன் பின்னணி யிலிருந்துதான் இந்துப்பண் பாட்டுப் பாரம்பரியங்களும் பொதுமைப்பாடுடைய நடத்தைசார் வாழ்வியல் விழுமியங்களும் எழுச்சிபெற்றன எனக் கொள்ளலாம்.

கால, தேச வர்த்தமானங்களுக்கு அப் பாற்பட்டு விளங்கும் இக்கலையின் சிறப்புக் கூறுகள் பற்றி நோக்குமுன், யோகம் என்ற விடயப்பரப்புப்பற்றி பூர்வாங்கமாக நோக்கு வோம். பொதுவாக யோகமானது ஆழ்ந்த பொருட்தத்துவத்தை எமக்கு வெளிப்படுத்தி நிற்கிறது. "யுஜ்"எனும் வினையடியினின்று பிறந்த இச்சொற்பதம் குறித்து நிற்கும் பொருளை நோக்கின், 'இணைத்தல்' அல்லது'ஒன்றுசேர்த்தல்'என்ற நேரடி அர்த் தம் கொண்டு, நமது உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்று முக்கிய பொருட்களையும் ஒன்றிணைத்து மனித வாழ்வியற் சமன்பாட் டிற்கு வித்திடும் அறிவியற்கலையாக விளங்குகிறது. இதனை இன்னொருவித மாகக் கூறும்போது ஜீவாத்மா, பரமாத்மாவு டன் இணைதலுக்கான ஒழுக்க நெறிகளை- வாழ்வியல் ரீதியான விடயங்களை போதிக் கும் துறை இதுவாகும். இறைவனால் மனிதனின் ஆன்ம ஈடேற்றம் கருதி அளிக் கப்பெற்ற அரும்பெரும் பொக்கிசமான இக்கலையைச் சூத்திரவடிவில் முதலில் தொகுத்தளித்த பெருமை யோகி "பதஞ்சலி" மாமுனிவரையே சாரும். இவரே பின்னாளில் யோகத்தின் தந்தையாக போற்றிச் சிறப்பிக்கப்படுகிறார்.

சித்தத்தை செம்மைப்படுத்தும் போதே வாழ்க்கையானது சிறக்கின்றது- பூரணத்துவ மடைகின்றது. வாழ்க்கை மேம்பாடடை வதற்கு இடைவிடாத யோகப்பயிற்சிகளே பெரிதும் உதவுகின்றன என இந்துசமய நூல்களில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளன. "சித்தமலம் அறுவித்து சிவமாக்கியெனை யாண்ட அத்தன்.."என்ற திருவாசக அடிகள் மூலம் மாணிக்கவாசகர், சித்தத்தை செம்மைப்படுத்தும் போது சிவப்பேற்றை அடைய முடியும் என்கிறார். மேலும் "சித்தவிருத்தி நிரோதக..."என்பது யோகத் தின் அடிப்படைக் கருத்தியல். இதனை யோகக்கலையின் தந்தையாக விளங்கும் பதஞ்சலி மாமுனிவர் கூட தனது யோக சூத்திரத்தில் வலியுறுத்திக் கூறுகிறார்.

யோகம் சித்த விருத்திகளை அழிக்கும் தன்மை வாய்ந்தது. அதாவது சித்தம் என்பது எண்ணங்களின் / சிந்தனைகளின் ஒட்டு மொத்த இருப்பிடமாகும். இது பல நிலைக ளில் பலவாறு செயற்படும் தன்மையது. நான்-எனது எனும் அகங்கார, மமகாரங் களும் சேர்ந்தியங்கும் முனைப்புறு தன் மையே சித்தமாகும். இதுவே மனித வாழ் வைச் சீர்ப்படுத்தவும் சீரழிக்கவும் காரண மாகிறது. துன்பம், விரக்தி, வெறுப்பு, கவலை போன்ற பல விரும்பத்தகாத எதிர்மறையான விளைவுகளுக்கும் மகிழ்வு, இன்பம், வெற்றி, களிப்பு முதலிய பல விரும்பப்படுகின்ற நேர்மறையான சம்பவங்களுக்கெல்லாம் காரணம் மன மாகும். எனவே முதலில் ஐம்புலன்களிட மிருந்தும் மனதை பிரித்தெடுத்து எதுவும் நிலையற்றது என்ற யதார்த்தத்தை உணர்ந்து மெய்யெது? பொய்யெது? என் றாய்ந்துணரும் வேளை மனதை எண்ணங் களற்றதாக்குவது மிக எளிது. எனவே நமது மனதில் பதிந்துள்ள எண்ணங்களின் முழுத் தொகுதிகளின் ஒட்டுமொத்த எழுச்சி நிலைகளே சித்த விருத்தியாகும். அவற்றை மனதினின்றும் அழித்தலே "சித்த விருத்தி நிரோதக" என்பதன் பொருள் விளக்கமாகும். இதிலிருந்து யோகக்கலையானது சித்தத்தை செம்மைப்படுத்துவதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு வாழ்வியல் அம்சங்களையும் தத்துவங்களையும் தன்னகத்தேகொண்டு விளங்குகின்றதெனலாம்.

யோகமானது, கோட்பாட்டு ரீதியில் - பிரயோக அடிப்படையில் நான்கு பெரும் பகுதிகளாக பிரித்து நோக்கப்படுகின்றது. அவையாவன கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம், இராஜயோகம் என்பனவாகும். இவற்றைப்பிரயோகிக்கும் வழிமுறைகள் வெவ்வேறானவையாகினும் அவற்றின் இறுதி இலக்கு ஒன்றே. அதாவது உண்மைத் தன்மையை- பூரணத்துவத்தை அறிந்து கொள்வதேயாகும். இங்கு உடலையும் மனதினையும் மையப்படுத்திய யோகத்தை இராஜயோக முறைக்குள்ளடக்கப்படுகிறது. யோகக்கலையின் தந்தையாக விளங்குகின்ற பதஞ்சலி மாமுனிவரின் 196 யோக சூத்திரங்களும் இராஜ யோகமுறைக்குள்ளேயே வருகின்றது. பொதுவாக நோக்குமிடத்து சித்தர்கள், யோகிகள் கடைப்பிடித்த யோகமுறையானது பதஞ்சலிமா முனிவரால் யாக்கப்பெற்ற இராஜ யோக முறையை அடியொற்றியதாகும். இஃது உடல், மனம், ஆன்மா ஆகியவற்றை ஒன்றிணைக்கும் கருவியாக தொழிற்படுகின்றது. அதாவது, ஆன்மா விடுதலையடைந்து பேரின்ப நிலையை எய்த வேண்டும் என்பதே இதன் பிரதான குறிக்கோளாகும். இது மனிதனது உடல், உள, ஆத்மிக நலன்களை மேம்படுத்துவதில் தொடங்கி இறுதி இலட்சியமான மோட்ச நிலையையடைதலீறான வாழ்வியற் கோட்பாடுகளை படிமுறையாக விளக்குகின்றது.

இராஜயோகம் வலியுறுத்துகின்ற முக்கிய விடயப்பரப்பாக அட்டாங்க யோகம் எனும் எட்டு வகையான வாழ்வியற் படிமுறைகள் காணப்படுகிறன. இது பற்றிய விளக்கத்தைச் மிகச் சுருக்கமாக நோக்கும் போது,

1. இயமம்- தீயவற்றை விட்டொழித்தல். (கொல்லாமை,பொய் கூறாமை, களவு செய்யாமை,காமமின்மை)
2. நியமம்- நன்றாற்றல். (பிறருக்கு உதவுதல், பரோபகாரம், தூய்மையுடைமை,வாய்மை,தவம் புரிதல்)
3. ஆசனம் - இருக்கை நிலை. (உடல் நன் நிலையடைதலுக்கான உடல் சார்ந்த பயிற்சி முறைகளைச் செய்தல்)
4. பிராணாயாமம்- சுவாசத்தை சீராக்கம் செய்தல். (பிராணனை தன் வயப் படுத்தி அடக்கியாளும் கலை)
5. பிரத்தியாகாரம்- ஐம்புலன்களையும் புறவுலகப் பொருட்களிலிருந்து விடுவித்து அகமுகமாகத் திருப்புதல்.
6. தாரணை- மனதை ஒருநிலைப்படுத்தல்.
7. தியானம்- மனதை கட்டுப்படுத்தி எடுத்துக்கொண்ட பொருள்மீதான உண்மைத் தன்மையை ஆழ்ந்து சிந்தித்தல், தெளிதல் நிலைதிரியா மனதினைப் பெறல்.
8. சமாதி- உணர்வொடுங்கிய நிலை. அதாவது இறைவனுக்குச் சமமான (மோட்ச) நிலை. என்பதாக யோகத்தின் எட்டு விதமான படிமுறைகளும் அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடற்பாலது.

அண்டத்திலிருப்பதுதான் பிண்டத்திலும் இருக்கிறது எனும் கருத்துருவே சித்தர்கள் வகுத்த யோகநெறியின் மையக் கருத்தியலாக அமைகிறது. அதாவது அண்டம் என்றால் உலகம் எனவும் பிண்டம் என்பது நமது உடல் எனவும் கொண்டு,

*மனிதன்
முக்குணங்களின்
பிடியில் சிக்கி
அல்லலுறுவதுடன்
பல்வேறு விதமான
பிரச்சினைகளுக்கும்
இடர்களுக் கும்
நோய்களுக்கும்
முகங்கொடுக்கின்
றான்.
யோகசாதனையே
இவற்றின் பிடியி
லிருந்து மனிதனை
விடுவிக்கும் கருவியாக
அமைகின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டமானது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களின் சேர்க்கைகளாலானது. இதுபோலவே உடலிலும் ஐம்பூதங்களின் ஆதிக்கமானது நிலைபெற்றிருக்கிறது. இங்கு நிலம் - பரு உடல், நீர்- இரத்தம் மற்றும் சீல் போன்ற திரவம், தீ- உடல் வெப்பநிலை, காற்று- பிராணன் முதலிய தச வாயுக்கள், ஆகாயம் - மனம் போன்றவற்றைக் குறிப்பதாக அறியப்படுகிறது. இந்தப் பருவுடலானது மண்ணிலிருந்து தோன்றி உயிரடங்கப்பெறுகையில் ஈற்றில் மீண்டும் மண்ணுக்கே திரும்புகிறது. அதனால்தான் அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் இருக்கிறது என யோகிகள் குறிப்பிடுகின்றனர். இதன் மூலம் மனித வாழ்வியல் இயற்கையுடன் பின்னப்பட்டிருக்கிறது என்ற விடயம் இழையோடியுள்ளது. இருப்பினும் தற்கால நவீனத்துவமானசூழலில் இயற்கையினின்றும் வழுவியதான- இயற்கையை விரோதிக்கும் வாழ்க்கைமுறையை வாழத் தலைப்பட்டதனாலேயே நமது வாழ்க்கையில் இத்துணை இடர்ப்பாடுகளையும் பிரச்சினைகளையும் சந்திக்க நேரிடுகிறது. இங்கு யோகமானது இயற்கையை ஆராதிக்கின்றது என்பதற்குச் சான்றாக 'சூரிய நமஸ்க்காரம்' என்ற இயற்கைக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற பயிற்சிமுறையைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

தற்போது வியாபார மாயைக்குள் அமிழ்ந்து வரும் இக்கலையை மீட்டெடுக்க வேண்டியது அவசியமாகும். அதற்காக யோகத்துறைசார் நிபுணர்களைக்கொண்டு உலக நாடுகளில் யோகப் பயிற்சி மையங்களை ஸ்தாபித்து திறமையும் ஆர்வமும் உள்ளவர்களுக்கு இலவசமாக பயிற்சி வழங்கி அவர்களைக் கொண்டு கிராமங்கள் தோறும் மக்களுக்கு பயிற்சியளிக்கக் கூடிய வகையில் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் தற்போது புனிதத்துவமான இக்கலையை பலர் வியாபாரமாக்கியும் மலினப்படுத்தியும் வருவது வேதனையளிக்கின்றது. பணமீட்டலுக்காகவும் புகழடைவதற்காகவும் இக்கலையை பயன்படுத்தி வருகின்றனர். அதுமாத்திரமன்றி பாரம்பரிய யோக முறைகளை புறம்தள்ளியும் தமது விருப்பிற்கேற்ப நவீன பயிற்சி முறைகளைப் புகுத்தியும் மக்களிடமிருந்து கச்சிதமாக பணங்கறக்கும் கைங்கரியங்களிலும் ஈடுபடுவது ஏற்புடையதல்ல. எனவே இக்கலையை களங்கப்படுத்துவோரிடமிருந்து நாம் விழிப்புடனிருத்தல் வேண்டும். மேலும் வருடந்தோறும் யோக ஆராய்ச்சி மாநாடுகளை நடத்துவதற்குரிய முன்னெடுப்புகளை மேற்கெள்ள வேண்டும். அதற்கு துறைசார் வல்லுநர்களைக் அழைத்து நடத்தி, அவர்களது சேவைகளுக்கான கௌரவங்கள் வழங்கப்பட வேண்டும். அத்துடன் இம் மாநாடுகளின் போது பொருத்தமான ஆய்வுப்பரப்புகள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிப்பதற்குரிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து அவ்வாய்வுக்கட்டுரைகளை தொகுத்து கனதியான வகையில் மாநாட்டு நினைவாக ஆய்வுமலராக வெளிக்கொணர்வதற்குரிய எத்தனங்களை ஏற்படுத்த வேண்டும்.

அடுத்த விடயமாக, பாடசாலைகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை யோகத்தை ஒரு பாடமாக போதிப்பதற்கான நிலைமைகளை உருவாக்க வேண்டும். இதற்கமைய இலங்கை போன்ற நாடுகளில் கல்விச்சாலைகளில் இத்துறைக்கு அதிகளவு மாணவர்களை உள்வாங்குவதில் முனைப்புக்காட்ட வேண்டியது அவசியமாகும். இதன் மூலம் இக்கலை பற்றியதான பிரக்ஞையை இளம் சந்ததிக்கு கடத்த முடியும். இதனால் சமூக, பொருளாதார, பண்பாட்டு ரீதியில் காத்திரமான மாற்றங்களை ஏற்படுத்த முடியும். வெறுமனே உடற்பயிற்சி முறையாவே பார்க்கப்படும் இக்காலத்தில் அதனை உள்ளார்ந்த ரீதியாக, தத்துவ நோக்கில் அணுகப்பட வேண்டியது அவசியமாகும். இக்கலை உணர்த்தும் வாழ்வியல் தத்துவங்களையும் நடைமுறைகளையும் அனைவரும் அறிந்து கொள்வதற்கான சூழமைவைத் தோற்றுவிப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். இதனொரு கட்டமாகவே கல்விச்சாலைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பன்முகத்தன்மை வாய்ந்த ஆரோக்கியம் என்ற கருத்தியலின் அடிப்படையாக விளங்கும் இக்கலையை தற்கால விஞ்ஞான மருத்துவ முறைக்கு இணையாக நிலைபெறச்செய்து,மக்கள் முன் கொண்டு செல்வதற்கு துறைசார்ந்த வர்கள் ஈடுபட்டுழைக்க வேண்டியது அவசியமாகும்.*

யோகக்கலை வல்லுனர்களைக் கொண்டு பயிற்சி வழங்கி தரம் வாய்ந்த யோகப் பயிற்சியாளர்களை உருவாக்க முயல வேண்டும். எனவே பண்டைய மருத்துவ முறைகளுள் செலவில்லாத, முதன்மை யான கலையாக திகழும் இக்கலை மீதான ஆர்வங்கள் தேடல்கள் நாளுக்குநாள் அதி கரித்துவரும் நிலையில் அதன் மகத்துவமும் உயர்வடைந்து வருவதனை காணகூடிய தாக உள்ளது. ஒட்டுமொத்தமான அணுகு முறையில் இதனை நோக்கின் தற்கால அறிவிலுக்கே சவால் விடக்கூடியளவிற்கு ஏராளமான வியக்கத்தக்க வாழ்வியல் அம்சங்களை, பயிற்சி நுட்பங்களை, நோய் குணப்படுத்தும் தன்மையை பயன்பாட்டு ரீதியிலும் தொழிற்பாட்டு ரீதியிலும் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றமை விசேட அம்சமாகும். பன்முகத்தன்மை வாய்ந்த ஆரோக்கியம் என்ற கருத்தியலின் அடிப்படையாக விளங்கும் இக்கலையை தற்கால விஞ்ஞான மருத்துவ முறைக்கு இணையாக நிலைபெறச்செய்து,மக்கள் முன் கொண்டு செல்வதற்கு துறைசார்ந்த வர்கள் ஈடுபட்டுழைக்க வேண்டியது அவசிய மாகும்.

மனித வாழ்வியலின் பன்முகத்தளத்தில் ஒப்புயர்வற்றதாக விளங்கும் இக்கலையின் மகத்துவத்தை தற்காலத்தில் சர்வதேசம் நன்குணர்ந்திருக்கின்றது என்பதனை நிதர்சனமாக்குவதாக உலகமக்களால் இன, மத, பேதம் கடந்து அனுசரிக்கப்பட்டு வருகின்ற சர்வதேச யோகா தினத்தைக் குறிப்பிடலாம். சமகாலத்தில் மேலைத் தேய நாடுகளைப்பொறுத்தவரையில் யோகக்கலையானது பரவலாக்கம் பெற்று வருகின்றமையைக்காணலாம். ஆரம்பக் கல்வி நிறுவனங்களிலிருந்து உயர் பல்கலைக்கழகங்கள்வரை இக்கலைக்கு உயரியகௌரவம் வழங்கப்பட்டிருப்பது- வழங்கப்பட்டுவருவது இக்கலையின் பயனு றுதித்தன்மையை - சிறப்பினைப் பறைசாற்றி நிற்கிறது. தற்காலத்தில் உலகளாவிய ரீதியாக யோகப்பயிற்சி வழங்கும் நிலையங் களின் எண்ணிக்கையும் பெருகி வருகின்ற மையும் அதனை கற்றுக்கொள்வதற்கான மக்கள் காட்டும் அதீத ஈடுபாடுகளும் ஆர்வங்களும் அதிகரித்து வருகின்றமையும் இக்கலைமீதான மக்களின் பற்றுறுதியை வெளிப்படுத்துகின்றது. காலமாற்றத்தால் மக்களின் நாளாந்த வாழ்வியல் கூறுகளி லும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்ற நிலையில் இம்மாற்றங்களின் விளைவினால் அவர்களின் உடல், உள, சமூக, ஆன்மிக ரீதியிலான நிலைகளிலும் எதிர்மறையான தாக்கங்களும் முனைப்புற்று விளங்கு கின்றன. நவீன மருத்துவ விஞ்ஞானமானது வளர்ச்சியடைந்து உச்சம் தொட்டு நின்றாலும் அதற்கு ஈடுகொடுக்க முடியாத ளவிற்கும் மனித அரோக்கியத்திற்கு வேட்டுவைக்கும் அளவிற்கும் உடல், உளரீதியிலான நோய்களின் தாக்கங்களும் பல்வேறு வடிவங்களில் வேகமெடுத்து வருவதனையும் காணலாம். இவற்றுக்கான ஒட்டுமொத்த அணுகுமுறையாக - தீர்வாக நமது அன்றாடவாழ்வியல் நடவடிக்கை களில் ஒன்றாக, யோகப்பயிற்சி முறை களைக் கைக்கொண்டால், எமது எதிர்கால வாழ்வு பிரகாசமானதாக மாறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எனவே, இத்தகு மகத்துவம் மிக்க, மிகப்புராதன காலத்துக் கலையான யோகக் கலையினை இன்றள விலும் புனிதங்கெடாமல் பாதுகாத்து எதிர் கால தலைமுறைக்கும் கொண்டுசெல்ல வேண்டிய வரலாற்றுக்கடமையும் பொறுப் பும் நமக்கிருக்கின்றது என்பதனை நாம் நன்குணர்ந்து செயற்பட வேண்டும். இதனை நாம் செய்யத்தவறுவோமேயாக இருந்தால் மிகப்பெரும் வரலாற்றுத் தவறை இழைத்தவர்களாவோம் என்பது சர்வ நிச்சயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சைவப்புலவர் கு.றஜீபன்** M.A
நிறைவேற்றுப்பணிப்பாளர்
சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம்
யாழ்ப்பாணம்



# இந்து நிர்வாகவியல் கட்டமைப்பு

இந்து நிர்வாகவியல் என்பது இந்து சமயத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரு நிர்வாகவியலாகும். உலக மனித நாகரீகத்தின் வளர்ச்சி இன்று பல கட்டங்களைத் தாண்டி முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தாலும், அந்த மனித நாகரீகத்தின் அடித்தளம் என்பது பண்பாடு, சமயம் எனும் இரண்டு தளங்களின் மேலேயே கட்டமைக்கப்படுகின்றது. இன்றைய நவீனத்துவ உலக ஒழுங்கு புதியபுதிய கோட்பாட்டியல்களை தோற்றுவித்திருந்தாலும் அந்த கோட்பாட்டியல்களின் தோற்றுவாயாக பண்பாடும், சமயமுமே மிளிர்கின்றது. நாகரீகம் காணத வேட்டுவ நிலையில் இருந்தும் தனிமனித வாழ்வியல் முறையில் இருந்தும் என்று மனித இனம் குழுக்களாக வாழத் தொடங்கினானோ அன்றில் இருந்தே நிர்வாகமும் முகாமைத்துவமும் உருவாகியது. தனிமனித வாழ்வியலில் இருந்து குழுமுறை வாழ்வியலுக்கான மனிதனின் பிரவேசமே இதனை தோற்றுவித்திருக்கின்றது. குழுமுறை வாழ்வியல் என்பது ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட வாழ்வியல் முறையாகும். அங்கு ஒழுங்குமுறை என்பது சீராக பேணப்பட்டால் அன்றி குழுமுறை வாழ்வியல் தொடர்ந்திருக்க வாய்ப்பில்லை.

வேட்டுவ வாழ்வியல் என்பது வன்முறை சார்ந்த வாழ்வியலாகும் வலியது வாழும் என்ற கோட்பாட்டியலை பிரதானமாக கொண்ட ஒரு வாழ்வியல் முறையாகும் இந்த வாழ்வியல் முறையில் ஒழுங்கு முறைகளுக்கோ நாகரீகத்திற்கோ இடமில்லை. இந்த கட்டமைப்பியலைத் தாண்டிய ஒரு மாற்றம் தான் குழுமுறைச் சமூதாயத்தின் உருவாக்கமாகும். இங்கு குழுமுறைச் சமூதாயத்தின் உருவாக்கம் புரிந்துணர்வின் அடிப்படையிலும் பயத்தின் அடிப்படையிலும் நம்பிக்கைகளின் அடிப்படையிலுமே கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த கட்டமைப்பியல் உருவாவதற்கு பிரதான காரணம் இயற்கை மீது இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றும் பயமுமே. இயற்கைச் சீற்றத்தில் இருந்து மனிதன் தன்னை பாதுகாத்துக் கொள்ளுவதற்கு அவனுக்குத் துணை தேவைப்பட்டிருக்கின்றது. அந்த துணை யின் சேர்மானத்தில் இருந்துதான் குழு முறை உருவாக்கம் மனித நாகரீகத்தில் தோற்றம் பெறுகின்றது.

குழுக்களின் உருவாக்கம் தொடர்ந்து நிலைபெறுவதற்கு அங்கு ஒழுங்கு முறை கள் அல்லது கீழ்படிதல் முறை என்பது மனிதனுக்கு தேவைப்பட்ட போதுதான் மத மும், பண்பாடும் சடங்குகளும் அவற்றுக் குள் நுழைகின்றது. இரு வேறுபட்ட சிந்த னைகளைக் கொண்ட மனிதர்களை இணைப் பதற்கான ஒரு இணைப்புசத்தி என்பது தேவைப்பட்டிருக்கின்றது. அந்த இணைப்பு சக்தியாக தொழிற்பட்டவைகள்தான் சடங்கு களும் இயற்கை வழிபாட்டு முறைகளும். அந்த வழிபாட்டு முறைகளை ஒருவர் முன் னின்று மேற்கொள்ள அதில் கலந்து கொண்டவர்களாகவே ஏனைய மனிதர்கள் இருந்திருக்கின்றார்கள். எனவே வழிபாட் டினை அல்லது சடங்கினை ஆற்றுபவர் சமூதாயத்தில் கவனிக்கத்தகவராக மாற்றம் பெற்றிருக்கின்றார். நாளடைவில் அவரது சடங்குமுறைகளை ஏற்றுக் கொண்டவர்கள் அவரை தொடர்ந்து அத்தகைய சடங்கினை மேற்கொள்வதற்கு அங்கீகரித்தவர்களாக மாறிய போதுதான் சமூதாயத்தில் சடங்கு நடத்துபவர் முதன்மையாளராக கருதப்படு கின்றார். வேட்டைத்தொழிலில் அலைந்து திரிந்த மனிதனுக்கு அவன் நிலையாக வாழுதற்கு ஏற்ற பாதுகாப்பான இடம் கிடைத்ததில் இருந்து இத்தகைய மாற்றம் குழுமுறைச் சமூதாயத்தில் ஏற்படலாயிற்று. இங்கு தனிமனித வாழ்வியல் முறையில் இருந்து மனிதன் சமூகம் பற்றிய ஒரு புரிதலோடு வாழத்தொடங்கும் போது அவனது வாழ்கையின் நடைமுறைகளுக் காக ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு வாழ்வியல் ஏற்பட்டபோது அங்கு நிர்வாகவியல் ஏற்படு கின்றது. அந்த நிர்வாகத்தினை கொண்டு நடத்துவதற்குரிய ஒரு முகாமை ஏற்படு கின்றது.

இயற்கை நெறிப்பட்ட வழிபாட்டு சடங்கு முறையில் இருந்து சடங்கினை தொடர்ந்து நடத்தியவர் அந்த குழுக்களின் தலைவ ராக உருமாறுகின்றார். இங்குதான் இரண்டு வகையான கட்டமைப்புக்கள் உரு வாகின்றது. சடங்கினை நடத்துபவர் தலைவராக உள்ள குழுக்களும். சடங்கினை நடத்துபவரை விட இன்னொருவர் தலை வராக இருக்கும் குழச்சமுதாய அமைப்பும் காணப்பட்டுள்ளது. சடங்கினை நடத்துபவர் சடங்கு வழிபாட்டுமுறைக்கு தலைவராவர். குழுக்களை வழிநடத்திச் செல்பவர் குழுக்க ளின் தலைவராகவும் பின்னாட்களின் உருவாகிறார்கள்.

இங்கு சடங்கு வழிபாட்டு முறைகள் சமயம் சார்ந்த பொறிமுறையாக அல்லது சமயம் சார்ந்த கட்டமைப்பியலாக உருவா னதில் இருந்துதான் அந்த கட்டமைப்பி யலைத் தொடர்ந்து பேணுதற்காக உருவாக் கப்பட்ட பொறிமுறையாகவே நிர்வாகவியல் என்பது சமூத்தில் உருவாகி இருக்கின்றது. இந்த நிர்வாக முறைமையினை சமூகம் ஏற்றுக் கொள்ளவேண்டும் எனும் கட்டடாய நியதி ஒன்று பின்பற்றப்பட்டதனால்தான் அங்கு ஒரு முகாமைத்துவ கட்டமைப்பும் பேணப்பட்டிருக்கின்றது. சமூகத்தில் தலை வன் என்பவனின் தோற்றதில் இருந்தே அந்த தலைவனுக்கு ஏனையவர்கள் கீழ்ப்படிதல் வேண்டும் என்ற நியதி ஏற்பட்டிருக் கின்றது. வேறுபாடுகள் அற்று சரிசமமாக வாழ்ந்த மனித சமூகத்தில் இத்தகைய ஒரு மாற்றம் தான் அங்கு ஒரு முகாமைத்துவ மரபினை பேணுவதன் அவசியத்தினை உருவாக்கி இருந்திருக்கின்றது. தலைவன், தலைவ னுக்கு அடுத்த நிலையில் உள்ளவர் கள் என்ற கட்டமைப்பு ஒவ்வொன்றாக மேலி ருந்து கீழாக இறங்கி வந்த ஒரு சமூகக்கட்டமைப்பின் முகாமையினை நிர்வகிப்பதற்கென ஒருவாக் கப்பட்ட ஒழுங்கு முறைகள் தான் நிர்வாக வியல் ஆகும். இந்த நிர்வாக வியல் கோட் பாடுகள் சமயம் சார்ந்து குறிப்பாக இந்து சமயம் சார்ந்த ஒரு நிர்வாக கோட் பாட்டிய லாக உருவாகி இருப்பதனால்தான் இந்து நிர்வாகவியல் என்ற சொற்பதம் குறிக்கின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து நிர்வாயவியல் என்பது ஏலவே குறிப்பிட்டது போன்று இந்து சமயத்தினை அப்படையாகக் கொண்ட ஒரு நிர்வாகவியல் கோட்பாடாகும். இந்த நிர்வாகவியலானது சமயம் சார்ந்த நிர்வாகவியலாகவும், சமூகம் சார்ந்த நிர்வாகவியலாகவும் இரண்டாக நோக்கப்படுகின்றது. இங்கு எத்தகைய நிர்வாக பிரிவாக இருந்தாலும் அந்த பிரிவு களில் எல்லாம் தலைவனாக இறைவனையே கருதும் நிலையினையே இந்து நிர்வாக வியல் குறிப்பிடுகின்றது. இந்து நிர்வாகவிய லின் தலைப்பீடமாக அல்லது தலைமைப் பாத்திரமாக இறைவனே விளங்குகின்றான். இறைவன் என்பவன் மனிதனுக்கு மனித இனத்தில் இருக்கின்ற பல்வேறு குழுக்க ளுக்கும் பொதுவானவனாக இருக்கின்றான். இதனால் பண்டைய சமூகம் எல்லா மனித இனக்குழுக்களாலும் ஏற்றுக் கொள்ளப் படுகின்ற நிர்வாகத்தலைமையினை இறைவன் எனும் பொதுமையானவனுக்கு அல்லது பொதுப் பெயருக்கு வழங்கி இருக்கின்றது.

இறைவனை தலைமை அதிதியாகக் கொண்ட ஒரு நிர்வாக ஒழுங்கியலை கட்ட மைத்தாக விளங்கும் இந்து சமயம் தனக் கென ஒரு தனித்துவமான நிர்வாக கட்டமைப்பியலையும் அதன் கோட்பாட்டி யல்களையும் வரையறை செய்திருக் கின்றது. இதனை இந்துசமய நிர்வாக வரலாற்றுப் பகுதியில் விரிவாக அறிந்து கொள்ளலாம். எனவே இந்துசமய நிர்வாக வியல் என்பது சமூகத்தின் ஒழுங்கமைக்கப் பட்ட சமயம் சார்ந்த நிர்வாக கட்டமைப் பியலையே குறிப்பிடுகின்றது.

அடுத்து இந்துசமய நிர்வாக கட்டமைப்பு எவ்வாறு இருந்திருக்கின்றது என்பதை நோக்கினால், ஏலவே குறிப்பிட்டுள்ளவாறு இந்து சமய நிர்வாகத்தின் தலைமையாள னாக இறைவே விளங்குகின்றான் இறைவனுக்குக் கீழேயே அனைத்துவகை யான நிர்வாக கட்டமைப்பினையும் இந்து நிர்வாகக் கட்டமைப்பியல் மேற்கொண்டி ருக்கின்றது.




**சமய நிர்வாகவியல்**

சமய நிர்வாகவியல் என்பது இந்து சமயத்தின் நிர்வாகவியலையே குறிப்பிடு கின்றது. இந்த சமய நிர்வாகவியலானது சமய ஒழுங்குமுறை நிர்வாகம் சமய நிர் வாகம் என இரண்டு பிரிவுகளில் காணப் படுகின்றது. சமயம் என்பது ஒரு வாழ்வியல் சார்ந்த நெறிமுறைகளை குறிப்பிடுவ தாகும். உலகில் உள்ள ஏனைய மதங்கள் எல்லாம் தத்துவத்தில் இருந்து தோன்றி தத்துவத்தின் அடிப்படையிலே மத கோட் பாடுகள் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்து சமயம் அல்லது சைவசமயம் என்பது மக்களின் வாழ்வியலில் இருந்து தோற்றம் பெற்ற ஒரு வாழ்வியல் நெறிக ளைக் கூறுகின்ற சமயமாக இருக்கின்ற காரணத்தினால்தான் அதனை சமயம் என்ற சொல்லாடலால் அழைக்கின்றோம். சமயம் தோன்றியதன் பின்னர் அந்த சமயக் கோட்பாடுகளை வரையறுப்பதற்காக பிற்காலத்திலேயே இந்துசமயத்திற்குரிய தத்துவவியலாக (குறிப்பாக தமிழ் நாட்டுக் குரிய தத்துவவியல்) சைவசித்தாந்தம் தோற்றம் பெறுகின்றது. இந்துசமயத்தின் சமயம் சார்ந்த விழுமியங்கள் அதன் கோட் பாடுகள், அந்த சமயத்திற்குரிய தத்துவ வியல் என்பனவற்றில் அந்த சமயத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்நெறிக்கான ஒரு நிர்வாகக் கட்டமைப் பினை கொண்ட ஒரு சமயமாகவே இந்துசமயம் காணப்படுகின்றது. இந்துசமய நிர்வாகவியல் வரலாறு எனும் கட்டுரையில் இது பற்றி விரிவாக அறிந்து கொள்ளலாம்.

உலகில் உள்ள பல சமயங்கள் சமய கோட்பாடுகளை உணர்த்துவதாக விளங்கு கின்றனவே ஒழிய சமயத்தின் செல்நெறி யினையும் அந்த நெறியினைப் பின்பற்றும் மக்களின் வாழ்வியலையும் ஒருங்கிணைத்த ஒரு நிர்வாக் கோட்பாடுகள் இந்து சமயத்தி னைத் தவிர வேறு சமயங்களில் விரிவாக குறிப்பிட்டதற்கான முழுமையான ஆய்வு கள் எதுவும் இதுவரை எழவில்லை. எனவே இந்து சமய நிரவாகவியல் என்பது சமயத் தின் நிர்வாகவியலாகவும், அந்த சமயத் தினை பின்பற்றுகின்ற சமூகத்தின் நிர்வாக வியலாகவும் காணப்படுகின்றது.

**சமய ஒழுங்குமுறை நிர்வாகம்**

சமய ஒழுங்கு நிர்வாகம் என்பது சமயத் தினுடைய அனைத்து வகையான கட்டமைப் புக்களையும் கூறுகின்ற ஒரு நிர்வாகம் ஆகும். உலகில் உள்ள பிறசமயங்களை விட இந்து சமயம் தனது சமய அமைப்பிய லையும் அதன் கட்டமைப்பினையும் நன்கு

சமய கட்டமைப்பியலில்
பல தெய்வ வழி
பாடுகளைக் கொண்டுள்ள
இந்து சமயம் பல
தெய்வங்களை ஐரோப்பிய
நிர்வாகக் கட்டமைப்பியல்
குறிப்பிடுகின்ற
மேலிருந்து கீழான
அதிகார தெய்வங்களாக
கட்டமைத்திருப்பது ஒரு
சிறந்த நிர்வாக
கட்டமைப்பியலாகவே
கருதப்படுகின்றது.

வரையறுத்துள்ளதோடு அந்த சமய கட்ட மைப்பியலை கொண்டு நடத்துவதற்கான சமய நிர்வாக அமைப்பியலையும் கொண்ட சமயமாக இந்து சமயம் விளங்குகின்றது.

சமய ஒழுங்கு நிர்வாகம் என்பது சமய நடைமுறைகளை பின்னபற்றுவதற்கான ஒழுங்கமைக்கப்பட்ட ஒழுங்குமுறைகளைக் குறிப்பிடுவதாகவும். அந்த ஒழுங்கு முறைக ளின் வழியே சமுதாயம் பின்பற்றவேண்டிய ஒழுங்கு முறைகளைக் குறிப்பிடுவதாகவும் சமய ஒழுங்கு நிர்வாகம் என்பது இரண்டு வகைகளில் அமைந்து காணப்படுகின்றது.

**சமய நடைமுறை நிர்வாகம்**

சமய நடைமுறை நிர்வாகம் என்பது சமய நடைமுறைகள் அதாவது சமயம் சார்ந்த வழிபாட்டு முறைகளுக்கான ஒரு நிர்வாகக் கட்டமைப்பியலை இந்துசமயம் சிறந்த முறையில் கட்டமைத்திருக்கின்றது. சமய கட்டமைப்பியலில் பல தெய்வ வழி பாடுகளைக் கொண்டுள்ள இந்து சமயம் பல தெய்வங்களை ஐரோப்பிய நிர்வாக கட்டமைப்பியல் குறிப்பிடுகின்ற மேலிருந்து கீழான அதிகார தெய்வங்களாக கட்டமைத் திருப்பது ஒரு சிறந்த நிர்வாக கட்டமைப்பிய லாகவே கருதப்படுகின்றது. பல தெய்வங் களை வழிபடுகின்ற இந்து சமயத்தினைச் சேர்ந்தவர்களுக்கு இவற்றில் எந்த தெய்வம் உயரிய தெய்வம் எவற்றினை முதலில் வழிபடவேண்டும். அவற்றினை எவ்வாறு வழிபடவேண்டும். அந்த வழிபாட்டு முறை களை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்ற சிந்தனைக் குழப்பங்கள் எழாதவாறு பலதெய்வங்களின் அதிகார எல்லைகளை அல்லது அவற்றின் சக்தி தன்மைகளை வைத்து மேலிந்து கீழாக வரையறுத்துள்ளது. இத்தகைய இந்து சமயத்தினுடைய சமய கட்டமைப்பு அந்த சமயத்தினை பின்பற்றுவ னுக்கு குழப்பங்கள் ஏற்படாதவாறு ஒருவன் தனது வழிபாட்டினை இலகுவாக முன்னெ டுப்பதற்கு ஏற்றவாறான ஒரு நிர்வாக அமைப்பியலையும் கட்டமைத்திருப்பது தான் இந்து நிர்வாகவியலின் சிறப்பம்சம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் இந்துசமய கட்டமைப்பிய லுக்கும் இந்துசமயத்தின் சமய நடைமுறை நிர்வாகத்திற்கும் வேறுபாடுகள் உண்டு. இந்துசமய கட்டமைப்பியலை வேதங்களும் அதன் நடைமுறை நிர்வாகவியலை ஆகமங் களும் உணர்த்தி நிற்கின்றன. இந்துசமயத் தினுடைய சமய கட்டமைப்பியலின் வழியே அந்த சமயத்தினை பின்பற்றுவதற்குரிய ஒரு ஒழுங்கு முறைகளை கொண்டிருப்பதுதான் சமய நடைமுறை நிர்வாகம் ஆகும். இந்த சமய நடைமுறை நிர்வாகம் என்பது சமயத் தின் வழிபாடு மற்றும் சடங்கு, பூசைமுறை கள் திருவிழாக்கள், விரதங்கள், பண்டிகை கள் என்பற்றினை மேற்கொள்வதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட நடைமுறையியல் ஆகும்.

சமய நடைமுறை நிர்வாகத்தில் சமயத் தின் வழிபாட்டு முறைகள் தொடர்பான சமய நிர்வாகம் குறிப்பிடும் ஒழுங்கு முறையிய லானது வழிபாட்டு முறைகளுக்கான விதிப் பிரமாணங்களாக ஆகமங்கள் வரையறை செய்திருக்கின்றன. ஆகம வழிபாட்டு முறை யானது பெருமளவு தென்க வாழ்வியலுக்கு ஏற்றவாறான ஒரு வழிபாட்டு நிர்வாக முறை மையினை கொண்டிருக்கின்றன. இறைவ னுக்கு உருவநாமம் கொடுத்த சமயம் இறை வனை மக்களுக்கு அருகில் உள்ளவனாக காண்பித்ததோடு சமயம் என்பது ஒரு வாழ்வியல் நெறி என்பதனையும் காட்டி நிற்கின்றது.

"மண்ணில் நல்லவண்ணம் வாழாலாம் வைகலும்
எண்ணில் நல்கதிக்கு யாதுமோர் குறைவில்லை"

என்று வாழ்வியல் முறைகளுக்கு ஊடான ஒரு சமய நெறியினையே இந்துசமயம் காட்டி நின்கின்றது. இறைவனை காணக் கிடைக்காத அருவமான பொருள் என்ற நிலைக்கு அப்பால் இறைவனுக்கு உருவம் கொடுத்து அந்த உருவத்தோற்றப் பொலி வினையும் அழகுறவே எடுத்துக் காட்டியுள்ளன.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிழ் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால்வெண்ணீறும்"

என்ற இறைவனின் அழகுத்திருமேனியை திருநாவுக்கரசர் உலகத்திற்கு முதன்முத லாக எடுத்துக்காட்டி இருக்கின்றார். எனவே இறைவன் ஒருவன் உள்ளான், அவன் எப்படிப்பட்டவன் அவன் இன்ன வடிவினன் என்று குறிப்பிட்ட இந்துசமயம் அந்த இறைவனை எங்கு சென்று வழிபடலாம் என்ற கேள்விக்கு விடையாக இறைவன் உறையும் இடம் ஆலயம் என்ற வரையறை யினை இந்து சமயம் வரையறுத்திருப்பது இந்து சமய நிர்வாக நடைமுறையினை மேற்கொள்வதற்குரிய ஒருஇடமாகவும் நிர்வாக நடைமுறைக்குரிய அலுவலகமாக வும் ஆலயத்தினை அடையாளப்படுத்தியது. சமூகத்தினை ஒழுக்க நெறி உள்ள சமூக மாக மாற்றிய இந்துசமயம் அந்த சமூகத் திற்கு தலைமைதாங்கி அவற்றினை நெறிப் படுத்துவதற்கு சமய வழிபாட்டு முறையி னைக் கூட நிர்வாக ஒழுங்கமைப்புக்கு ஊடாகவே மேற்கொண்டு இருக்கின்றது.

இந்துசமயத்தின் நிர்வாக நடைமுறை அமைப்பு என்பது இந்துசமயத்தின் வழி பாட்டு முறைகளில் இருந்து ஆரம்பிக் கின்றது. வேதங்கள் குறிப்பிடுகின்ற வேள்வி களை எவ்வாறு மேற்கொள்ளுவது அதனை யார் மேற்கொள்ளலாம் என்ற வரையறை களை வகுத்ததோடு நின்று விடாது அந்த வேள்விகளை எவ்வாறு நடத்துவது என்ற நிர்வாக ஒழுங்கு முறைகளினையும் இந்து சமயம் வரையறை செய்திருக்கின்றது. வேள் விகள், யாகங்கள் என்பவைகளின் வகைகள் அவற்றினை மேற்கொள்ளுகின்ற முறை அவற்றினை ஆரம்பித்து எந்த ஒழுங்கில் மேற்கொள்வது, எவ்வளவு காலத்திற்கு மேற்கொள்வது அதனை மேற்கொள்வதற்கு வேண்டிய ஆளணியினரின் எண்ணிக்கை அந்த ஆளணியினரின் அதிகார கட்டமைப்பு (பிரதான குரு, அவருக்கு கீழ் உள்ள ஏனைய வர்களின் கட்டமைப்பு) போன்றவற்றின் ஒழுங்கு முறைகளும் அவர்களுக்கு வகுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டிருக்கும் பணி வகைகளும் நிர்வாக நடைமுறை ஒழுங்காக வரையறை செய்யப் பட்டிருக்கின்றது.

வேதங்கள் குறிப்பிடும் வேள்விமுறை களை அடுத்து தென்னாட்டுச் சமயம் உயர் வாகப் போற்றும் ஆகமங்களின் வழியே இந்து நிர்வாகவியலில் சமயநடைமுறை நிர்வாகம் பற்றி நோக்கினால், ஆகமங்கள் மூன்று வகைகளில் இந்து சமய நடைமுறை நிர்வாகம் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஒன்று ஆலயம் கட்டுவது தொடர்பான அமைப்பும் அது எவ்வாறு கட்டப்படவேண்டும் என்ற நிர்வாக ஒழுங்கு முறைகளையும் குறிப்பிடு கின்றது. அடுத்து அந்த ஆலயத்தில் நடை முறைப்படுத்த வேண்டிய பூசை ஒழுங்கு முறைகள் பற்றிய நிர்வாக ஒழுங்கு முறைகள் பற்றிக் குறிப்பிடுகின்றது. மூன்றாவது இந்து சமயத்தினை பின்பற்றுகின்றவன் கடைப் பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் பற்றிய நிர்வாக அமைப்பினையும் ஆகமங்கள் குறிப்பிடுகின்றது.

ஆகமங்களின் அமைப்பியலானது சமய கட்டமைப்பியல், சமய ஒழுங்கு முறையியல் மற்றும் சமய நிர்வாக நடைமுறையில் என்ற வகையில் அமைந்திருப்பது சமயம் ஒரு வாழ்வியல் நெறி என்பதை புலப்படுத்து கின்றது. ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட அறநெறி ஒழுக்கம் சார்ந்த வாழ்வியலை கொண்டு நடத்துவதற்கு வேண்டிய நிர்வாக ஒழுங்கு முறையினையே ஆகமங்கள் ஊடாக இந்துசமயம் உணர்த்தி நிற்கின்றது. ஒவ் வொரு ஆகமமும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பாதங்கள் ஊடாக மேற்குறித்த அமைப்பியலை விளக்கி நிற்கின்றது. ஆகமங்களில் கூறப்படாத விட யங்களே இல்லை எனும் அளவிற்கு சமய நெறி, வாழ்வியல் நெறி என்ற இரண்டு நெறிகளுக்கும் வேண்டிய விடயங்களை எடுத்துக்கூறுவதனால் சிவாமகங்களை கலைக்களஞ்சியங்கள் எனக் கூறுவது மிகை யாகாது என்று சைவஆகமங்கள் ஓர் அறிமுகம் எனும் நூலில் முனைவர் எஸ்.பி.சபாரத்தினம் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

> இந்துசமயத்தின் நிர்வாக நடைமுறை அமைப்பு என்பது இந்துசமயத்தின் வழி பாட்டு முறைகளில் இருந்து ஆரம்பிக் கின்றது. வேதங்கள் குறிப்பிடுகின்ற வேள்விகளை எவ்வாறு மேற்கொள்ளுவது அதனை யார் மேற்கொள்ளலாம் என்ற வரையறைகளை வகுத்ததோடு நின்றுவிடாது அந்த வேள்விகளை எவ்வாறு நடத்துவது என்ற நிர்வாக ஒழுங்கு முறைகளினையும் இந்து சமயம் வரையறை செய்திருக்கின்றது.

சிற்பக்கலை, ஓவியக்கலை, கட்டிடக் கலை, சோதிடக்கலை முதலான பல கலைகள் பற்றியும் மருத்துவம் பற்றியும் யோக நெறிகள் பற்றியும் குறிப்பிடும் ஆகமங்கள் அவற்றினை எவ்வாறு மேற் கொள்ளப்படவேண்டும் என விளக்கி நிற்ப தில்தான் இந்து சமயத்தினுடைய சமய ஒழுங்குமுறை நிர்வாக நடைமுறையினை கண்டுகொள்ள முடிகின்றது.

எனவே சமய ஒழுங்குமுறை நிர்வாகம் என்பது சமயத்தினை கொண்டு நடத்து கின்ற அல்லது சமயத்தினை கடைப் பிடிக்கின்ற ஒழுங்கு முறைகளைக் குறிப்பிடு வதாக அமைகின்றது. வேதங்கள், ஆகமங் கள், புராணங்கள், இதிகாசங்கள், திரு முறைகள், நாலாயிரதிவ்விய பிரபந்தம் என பல்வேறு சமய இலக்கியங்களில் சமய நிர்வாக நடைமுறைகள் என்பது மிக நேர்த்தியாகவே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு இலக்கியங்களிலும் இந்த நிர்வாக நடைமுறைகள் எவ்வாறு குறிப்பிடப் பட்டிருக்கின்றன என்ற ஆய்வுகள் இனி வரும் காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். விரிவஞ்சி அது இங்கு தவிர்க்கப்பட்டுள்ளது.

சமய ஒழுங்குமுறை நிர்வாகம் ஒரு அமைப்பியலாக கட்டமைக்கப்பட்டு அதன் வடிவப் பெறுமதி ஊடாக சமயத்தினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுப்பது இனிவரும் காலங்களில் சிறந்த ஒரு முறையியல் ஆகும். எனவே சமய ஒழுங்கு முறை நிர்வாகத்தினை இரண்டு வகைகளில் கட்டமைக்கலாம். சமயம் தொடர்பான கோட்பாடுகள், நியமங்களை வரையறுக்கின்ற அல்லது விளக்குகின்ற ஒரு நிர்வாக கட்டமைப்பு இரண்டாவது சமயத்தினை பின்பற்றுபவர்கள் தமது சமயச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வேண்டிய அறிவுறுத்தல்கள் மற்றும் தெளிவுகளை வழங்கக் கூடிய ஒரு நிர்வாக கட்டமைப்பியல். இந்து சமயப்பரப்பில் இந்த இரண்டு கட்டமைப்பியலையும் நடைமுறைப்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட நிறுவன அமைப்பே ஆதீனங்கள் ஆகும். ஆதீனங்களின் பணிகளில் இந்த இரண்டு விடயங்களும் மிகமுக்கிய மானவையாக இருந்துவருகின்றன. எனவே ஏலவே பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சமய ஒழுங்கு நிர்வாக வியலை மேற்கொள்வதற்குரிய ஒரு கட்டமைக்கப்பட்ட ஒரு நிறுவத்தினையே இந்து சமயம் உருவாக்கி இருந்திருக்கின்றது. சமய ஒழுங்கு முறை நிர்வாகம் தனது இரண்டு வகையான தளங்களிலும் இருந்து அதன் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்காக உருவாக்கப்பட்ட நிர்வாக கட்டமைப்பே ஆதீனங்கள் ஆகும். எனவே இந்து சமயம் நிர்வாக அமைப்பியலையும் வகுத்து அந்த அமைப்பியலை நடைமுறைப் படுத்துவதற்கான நிர்வாக கட்டமைபப்பியலையும் வரையறுத்திருப்பது இந்துசமய நிர்வாகவியலின் தனித்தன்மையினையே எடுத்துக் காட்டுகின்றது.

**சமய நிறுவன நிர்வாகம்**

இந்து நிர்வாகவியலில் சமய நிறுவன நிர்வாகம் பற்றிய கட்டமைப்பாக இது அமைகின்றது. இந்துசமயத்தின் இன்றைய வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றி வருவது சமய நிறுவனங்களே ஆகும். சமய நிறுவனங்களின் அளப்பரிய தன்னலம் கருதாத சேவைகளினால்தான் இந்துசமயம் இந்த நூற்றாண்டுக்குரிய சமய கட்டமைப்பியலை உள்ள வாங்கி வளர்ந்து வருகின்றது. சமயம் எக்காலத்திற்கும் உரிய கொள்கை கோட்பாடுகளையும் அமைப்பியலையும் கொண்டிருக்க வேண்டும் அப்போதுதான் அது எக்காலத்திற்கும் உரிய சமயமாக விளங்கும். சமய வளர்ச்சிக்கு நிறுவனங்களின் பங்களிப்பினை நாயன்மார்களே ஆரம்பித்து வைத்திருக்கின்றனர். சமயம் காலத்திற்கு ஏற்றவாறான கட்டமைப்பியலை கொண்டு அதன் பயணம் அமைந்திருக்கும் என்பதனை இந்துசமயத்தின் செல்நெறியினைக் கொண்டு நாம் அவதானிக்கலாம்.

எனவே நாயன்மார்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிறுவனக் கோட்பாடும் கட்டமைப்பியலும் இந்து சமயத்தின் நிர்வாக ஒழுங்கு முறையியலை திறம்பட எடுத்துக்காட்டுவதோடு பல நூற்றாண்டுகளுக்கு முன்னே தமிழர்கள் மத்தியில் ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவன கோட்பாட்டியலும், நிர்வாக கட்டமைப்பியலும் இருந்திருக்கின்றன என்பதை நாம் தேவாரங்கள் ஊடாக கண்டு கொள்ளலாம்.

சமய நிறுவன நிர்வாகம் என்பது சமய நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட சமய நிறுவனங்களின் நிர்வாக அமைப்பியலைக் குறிப்பிடுவதாகும். இந்த அமைப்பியலானது நிறுவனத்தின் தோற்றம், வளர்ச்சி என்பவைகளின் அடிப்படையில் கட்டமைக்கப்படுகின்றது. சமய வளர்ச்சியினை நோக்காகக் கொண்டு சமயத்தின் ஊடாக சமூகத்திற்கான பணியினை செய்வதற்காகவும் இந்து சமய நிறுவனங்களின் நிரவாகக் கட்டமைப்பியல் அமைந்திருக்கின்றது. சமயநிறுவனங்களின் கட்டமைப்பியல் அல்லது அமைப்பியல் என்பவற்றின் ஊடாகவே அதன் செயற்பாட்டு வடிவங்களுக்காக நிர்வாகவியல் உருவாக்கப்படுகின்றது. எனவே சமயநிறுவனங்களின் கட்டமைப்பியல் என்பது நிறுவனத்தின் அமைப்பு, தன்மை, அதன் செயற்பாடுகள் என்பவற்றினைக் குறிப்பிடுவதாகவும். நிர்வாக அமைப்பு என்பது அந்த நிறுவனம் செயற்படுவதற்குரிய நிர்வாக ஒழுங்கு விதிகளைக் குறிப்பிடுவதாகவும் உள்ளன. எனவே சமய நிறுவன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகம் என்பது சமய நிறுவன கட்டமைப் பியலின் பின்புலத்திலேயே அதன் நிர்வாக நடைமுறையியல் வரையறை செய்யப்பட் டுள்ளது. இதனை அடுத்துவருகின்ற தலைப்புக்களில் விரிவாக ஆராயலாம்.

**சமூக நிர்வாகவியல்**

சமூக நிர்வாகவியல் என்பது சமூகத் தினை நிர்வகிக்கின்ற நிர்வாக ஒழுங்கு முறைகளைக் குறிப்பிடுவதாகும். இங்கு இந்து சமய சமூக நிர்வாகவியல் பற்றி நோக் கப்படுகின்றது. இந்து சமயம் சமூகத்தினை நிர்வகிப்பதற்கென சமயம் சார்ந்த ஒரு நிர்வாக ஒழுங்கமைப்பினை சமயத்தின் ஊடாக முன்வைத்திருக்கின்றது. அல்லது சமயத்தின் வழியே கட்டமைத்திருக்கின்றது என்று குறிப்பிடலாம். ஆகவே இந்துசமயம் அந்த சமயத்தினை கடைப்பிடிக்கின்ற மக்கள் கூட்டத்தினை நிர்வகிக்கின்ற தலை மைப் பொறுப்பினை பெற்றிருக்கின்றது ஆகையால் சமூகத்தினை சமய வாழ்விய லோடு முன்னகர்த்துவதற்கான ஒரு ஒழுங்கு முறைக் கோட்பாடுகள் தேவைப்பட்டிருக் கின்றது. அந்த தேவையினை இந்து சமயம் மிக நேர்த்தியாக வடிவமைத்திருப்பதனால் தான் இன்று உலகம் பூராகவும் ஒரு அறி வியல் சார்ந்த மதமாக இந்து சமயம் நோக்கப்படுகின்றது.


இந்து சமயம் குறிப்பிடும் சமூக நிர்வாக வியல் என்பது சமய அடிப்படையில் எவ் வாறு நோக்கப்படுகின்றது என்பதை நோக்குவோம். சென்ற கட்டுரையில் குறிப் பிட்டுள்ளவாறு காட்டுமிராண்டி நிலையில் இருந்து நாகரீக நிலைக்கு மனிதன் மாறிய போது உருவாக குழுமுறைச் சமூதாய உரு வாக்கம் மதங்களை அல்லது சடங்குகளை பின்புலமாக வைத்தே உருவாக்கப்பட்டது. பயத்தின் வழியில் வழிபாடு தொடங் கப்பட்டது. கீழ்ப்படிவின் வழியில் நிர்வாக ஒழுங்குமுறை தொடங்கப்பட்டது.

குழுமுறைச்சமூகமாக தோற்றம் பெற்ற மனித சமூகத்தின் ஒவ்வொரு குழுவிலும் பல்வேறு குணங்களைக் கொண்டவர்கள் இருந்திருப்பார்கள் இவர்களை ஒருங்கி ணைக்கும் தளமாக மதமும் சடங்குகளும் செயற்பட்டிருக்கின்றது. இந்த சமயமும் சமயம் சார்ந்த சடங்குகளும் மக்களுக்கா கவே செய்யப்பட்டது. எனவே இந்து சமயத் திற்கும் சடங்கிக்கும் கட்டுப்பட்டவர்களாக மக்கள் இருக்கவேண்டும் என்று முதலில் வகுக்கப்பட்ட நியதிதான் கீழ்ப்படிதல் எனும் முதலாவது கட்டமைப்பியலாகும். இந்த கட்டமைப்பியலின் வழியே இந்து சமயம் தனது சமய வழிபாடுகள், சடங்குகள், கொள்கைகள் கோட்பாடுகள் என்பவற் றினை மக்கள் மத்தியில் கொண்டு செல்வ தற்குரிய நபராக பூசகர் என்பவரை நிய மனம் செய்தபோது அங்கு நிர்வாக ஒழுங்க மைப்பின் ஆரம்பம் ஏற்படுகின்றது. சமயம் மக்களுக்கானது மக்களின் நல்வாழ்வுக் கானது மக்களை நல்லழிப்படுத்தி ஒழுக்க முள்ள சமூகத்தினை தோற்றுவிப்பத னையே இந்துசமயம் தனது குறிக்கோளாக கொண்டிருப்பதனால்தான் இந்து சமயத் தின் செயற்பாடுகள் அனைத்தும் சமயம் சார்ந்ததாக இருக்கின்றது. இதனால்தான் மக்களுக்கான சமயம் மக்களின் தேவை களை நிறைவேற்றுவதற்கான சமயமாக இருந்து அந்த மக்களை ஒன்றிணைத்து சமயம் குறிப்பிடுகின்ற வாழ்வியல் நெறி முறைகளைப் பின்பற்றுவதற்கு வேண்டிய கோட்பாடுகளையும் ஒழுங்கமைப்புக்க ளையும் மக்கள் மேற்கொள்வதற்காக சமயம்சார்ந்த சமூகநிர்வாகவியல் என்பது இந்து சமயத்தின் ஒவ்வொரு பகுதிகளிலும் கிளைகளிலும் ஒரு நாணயத்தின் இருபக் கங்கள் போன்று சமயத்தின் பிறிதொரு பக்கமாக சமூகத்திற்கான ஒழுங்கமைவு களே காணப்படுகின்றன. எனவே சமயம் சமூகம் எனும் இரண்டு முகங்களைக் கொண்ட ஒரு நாணயம் போன்றதுதான் இந்துசமயம். ஆகவேதான் இந்துசமயம் தனது சமயத்தினை கடைப்பிடிக்கின்ற வர்களுக்கான சமூக ஒழுங்கமைப்புக்களை வரையறை செய்திருக்கின்றது. இதுபற்றி மேலும் விரிவாக இந்து நிர்வாகவியலும் சமூகமும் எனும் தலைப்பின் கீழ் விரிவாக நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு.அ. சிவஞானசீலன்**
கலாசார உத்தியோகத்தர்,
நெடுந்தீவு



# உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டு கழித்திருக்காது சிந்தனை செய்வோம்

*பேராசை கொண்ட தேவர்களும் அசுரர்களும் சாகாவரம் பெறப் பாற் கடலைக் கடைந்தார்கள். அமுதம் வரும் முன் நஞ்சே வந்தது. சிவன் நஞ்சுண்டார், சக்தி கழுத்தைப் பிடித்து சிவனைக் காத்தார்....*

*இன்றைய உலகம் வேதியல் நஞ்சுகளால் நிரம்பி வழிகிறது. மனிதர் ஒவ்வொருவரும் நஞ்சுண்ட கண்டர்களாய்....*

*தடுத்துக் காக்க சக்திதான் நம்மிடம் இல்லை...*

*அறிவியல் இன்றுவரை 70, 000க்கும் மேற்பட்ட வேதியற் பொருட்களைச் செய்து குவித்துள்ளது. மேலும் புதிது புதிதாக ஆண்டுக்கு ஆயிரம் இரசாயனங்கள் சேருகின்றன. நமக்கு வாழ்வளிக்கும் மண்ணும். நீரும், காற்றும், உணவும், வாழ்வழிக்கும் நஞ்சாகி வருகின்றன.*

*வாழ்வை வசதிமிக்கதாக, எளிமையும் மகிழ்ச்சியும் மிக்கதாக மாற்றும் என அறிமுகமான கண்டுபிடிப்புக்களின் மறு பக்கம் கொடூரமாக நம்மை அச்சுறுத்துகின்றன. இவற்றுடன் வாழ முடியுமா? இவை இன்றி வாழ முடியுமா? ...."*

டாக்டர் வே. ஜீவானந்தம்

**"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து - வாளொடு முன்தோன்றி வாழ்ந்த மூத்தகுடி தமிழ்க்குடி"** என்பார் ஐயரிதனார். இவரது கூற்று விஞ்ஞான பூர்வமானதாக இல்லாவிடினும் தமிழ்ச் சமூகத்தின் தொன்மைக்கும் சிறப்புக்கும் இ∴தோர் எடுத்துக்காட்டாகும். உலகிலுள்ள மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி என்று சொல்லக் கூடிய அளவிற்கு தொன்மையும் செழுமையும் கொண்ட செம்மொழியாம் தமிழ்மொழி என்றும் குன்றாத இளமையுடன் கன்னித்தமிழாக இருந்து வருகின்ற போதும் இன்று அதிலுள்ள பொக்கிஷங்களை மறந்து நிற்கின்றோம். தமிழ்ச் சமூகத்தின் தாய்மடியாகக் 'கீழடி'காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இருந்து தொடங்குவதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. இங்கு மிகச் சிறந்த நகரக் கட்டுமானமும் சுடுமண் கிணறுகளும் விவசாயமும் திமில் பருத்த காளை, பசு, எருமை, வெள்ளாடு முதலாய விலங்கு வேளாண்மையும் நிலைபெற்றிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இற்றைக்கு எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயே மிகவும் பண்பட்ட வாழ்வை மேற்கொண்டிருந்த தமிழ்ச் சமூகத்திற்கு கைத்தொழில் புரட்சியின்பின் படிப்படியாக வளர்த்தெடுக்கப்பட்டு இன்னும் நூற்றாண்டு தாண்டாத பசுமைப் புரட்சியும் அதன் பெறுபேறாக அமைந்த அசேதன வோளண்மையும் சொல்லித் தருவதற்கு எதுவுமில்லை. ஆரம்பத்தில் நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாஸ் மட்டும் போதும் என்றவர்கள் இடையில் இன்னும் சில சுவட்டு மூலகங்களும் தேவை என்றார்கள். தற்போது கண்டுபிடித்துள்ளார்களாம் தாவரங்கள், ஐம்பத்தாறுக்கும் அதிக ஊட்டங்களைப் பெற்று வளர்கின்றன என்று. இவ்வாறு கூறி நமது தலையில் மிளகாய் அரைக்க அதை ஏற்றுக்கொண்டு காசைச் செலவிட்டு மண்ணை நாசப்படுத்தும் மடையர்களாக இருப்பதை விடுத்துச் சிந்தித்துச் செயற்படுவோம். தாவரங்கள் தமக்குத் தேவையானவற்றை மண்ணிலிருந்தும் காற்றிலிருந்தும் பெற்றுக்கொள்ளும் திறன் படைத்தவை என்பதை உணர்ந்து இயற்கைச் சூழலின் இயல்புகெடாது செயலாற்றத் துணிபு கொள்வோம்.

பண்பாடு என்பது பண்படுத்துதல் எனும் பொருளுடைய 'Cult'எனும் இலத்தீன் மூலத்தில் இருந்து ஆங்கிலத்திற்கு வந்த 'Culture' வழி வந்ததாகவும் இதற்கும் 'Agriculture' என்பதற்குப் அத்தியந்த உறவு நிலைத்திருப்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தாகும். அதாவது மண்ணைப் பன்முறை உழுது மறுத்து உழுது பண்படுத்தி பயிரிட்டு பாதுகாப்பதன் மூலம் நல்ல விளைவைப் பெறுதல்போல மனித மனங்களின் ஊடாகச் சமுதாயத்தைப் பண்படுத்தி நல்ல பண்பாட்டைக் கட்டமைத்தல் சாலும் என்பதே இதன் தார்ப்பரியமாகும்.

நாம், மனுக்குலத்தின் அடிப்படைத் தேவைகளாக அமையும் உணவு, உடை. உறையுள் ஆகியவற்றை நிறைவேற்றவும் நாகரிகத்தை உருவாக்கவும் காரணமாக இருந்த வேளாண்மையைப் பண்பாட்டுடன் இணைந்த முறையில் வளர்த்தெடுக்கத் தவறிவிட்டோம். பலநூறு தலைமுறைகளாகக் கடத்தப்பட்டுவரும் இயல்பூக்கங்களையும் புலமைத்துவங்களையும் புறந்தள்ள பழக்கப் படுத்தப்பட்டுள்ளோம். நம்மை எதிர்கொண்டுள்ள கோவிட் -19 மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக நாம் நமது பாரம்பரிய உணவுப் பழக்க வழக்கங்களையும் விவசாய நடைமுறைகளையும் உரசிப் பார்த்து உண்மை அறிவதற்கான சந்தர்ப்பம் வாய்த்துள்ளது.

நமது விவசாயம் என்பது பயிர் வளர்த்தல், விலங்கு வேளாண்மை ஆகியன இரண்டறக் கலந்த ஒன்றாகும். ஒன்றின் கழிவு மற்றொன்றுக்கு உணவாகும் வகையில் இது கட்டமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒவ்வொரு மனிதனும், குடும்பமும், சமூகமும் தம்மாலான பங்களிப்பை நல்கக் கடப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் தமக்குப் பரம்பரை பரம்பரையாகக் கையளிக்கப் பட்டுவரும் அல்லது கொள்வனவு செய்துள்ள நிலம் முதலான சொத்துக்களை நன்கு திட்டமிட்டமுறையிலும் முன்னோர், முதியோர் அனுபவப் பகிர்விலும் தத்தம் வல்லமைக்குத் தக்கவிதத்தில் முன்னெடுத்துவரும் வாழ்வியல் நடைமுறையே வேளாண்மையாகும். நிலம் என்பது ஒருவருக்கான தனிச்சொத்தல்ல. இது தலை முறைகள் கடந்து நின்றுநிலைக்கத் தக்க ஒன்றாகும். அது நமக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள ஒன்று என்பதை மறந்து விட்டோம். ஆனால் செவ்விந்தியர்கள் இதனை தெளிவாக உணர்ந்துள்ளனர். இதனால் தான் அவர்கள் நிலத்தைத் தமது பேரப்பிள்ளைகளிடம் இருந்து கடனாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருப்பதாகக் கூறி வருகின்றனர். மனித குலம் வாழ்வதற்குத் தகுதியான மற்றொரு கிரகம் கண்டு பிடிக்கப்படும் வரை பூமி ஒன்றே கதி என்பதையும் பூமியில் வாழத் தகுதி யான பகுதி எத்தனை சதவீதம் என்பதையும் ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து செயற்படத் தயாராக வேண்டும். இல்லையேல் அழிவின் விளிம்பு அதிக தூரத்தில் இல்லை. காற்றையும் நீரையும் காசுகொடுத்துப் பெறும் நிலை கண்முன் வந்துள்ளது.

நாடோடியாகத் திரிந்தவனை நதிக்கரை யில் இருத்தி நாகரிகம் படைத்தவனாக வாழ வழிசமைத்த விவசாயம் இன்று 'சேடம்' இழுத்துக் கிடக்கின்றது. நாகரிகத்தின் தொட்டிலாயமைந்த நதிக்கரைகள் பல பாலைவனங்களாகப் பாழ்பட்டுக் கிடக்கின் றன. மனுக்குலத்தின் வாழ்வா சாவா போராட்டத்திற்கும் 'சேடம்' இழுக்கும் விவசாயத்திற்கும் தக்க வைத்தியம் செய் தாலே அன்றி மீட்சி பெறுதல் சாத்திய மற்றதென்பதால் நம் முன்னோர் அளித்த அரும் செல்வங்களை சேகரம் செய்தற் பொருட்டுப் பயணப்படவேண்டியுள்ளது.

"நோய் நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்" (குறள் - 948) என்பதே இதற்கான மருந்தாகின்றது.

பாரம்பரிய விவசாயத்தில் தலைமுறை தலைமுறையாகப் பேணப்பட்டுவரும் பட்டறிவு, புலமை, நம்பிக்கை, முதலான பல்திறன்கள் செல்வாக்குச் செலுத்துகின் றன. காலத்தை உணர்தல், பொருத்தமான செயற்பாடுகளை முன்னெடுத்தல், பாசனம் செய்தல், பாதுகாப்பும் கண்காணிப்பும், களைக் கட்டுப்பாடு, அறுவடை முதலான அத்தனை செயற்பாடுகளிலும் நமது முன்னோர் தமது அனுபவங்களை விட்டுச் சென்றுள்ளனர். இவை மனம் எனும் களஞ்சி யங்களில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அத்தகைய சிலவற்றை நோக்குவோம்.
"இருந்தோம்பி இல்வாழ்தல் எல்லாம்
விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" என்றுரைக்கும் வள்ளுவர் உலகி லுள்ள எல்லாத் தொழில்களிலும் தலை சிறந்தது உழவுத் தொழிலே என்பதை
"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை" (குறள் - 1031) என அறுதியிட்டுரைக்கின்றார். இது,'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்' என்றும் 'உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லைக் கண்டீர்' என்றும் மேலும் வலியுறுத்தப்படு வதைக் காண முடிகின்றது.

உலகத் தொழில்களுக்கெல்லாம் தலையாயது என்ற சிறப்பைப் பெறும் வேளாண்மைத் தொழில் பல உப தொழில் களுக்கும் பெறுமதிசேர் நடவடிக்கைக ளுக்கும் துணை செய்கின்றது. அதாவது விதை, இடுபொருட்கள், எந்திரங்கள், போக்குவரத்து, வாணிபம், உணவுப் பொருள்கள் முதலான பல்வேறு துணைத் தொழில்கள் வளர்ச்சியடைவதற்கும் இதனையிட்டு மிகப் பலர் இலாபமீட்டு வதற்கும் அடிப்படையாக அமையும் விவசா யத்தினை செய்பவன் மட்டும் அடிமை யாகவும் ஆண்டியாகவும் வாழவழி தெரியாதிருப்பது நியாயப்படுத்த முடியாத ஒன்றாகக் காணப்படுகின்றது.

நமது வோளண்மையில் 'அடி காட்டுக்கு நடு மாட்டு நுனி வீட்டுக்கு" எனப் பகுத் துண்டு பல்லுயிர் ஓம்பும் தன்மையை விளக்கும் இயற்கை விஞ்ஞானி கோ. நம்மாழ்வார்; நம்முன்னோர் மொழிகளை பொன்னே போல் காத்து வழங்கியுள்ளார். இத்தகையவை நமக்கு என்றும் உதவுவன வாகும். "தவளை கத்தினால் தானே மழை", "அந்தி ஈசல் பூத்தால் அடை மழைக்கறிகுறி", "தும்பி பறந்தால் தூரத்தில் மழை", "அகல் வட்டம் பகல் மழை", "எறும்பு ஏறில் பெரும்புயல்", "மார்கழி மழை மண்ணுக் குதவாது", "தை மழை நெய் மழை", "தை பிறந்தால் தலைக் கோடை", "தையும் மாசியும் வையகத்துறங்கு", "கல்லு வயலானாலும் கடப்பைக்குள்ள", "காணி தேடின் கரிசல் தேடு", "களர் நிலம் கெட பிரண்டைப் புதை", "நன்னிலம் கொழுஞ்சி, நடுநிலம் கரந்தை, கடை நிலம் எருக்கு".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வழியோரக் களனி வைக்கோலுக்குத் தந்தேன்", "உழவு பகையானால் எருவினால் தீராது", "உழவால் பயிராகிறது" எருவால் பயிராகாது. இத னையே வள்ளுவர்

"தொடிப்புகுதி கஃகா உணக்கிற் பிடித்தெருவும் வேண்டா" என்கிறார். நீர்ப் பாசனத்தில் பாச்சலும் காச்சலும் வேண்டும் என்பதை உணர்த்த 'தேங்கிக் கெட்டது நிலம் தேங்காமல் கெட்டது குளம்' என்கி றது பழமொழி.

பயிரிடுவதற்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் திட்டமிட்டவாறு மேற் கொண்டு பருவத்தே பயிரிடத்தயாராக இருந்தாலும் விதைமுதல் நன்றாக இருக்க வேண்டும். காய்ந்த விதை நல்லதே என்பதற்காக கொடும் வெயிலில் காய விடுதல் முளைதிறனை இல்லாதொழித்து விடும். வீட்டில் விதை இருக்க வேண்டும் முதலானவற்றை பல பழமொழிகள் பேசுகின்றன. உதாரணமாக ' மடி விதையை விட பிடிவிதை முன்னதாக முளைக்கும்' "சொத்தைப் போல வித்தைப் பேணு", "விதை பாதி வேலை பாதி", "காய்ந்த வித்திற்குப் பழுதில்லை". "ஆயிரம் காலம் நெல்லுக்கு ஒரு அந்துப்பூச்சி", "அந்து அழித்த வித்து என்றும் முளையாது".

பயிர்த் தொழிலில் களைகட்டுப்பாடு பாரிய பிரச்சினையாக இருந்து வருகின்றது. இதற்குப் பாரம்பரிய விவசாயத்தில் ஆழ உழுதல், பனை ஓலை தாழ்த்தல் அல்லது ஓலையால் மூடுதல், மரவள்ளி முதலான மாற்றுப்பயிர் களை நாட்டுதல் முதலியன வழக்கத்திலி ருந்தன. கோரை மிகப் பெரிய பிரச்சினை. இவையாவற்றுக்கும் தீர்வு சொல்கிறது பாரம்பரியம்.

"கோரையைக் கொல்ல கொள்ளுப் பயிர் விதை" "கோரை குடிகெடுக்கும்". களையினை முளையிலேயே கிள்ளுதல் அதிக பயன் தரும் என்பதும் ஒவ்வொரு நீர்ப்பா சனத்தின் போதும் களைகளைப் பிடுங்கி விடுதல் பயிருக்குப் பாதிப்பில்லாத ஒரு முறையாகவும் செலவில்லாததாகவும் சொல்லப்படுகிறது. "களை பிடுங்காத பயிர் காற் பயிர்" என்பதை நினைவிற் கொண்டு பயிர்க ளைப் பாதுகாத்தல் வேண்டும்.

பயிர்களை உழுது, விதைத்து, பாசனம் செய்து வந்தாலும் பாதுகாப்பு மிக முக்கியமானதொன்றாகச் சொல்லப்பட்டுள் ளது. இதனை வள்ளுவர்;

"ஏரின் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரின் நன்றால் அதன் காப்பு."
- (குறள் - 1038)

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊழி விடும்" - (குறள் - 1039)

எனும் இரு குறள்களில் அறிவுறுத்தி யுள்ளார். "வேலியே பயிரை மேய்கின்ற காலம்" இக்காலம். பயிர்த்தொழிலுக்குத் தக்க பாதுகாப்பும் கண்காணிப்பும் இல்லை யாயின் "சிறியான் செய்த வேளாண்மை விளைந்தும் வீடு வந்து சேராது" என்பதாக முடிந்துவிடும். சூடு மிதிக்கிற மாடு வைக்கோல் தின்பதைத் தடுப்பதில்லை. ஆயினும் கூரனை (பொலி) குடிக்க அனும திக்க முடியாது. இது போல 'தாயோடு பிள்ளை போகத்தான் செய்யும்' ஆயினும் வைக்கோலுடன் பொலி வெளியேற்றப் படுவதையும் அனுமதிக்க முடியாது.

எனவே வினைத்திறனான வேளாண்மை யின் பொருட்டு கீழ்க்காணும் அம்சங்கள் தவிர்க்க முடியாதவையாகக் காணப்படு கின்றன.

இலங்கை ஒரு விவசாய நாடு. இதன் ஒரு பகுதியாக உள்ள வடமாகாணம் கைத்தொழில் துறை விருத்தியடையாத முழுமையான ஒரு விவசாயப் பிராந்தியம். இதன் மூன்று பக்கங்களும் கடலால் சூழப் பட்டிருக்கிறது. வடமாகாணம் வளர்ச்சி காண வேண்டுமாயின் வேளாண்மையும் கடற்றொழிலும் கைகோர்த்துச் செல்லல் வேண்டும். எனவே, நாம் அனைவரும் எத்தொழில் புரிபவராக இருந்தாலும் நமக் குக் கிடைக்கின்ற நேரத்தில் பயிரிடக் கூடிய ஒரு சிறு நிலத்தையோ இடத்தையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடித்துத் தக்க முறையில் திட்டமிட்டு பயிரிட்டுப் பயன்கொள்ளல் வேண்டும். இது நமது குடும்பச் செலவைக் குறைப்பதுடன் நஞ்சூட்டப்படாத நல்ல காய்கறிகளையும் ஆத்ம திருப்தியையும் தருவதாக அமையும். "நாம் நமக்குத் தேவையானவற்றுள் சிலவற்றையேனும் பயிரிடுவோம்" என்னும் திடசங்கல்ப்பமும் மன ஈடுபாடுமே நமது வெற்றிக்கும் தோல்விக்கும் காரணமாகிறது. நமது முயற்சி வெற்றி பெறுவதற்கு பின்வருவன உதவக் கூடும்.

1)காலம், இடம் அறிந்து பொருத்தமான பயிர்களை நாட்டுதல்.

2) நமக்குப் பயன்தரக் கூடிய ஒரு சில விலங்குகளையேனும் வளர்த்தல்.

3) செலவு குறைந்த முறையில் பயிர்களை செய்கை பண்ணுதல்.

4) நமக்கும் அயலவர்க்கும் தேவையானவற்றைச் செய்கை பண்ணுதல்

5) கலப்பு - பல அடுக்குப் பயிர்களைச் செய்கை பண்ணுதல்

6) இயற்கை வளங்களையும் வீட்டுக் கழிவுகளையும் மீள் சுழற்சிக்குட்படுத்தல்.

7) நஞ்சற்ற - சூழல்நேய முறைகளை கைக்கொள்ளுதல்.

8) மிகை உற்பத்தி மற்றும் தேவைகளை பண்டமாற்று முறைக்கு உட்படுத்துதல்

9) கூட்டுப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுதல்.

10) மரபணு மாற்றப்பட்ட விதைகள் , உணவுப்பொருட்கள், பூச்சி கொல்லி பாவனை முதலானவற்றை இயன்றவரை தவிர்த்தல்.

11) பிராந்திய,பருவகால உற்பத்திகளை விரும்பி உண்ணப் பழகுதல்.

இவ்வாறாக சிந்தித்துச் செயலாற்றுவோமேயானால் நமது சித்திரத்தை வரைவதற்கான சுவர்களை நாமே தேடிக் கண்டவர்களாவோம். இதனால், நாம், நமது குடும்பம், சமூகம், நாடு என்ற அடிப்படையில் யாவும் காப்பாற்றப்படும். இல்லையேல் நமக்குக் கப்பல் கப்பலாகக் கொண்டு வந்து தருவார்கள் என்று காத்திருந்து "குளம் வற்றும் குளம் வற்றும் என்று குடல் வற்றிச் செத்தக் கொக்காக" நேரிடலாம்.

**உசாவியவை:**


1) சச்சி மாஸ்டர் (1988) மக்கள் வாழ்வியல் பழமொழி. அன்னை அச்சகம், யாழ்ப்பாணம்.
2) சுரேஷ். கோ. (2008) வள்ளுவரும் வாழ்வியலும், நியூ செஞ்சுரி புக் கவுஸ், சென்னை.
3) சரத் அமரசிறி (2015) அற்புதமான நீரைப் பராமரிப்போம். தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கடுகஸ்தொட்டை, ஸ்ரீலங்கா.
4) மாணிக்கவாசகர், பொ. (1975) நாட்டிற்கு நயம் தருவன வலி கிழக்குத் தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி.
5) திருக்குறள் உரைக்கொத்து (1959) ஸ்ரீ காசிபீடம், திருப்பனந்தாள்.
6) கீழடி - (2019) தொல்லியல்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை.
7) நம்மாழ்வார், கோ (2007) களை எடு, கிழக்கு வெளியீடு, சென்னை.
8) நம்மாழ்வார், கோ ( 2014) வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும், இயல்வாகை பதிப்பகம், திருப்பூர்.
9) ஜீவானந்தம் வெ. (2005) மூச்சுத் திணறுது பூமி, அம்ருதா பதிப்பகம், சென்னை.
10) ஐங்கரநேசன், பொ. ( 2010) ஏழாவது ஊழி, சேமமடு பதிப்பகம், கொழும்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார செயற்திட்டம் - 2022

## கலைமன்றங்களின் அபிவிருத்தி

| தொ. இல | பிரதேச செயலாளர் பிரிவு | கலைஞரின் விபரம் | வெளியீட்டின் பெயர் |
|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | வண்ணைக்கலை மன்றம் | பண்பாட்டு விழா கலை நிகழ்வுகள் |
| 2 | நல்லூர் | சக்தகலாசார அபிவிருத்தி மன்றம் | 20 ஆவது ஆண்டு நிறைவு விழா |
| 3 | உடுவில் | இணுவைத் தமிழ்ச் சங்கம் | சித்திரைப் புத்தாண்டு கலை நிகழ்வு |
| 4 | தெல்லிப்பளை | தெல்லிப்பளை தமிழ் சங்கம் | வள்ளி திருமணம் எனும் இசை நாடக ஆற்றுகை |
| 5 | சண்டிலிப்பாய் | இளவாலை எழுச்சியகம் கலைமன்றம் | கலைவிருத்தி செயற்பாடு - மீள் புத்துணர்வாக்க விழா |
| 6 | கரவெட்டி | விக்னா இசை மன்றம் | இசைக்கருவி கொள்வனவு |
| 7 | மருதங்கேணி | மருதகலை கலாமன்றம் | கலை விழா நிகழ்வு |
| 8 | வேலணை | புங்கையின் மைந்தர்கள் கலாமன்றம் | மகா சிவராத்திரி கலை நிகழ்வு |
| 9 | ஊர்காவற்றுறை | எழுகதிர் கலாமன்றம், எழுவதீவு | கலைஞர் கௌரவிப்பு விழா, புத்தக வெளியீடு |
| 10 | காரைநகர் | அத்தி நடன கலைமன்றம் | பதவி முத்திரை, கடிதத்தலைப்பு, பெயர்ப்பலகை அச்சிடல் |
| 11 | கரைச்சி | ஜானு அரங்காற்றுகையகம் | சித்திரைப் புத்தாண்டு கலை நிகழ்வு |
| 12 | கண்டாவளை | அம்பாள் கலாமன்றம், தட்டுவன்கொட்டி | சிவராத்திரி விழா கலை நிகழ்வு - கூத்து, வில்லுப்பாட்டு |
| 13 | பச்சிலைப்பள்ளி | அகரம் கவின் கலைக் கலாமன்றம் | புத்தக இறாக்கை கொள்வனவு |
| 14 | ஒட்டுசுட்டான் | பண்டாரவன்னியன் கலாமன்றம் | இசைக்கருவிகள் கொள்வனவு |
| 15 | கரைதுறைப்பற்று | வற்றாப்பளை கண்ணகி கலாமன்றம் | கலை நிகழ்வும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும் |
| 16 | வவுனியா | நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி | மாவட்ட மட்ட கலை நிகழ்வுகள் |
| 17 | வவுனியா தெற்கு | மடுகந்த கலாசார நிலையம் | பயிற்சிப்பட்டறை |
| 18 | மன்னார் | மன்னார் தமிழ் சங்கம் | பாரதி விழா |
| 19 | நானாட்டான் | கலை கலாசார மன்றம் | இசை நிகழ்வு |
| 20 | மடு | கலைமகள் கலாமன்றம் | அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி |
| 21 | மாந்தை மேற்கு | மாந்தை மேற்கு கலை கலாசார இலக்கிய மன்றம் | "தாயானவன், உளிதாங்கும் கற்கள்" இறுவெட்டு வெளியிட்டமை |
| 22 | முசலி | அல்பஸரிய்யா கலை மன்றம் | கலாசார விழிப்புணர்வு கருத்தரங்கு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார செயற்திட்டம் - 2022
## கலைஞர் நூல் பதிப்பும் ஊக்குவிப்பும்

| தொ. இல | பிரதேச செயலாளர் பிரிவு | கலைஞரின் விபரம் | வெளியீட்டின் பெயர் |
|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | திரு.அ.சிறிஸ்கந்தராசா | தராசு முனைகள் - நூல் |
| 2 | உடுவில் | திருமதி.கு.தயாமினி | கவிதைத் தொகுதி |
| 3 | சண்டிலிப்பாய் | திரு.S.V பாலநாதன் | என் பார்வையில் என் சமுகம் - நூல் |
| 4 | சங்கானை | திரு.செ.சிவபாதம் | சகலகலாவல்லி மாலை பொருளும் ஆய்வுரையும் |
| 5 | ஊர்காவற்றுறை | திரு.க.நிவிதன் | கவிதைத் தொகுதி |
| 6 | கரைச்சி | திரு.வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை | கீதாத்துவம் - வரலாற்று நூல் |
| 7 | பச்சிலைப்பள்ளி | திரு.ஜோ.கினோசன் | கவிதைத் தொகுதி |
| 8 | பூநகரி | திரு.அன்ரன் சாள்ஸ் | கவிதைத் தொகுதி |
| 9 | ஒட்டுசுட்டான் | இ.இராஜ்குமார் | கவிதைத் தொகுதி |
| 10 | மாந்தை கிழக்கு | திரு.பிரகாஸ் ராஜ் | வனவேட்டை - குறும்படம் |
| 11 | வவுனியா தெற்கு | திரு.காமினி பியரத்ன | வரலாற்று நூல் - மாமடுவ பிரதேசம் சார்ந்த வரலாறு |
| 12 | வெங்கலச்செட்டிகுளம் | திருமதி.சந்திரகுமாரி இராஜேஸ்வரன் | ஆற்றுகையாக்க கவிதை - ஆய்வு நூல் |
| 13 | மன்னார் | செல்வி.மா.டிவைன்சி | புரட்சினி (நீ) - கவிதை நூல் |
| 14 | மடு | திரு.சத்தியோகு பெனடிற் | சிரசு - கிறிஸ்தவ சமய விழுமியங்கள் |
| 15 | மாந்தை மேற்கு | திரு.பரிகாரி மரிசால் செபமாலை | வண்ணங்களின் எண்ணம் - பல்சுவை பாடல் தொகுப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார செயற்திட்டம் - 2022

## பிரதேசம் சார்ந்த நூல் வெளியீடுகள்

| தொ. இல | பிரதேச செயலாளர் பிரிவு | வெளியீட்டின் பெயர் |
|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | யாழ்பாடி - இதழ் 06 |
| 2 | சண்டிலிப்பாய் | கலாதரம் - இதழ் 04 |
| 3 | வேலணை | தென்தீபம் - இதழ் 07 |
| 4 | வவுனியா வடக்கு | மருதமுகிழ் - இதழ் 10 |
| 5 | வவுனியா | வவுனியம் - இதழ் 05 |
| 6 | நானாட்டான் | நானிலம் மலர் - இதழ் 04 |
| 7 | ஊர்காவற்றுறை | அலைமொழி - இதழ் 06 |
| 8 | சங்கானை | பணுவில் - இதழ் 08 |
| 9 | கரவெட்டி | திருவுடையாள் - இதழ் 08 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார செயற்திட்டம் - 2022

## பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
## வெளியிட்ட நூல்கள் விபரம்

| தொ. இல | ஆண்டு | நூலின் பெயர் |
|---|---|---|
| 1 | 1997 | சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள் - தொகுதி -03 |
| 2 | 2000 | நாட்டாரியல் ஆய்வு |
| 3 | 2003 | ஈழத்து இதழியலின் வரலாறும் மதிப்பீடும் |
| 4 | 2008 | சமானம் |
| 5 | 2009 | புனர்ஜீவிதம் |
| 6 | 2010 | யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலம் |
| 7 | 2011 | இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் பெண்கள் |
| 8 | 2012 | சமகால கலை இலக்கியங்களில் பண்பாட்டுக் கோலங்கள் |
| 9 | 2014 | இலங்கைத்தமிழ் இலக்கியத்தின் ஊடாக மொழித்திறனும் இலக்கியப் பயில்வும் |
| 10 | 2016 | ஈழத்து தமிழ் கலை இலக்கியப் பண்பாட்டுத்தளத்தில் உலகமயமாதலும் உள்ளூர்மயமாதலும் |
| 11 | 2016 | என்டிறீக்கு எம்பரதோர் நாடகம் (வடமோடி நாட்டுக்கூத்து) |
| 12 | 2016 | புனித சந்தியோகுமையோர் நாடகம் (வடமோடி நாட்டுக்கூத்து) |
| 13 | 2016 | இம்மானுவல் நாடகம் (வடமோடி நாடக கூத்து) |
| 14 | 2017 | மரிகருதாள் நாடகம் |
| 15 | 2017 | சந்திரகாசன் நாடகம் |
| 16 | 2017 | ஈழத்துத் தமிழ் கவிதைக் களஞ்சியம் (புதுக்கிய பதிப்பு) |
| 17 | 2018 | முருகேச பண்டிதம் |
| 18 | 2018 | ஆடலிறை ஆக்கங்கள் |
| 19 | 2018 | தமிழ் பழமொழிகள் |
| 20 | 2018 | கலைச்செல்விக் கதைகள் |
| 21 | 2019 | முருகையன் கவிதைகள் |
| 22 | 2019 | கல்வயல் வே.குமாரசாமிக் கவிதைகள் |
| 23 | 2019 | ஈழத்து சிறுகதைக் களஞ்சியம் |
| 24 | 2019 | செந்தமிழ் இலக்கணம் |
| 25 | 2019 | வட மாகாண வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் |
| 26 | 2019 | திருக்குறள் (உரை ஆசிரியர் மு.வரதராசனர்) |
| 27 | 2019 | திருக்குறள் பற்றிய இலங்கையர் முயற்சிகள் |
| 28 | 2019 | முப்பானூற் சுருக்கம் |
| 29 | 2019 | திருக்குறள் ஆய்வுக் கட்டுரை |
| 30 | 2019 | திருக்குறள் ஆய்வுக் கையேடு |
| 31 | 2019 | வல்லபம் - வட மாகாண கலை இலக்கியத்துறையினர் விபரத்திரட்டு |
| 32 | 2019 | கலாசார செயற்திட்டங்களும் மாகாண விருதுகளும் - 2019 வரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 33 | 2019 | வடந்தை |
| 34 | 2019 | அர்ச்சிய சிஷ்ட மூவிராசாக்கள் வாசகப்பா |
| 35 | 2019 | புனித சூசையப்பர் வாசகப்பா |
| 36 | 2019 | மன்னார் மாதோட்ட வாசகப்பா நாடக மெட்டுக்கள் |
| 37 | 2020 | புனித அந்தோனியார் நாடகம் |
| 38 | 2020 | புனித செபஸ்தியார் வாசகப்பா |
| 39 | 2020 | மன்னார் மாதோட்ட தமிழ் புலவர் சரித்திரம் |
| 40 | 2020 | இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் மற்றும் சிலம்பரசி நாட்டுக்கூத்துக்கள் |
| 41 | 2020 | கூத்திசை நாடகம் |
| 42 | 2020 | இரு கூத்துக்கள் |
| 43 | 2020 | பண்பாட்டு மேம்பாட்டிற்கான கலைகள், இருப்பும் எதிர்பார்ப்பும் |
| 44 | 2020 | வட மாகாணத்திலுள்ள முக்கியமான வணக்க ஸ்தலங்கள் |
| 45 | 2020 | வடந்தை |
| 46 | 2021 | சாந்தன் படைப்புலகம் |
| 47 | 2021 | திராவிடப் பிரகாசிகை |
| 48 | 2021 | கதிரைமலைப்பள்ளு |
| 49 | 2021 | கல்வித் தத்துவம் |
| 50 | 2021 | வேழம்படுத்த வீராங்கனை |
| 51 | 2021 | நொண்டி நாடகம் |
| 52 | 2021 | திருக்குறள் ஆய்வு |
| 53 | 2021 | பதிற்றுப்பத்து ஆராய்ச்சி உரை |
| 54 | 2021 | வாணர் படைப்புக்கள் |
| 55 | 2021 | வீரமணி ஐயரின் படைப்புக்கள் |
| 56 | 2021 | ஞானசவுந்தரி நாடகம் |
| 57 | 2021 | சந்தொம்மையார் வாசாப்பு |
| 58 | 2021 | மன்னார் மாதோட்டப்புலவர்கள், கலைஞர்கள் ஐம்பது ஆளுமைகளின் வாழ்வும் வரலாறும் படைப்புக்களும் |
| 59 | 2021 | வடந்தை |
| 60 | 2021 | மட்டக்களப்பு நாட்டார் பாடல்கள் |
| 61 | 2022 | வடந்தை |
| 62 | 2022 | தென் யாழ்ப்பாணம் |
| 63 | 2022 | சொற்பொருள் அகராதி |
| 64 | 2022 | ஈழத்தமிழர் பண்பாட்டு ஆய்வுகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2022 ஆம் ஆண்டுக்கான

# கலைக்குரிசில் விருது
# இளங்கலைஞர் விருது
# சிறந்த நூற் பரிசு

## பெறுவோர் விபரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2022



## திரு. செபஸ்ரியாம்பிள்ளை யோசப்பாலா

**சிறுகதை**
**யாழ்ப்பாணம்**

திரு. செபஸ்தியாம்பிள்ளை யோசப்பாலா அவர்கள் 1951.02.14 இல் குருநகரில் பிறந்துள்ளார். இல.10/2, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்துவரும் இவர், ஓர் உளவியல் எழுத்தாளர். சமூகப் பிரச்சினைகளைத் தனது படைப்புக்களிலே பிரக்ஞை பூர்வமாக சித்திரிக்கின்ற சிறப்பு இவரது தனித்துவமாகக் குறிப்பிட லாம். யோசப்பாலா அவர்கள் ஈழத்தின் சிறுகதை ஆசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவர். சமூக, சமய, கலாசாரப் பணிகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். கத்தோலிக்கக் கலை இலக்கிய வட்டத்தின் செயலாளராகவும் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் உபதலை வராகவும் இருந்திருக்கின்றார். காலத் திற்குக் காலம் பல்வேறு எழுத்துப் பட்டறைகள், கருத்தரங்குகள் என்பவற்றை நடாத்தி புதிய எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்துள்ளார். பத்திரிகைத் துறையிலும் தனது தடத்தினைப் பதித்துள்ளார்.

இவரின் உணராத உண்மைகள், திருப்பம், தரிசனம், மகிழ்ச்சியின் இரகசியம், உளமார, உளம்மகிழ, கிசுகிசு 100, சிறு வர் சிந்தனைகள் முதலான படைப்புக்கள் விதந்து குறிப்பிடத் தக்கன. 'உளச்சமூகச் சீராளன்' விருது கரித்தாஸ் நிறுவனத்தால் 2007 இல் வழங்கப்பட்டது. 2014ஆம் ஆண்டு 'யாழ் இரத்தினா' விருது யாழ்ப்பாண பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டது. 'கலாபூஷணம்' விருதினை 2017 இல் பெற்றுக்கொண்ட இவருக்கு IBC 'மூத்த ஆளுமை' ( உளவியல்) விருதை 2019 இல் வழங்கிக் கௌரவித்தது. 2022 இல் வாழ்நாள் சாதனையாளர் விருதை நோர்வே ஆரியாலயம் வழங்கியுள்ளது. தற்போதும் இலக்கியப் பணியில் சிறப்பாக ஈடுபட்டு வருகின்றார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2022






## திரு. சண்முகம் புஸ்பராஜா

**நாவல்**
**நல்லூர்**

நல்லூர் நாவலர் வீதி, அரியாலையினை வதிவிடமாகக் கொண்ட திரு. சண்முகம் புஸ்பராஜா அவர்கள் 1950.04.12 ஆம் திகதி பிறந்தார். இவர் நாடகம், நாடக எழுத்துரு, கவிதை இலக்கியம், சிறுகதை என எழுத்துத் துறையில் பல் பரிமாணத் தளங்களில் செயற்பட்டுக்கொண்டிருப்பவர்.

இவர் 1970 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டுவரை வசந்த வாழ்வு, தலைத்தீபாவளி, காஞ்சனம் போன்ற பல நாவல்களை 2012 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக படைப்புலகிற்குத் தந்துள்ளார். தற்போதும் 'வரன் தேடும் சொப்பன சுந்தரி' எனும் நாவலையும் அண்மையில் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவரது நாவல்கள் பலரது பாராட்டுக்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவர் நாடகங்களை, நாவல்களை உருவாக்கிய துடன் அவற்றினை நெறியாள்கையும் செய்துள்ளார். இவரது கலைச்சேவைக்காக 2014 ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக் கப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டு நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவையால் கலைஞானச் சுடர் எனும் விருதும் வழங்கிக் கௌர விக்கப்பட்டதுடன், 2015ஆம் ஆண்டு அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலை யத்தினரால் கலைமகளின் கலைச்சிகரம் எனும் விருதும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டார். 2017 ஆம் ஆண்டு சர்வோத யம் அமைப்பினரால் கலைமாமணி விருதும் வழங்கிக் கௌர விக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2022






## திரு. கிளமென்ட் மாட்டீன் நெல்சன்

**நாடகம்**
**யாழ்ப்பாணம்**

திரு. கிளமென்ற் மாட்டீன் நெல்சன் அவர்கள் இலக்கம் 3, அடம்பன் வீதி, இரண்டாம் ஒழுங்கை யாழ்ப்பாணத்தினை வதிவிடமாகக் கொண்டவர். 1949ஆம் ஆண்டு பிறந்துள்ள நிலையில் சிறுவயது முதலே கலையில் ஆர்வங் கொண்டவராகத் திகழ்ந்தார். இளவயதிலே பன்முக ஆளுமை கொண்டவராக, இளைஞர் கலைக்கழகங்கள், ஆலயப்பணிகள், சமூகப் பணிகள், அரங்கப் பணிகள் என தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வந்ததுடன், திருமறைக் கலாமன்றம், மற்றும் பிரதேச கலைச் செயற்பாடு களிலும் ஆர்வங் கொண்டவராகத் திகழ்ந்தார். பாடசாலைக் காலம் முதல் நாடகம் நாட்டுக் கூத்துக்களில் ஈடுபட்டு வந்த இவர், 1971 ஆம் ஆண்டு தொடக்கம் திருமறைக் கலாமன்ற அரங்கமைப்பில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியதுடன், திருமறைக் கலா மன்றத்தின் பிரமாண்டமான படைப்புக்கள் அனைத்திற்கும் அரங்க வடிவமைப்பாளராகவும், அரங்க நிர்வாகியாகவும் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். திருமறைக் கலாமன்ற நிகழ்வுகளுக்கு அப்பாலும் பல்கலைக்கழக நிகழ்வுகள், மற்றும் போர்க்கால நாடக நிகழ்வுகளிலும் அரங்க நிர்வாக வடிவமைப்பாளராகச் செயற்பட் டமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு வீடியோ திரைப்படங்களான பலிக்களம் மற்றும் யூதகுமாரன் ஆகியவற்றிலும் இவர் ஈடுபட டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது கலைச் சேவைக்காக 2005 இல் திருமறைக் கலா மன்றத்தின் 40 வருட கலைப்பயணத்தில் அர்ப்பணிப்பு சேவை விருது, 2011 இல் திருமறைக் கலாமன்றத்தால் 'கலை ஞான பூரணன்' விருது, 2011 இல் யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையால் யாழ்ரத்தினா விருது, 2018 இல் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கலாபூஷணம் விருதும் கிடைக்கப் பெற்றமை சிறப்பானதே.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2022






## திரு. மாப்பாணி சிவகுரு சிவதாசன்

**ஓவியம்**
**நல்லூர்**

1953 இல் பிறந்த திரு. மாப்பாணி சிவகுரு சிவதாசன் அவர்கள் நல்லூர் பிரதேசத்தினைச் சேர்ந்த திருநெல்வேலி ஆடியபாதம் வீதியினை முகவரியாகக் கொண்டவர். இவர் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்ற பயிற்றப்பட்ட சித்திர ஆசிரியர் ஆவார். ஓவியக் கலையை ஆரம்பத்தில் சுயமாகக் கற்று வந்த இவர், தனது வீட்டில் சித்திரப் பயிற்சிக் கூடத்தை அமைத்து சித்திரக் கலையில் ஆர்வம் மிக்கவர்களை ஊக்குவித்து வருகின்றார். இரண்டு வருட காலத்திற்கொருமுறை ஓவியக் கண்காட்சிகளைப் பல இடங்களில் நெறிப்படுத்தியதுடன், மலர்கள், நூல்கள் பலவற்றிக்கு அட்டைப்படங்களை வரைந்துள்ளார். இவரது ஓவி யங்கள் பலவற்றை, பலரும் ஆர்வம் கொண்டு வாங்கிச் செல்வது வழக்கம். தத்ரூபமாக வரையக் கூடிய பல கைப்பணி ஆக்கங்களை யும், மரம், மற்றும் பல்வேறு ஊடங்களில் பல சிற்பங்களையும் ஆக்கியுள்ளார்.

இவர் 1996 இல் வடிவமைத்தல் கலைக்காக ஆளுநர் அவர்க ளால் கௌரவிக்கப்பட்டார். 1990 ஆம் ஆண்டு தேசிய அருங் கலைகள் பேரவையில் ஓவியத்திற்காக முதலாமிடம் பெற்றுக் கொண்டார். இவரது ஓவியக் கண்காட்சிகள் “ஞாபகங்கள்”, மௌன மொழிகள், சின்னச்சின்னக் கைகள் என்னும் பல பெயர்களில் யாழ்ப்பாணம், வடமராட்சி, திருகோணமலை என பல இடங்களில் இடம்பெற்றமையும் சிறப்பானதே. இவர் பிரதேச மலர்களின் அட்டைப்படங்கள், கலாசார விழா மலர்களின் அட்டைப்படங்கள் வரைந்தமையும் குறிப்பிடத்தக்கது. இவரது ஓவியத்துறையைப் பாராட்டி 2017 ஆம் ஆண்டு நல்லூர் கலாசாரப் பேரவையால் கலைஞானச் சுடர் எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2022






## திருமதி. தைரியநாதன் தங்கேஸ்வரி

**குறும்படம்**
**வவுனியா**

திருமதி. தைரியநாதன் தங்கேஸ்வரி அவர்கள் 1952.09.22 இல் யாழ்ப்பாணத்தில் பிறந்துள்ளார். தற்போது காளிகோவில் வீதி, 4 ஆம் ஒழுங்கை, மகாறம்பைக்குளம், வவுனியாவில் வசித்து வருகின்றார்.

குறும்படம், முழுநீளத் திரைப்படம், மேடை நாடகம், மேடை நாடக வேட உடை, ஒப்பனை, அலங்காரம் என இவரது ஆளுமைச் செயற்பாடுகள் விரிவடைந்து காணப்படுகின்றன. 1994 இல் வெளிவந்த 'பிஞ்சு மனம்' முழுநீளத் திரைப்படத்தில் 'அம்மா' கதாபாரத்திரத்தில் நடித்துள்ளார். இதனைத் தொடர்ந்து 2002 இல் 'அம்மா நலமா', 2003 இல் 'இவ்வழியால் வாருங்கள்', 2012 இல் 'இனி அவன்', 2015 இல் 'பூவிழி', 2016 இல் 'வினவு' முதலான படங்களில் நடித்துள்ளார்.

யாழ்ப்பாணத் திருமறைக் கலாமன்றத்தின் நிரந்தர உறுப்பின ராக இன்றுவரை செயற்பட்டு வருகின்ற இவரது நடிப்புப் பலராலும் பாராட்டப் பெற்றுள்ளது. அரங்க நிகழ்வுகளிலும், பல்வேறு கலைச் செயற்பாடுகளிலும் பின்னணிக் கலைஞராகவும், அரங்க உதவி யாளராகவும், வேட உடை வடிவமைப்பு உதவியாளராகவும் இருந்துள்ளார். ஒரு பெண் கலைஞராகிய இவர் கலை ஆற்றல் களையும், செயற்பாடுகளையும். கலைசார் பங்களிப்புக்களையும் இன்றுவரை நிகழ்த்திக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.

270128



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2022






## திரு.வடிவேலு பாலச்சந்திரன்

**வாத்தியக்கருவிகள்
கோப்பாய்**

திரு. வடிவேலு பாலச்சந்திரன் அவர்கள் 1947.12.20 இல் சங்கானையில் பிறந்தார். இவர் தற்போது புத்தூர் கிழக்கில் வசித்து வருகின்றார். இவரது பிரதான துறை வாத்தியக்கருவி (வயலின்) உருவாக்கம். அத்துடன் சிற்பவேலைகளிலும் திறன்படைத்தவ ராகக் காணப்படுகின்றார்.

இலங்கையில் முதன் முதலாக வயலின் இசைக்கருவியை உருவாக்கிப் பலரது பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்ட கலை ஞராகத் திகழ்கின்றார். 74 வயது நிரம்பிய இவர் சங்கானை காளி கோவிலடியில் வாழ்ந்த சிறந்த கைத்தொழிலாளரான கார்த்திகேசு வடிவேலுவின் புதல்வராவார்.

அராலியூர் பிரபல சிற்பக்கலைஞரும் முதன்முதலில் இலங்கையில் நாதஸ்வரம் உருவாக்கி, பல புகழ்பெற்ற நாதஸ் வரக் கலைஞர்களுக்குக் கொடுத்து, அவர்களின் பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்ட அமரர் சின்னத்தம்பி அமரசிங்கத்தைக் குருவாகக் கொண்டு அவர் வழியில் நின்று வயலின் இசைக் கருவியை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

2019 இல் பிரதேசமட்ட விருதாக, 'மூத்த இசைக்கருவி வல்லாளர்' என்ற விருதினையும், 2021 இல் 'சிற்ப அபிமானி' விருதை தேசிய கைத்தொழில் அமைச்சிடமும், மாகாணமட் டத்தில் 2018, 2019 களில் 'மாசிற்பம்' விருதினையும் பெற்றுள்ளார். இன்றுவரை தனது கலைப்பணியைச் சிறப்புடன் முன்னெடுத்து வருகின்றார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2022








## திரு. அப்புக்குட்டி சிவபாதம்

**இசைநாடகம்**
**சங்கானை**

திரு. அப்புக்குட்டி சிவபாதம் அவர்கள் 1943.03.15இல் தொல்புரத்தில் பிறந்த இவர் இசைநாடகத்துறையில் சமார் 50 வருடங்களாகக் கலைப்பணியாற்றி வருகின்றார்.

தொல்புரம் கலாலயத்தினால் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில், 16 ஆம் திருவிழாவாகிய வேட்டைத் திருவிழாவை முன்னிட்டு 2011 ஆம் ஆண்டு வெற்றிகரமாக ஆற்றுகை செய்யப்பட்ட குந்தியின் செல்வன் புராண இசை நாடகத்தில் கண்ணன் பாத்திரம் ஏற்று மிகச் சிறப்பான முறையில் தனது நடிப்புத்திறனை வெளிப்படுத்தியுள்ளார். தொடர்ந்து 'இரணிய செல்வன், 'பக்த குசேலர்', 'நரகாசூரன்', 'கம்ஷன்', 'அபிமன்யு' முதலான இசை நாடகங்களில் பங்கேற்று நடித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு 'கலைவாரிதி' விருது கிடைத்தமையைத் தொடர்ந்து 2015 இல் தேசிய விருதாகிய கலாபூசண விருது, கலா சார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கிக் கௌரவிக்கப் பட்டார். பல்வேறு பாராட்டுகளையும் பட்டங்களையும் வென்று நிற்கும் இக்கலைஞரின் பணி நீண்டவண்ணம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2022






## திரு. அம்பலவாணர் ஜெயராமன்

**வாத்தியக்கலை**
**(வயலின்)**
**நல்லூர்**

திரு. அம்பலவாணர் ஜெயராமன் அவர்கள் 1950.08.29 இல் யாழ்ப்பாணத்தில் பிறந்தார். இவர் வயலின் கலைத்துறையில் சுமார் 40 வருடங்களுக்கு மேலாக கலைப்பணியாற்றி வருகின்றார்.

இவரது தந்தையார் பிரபல மிருதங்க வித்துவான் திரு. வேலுப்பிள்ளை அம்பலவாணர், கலைக்குடும்பத்திலே இரண்டாவது புத்திரனாகப் பிறந்த இவர் தனது 09 ஆவது வயதில் யாழ். ரஸிகரஞ்சன சபாவில் அப்பா மிருதங்கம் படிப்பித்துக்கொண்டு இருக்கும்போது வயலின் கற்க ஆரம்பித்தார். இவரது குரு கலாகீர்த்தி பிரம்மஸ்ரீ எஸ். சர்வேஸ்வரசர்மா என்ற வயலின் வித்துவான் ஆவார். தனது 12 ஆவது வயதில் வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்மன் தேவஸ்தான நவராத்திரி விழாவில் முதல் முறையாக தனி வயலின் கச்சேரி செய்ய ஆரம்பித்து, பின் ஆலயங்களில், திருமண வைபவங்களில், இசைவிழாக்களில் தனி வயலின் (சோலோ) வாசித்து வந்துள்ளார். தனது 20 ஆவது வயதில் இசைக் கச்சேரிகளுக்கு பக்கவாத்தியம் வாசிக்க ஆரம்பித்துள்ளார்.

நடன அரங்கேற்றத்துடன், இசை அரங்கேற்றங்கள், மிருதங்க அரங்கேற்றங்களுக்குமாக இன்று வரை வாசித்துக்கொண்டிருக்கின்றார். அத்துடன் வட இலங்கை சங்கீதசபை நடாத்தும் கலா வித்தகர் அவைக்காற்றுகையில் இன்று வரை வாசித்து வரும் இவர் இலங்கையின் பிரசித்திபெற்ற ஆலயங்கள் பாடல் இறுவெட்டுக்களிலும் வயலின் இசையைக் கொடுத்து வருகின்றார். பாடசாலை மட்ட தமிழ்த்தின நிகழ்வுகளிலும், ஈழத்துப் புரட்சிப் பாடல்கள், மெல்லிசைப் பாடல்கள், குறும்படங்களிலும் வாசித்து வருகின்றார்.

"கலைச்சுடர்", "சுபஸ்வர ஞானபூஷணம்", " அருள்நாத சுரபி" முதலான பல்வேறு விருதுகளையும் பெற்றுள்ள இவர் இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் தனது கலைப்பணியினை ஆற்றி வருகின்றார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2022






## திரு. சுப்பிரமணியம் பத்மநாதன்

**சிற்பம்**
**நல்லூர்**

திரு. சுப்பிரமணியம் பத்மநாதன் அவர்கள் 1953.03.04 இல் யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் 04/01 காரைக்கட்டு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் வசித்து வருகின்றார். ஈழத்துச் சித்தர்களில் ஒருவரான தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் பூட்டனான இவர் சிற்பம், சித்திரம் ஆகிய இரு துறைகளிலும் விற்பன்னராகத் திகழ்கின்றார்.

ஆலயங்கள், பாடசாலைகளில் ஓவியம் வரைதல், சிற்பங்கள் செய்து கொடுத்தல், அட்டைப்பட ஓவியங்கள் வரைதல், துணியில் சாயமூட்டி சித்திரம் பதித்தல், காகிதம் மூலம் உருவங்கள் செய்யும் முறை என்று பலவிதமான வழிகளிலே தனது தடத்தினைப் பதித்துள்ளார். நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் ஓவியத்தினை வரைந்துள்ளார். மேலும் குறும்படம் தயாரித்தல். நாடகம் போன்ற சமூகத்திற்கு நல்ல படைப்புக்களை நெறிப்படுத்தியுள்ளார். பல கலை நுணுக்கங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் திரு. சுப்பிரமணியம் பத்மநாதன் அவர்கள் இளம் சமூகத்தினருக்குப் பயிற்சிப் பட்டறைகளை நடாத்தி வளவாளராகவும் செயற்பட்டு வருகின்றார். உயர் புடைப்பு, சுவர் சிற்பங்கள் அமைத்தலில் மிகச் சிறந்து விளங்குகின்றார்.

தான் கற்ற விடயங்களை ஒழிவுமறைவு இன்றி அடுத்த சந்ததிக்குக் கொடுக்கும் இவரது மனப்பாங்கு போற்றுதற்குரியது.

தெல்லிப்பளை ஹெரிரேஜ் கொட்டல் உட்புறச்சுவர் புடைப்புச் சிற்பம், கிளிநொச்சி மாமரம்பதி முகப்பு, யோகசுவாமி திருவுருவம், மாதகல் முன்பள்ளி சரஸ்வதி சிலை, கந்தரோடை முகப்பு (குளத்தடி) பிள்ளையார் சிலை, யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை சுவர் ஓவியங்கள் முதலானவை போற்றுதற்குரியன.

பல்வேறு கௌரவிப்புகளையம், பாராட்டுகளையம் பெற்ற இவர், நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் 'கலைஞானச் சுடர்' விருதை 2016 இலும், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஆக்கத்திறன் விருதினை 2017 இலும், IBC தமிழின் பன்முக ஆளுமை விருதை 2019 இலும் பெற்றுள்ளார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2022






## திரு. அறுக்காஞ்சிப்பிள்ளை மரியதாஸ்

**நாட்டுக்கூத்து**
**யாழ்ப்பாணம்**

இலக்கம் 37, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தினை வதிவிடமாகக் கொண்ட திரு. அறுகாஞ்சிப்பிள்ளை மரியதாஸ் அவர்கள் 1941 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 02 ஆம் திகதி பிறந்துள்ளார். இவர் நாட்டுக் கூத்து (தென்மோடி) கலையில் சிறந்து விளங்குவதுடன், கலையில் தனக்கான தனித்துவ அடையாளத்தையும் கொண்டவர்.

60 வருடங்களுக்கு மேலான கலைச் சேவை அனுபவத்தினைக் கொண்ட இவர் பல நாட்டுக் கூத்து மேடைகளை அலங்கரித்த துடன், இவரால் நெறியாள்கை செய்யப்பட்ட நாட்டுக்கூத்துக்கள், நாடகங்கள் பலவும் பெரிதும் பாராட்டுப் பெற்றவையே. இவரால் இசையமைப்புச் செய்யப்பட்ட இசைக்கச்சேரிகள், கிறிஸ்தவப் பாடல்கள் அடங்கிய இசைத்தட்டுக்கள் வெளியீடு செய்யப்பட்ட மையும் விசேட அம்சமாகும். இவர் தனது கலைத் தொடர்ச்சியாக ஆலயங்கள், பாடசாலைகளிலும் தனது கலைச்சேவையினை வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவரது நாட்டுக்கூத்துக் கலைச்சேவையினைப் பாராட்டி 2009 ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன், 2002 இல் வலிகாமம் தென்மேற்கு கலாசாரப் பேரவையினால் இவரது கலைச் சேவையினைப் பாராட்டி கலைஞாயிறு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். மேலும் 2006 ஆம் ஆண்டு இலங்கைக் கலைக்கழகத்தினால் தேசிய மட்ட விருதுகள் பெற்றுக் கொண்ட மையும் சிறப்புக்குரியதே.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2022






## திரு. சரவணமுத்து முருகையா

**கவிதை இலக்கியம்**
**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் இல.45, சுவாமியார் வீதி, கொழும்புத்துறையைச் சொந்த இடமாகக் கொண்ட திரு. சரவணமுத்து முருகையா அவர்கள் 30.04.1941 இல் பிறந்து 80 வயதினை அடைந்த நிலையில் கவிதை இலக்கியத் துறையில் தனக்கான தனியிடத்தைக் கொண்டு திகழ்கின்றார். இலக்கியத்துறையில் கவிதைகள் மட்டுமல்லாது கீர்த்தனைகள், 'சிறுகதைகள் போன்ற வற்றினைப் படைப்பதிலும் கைதேர்ந்து விளங்குபவர். இவர் 12 இற்கு மேற்பட்ட நூல்களை இத்துறை சார்ந்து வெளியிட்டமையம் பாராட்டுக்குரிய விடயமே. 1987 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை இவரது கீர்த்தனைகள், கவிதைகள், சிறுகதைகள் வெளிவந்த வண்ணம் உள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் வலம்புரி பத்திரிகை நடாத்திய சிறுகதைப் போட்டியில் பங்குபற்றி பாராட்டுப் பெற்றமையும், உதயன் நாளேட்டின் வெள்ளிவிழாவின் போது பாராட்டி விருது பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு யாழ்ப்பாணம் பிரதேச கலாசாரப் பேரவையால் யாழ்ரத்னா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், யாழ். மாவட்ட கலை கலாசாரப் பேரவையால் யாழ்முத்து விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இவரது ஆக்கங்கள் இன்றும் பலருக்கு பயன்மிக்கதாக அமைந்துள்ளன என்பதும் சிறப்பிற்குரியதே.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2022





## திரு. சிற்றம்பலம் சிவஞானராஜா

**இசைத்துறை**
**நல்லூர்**



திரு. சிற்றம்பலம் சிவஞானராசா அவர்கள் 1952.09.18 இல் அளவெட்டியில் பிறந்தவர் தற்போது ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கில் வசித்து வருகின்றார். இளைப்பாறிய ஓய்வு பெற்ற சங்கீத ஆசிரியராகிய இவர் கவிதை, கட்டுரை, விமர்சனங் கள் எழுதுவதில் ஆற்றல்மிக்கவர். இலங்கையில் வெளிவரும் பத்திரிகைகள் பலவற்றில் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியன நடாத்தும் பயிற்சிப்பட்டறைகளில் வளவாளராகக் கலந்து ஆக்கபூர்வமான செயற்பாடுகளை வெளிப்படுத்தும் ஆற்றல்மிக்க வரான இவர் வட இலங்கை சங்கீதசபையின் சங்கீத கலாவித்தகர் பட்டத்தினை 1991 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்டார்.

பஞ்சாமிர்தம், உலக்கை ஆகிய நூல்களை வெளியிட்டிருக்கும் இவர் உயர்தர மாணவர்களுக்கான 150 வினாவிடை - சுருதி (இசை) தொகுப்பு நூலினையும் தந்துள்ளார். 'பிருந்தாவனம்' எனும் இசை வீடியோவையும், 'முதுசொம்' என்னும்நாட்டார் பாடல் இறு வெட்டினையும் வெளியிட்டுள்ளார்.

இந்திய நாட்டில் ' தமிழ் முகில்' என்ற பட்டமும் சந்திதியான் ஆச்சிரமம் 'ஞானச்சுடர் விருதினையும், ஆசிரியர் விருது, அஞ்சல் விருதுகளையும் பெற்றிருக்கும் இவருக்கு நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் 'கலைஞானச்சுடர்' விருதும், இந்து கலாசார திணைக்களம், மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 'கலைஞானகேசரி', 'கலாபூஷணம்' எனும் விருதுகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2022






## திருமதி மதிவாணி விக்னராஜா

**நடனத்துறை**
**நல்லூர்**

திருமதி மதிவாணி விக்னராஜா அவர்கள் 1960.06.30 ஆம் திகதி வடலியடைப்பு, பண்டத்தரிப்பில் பிறந்த இவர் தற்போது திருநெல்வேலி வடக்கு, நல்லூரில் வாழ்ந்து வருகின்றார். மானிப்பாய் நாட்டியாலய அதிபர் திருமதி. வினோதினி ராஜ்குமார் அவர்களிடம் நடனம் பயின்ற இவர்: பரதநாட்டிய நுட்பங்களைக் கொக்குவில் கலாபவனத்தில் கலாகீர்த்தி திருமதி. சாந்தினி சிவனேசனிடம் கற்றுள்ளார். 1980ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அரங்கேற்றம் கண்ட இவர் 1984 - 1989 இல் யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவில் பயின்றுள்ளார். அத்துடன் வட இலங்கை சங்கீத சபை பரீட்சையில் பரதநாட்டியம், நாடகமும் அரங்கியலும் துறைகளில் ஆசிரியர் தரத்தில் தேறிய இவர் 1992/1993 இல் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நடனத்துறையில் விசேட பயிற்சி யும் பெற்றுள்ளார்.

இவரது ஆசிரியப் பணி 1988 இல் இருந்து 2011 வரையான காலப்பகுதி. 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 வரை அழகியல் உதவிக் கல்விப் பணிப்பாளராக வடமாகாணக் கல்வித் திணைக் களத்தில் பணிபுரிந்துள்ளார். தலைசிறந்த ஆற்றுகையாளராகவும், ஆற்றுகைப்படுத்துநராகவும் சிறந்து விளங்குவதுடன் மட்டு மல்லாது, தேசிய கல்வி நிறுவகத்தில் பரதநாட்டிய கலைத்திட்டக் குழு, அங்கத்தவராகவும், 1997- 2000 வரை வவுனியா தேசிய கல்வி யியற் கல்லூரியில் நடனபாட வருகைதரு விரிவுரையாளராகவும் பணிபுரிந்தமை குறிப்பிடத்தக்கது.

"ஸாயி ஸ்ருதி" நடனப்பள்ளி ஸ்தாபகரான இவர் அனைத் துலக தமிழ்க்கலைத்தேர்வு - பரதநாட்டியம் பரீட்சையின் பிரதம பரீட்சகராகவும் சேவையாற்றியுள்ளார். இவரது கலைப்படைப் புக்கள் சிறப்பான தரம் வாய்ந்தவை. நிறைந்த நாட்டியவியலாளர் களைத் தோற்றுவித்துள்ளார். இவர் இன்றுவரை சிறந்த வளவாளராகப் பணிபுரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2022






## திரு. சின்னத்தம்பி இரத்தினசிங்கம்

**கிராமியக் கலை**
**கோப்பாய்**

நாவற்காடு அச்சுவேலியைச் சொந்த இடமாகக் கொண்ட திரு. சின்னத்தம்பி இரத்தினசிங்கம் அவர்கள் 20.09.1944 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பாடசாலைக் காலத்திலேயே இயல், இசை நாடகத்துறையில் ஈடுபட்டு வந்துள்ளார். அத்தோடு பாடசாலைக் காலம் முதலே நாடகம், வில்லுப்பாட்டு போன்ற கலைத்துறை களில் திறம்பட நெறியாளராகவும் செயற்பட்டு வந்துள்ளார். இவர் 1970 ஆம் ஆண்டு தொடக்கம் கலைப்பணிக்கு தன்னை அர்ப் பணித்து சினிமாப்படக் காட்சியாளராகவும் செயற்பட்டவர். இவர் 1974 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை வேந்தன் புராண நாடகம், வாடிய மலர் சமூக நாடகம், வடலியமைப்பு சமூக சீர் திருத்த நாடங்களின் இயக்குனராகவும் எழுத்தாளராகவும் பல்வேறு ஆற்றுகைகளை நெறிப்படுத்தியுள்ளார். நாடக இயக்குனராகச் செயற்பட்டு வரும் இவர் வில்லிசைக்குழு இயக்குனராகவும் செயற்பட்டு வருகின்றார். 1990 ஆம் ஆண்டு முதல் வில்லிசைக் குழு உறுப்பினராகவும், வில்லிசைக்குழு தலைவராகவும், வில்லிசைக்குழு பயிற்றுவிப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றார். இன்றுவரை வில்லிசைக் கலையை சிறந்த முறையில் பாடசாலை மாணவர்களுக்கும், கலைமன்றங்களுக்கும் பயிற்றுவித்துவரும் இவரது கலைச் செயற்பாட்டினைப் பாராட்டி 1990 ஆம் ஆண்டு 'சிறந்த சொல்லாளர்' எனும் விருது பிரதேச செயலகத்தால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அவ்வாறே 2017 ஆம் ஆண்டு செம்புலக்குரிசில் எனும் விருதினை இவரது கலைச் சேவையைப் பாராட்டி கோப்பாய் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022 ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2022






## திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை

**நாடக எழுத்துரு**
**உடுவில்**

திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை அவர்கள் 1939.04.17 இல் இணுவிலில் பிறந்துள்ளார். ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள இவர் ஒரு சிறந்த தமிழ்ப்பண்டிதையாக இருந்து தமிழ்த்துறைக்கும் கலைத்துறைக்கும் ஆற்றிவரும் பணிகள் மகத்தானவை. யாழ். இராமநாதன் கல்லூரியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் இவரது நாடக எழுத்துருப் பணி பல்வேறு தளங்களிலே வெளிப்பட்டுள்ளது. தற்போது தனது 83 ஆவது வயதிலும் நாட்டிய நாடகத்தொகுப்பு வெளியிடுவதற்கு உள்ளமையானது இவரது சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றது.

இவரது படைப்புக்களாக நூற்றுக்கும் மேற்பட்ட நாட்டிய நாடக எழுத்துருக்களை எழுதியதுடன், திருவூஞ்சல்கள், பள்ளி எழுச்சி, குடமுழுக்கு, பிள்ளைத்தமிழ், கட்டுரைகள், கவிதைகள், வில்லிசைகள், நாடகங்கள், பாடல்கள் முதலியவற்றினைப் படைத்து திருநெறிய தமிழ் மறைக் கழக அமைப்பாளராகப் பணிபுரிந்து வரும் இவர், இக்கழகத்தின் 30 ஆவது ஆண்டுவிழா மலரினையும், கிராமிய நடனங்கள் என்ற நூலினையம் வெளியிட்டுள்ளார்.

2011 ஆம் ஆண்டு 'கலாபூஷணவிருது', பிரதேச 'ஞானஏந்தல்' விருது, சிறந்த அறநெறி ஆசிரியர் விருது, சிறந்த அறநெறிச் சுடர் விருது, தேசிய மேன்மை விருது முதலியவற்றினைப் பெற்றுள்ளார். 2021 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழகத்தால் புலமையாளர் கௌரவிப்பு விருது கிடைக்கப்பெற்றது. நாட்டிய நாடக எழுத்துருக்களைத் தேசிய விருதுகள் தொடர்ந்து பெற்று வந்தமை பாராட்டுக்குரிய விடயமாகும். 2014 இல் தேசிய மட்ட தமிழ் மொழித்தினப் போட்டியில் முதலிடம் பெற்ற நாடக எழுத்துருக்காக பாராட்டுப் பெற்றுள்ளார். நிறைந்த மாணவர்கள் இவரது அறநெறிப் பாடசாலையில் கற்று வருகின்றனர்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022 ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குரிசில் விருது-2022






## திரு. பிரான்சிஸ் டொமினிக்

**ஒப்பனைக்கலை**
**யாழ்ப்பாணம்**

திரு. பிரான்சிஸ் டொமினிக் அவர்கள் யாழ்ப்பாணம் 48/3 பழைய பூங்கா வீதியைச் சொந்த இடமாகக் கொண்டதுடன் இவர் 04.09.1949 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்தார். இன்றுவரை யாழ்ப்பாணத்தில் ஒப்பனைக் கலைக்குக் கைதேர்ந்த ஒருவராகத் திகழ்ந்து வருகின்றார். இவர் ஒப்பனைக் கலையுடன் ஆடை அலங் காரம், காட்சி அமைப்பு, வேடப் புனைவுக்கான அலங்காரங்கள் போன்ற பல கலைச் செயற்பாடுகளிலும் உன்னதமானவராகச் செயற்பட்டு வருகின்றார். இவர் தனது ஒப்பனைக் கலையினை தனது தந்தையிடமும் மூத்த சகோதரனிடமும் மற்றும் பெரியப்பா விடமும் கற்றுக்கொண்டார். இவர் தனது ஒப்பனைக் கலையினை வைர முத்துவின் அரிச்சந்திரா நாடகத்திலும் மரியசேவியரின் திருப்பாடு களின் காட்சிகள் பலவற்றிலும் கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற ஆங்கில நாடகத்திலும், திருமறைக் கலாமன்றத்தி னால் நடாத்தப்பட்ட நாட்டுக்கூத்துக்கள், இசை நாடகள், இராம நாதன் கல்லூரியின் இசை நாடகப்போட்டி, உடுவில் மகளிர் கல் லூரியின் ஆங்கில நாடகப் போட்டிகள், அரியாலை காசிப்பிள்ளை அரங்கு. சரஸ்வதி, பாஷையூரில் கண்டியரசன் நாடகங்கள் பல வற்றிலும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் நாடகங்கள், சூசைப் பிள்ளை நாடகம், தாழ்வுப்பாடு, கலைஞர் வேலானந்தன் ஆசிரி யரின் நாடகங்கள், ஆனை அடக்கிய அரியாத்தை, நெடுந்தீவிலும், அந்தோணி முத்து அண்ணாவியார் நாடகங்களில் என பல நாட கங்கள், கூத்துக்கள், இசை நாடகங்களிலும் ஒப்பனை, ஆடை அலங்காரம். காட்சி அமைப்புக்கள், வேட அலங்காரங்கள் என தனது ஆற்றல்களை வெளிப்படுத்தியுள்ளார்.

இவரது இவ் ஒப்பனைக் கலையைப் பாராட்டி 2015 ஆம் ஆண்டு ஒப்பனைக் கலைஞர் எனும் விருதினை வழங்கி திருமறைக் கலாமன்றத்தினர் கௌரவித்துள்ளனர். அவ்வாறே 2019 ஆம் ஆண்டு யாழ்ரத்தினா விருதினை வழங்கி யாழ்ப்பாண பிரதேச செயலகம் கௌரவித்துள்ளனர்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022 ஆம் ஆண்டுக்கான கலைக்குரிசில் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2022



## திரு. ஜோசப் அமுதன் டானியல்

**சிறுகதைத்துறை**
**மன்னார்**

திரு. ஜோசப் அமுதன் டானியல் அவர்கள் 1984.04.04 ஆம் திகதி மன்னாரில் பிறந்தார். இவர், 46, வயல் வீதி, சின்னக்கடை, மன்னாரில் வசித்து வருகின்றார். சமூகவியற்துறையில் M.A பட்டத்தினைப் பெற்ற இவர் சிறுகதைத்துறை மட்டுமல்லாது கவிதை, கட்டுரை, ஆய்வு, பாடலாக்கம், பேச்சு என்று பல்துறை தளங்களிலும் இயங்குபவராகக் காணப்படுகின்றார்.

சுமார் 20 வருடங்களுக்கு மேலாக இத்துறையில் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 2021ஆம் ஆண்டு வெளிவந்த 'ஒற்றை யானை' சிறுகதை நூல் இவரது படைப்பின் சிறப்பினைக் கூறிநிற்கின்றது.

அரச கலை இலக்கியப் பெருவிழாக்களிலே 2015, 2016இல் சிறுகதைத் துறையில் பிரதேச, மாவட்ட மட்டங்களிலே விருது மற்றும் பரிசில்கள் கிடைத்துள்ளமையும் சிறப்பான விடயங்களே.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான இளங்கரைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2022



## திருமதி அமிதாயன் சர்மலா

**ஓவியத்துறை**
**தெல்லிப்பளை**

திருமதி அமிதாயன் சர்மலா அவர்கள் 1988.06.21 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் மாணிக்கப் பிள்ளையார் ஒழுங்கை, மாவிட்டபுரம் தெல்லிப்பளையில் வசித்து வருகின்றார். யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பட்டதாரியான இவர் சிற்பம், கைவினைக்கலைத் துறைகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றவராகத் திகழ்கின்றார்.

இவர் ஓவியம் சார்ந்த வளவாளராகச் செயற்பட்டு வருவதுடன் மாணவர்களுக்குப் பயிற்சிகளையும் வழங்கி வருகின்றார். கலை முகம் சஞ்சிகை (2014), Sri Lankan Tamil Poetry (2014), யாழ்ப்பாணக் கூத்துக்கள், 'வாழத்துடிக்கும் வடலிகள்', 'பாக்கியம் பாட்டியின் விண்வெளிப்பயணம்', 'மாருதப்புரவீகம் - இதழ்-03', 'Breaking Barriers' முதலிய நூல்களில் அட்டைப் படங்கள் இவரின் கை வண்ணத்தில் உருவானவையே.

2015ஆம் ஆண்டு திருமறைக்கலாமன்றத்திலே ஓவியக் கண் காட்சி ஒன்றினை இவர் நடாத்தியிருந்தார். சிற்பங்கள் உருவாக் கம், புனரமைப்புப் பணிகள், Copper Art கலைத்துறையில் இவர் தனக்கென்றொரு தனி முத்திரையைப் பதித்துத் செயற்படுகின்றார் என்பது பாராட்டுக்குரியது.

வடஜோதி விருது, 'சில்ப அபிமானி' - ஜனாதிபதி கைப்பணி விருது, 'Art/Photography/ Short Film, Camel Art Foundation. Provincial Industrial Exhibition முதலான விருதுகளைப் பெற்றுள் ளார். ஐந்து தேசிய மட்ட விருதுகளை வென்ற இக்கலைஞர் அரச அலுவலராகவும் பணியாற்றி வருகின்றார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2022



இளங்கலைஞர்

## திரு. நோயல் வின்ஸ்டன் ஜெறாட் நிரோஷன்

**குறும்படத்துறை**
**யாழ்ப்பாணம்**

விதானையார் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட திரு. நோயல் வின்ஸ்டன் ஜெராட் நிரோஷன் அவர்கள் 1988 ஆம் ஆண்டு 12 மாதம் 15 ஆம் திகதி பிறந்துள்ளார். 18 வருடங்களுக்கு மேலாக குறும்படத்துறையில் அனுபவம் கொண்ட இவர் குறும் படத்துறையில் மட்டுமல்லாது முழுநீளத் திரைப்படம், தொலைக் காட்சித் தொடர்கள், வீடியோப் பாடல்கள், குறும் திரைப்படங்கள் என தனது ஆற்றல்களை வெளிப்படுத்தியுள்ளார். இவர் 08 இற்கும் மேற்பட்ட பல குறும்படங்களில் தனக்கான தனியிடத்தைப் பதித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பல்வேறுபட்ட தளங்களில் திறமைகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் இவர் யாழ்ப்பாண திருமறைக் கலாமன்றச் செயற்பாடுகள், மற்றும் கத்தோலிக்க இலக்கிய வட்டத்தின் செயற்பாடுகள், சுப்பர்சிங்கர் போட்டி, யூரூப் தளங்கள், புகைப்படச் செயற்பாடுகள் என பல்வேறு தடங்களில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஒருவராவார்.

இவரது கலைச் செயற்பாடுகளுக்காக 2012/ 2013 ஆம் ஆண்டு களில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் சிறந்த பாடகர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அத்தோடு 2013ஆம் ஆண்டு தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் சிறந்த நடிகர் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. மற்றும் இவரது கலைச் சேவைக்காக 2019ஆம் ஆண்டு யாழ்ப் பாண பிரதேச கலாசாரப் பேரவையால் இளங்கலைஞர் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையும் சிறப்பானதே.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2022



## திரு. ரவிச்சந்திரன் நிரோஜன்

**இசைநாடகத்துறை**
**சங்கானை**

தொல்புரம் மத்தி சுழிபுரத்தில் 1997.01.18 இல் பிறந்த திரு. ரவிச்சந்திரன் நிரோஜன் அவர்கள் 20 வருடங்களுக்கு மேலாக இசை நாடகத்துறையில் சிறந்து விளங்குகின்றார். இவர் 2002 ஆம் அண்டு முதல் இன்றுவரை பல்வேறு இசை நாடகங்களை நடித்து பலரது பாராட்டுக்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவர் தனது சிறுபராயம் தொடங்கி இசை நாடகங்களிலும், நகைச்சுவை நாடகங்களிலும் சமூக நாடகங்களிலும் முக்கிய பாத்திரமேற்று திறம்பட நடித்துள்ளார். ஆரம்பத்தில் சிறுசிறு பாத்திரங்கள் ஏற்று நடித்தவர் பின்னர் கதாநாயகனாக நடிக்கக் கூடிய திறமையினையும் வளர்த்துக் கொண்டவர். நடிகனாக மட்டுமல்ல, சமூகப்பணி, ஆலயப்பணிகளிலும் தன்னை தகவமைத்துக் கொண்டவர்.

குறிப்பாகத் தமிழ்த்தினப் போட்டிகள், பிரதேச மட்டப் போட்டிகளில் பங்குபற்றி, வெற்றியீட்டியதுடன், பல பாராட்டுச் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டார். இவை மட்டுமல்லாது கவிதை, சிறுகதை, வாத்தியக்கலை (மிருதங்கம்) கூத்து, நாடகம், இசை, ஊடகம் மற்றும் திரைப்படத்துறை, புகைப்படம் போன்ற துறைகளிலும் சிறந்து விளங்குகின்றார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2022







## திருமதி கிருஷ்ணாலினி அகிலன்

**வாத்தியக்கலைத்துறை**
**யாழ்ப்பாணம்**

திருமதி கிருஷ்ணாலினி அகிலன் அவர்கள் 1983.06.01 இல் மன்னாரில் பிறந்தார். இவர் தற்போது இலக்கம் 54, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் வசித்து வருகின்றார்.

இவர் வயலின் வாத்தியக்கலைத்துறை பற்றி 2006 ஆம் ஆண்டு ஆய்வுக்கட்டுரை நூல் ஒன்றினை வெளியிட்டுள்ளார். 'கணேஸ் குமரேஸ் சகோதரர்களின் இசைப்பணி பற்றிய ஆய்வு' என்பது நூலின் பெயராகும். தொடர்ந்து கர்நாடக சங்கீதத்தில் க.பொ.த உயர்தரத்தில் கற்கின்ற மாணவர்களுக்காக வினா விடைப் புத்தகம் ஒன்றினை 2009 இல் வெளியிட்டுள்ளார். அதே ஆண்டில் 'பண்ணாமிர்தம்' என்ற வயலின் இறுவட்டு ஒன்றினையும் வெளியிட்டுள்ளார்.

பல மேடைகளிலே தனது திறமையை வெளிப்படுத்திய இவர் புல்லாங்குழல் இசைத்துறையிலும் கலாவித்தகர் பட்டத்தினைப் பெற்றுள்ளார். நடன நாடகங்களில் சிறந்த பக்கவாத்தியக் கலைஞராகச் செயற்பட்ட இவர் கீதவாஹினி இசைக்கல்லூரியினால் 'கீதசுரபி' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 2020ஆம் ஆண்டு 'தினக்கூலி' நாடகத்திற்கான சிறந்த இசையமைப்பை வழங்கியமைக்காக புத்தசாசன சமய மற்றும் கலாசார அமைச்சினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தால் 2009 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட கர்நாடக இசைப்பரி சோதனை தேர்வில் சித்தியடைந்து அதில் பங்குபற்றும் வாய்ப்பும் கிடைக்கப்பெற்றுள்ளது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2022



## திரு. சற்குருநாதன் விதுர்ஷன்

**சிற்பத்துறை**
**நல்லூர்**

அரசடி லேன், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. சற்குருநாதன் விதுர்சன் அவர்கள் தர்சிகா கலைக்கூடத்தின் ஸ்தாபகரும் நிர்வாகியுமான கலைத்தென்றல் விஸ்வப்பிரம்மம் ஸ்ரீ நடராஜா சற்குருநாதன் அவர்களின் கனிஸ்ட புதல்வர் ஆவார்.

இவர் சிறுவயது முதல் குலத்தொழிலில் ஈடுபாடு காட்டிய இவர் பாடசாலையில் கல்வி கற்ற காலத்திலேயே தந்தையுடன் இணைந்து சிற்ப வேலைகளில் ஈடுபட்டார். தனது தந்தையைக் குருவாகக் கொண்டு பாடசாலைக் கல்வி நிறைவிற்கு வந்த காலத்தில் சிற்பக் கலையை முறையாகப் பயிலத் தொடங்கினார். தந்தையுடன் இணைந்து சிற்பத்தேர், சப்பரம், திருமஞ்சம், வாகனங்கள், திருவாசி மற்றும் இறை விக்கிரகங்கள் என்பவற்றை உருவாக்கும் பணியில் ஈடுபடத் தொடங்கினார்.

இவரால் வடிவமைக்கப்பட்ட சிற்பங்களை யாழ்ப்பாண மாவட்டம் நல்லூர் பிரதேச செயலகம், வவுனியா, கிளிநொச்சி, திருகோணமலை மற்றும் கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஆலயங்களிலும் பொது இடங்களிலும் காண முடியும்.

வடக்கு மாகாணத் தொழில் திணைக்களத்தினால் கடந்த ஆண்டு (2018) நடாத்தப்பட்ட மாகாண கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட இவரது ஜாளி சிற்பம் மாகாணமட்டத்தில் இரண்டாம் இடத்தையும், தேசிய மட்டத்தில் சிற்ப அபிமானி - 2018 ஜனாதிபதி விருதினையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2022



## திருமதி மேவிஸ் ஜீன்சியா யூட் அல்போன்சஸ்

**கூத்துத்துறை**
**யாழ்ப்பாணம்**

சென். அன்ரனீஸ் வீதி, பாசையூர், யாழ்ப்பாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட இவர் 1983.05.13ஆம் திகதி பிறந்துள்ளார். இவர் சிறுவயதிலிருந்தே கூத்துக் கலையில் ஈடுபாடு உள்ளவராகத் திகழ்ந்து வந்துள்ளார். புவியியல் சிறப்புக்கலை பட்டதாரியான இவர் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமைபுரிந்து வருகின்றார்.

பாசையூர் புனித அந்தோனியார் மறைப்பாடசாலை ஆசிரியரான இவர் 'மதனிகா' நாடக மன்ற உறுப்பினராகவும், யாழ்ப்பாண பிரதேச கலாசார அதிகார சபையின் நிர்வாக உறுப்பினராகவும், பிரதேச கலாசாரப் பேரவை உறுப்பினராகவும் யாழ். இலக்கியக் குவியத்தின் உறுப்பினராகவும் இருந்து தனது கலைச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்.

இக்கலைஞர் சிறுவயதில் இருந்து கூத்துக் கலை மட்டுமல்லாது, இசை நாடகங்கள், அரச ஊழியர்களுக்கான நாடகங்கள், சமூக நாடகங்கள், வில்லுப்பாட்டு, கவிதை, சிறுவர் இலக்கியம், போன்ற பல துறைகளில் தன்னை தகவமைத்துப் பயணிப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரது கலைச்சேவைக்காக 2014ஆம் ஆண்டு 'இளங்கலைஞர் விருது' யாழ்ப்பாண பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட நிலையில், மாவட்ட செயலகத்தால் 2021ஆம் ஆண்டு மாவட்ட 'இளங் கலைஞர்' விருதும், 2016ஆம் ஆண்டு புதுவையர் கலாமன்றத்தினால் 'இளங்கலைக்கதிர்' விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் 2019ஆம் ஆண்டில் குபேரகா கலை மன்றத்தினரால் வடஜோதி விரும், 2004இல் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினால் சிறந்த நடிகருக்கான விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2022

இளங்கலைஞர்



## திரு. வீரரட்ணம் சந்திரமோகன்

**இலக்கியத்துறை (கவிதை)**
**தெல்லிப்பளை**

திரு. வீரரட்ணம் சந்திரமோகன் அவர்கள் 1983.09.07 ஆம் திகதி தெல்லிப்பளையில் பிறந்துள்ளார். மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறையை வசிப்பிடமாகக் கொண்ட இவர் கவிதை, சிறுகதை, நடனம், இசை. நாடகம் முதலான துறைகளிலே தனது திறன்களை வெளிப்படுத்தியுள்ளார்.

பூநகரி பிரதேச மலர் 'பூந்துணரில்' கவிதைகள் எழுதியதுடன் 'கலாபுரலி', ' தேடல் விழுதுகள்', 'செந்தமிழ்ச்சாரல்', முதலான இதழ்களிலும் தனது கவித்திறனை வெளிப்படுத்தியள்ளார். வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினரால் 2017இல் நடாத்தப்பட்ட கலை ஆக்கத்திறன் போட்டியில் கவிதைத் துறையில் முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார்.

பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையால் 2017இல் 'இளம் கலைஞர்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன், 2018 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவையால் மாவட்ட 'இளம் கலைஞர்' விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மின்னிதழுக்கான கவிதைகள், இணைய வழிக் கவிதைப் போட்டிக்கான சான்றிதழ்கள், கவிதை நடுவர் சான்றிதழ்கள் என்று நூற்றுக்கு மேற்பட்ட படைப்புகளையும் - பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2022



## திருமதி சந்திரிகா சுஜித்குமார்

**இசைத்துறை**
**சாவகச்சேரி**

புங்குடுதீவில் 1988.12.16 ஆம் திகதி பிறந்து தந்தையின் ஊரான நுணாவில் கிழக்கு சாவகச்சேரியில் வளர்ந்த திருமதி சந்திரிக்கா சுஜித்குமார் சிறுவயதில் இசைத்துறையில் ஆர்வங் கொண்டு ஆரம்ப குருவான நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய சங்கீத ஆசிரியர் மோகனராகலிங்கம் ஹம்சத்வனி அவர்களிடம் கற்றுள்ளார். ஆரம்பப் பாடசாலைக்காலங்களில் இசைத்துறை சார்ந்த போட்டிகளில் பங்குபற்றிப் பரிசில்களைப் பெற்றுக்கொண்ட இவர் தொடர்ந்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் சக்திதேவி சிவகுமார் அவர்களிடமும் தொடர்ச்சியாக இசைக் கலையைப் பயின்று, இவரது வழிகாட்டலில் வெற்றிகளையும், பாராட்டுக்களையும் தனதாக்கிக்கொண்டார். 2007 ஆம் ஆண்டு தமிழ்த்தினப்போட்டி யில் தங்கப்பதக்கத்தையும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

உயர்தரத்திலும் இசையின் பால் ஆர்வங்கொண்டு இசையினைக் கற்று பல்கலைக்கழகம் சென்று அங்கும் தனது விடாமுயற்சியினால் முதற்தர சித்தி பெற்றுத் தேர்ந்தார். குருவின் தகுந்த வழிகாட்டலினால் அங்கும் பல விருதுகளையும் பரிசில் களையும் பெற்றுள்ளார். அத்தோடு பண்ணிசை, வயலின், மிருதங்கம் போன்றவற் றையும் கற்றுள்ளார். தொடர்ந்து மேற்படிப்பிற்காக இந்தியா சென்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணி படிப்பில் முதலாம் வகுப்பில் சித்தியடைந்து அங்கும் பல இசை நிகழ்வுகளில் பங்கேற்றுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இசை நுண்கலைத்துறையில் இசை விரிவுரை யாளராகப் பணியாற்றி வருவதுடன் நல்லூர் துர்க்காமணி மண்டபம் அரங்கு, கொழும்பு தமிழ்ச்சங்கம், ஏழிசை மாலை நிகழ்வுகள் தெய்வீக இசை அரங்கு போன்ற பலவற்றில் பல அளிக்கைகள் செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் பல்கலைக்கழக மாணவர்கள், உயர்தர மாணவர்கள், மற்றும் சாதாரணதர வகுப்பு மாணவர்களுக்குத் தனியார் வகுப்புக்களை நடாத்தி வருகின்றார். இவை மட்டு மன்றி தமிழ்த்தினப் போட்டிகளுக்கு நடுவராகவும், பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சக ராகவும் இசைப் பணியினை தொடர்ந்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2022



## திருமதி லேறாஜி ரூபன்

**நடனத்துறை**
**சண்டிலிப்பாய்**

தங்கலிங்கம் சிவசோதிப்பிள்ளை தம்பதியினருக்கு 1986.09.22 ஆம் திகதி இளைய புத்திரியாக இளவாலை மாரீசன் கூடலில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை யா/சண்டி லிப்பாய் இந்துக்கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை மு/உடையார்கட்டு மகாவித்தியாலயத்திலும், உயர்நிலைக் கல் வியை யா/ இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயத்திலும் கற்றுப் பட்டப்படிப்பினை யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் பயின்று 2010ஆம் ஆண்டு பரத நாட்டியத்தில் நுண்கலைமாணி பட்டத்தினை முதலாம் வகுப்பில் பெற்றுள்ளார்.

2020ஆம் ஆண்டு பண்பாட்டியல் முதுகலைமாணிப் பட்டத்தினை யாழ். பல்கலைக் கழகத்தில் பெற்றுக்கொண்டார். 10வயதில் இருந்து பரத நாட்டியக் கலையைப் பயின்று வந்துள்ளார். இவர் பரதநாட்டியத்தை முதற்குருவாக பிறேமா சுந்தரலிங்கத்திடமும், தொடர்ந்து சாந்தினி சிவனேசன் அம்மையாரிடமும் தனது கலையை முறைப்படி பயின்று வந்துள்ளார்.

பரதநாட்டியக் கலையில் கலாவித்தகர், நாட்டியமயில் பட்டங்களையும் பெற்ற இவர் கர்நாடக சங்கீதம், வீணை போன்ற கலைகளில் வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சையில் தோற்றியுள்ளார். பரதநாட்டியக்கலையில் மிகுந்த ஆர்வம் கொண்ட இவர், 'நர்த்தன சித்திர கலைமன்றம்' ஒன்றை உருவாக்கி மாணவர்களுக்குப் பரதக்கலை யைக் கற்பித்து வருகின்றார். பல மாணவர்களை இத்துறையில் உருவாக்கியதுடன் இவரது இரு மாணவர்கள் கலாவித்தகர் பட்டத்தினை நிறைவு செய்துள்ளமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

இவரது மாணவர்கள் பிரதேச,மாவட்ட, மாகாண மட்டங்களிலும் முதலிடம் பெற்று தேசிய மட்டத்திலும் முதலிடங்களைப் பெற்றுள்ளனர்.

இக்கலைஞர் மாணவர்களை ஆற்றுகைப்படுத்துவதுடன் நின்றுவிடாது தானும் ஆற்றுகைகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. பலரது பராட்டுக்களையும், கௌரவிப்புக்களையும் பெற்றுள்ள இவருக்கு 2022 ஆம் ஆண்டுக்கான யாழ். மாவட்ட இளம்கலைஞர் விருது கிடைத்துள்ளது. மத்திய கலாசாரத் திணைக்களத்தில் கலாசார அபிவிருத்தி அலுவலராகவும் பணிபுரிகின்ற இவர் சிறந்த பண்பாட்டியல் ஆய்வுக் கட்டுரையாளராக வும் திகழ்கின்றார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2022



## செல்வி தர்சினி ஞானேந்திரன்

**கிராமியக்கலைத்துறை**
**யாழ்ப்பாணம்**

ஈச்சமோட்டை யாழ்ப்பாணத்தினை விதிவிடமாகக் கொண்ட செல்வி தர்சினி ஞானேந்திரன் அவர்கள் 1988 ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் 25 ஆம் திகதி பிறந்துள்ளார். யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைமாணி (இசைத்துறை) பட்டதாரியான இவர், பாட சாலைக் காலங்களில் இருந்து கிராமியக் கலையில் சிறந்து விளங்குவ துடன், புல்லாங்குழல், வயலின், வீணை, ஆர்மோனியம், கிற்றார், எனப் பல துறைகளிலும் தனது அடையாளங்களை வெளிப் படுத்தியுள்ளார்.

25 வருடங்களுக்கு மேலாக கிராமியக்கலையில் தடத்தினைப் பதித்து வரும் இவர், கம்சப்பிரியா இசைக்கல்லூரி எனும் பெயரில் இசைக் கல்லூரியினை ஆரம்பித்து மாணவர்களுக்குச் சிறப்பாகப் பயிற்றுவித்து வருகின்றார். மற்றும் வருடம் தோறும் வாணி விழா, ஒளிவிழா, பிரதேச செயலக விழாக்கள் தமிழ்த்தினப் போட்டிகள் போன்ற பல விழாக்களுக்கு தனது மாணவர்கள் மூலம் நிகழ்ச்சி களை வழங்கி வருவதும், மாணவர்கள் பலரது வெற்றிகளுக்கு உந்து சக்தியாக இருந்து செயற்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இவரது சிறந்த கலைச்சேவையைப் பாராட்டி மாவட்ட சர்வவோதயம் அமைப்பினரால் 2017 ஆம் ஆண்டு 'கலைமாமணி' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அவ்வாறே 2017 ஆம் ஆண்டு கீதவாகினி இசைக் கல்லூரியால் 'கீத சொரூபி' எனும் விருதினையும் பெற்றுள்ளார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருது - 2022

இளங்கலைஞர்



## திரு. செபஸ்தி றொபின்சன்

**நாடகத்துறை**
**சண்டிலிப்பாய்**

திரு. செபஸ்தி றொபின்சன் அவர்கள் 1982.05.12ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்தார். இவர் இளவாலை மேற்கில் வசித்து வருகின்றார். இளநிலை வணிகமாணிப் பட்டம் பெற்ற இவர் வட இலங்கை சங்கீத சபை பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் துறையில் 5ஆம் தரம் வரை பயின்றுள்ளார். சுமார் 23 இற்கு மேற்பட்ட ஆண்டுகளாக இத்துறையில் பயணித்து வருகின்ற றொபின்சன் அவர்கள் நாடக எழுத்துரு, நெறியாள்கை மட்டுமல்லாமல் கவிதையாக்கம், பாடலாக்கம் முதலான துறைகளிலும் மிக்க ஈடுபாடுடையவர். இதுவரை சுமார் 56 நாடகங்கள் எழுதி இயக்கியுள்ளார்.

ஏறக்குறை 100 இற்கும் மேற்பட்ட மேடையேற்றங்களைச் செய்துள்ளதுடன்; 05 இறுவெட்டுக்களுக்கு 20 பாடல்களை எழுதியுள்ளார். நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள், திருப்பாடுகளின் காட்சி குறும்படம் என இதுவரை பல படைப்புக்களில் 28 இற்கும் மேற்பட்ட கதாபாத்திரங்கள் ஏற்று நடித்துள்ளார்.

கலாசார அலுவல்கள் அமைச்சின் மத்திய நிலையத்தின் நாடகமும் அரங்கியலும் பாடநெறியின் ஆசிரியராகவும், வளவாளராகவும் செயற்படுவதுடன் இளவாலை திருமறைக் கலாமன்றத்தின் நாடகப்பயிற்சி வளவாளராக 20 வருடங்களாகச் செயற்பட்டு வருகின்றார்.

2018இல் யாழ்ப்பாண மாவட்ட ‘இளங்கலைஞர் விருது’ பெற்றுள்ளார். 2021ஆம் அண்டு உலக நீர் தினத்தினை முன்னிட்டு மாகாண ரீதியில் நடத்தப்பட்ட ஒரு நாடகப் போட்டியின் போது “யாதும் நீரே யாவரும்காப்போம்” என்ற நாடகத்திற்கு இரண்டாம் இடம் கிடைத்தது. 2022ஆம் ஆண்டு மாசி மாதம் கொழும்பு BMICH இல் நடந்த விழாவில் நாடகத்துறைக்காக தர்மபிரமாஷ்வர (வாழ்நாள் சாதனையாளர் விருது) வழங்கப்பட்டது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற் பரிசு - 2022






## திருமதி பிரேமினி பொன்னம்பலம் (தாட்சாயணி)

**நூல்:**
**ராணியம்மா (சிறுகதை)**






சங்கத்தானை, சாவகச்சேரியைச் சொந்த இடமாகக்கொண்டு "தாட்சாயணி எனும் புனைபெயரில் இலக்கிய உலகில் நன்கு அறிமுகம் ஆன இவரது சிறுகதைப் படைப்பு ஆறாவது படையலாக அமைகிறது. பெண்மையின் உணர்வுகளும் பெண்ணியச் சிந்தனைகளும் கொண்ட கதைகளாக இவரது படைப்புக்கள் அமைவது சிறப்பு. உணர்வு அளிப்புகளின் விபரிப்பினூடாக மனித மனம் படுந்துயரங்களையும் பதைப்புக்களையும் இச் சிறுகதைகளில் தாட்சாயணி படம் பிடித்துக் காட்டியுள்ளதாக இந்நூலின் அணிந்துரையில் குறிப்பிடுகிறார். கலாநிதி த. கலா மணி அவர்கள் "ராணியம்மா" எனும் இத் தொகுப்பில் இடம்பெறும் 16 கதைகளுமே "இன்றைய மனித வாழ்வின் அவலம்" என்ற ஒரு புள்ளியில் ஒன்றை ஒன்று சந்திப்பனவாயும் ஒன்றோடொன்று ஒத்தோடுவனவாயும் இணைந்திருப்பது இத்தொகுப்பின் சிறப்பம்சம் என்கிறார். அவ்வப் போது புதிய தரிசனம், ஞானம், மல்லிகை, வெளிச்சம், தாயகம், கலைமுகம், சுடர் ஒளி, நமது ஈடுநாடு, சுதந்திரப் பறவைகள் போன்ற இதழ்களில் வெளிவந்த சிறுகதைகளின் தொகுப்பாக ஜீவநதி கலையக வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.

இந்நூலில் உள்ள அனைத்துக் கதைகளும் நூலாசிரியருக்கே உரித்தான இயல்பான எளிய மொழிநடையும், கலாபூர்வமான காட்சிச் சித்தரிப்புக்களும், கணநேர காட்சிப்பிடிப்புக்களாக அமைந்து சிறுகதைகளைச் சிறப்பித்திருக்கின்றன.

2022 ஆம் ஆண்டின் வடமாகாண பண்பாட்டு விழாவில் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் 2021 ஆம் ஆண்டுக்கான சிறுகதைத் துறைக்கான சிறந்த நூற்பரிசை இந்நூலுக்கு வழங்கிக் கௌரவிப்பதில் பெருமை கொள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற் பரிசு - 2022









## திரு. தியாகராசா சுதர்மன்

**நூல்: ஆகாரமே ஆதாரம்**
**(அறிவியல் துறை)**

கோகுலம், மெமோறியல் வீதி, மானிப்பாயினைச் சேர்ந்த இந்நூலாசிரியர் யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறையில் 2003இல் பட்டப்படிப்பை நிறைவு செய்து அதுசார்ந்த தேடல்களும், சித்தமருத்துவ மூல தத்துவங்களை அதற்கமைய ஆராய்ந்தறிவ திலும் ஈடுபாடு கொண்டவராக விளங்குகின்றார். மேலும் சித்த மருத்துவச் சேவையை மக்களுக்கு வழங்கியும் அது தொடர்பான விழிப்புணர்வு செயற்திட்டங்களையும், துறைசார் கட்டுரைகளை யும் தொடர்ந்து எழுதி வருகின்றார்.

சித்த மருத்துவத்தின் அடிப்படைத் தத்துவங்களான முத்தோசங்கள், ஏழு உடற் கட்டுக்கள் அடிப்படையில் உணவின் பங்கு, ஐம்பூதச் சேர்க்கைகளும் அவற்றின் குணங்களும், உணவின் சுவைகள், பருவகால மாற்றங்களுக்கான உணவுகள், சுவை, வீரியம், விபாகம், பிரபாகம், யாக்கை இலக்கணத்தின் அடிப்படையில் உணவு, உணவின் குற்றங்களும் பிணிகளும், பத்தியாபத்தியம், உணவு உட்கொள்ளும் முறைகள், தாம்பூலம் தரித்தல், குழந்தைகள், சிறுவர், பெண்கள், முதியோர்க்கான உணவுகள் போன்ற விடயங்களில் ஆழமான தேடல்களை மேற் கொண்டு சித்த மருத்துவ தத்துவங்களை அறிவியல் ரீதியில் விளக்குவதாக இந்நூலை ஆசிரியர் ஆழப் பதித்திருப்பது சிறப்பு.

இந்நூலுக்கு 2022 ஆம் ஆண்டின் மாகாணப் பண்பாட்டு விழாவில் 2021 ஆண்டுக்கான அறிவியல்துறைக்கான சிறந்த நூல்பரிசை வழங்கிக் கௌரவிப்பதில் வடமாகாண பண்பாட்டலு வல்கள் திணைக்களமும் வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல் கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் பெருமை கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற் பரிசு - 2022







## திரு. திருச்செல்வம் தவரத்தினம்

**நூல்:**
**பனைப் பொருண்மிய வளம் (சூழலியல்)**




காரைநகரைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் பல பாடசாலைகளில் ஆசிரிய பணியாற்றி தற்போது அராலி முருகமூர்த்தி வித்தியாலயத்தில் அதிபராகப் பணியாற்றி வருகிறார். சுமார் அறுபது வரையிலான நூல்களைப் புவியியல், நாட்டாரியல், சமூகவியல், ஆன்மீகம், சோதிடம், புனைவு, சூழலியல் சார்ந்து எழுதியுள்ள இவர் அதன் வரிசையில் " பனைப் பொருண்மிய வளம்" எனும் இந்நூலினூடாக பனை மரத்தின் பரம்பல்கள், சிறப்புக்கள், பயன்பாடுகள், உயிர் பல்வகைமைப் பாதுகாப்பில் பனையின் சிறப்புக்கள், பனை உணவின் ஊடாகப் பெறும் மருத்துவப் பயன்பாடு, பனைக் கைத்தொழில் பிரயோகம் பற்றியும் எதிர்காலத்தில் இதன் பயன்பாட்டு நுணுக்கங்களை எம் இளையோரும், இயற்கை ஆர்வலர்களும், பயன் கொள்ளத்தக்க வகையில் பல்வேறு செய்திகளை இதனூடாக வெளிக்கொணர்ந் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வட புலத்தின் குறியீடாக விளங்குகின்ற பனை பற்றிய தேடலை தற்காலப் பொருளாதார நெருக்கடியில் மீளவும் எல்லோரையும் சிந்திக்கத்தக்கதாகவும் கைவிடமுடியாத ஓர் வளமாகவும் நோக்கவும் இந்நூலின் வரவு அமைவது சிறப்பு.

இந்நூலுக்கு 2022 ஆம் ஆண்டின் மாகாணப் பண்பாட்டு விழாவில் 2021ஆம் ஆண்டிற்கான சூழலியல் துறைக்கான சிறந்த நூற்பரிசை வழங்குவதில் வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், வடக்குமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் பெருமை கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற் பரிசு - 2022





## திரு. செல்வரத்தினம் பத்மநாதன்

**நூல்:**
**இந்துசமய ஆன்மீக வாழ்வியல் (ஆன்மீகம்)**






வண்ணார் பண்ணை மேற்கு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்நூலாசிரியர் ஒரு நூலகவியலாளராகத்தான் தொழில் வழி பெற்றுக்கொண்ட நூலுணர்ச்சி அனுபவத்தின் வாயிலாகவும் தத்துவ ஆய்வின் பால்கொண்ட ஈடுபாட்டின், அனுபவத்தினூடாகவும் இந்நூலைத் தந்திருப்பது சிறப்பு. யாழ்.பல்கலைக் கழக முதுதத்துவமாணி பட்டத்திற்காகப் போராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயரின் மேற்பார்வையில் நூலாசிரியரால் சமர்ப்பிக்கப்பட்ட இவ் ஆய்வு நூலாக வெளிவருவது சிறப்பு.

இந்நூலில் இந்துப் பண்பாட்டின் வழிவழி தொடரும் ஆன்மீக மரபுகள், 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளில் இந்து சமூக நிலை, இராமகிருஷ்ணரின் அநுபூதி வாழ்வு, இந்துப் பண்பாட்டு மலர்ச்சியில் இராமகிருஷ்ணரின் பங்கும் பணியும் பற்றி விரிவாக ஆராய்வதாக அமைகிறது.

இந்நூலின் வழி நவீன உலகின் மனித விழுமியங்களை அடியொற்றி சமய சமரச பரிந்துரைகளுக்கான தளத்தை இந்துமதம் முற்கூட்டியே வழங்கியுள்ளது என்பதை நூலாசிரியர் காண்பிக்க முயல்கின்றமை சிறப்பு.


இந்நூலுக்கு 2022 ஆம் ஆண்டின் வடக்கு மாகாணப் பண்பாட்டுப் பெருவிழாவில் 2021ஆம் ஆண்டுக்கான ஆன்மீகத் துறைக்காக சிறந்த நூற்பரிசை வழங்கிக் கௌரவிப்பதில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் பெருமை கொள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற் பரிசு - 2022





## திரு. கனகரத்தினம் சட்டநாதன்

**நூல்:**
**சட்டநாதன் கட்டுரைகள் (விமர்சனம்)**



நல்லூரைச் சேர்ந்த நூலாசிரியர் தமிழ் இலக்கியத்தில் ஆக்க இலக்கியங்களான சிறுகதைகள், நாவல்கள், கவிதை போன்ற வற்றில் நன்கு அறியப்பட்டவர். ஈழத்து இலக்கிய உலகிற்கு இதுவரை ஒன்பது சிறுகதைத் தொகுப்புக்களையும், இரு கவிதைத் தொகுப்புக்களையும், ஒரு நாவலையும் தந்தவர் ஆழ்ந்த நுண்ணிய, பரந்துபட்ட வாசிப்பும், இலக்கியச் செழுமைகளை நுணுகிச் சிலாகிக்கும் ஆளுமையாளராக விளங்குபவர். பரந்து பட்ட வாசிப்புக்கும் விமர்சன நோக்கிற்கும் நல்லபதச் சோறாக சட்டநாதன் கட்டுரைகளில் உள்ள 35 பல்வகைக் கட்டுரைகளும் இரு நேர்காணல்களும் விளங்கு கின்றது.




2017ஆம் ஆண்டில் இவரது முதலாவது கவிதைத் தொகுப் பான 'நீரின் நிறம்', நூலுக்கும், 2020 இல் 'துயரம் தரும் அழகி' புதுக்கவிதை நூலுக்கும் 2021 ஆம் ஆண்டில் ' சுபாவம்' சிறுகதைத் தொகுப்பிற்கும் சிறந்த நூற்பரிசினை பெற்றிருப்பது இவரது படைப்பாக்க ஆளுமைக்கு நல்ல எடுத்துக்காட்டாக விளங்கு கின்றது.

அந்த வகையில் ஜீவநதி வெளியீடாக வந்திருக்கும் இக்கட்டு ரைத் தொகுப்பிற்கு 2021 ஆம் ஆண்டிற்கான விமர்சனதுறையில் சிறந்த நூற்பரிசினை நூற்பரிசை வழங்கிக் கௌரவிப்பதில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் பெருமை கொள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற் பரிசு - 2022







## திரு. சிவலிங்கம் ஆரூரன்

**நூல்:**
**ஆதுரசாலை (நாவல்)**

மாறாம்புலம், அல்வாய் வடமேற்கு, அல்வாயைத் தனது சொந்த இடமாகக் கொண்ட சிவ. அரூரன் அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் தனது படைப்புக்களை ஆக்கி, வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் இதுவரை இவரால் யாழிசை, யாவருங்கேளீர், வலசைப் பறவைகள், ஊமை மோகம், The Innocent Victims அகிய நாவல்களும் பூமாஞ்சோலை என்ற சிறுகதைத் தொகுதியையும் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வரிசையில் இவரால் வெளியிடப்பட்ட ஆறாவது நாவலாக சிவ ஆதுரசாலை அமைகின்றது.




இந்நூலிற்கு 2021 ஆம் ஆண்டின் நாவலுக்குரிய சிறந்த நூற்பரிசினை 2022 ஆம் ஆண்டின் பண்பாட்டுப் பெருவிழாவில் வழங்கிக் கௌரவிப்பதில் வட மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் பெருமைகொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற் பரிசு - 2022






## திரு. செல்லையா திருநாவுக்கரசு

**நூல்:**
**தமிழ் வளர்த்த தீவக சான்றோர்கள்**
**(ஆய்வுகள்)**






அல்லப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் பண்டாரக்குளம் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட இவர் தமிழ் இலக்கியத்துறை, கல்வியல் துறை, வரலாற்றியல் ஆகிய துறைகளில் எம்மிடையே நடமாடும் கலைக்களஞ்சியமாக விளங்குபவர். பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பட்டதாரியான இவர் ஆசிரிய நியம னத்தை 1985 இல் பெற்று வவுனியா, மாதர் பனிக்கர் மகிழங்குளம் அ.த.க. பாடசாலையிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் தமிழ் ஆசிரியப் பணியில் சேவையாற்றி இலங்கை கல்வி நிர்வாக சேவையில் 2000ஆம் ஆண்டில் இணைந்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவு ரையாளராகவும், பிரதியதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பண்டிதர், சைவப்புலவர், முதுகலைமாணி, முதுகல்விமாணி, கலாநிதிப் பட்டங்களையும் பெற்றதுடன் சிறந்த கலாநிதி ஆய்வுக்காகப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் ஞாபகார்த்த விருதினையும் பெற்றுக்கொண்டவராவார்.

இவர் 2018 இல் இவரது ஆராய்ச்சி நூலான “ உடுமலை தந்த கவி மலை” நூல் தமிழகத்தின் சென்னையில் வெளியீடு செய்யப பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நூலில் தீவகத்தைப் பூர்வீகமாகக் கொண்ட இலக்கியப் படைப்பாளிகள் பற்றியதோர் 1255 பக்கங்களைக் கொண்ட நூலாக அமைந்துள்ளது. இதில் 200 வரை யான புகைப்பட ஆவணங்களையும் உள்ளடக்கி யாழ். குடாவின் வடபுலத்தின் தலை யாக விளங்கும் சப்த தீவுகளான ஊர்காவற்றுறையில் ஒன்பது ஆளுமைகளையும் வேலணையில் 25 ஆளுமைகளையும் புங்குடுதிவினைச் சேர்ந்த 14 ஆளுமைகளையும் நெடுந்தீவைச் சேர்ந்த 15 ஆளுமைகளையும் அனலைதீவைச் சேர்ந்த 04 ஆளுமை களையும் காரைநகரைச் சேர்ந்த 22 ஆளுமைகளையும் உள்ளடக்கி நூலாசிரியர் தனி முயற்சியில் அவர்களது வாழ்க்கை இலக்கிய வரலாற்றுத் தடங்களை விரிவாக அலசி ஆய்வு செய்யும் பெருந்தொகுப்பாக வெளிவந்துள்ளது.

இந்நூலிற்கு 2021 ஆம் ஆண்டின் ஆய்வுத்துறைக்கான சிறந்த நூல் பரிசை வழங்கி கௌரவிப்பதில் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் பெருமை கொள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற் பரிசு - 2022





## திருமதி பஞ்சகல்யாணி ஸ்ரீபன்

**நூல்:**
**சிந்தனை செய் (சிறுவர் இலக்கியம்)**



மீலாவடித்தெரு புலோலி தெற்கு, புலோலி என்ற இடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர் பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் உயர்தரக் கல்வியைப் பெற்றுள்ளார். பாடசாலைக் காலத்தில் Games Captain ஆக இருந்த இவர் வாசிப்பதிலும் எழுதுவதிலும் ஆர்வம் கொண்டவராக இருந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கற்ற இவர் தனது உள்ளகப் பயிற்சியை யாழ். போதனா வைத்தியசாலையில் முடித்துக் கொண்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் பணியாற்றினார். தற்போது மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலையில் பணிபுரிகின்றார். இவரது அண்மைக்காலப் படைப்பாக "அழகிய உலகம்" என்ற சிறுவர் பாடல்கள் நூலை வெளியிட்டிருந்தார்.




சிறுவர் மனதைச் சரியாகப் புரிந்த ஒருவராலேயே இவ்வாறான கதைகளைப் புனைய முடியும். " சிந்தனை செய்" என்ற இவரது சிறுவர் கதைகள் தொகுப்பின் வாயிலாக நல்லதொரு வைத்தியர் என்பதற்கும் அப்பால் நல்லதொரு தாயாகவும், படைப்பாளராகவும் தன்னை வெளிப்படுத்தியுள்ளார். தன் வேலைப்பளுக்களுக்கு மத்தியில் தன் கற்பனைத் திறனை மிகச் சரியாகப் பயன் படுத்திச் சிறுவர்களின் அறிவுப்பசிக்கு அருமையான நூலைப் பிரசவித்துள்ளார்.

அந்த வகையில் 2022 ஆம் ஆண்டின் வடமாகாண பண்பாட்டு விழாவில் 2021 ஆம் ஆண்டிற்கான சிறுவர் இலக்கியத் துறைக்கான சிறந்த நூற்பரிசை இந்நூலிற்கு வழங்கிக் கௌரவிப்பதில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் பெருமை கொள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற் பரிசு - 2022





## திருமதி பிரேமினி பொன்னம்பலம் (தாட்சாயணி)

**நூல்:**
**யாருக்கோ பெய்யும் மழை (கவிதை)**



பெரிய அரசடி வீதி, சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர் இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக பணி புரிகின்றார். நாடறிந்த இலக்கியக் கர்த்தாவாகப் போற்றப்படுகின்றார். சிறுகதை, கவிதைத் துறைகளில் ஈழத்தில் தனக்கெனத் தனியிடம் பதித்து செயலாற்றும் திறம் பாராட்டுக்குரியது. இவரது படைப்புக்கள் ஒவ்வொன்றுமே வைரங்களாக ஒளிர்கின்றன எனில் மிகையாகாது. சிறுகதையாசிரியராகத் தோற்றமெடுத்தஇவரது "ஒன்பதாவது குரல்" தொகுதிக்கு அரச இலக்கிய விருதை பெற்றவர் ஆவார்.



தனது பன்னிரண்டாவது வயதில் "எங்கள் ஊர்" என்ற பெயரில் கவிதை பாடியதை நினைவு கூருகின்றார். 1992இல். B.B.C இளம் தமிழ்க்கவிஞர் தேர்வில் ஆறுதல் பரிசு பெற்றதைத் தொடர்ந்து அகில இலங்கைக் கம்பன் கழகக் கவிதைப் போட்டியில் மூன்றாம் பரிசு எனப் பாடசாலைக் காலத்தின் இறுதிப் பருவங்களில் கவிதைப் பரிசுகளாலும் அடையாளப்படுத்தப்பட்ட இவர் சிறுகதை உலகில் சஞ்சாரம் செய்து கொண்டதுடன் கவிதை என்ற களத்திலே காலடியைக் கச்சிதமாகவும் கனதியாகவும் பதித்துள்ளார். அவற்றின் அறுவடையே "யாருக்கோ பெய்யும் மழை" என்ற தொகுதியாகும்

அந்த வகையிலே 2022 ஆம் ஆண்டின் மாகாண பண்பாட்டு விழாவில் 2021 ஆம் ஆண்டிற்கான கவிதை இலக்கியத் துறைக் கான சிறந்த நூற்பரிசை இந்நூலிற்கு வழங்கிக் கௌரவிப்பதில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் பெருமை அடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற் பரிசு - 2022










## திரு. ஜோன்சன் ராஜ்குமார்

**நூல்:**
**ஜீவபிரயத்தனம் (நாடகம்)**

சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. யோ. ஜோன்சன் ராஜ்குமார் அவர்கள் சுமார் மூன்று தாசப்த காலமாக நடிகனாக, நாடக ஆசிரியராக, நெறியாளராக அரங்கச் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருப்பவர். நவீன கூத்துருவ, சிறுவர் நாடகங்கள், மற்றும், கூத்துக்கள், திருப்பாடுகளின் நாடகம் என்ற பல்வகையான நாடக வடிவங்களோடு யாழ். திருமறைக் கலாமன்றம் மற்றும் பாடசாலை சார் அரங்கத் தடங்களில் இன்றுவரை செயற்பட்டு வருகின்றார். இத்துறை சார்ந்த கம்பன் மகன், அமைதிப் பூங்கா, கொல்ஈனுங்கொற்றம், அற்றைத் திங்கள் போன்ற நாடக நூல்களைத் தந்த இவர் தற்போது ஏழு நாடகங்களை எழுதி நெறியாழ்கை செய்ததோடு அவற்றின் பிரதிகளின் தொகுப்பாக இந்நூலில் வெளிவந்துள்ளது.

இந்நூலில் இடம்பெறும் வலசப்பறைவைகள் (1996), ஈன்றபொழுதில் (1996) ஜீவப்பிரயத்தனம், மணவிலங்குகள் (2006), ஸ்பாட்டக்கஸ் (2002), உண்மையின் ஒளி (2003) அகலிகைகள் (2017) என்னும் ஏழு நாடகங்களின் வழியே பேரிழப்பு, அவலங்கள் பற்றியும் அவற்றிற்குப் பின்னரான காலங்களின் நிலைமைகளையும் களங்களாகக் கொண்டு படைக்கப்பட்டவையாக விளங்குகின்றன. பா. அகிலன் அவர்களது அணிந்துரையும் அண்மையில் அமரரான திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ. மரியசேவியர் அடிகளாரின் வாழ்த்துரையும் இந்நூலின் பெறுமதியை வலுவாக்கியுள்ளது.

அந்த வகையில் 2022 ஆம் ஆண்டின் மாகாண பண்பாட்டு விழாவில் 2021 ஆம் ஆண்டிற்கான நாடகத்துறைக்கான சிறந்த நூற்பரிசை இந்நூலிற்கு வழங்கிக் கௌரவிப்பதில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் பெருமை அடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டு நிகழ்வுகளின் பதிவு...

## தைப்பொங்கல் விழா...










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டு நிகழ்வுகளின் பதிவு...

## சிவராத்திரி விழா...








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டு நிகழ்வுகளின் பதிவு...

## நோன்பு திறக்கும் நிகழ்வு (இப்தார்)...








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டு நிகழ்வுகளின் பதிவு...

## ஆடிப்பிறப்புக் கொண்டாட்டம்...








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டு நிகழ்வுகளின் பதிவு...







ஆடி அமாவாசை நிகழ்வு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டு நிகழ்வுகளின் பதிவு...

## நல்லூர் மகோற்சவகால விசேட கலை நிகழ்வு...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டு நிகழ்வுகளின் பதிவு...

## வாணி விழா...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டு நிகழ்வுகளின் பதிவு...

## வடக்கு மற்றும் வட மத்திய மாகாண தமிழ், சிங்கள கலைஞர்களின் கலாசார சங்கமம...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டு நிகழ்வுகளின் பதிவு...

## அனைத்துமத ஆன்மீக தலைவர்களுடனான கலந்துரையாடல்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டு நிகழ்வுகளின் பதிவு...

## பண்பியல் கூறுகளும் அசைவுகளும் (பயிற்சிப்பட்டறை)...







270128

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளியீடு:
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்.

9786245911202

New Evergreen Printers (Pvt) Ltd, Jaffna. 021 221 9893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org